

கும்பாபிஷேகம்



கும்பாபிஷேகம்

A COMPILATION OF CHECK-LISTS FOR
KUMBHABHISHEKHAM *of Temples*

மூன்றாவது பதிப்பு - 08.12.2002




Sri SINGARA VELAVAR TEMPLE, SIKKAL

தொகுத்து வெளியிட்டவர்:

R. ஸ்ரீதரன்

Upon the Grace of



Sri Dharmalingeswarar   Sri Sarvamangala Devi

Presiding deities of SRI DHANMISAR SEMPONKOIL, *situated at* EASWARAN COLONY, SARVAMANGALA NAGAR, NANGAINALLUR (SOUTH), CHENNAI-61.

THIS BOOK IS COMPILED, DESIGNED & PUBLISHED BY:

R.SRIDHARAN,
Mg.Trustee, SWARNAPURI Trust, Chennai-61.
"SWARNAPURI", PLOT NO. T-7, I CROSS, 46TH STREET, NANGANALLUR, CHENNAI-600061. ☎ +91(44) 232 1616 & 234 8445
Email : sridarr@vsnl.com   *WebSite: www.swarnapuri.org

* SWARNAPURI WEBSITE DESIGNED AND MAINTAINED BY: SHYAM SRIDHAR



தன்மீசத் தேவா!

"பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். அறவா! நீ ஆடும்போது, இன்னும் நான் மகிழ்ந்து பாடி, உன் அடியின் கீழ் இருக்க வேண்டும். -(பெரியபுராணம்) "

– திருவுடையோன்
(ஸ்ரீதரன்).



மூன்றுவது பதிப்பு, 08.12.2002
விலை: ரூ. 80.^{00}

உ

பதிப்புரை

சென்னை நங்கைநல்லூர் (தெற்கு), ஸர்வமங்களாநகர் ஈச்வரன் காலனியில் ஆயிரம் ஆண்டுகட்கும் மேல் தொன்மையும் பெருமையும் மிக்க ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் தன்மீசத் தேவரின் அருளாணையால், உச்சரிப்பு நன்கு விளங்கும் வகையிலே கணினி(computer)யின் துணை கொண்டு தமிழ் எழுத்துக்களில் வடிவமைக்கப் பெற்று, *சிவாலய பூஜா மந்த்ரங்கள்* என்ற நூல் எமது கன்னி முயற்சியாக 1999 -ஆம் ஆண்டு வெளியாகி, அன்பர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றது. அது தந்த ஊக்கத்தின் விளைவாக வெளிவரும் நூல்களுள் ஒன்றாக, *கும்பாபிஷேகம்* என்ற நூலின் இரண்டாவது பதிப்பு, தன்மீசத் தேவரின் அருளால், உங்கள் கைகளை 24-10-2000 அன்று வந்தடைந்தது. சேது பந்தனத்துக்கு அணில் உதவியது போல, அந்த நூல் பல ஆலயங்களில் தொண்டாற்றி வரும் அன்பர்களுக்கு உதவி வருவதாக செய்திகள் வருகின்றன. அந்த வகையிலே, தன்மீசத் தேவனின் அருளாட்சி எல்லை விரிவடைவது கண்டு நெஞ்சு நெக்குறுகின்றேன்.

இரண்டாவது பதிப்பில் சுட்டிக் காட்டப்பெற்ற பிழைகள் பலவும் களையப் பெற்று, தத்வார்ச்சனை-ஸ்பர்சாஹுதி பகுதி விரிவாக்கப்பட்டு, த்வஜஸ்தம்பம், சிவாலய பவித்ரோத்ஸவம் ஆகிய புதுத் தலைப்புகள் சேர்க்கப்பட்டு, நிறைய படங்களுடன் புதிதாக வடிவேற்றுள்ளது இந்த மூன்றாவது பதிப்பு. கி.பி. 1999 -இல் தொடங்கி மாதம் ஒரு முறையாக 45 முறை ஏகாதச ருத்ராபிஷேகம் நடைபெற்ற பிறகு, சிறப்பாக மஹாருத்ரம் நடைபெறும் இந்நாளில் இது வெளிவருவது தன்மீசத்தேவர் எமக்கு அளித்த பாக்யம்.

இது போன்ற எனது அல்ப முயற்சிகளுக்கு உறுதுணையாக நின்றுதவும் காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்ரேச்வரர் மற்றும் ஸ்ரீ கைலாசநாதர் ஆலயங்களின் பரம்பரை ஸ்தாநிகர், ஸர்வஸாதகப் பெருந்தகையாளர், சைவசித்தாந்த ஆகம ஸாகரம், சிவாகம

ஞாநபானு, சிவாகமச் செல்வர், ப்ரஹ்மஸ்ரீ சாளவ க. ராஜப்பா சிவாச்சார்யார் அவர்களுக்கு என் க்ருதக்ஞையைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வகையில் ஆதரவளித்த ஏனையோர்க்கும், தன்மீசத்தேவரின் திருத்தொண்டில் எனக்கு முன் நிற்கும் நண்பர்களுக்கும் என் சென்னி தாழ்ந்த நன்றி.

08.12.2002 *R.ஸ்ரீதரன்*
சென்னை-61 Mg.Trustee, SWARNAPURI Trust.

SWARNAPURI ... Opening the *golden* pages of our *glorious heritage* ...
☎ : (044) 232 1616 & 234 8445, Email : sridarr@vsnl.com
WebSite: www.swarnapuri.org

இரண்டாவது பதிப்பின் பதிப்புரை

ஐயன் அருளால், சென்னை-61, நங்கைநல்லூர், ஈச்வரன் காலனியிலுள்ள, **ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில்** மஹா கும்பாபிஷேகம் 10-09-2000 அன்று இனிதே நிகழ்வுற்று, இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தி ப்ரதோஷ வழிபாட்டுடன் ஒருங்கிணைந்து, இரண்டு கால யாகசாலைப் பூஜைகளுடன் சங்காபிஷேகமாக நடைபெறுகின்றது.

"தன்மீசத் தேவனின் மஹா கும்பாபிஷேகத்தின் போது கிடைக்கும் அனுபவங்களில் திளைத்து, அவற்றின் சாற்றினை, இந்த நூலின் அடுத்த பதிப்பிலேற்றி, இதனை இன்னும் பயனுள்ளதாக" ஆக்க முயற்சிப்பதாக, இந்த நூலின் முதற் பதிப்பின் இறுதியில் வாக்களிக்கப்பட்டது. அதன்படி, கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதில் கிடைத்த அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு, இந்நூல் விரிவடைந்துள்ளது.

இதற்கிடையே, ஸஹஸ்ராகமம் க்ரியா பாதத்தின் இருபத்து நான்காம் படலமாகிய *அஷ்டபந்தன விதி* படலத்தின் கையெழுத்துப் பிரதி ஒன்று என் கைகளைச் சேர ஐயன் அருளினன். அதன் சில ச்லோகங்களை மேற்கோள்களாகச் சேர்த்துக் கொண்டு அச்சேறி, இந்தப் பதிப்பு உங்களை வந்தடைகின்றது. அந்த ச்லோக எண்கள்

ஆங்காங்கே, ஸஹ-ஆக-** என்று குறிப்பிடப் பட்டுள்ளன.

* உள்ளத்தைக் குளிரச் செய்த அனுபவங்கள்...
* நெஞ்சை நெகிழச் செய்த அனுபவங்கள்...
* கண்களைக் கரையச் செய்த அனுபவங்கள்...
* அடிவயிற்று அல்சரில் அமிலத்தைச் சொறிந்த அனுபவங்கள்–
* சீற்றமுற்று சீறிடச்செய்து பின்னர் நாண வைத்த அனுபவங்கள்–
* செய்யாப் பிழைக்கும் அறியாதிழைத்த பிழைக்கும் தண்டனை ஏற்று நொந்த அனுபவங்கள்...
* எதிர்நோக்கிய சிக்கல்களைத் தவிர்த்திடுவதற்காகச் சில முடிவுகள் எடுத்ததின் விளைவாக, சுமுகமாகச் செயலாற்ற இயன்ற போதிலும், பின்னணி அறிந்திடாத பலரின் எதிர்ப்புக்கும் இழிச்சொல்லுக்கும் முதலில் ஆளாகி நின்று, பின்னர் அவர்கள் மனம் மாறினும் முற்சொன்ன சொற்களை நியாயப் படுத்தி *வழிந்ததைக்* கண்டு வருந்திய அனுபவங்கள்...
* புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்வாரின் பொறுப்பற்ற சொற்களால் அறவழிச் செயலாற்றும் நல்லோர்களுடன் ஏற்பட்ட மனத்தாங்கல்கள்...
* பொறுப்பின்றிப் பேசிப் பிறரைப் புண்படுத்திச் சூழலுக்குச் சூடேற்றி சுகக்கேடுறச் செய்தவர்களது பிழைகளை நானே சுமந்து சமாதானம் செய்தபின், உள் நெஞ்சில் வடியும் குருதியை உலக குருவின் முன் சென்று நின்று கரைந்து கழுவிக்கொண்ட அனுபவங்கள்...

– இவை அனைத்திற்கும் மேலாக...

* பல நேரங்களில், *நம்மால் இயலாதையா* எனக் கரைந்து, கைகளைக் கூப்பி, ஐயனை நினைந்து அழ ஆரம்பித்தபோது, சற்றும் எதிர்பாரா வகையில், எங்கிருந்தோ உதவி வந்து சேர்ந்து தன்மீசத்தேவனை எம் கண் முன் கணநேரம் நிறுத்திச் சென்ற பற்பல அனுபவங்கள்...

– இவற்றையெல்லாம் எழுத்தில் வடித்து உங்கள் முன் சமர்ப்பிக்க அடியேனிடம் திறமை இல்லை; கண்களை மூடியவாறு

அவற்றைக் கணினி(computer)யில் ஓட்டிச் செல்ல ஐயனின் அருளும் இன்று வரை ஸித்திக்கவில்லை! ஒரு அலுவலக நிர்வாகி போல ... , குறிப்புகள் எடுத்துக் கொண்டு விரித்துத் தரும் குறுக்கெழுத்தாளனைப் போல ... , இந்நூலை முடித்துத் தந்திருக்கிறேன். உங்கள் எதிர்பார்ப்புகளை ஏமாற்றியிருந்தேனுகில், என்னைப் பெரிய மனது கொண்டு மன்னித்து விடுங்கள்.

எனது இச்சிறு முயற்சிக்கு தொடர்ந்து உறுதுணையாயிருந்த காஞ்சீபுரம் ஸ்ரீ ராஜப்பா குருக்கள் அவர்களுக்கும், பல்வகையில் ஆதரவளித்து வரும் ஏனையோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

சென்னை-61 R.Sridharan
24-10-2000 SWARNAPURI, CHENNAI-61.

முதற் பதிப்பின் பதிப்புரையிலிருந்து

... புதிய ராஜகோபுரம் அமைக்கும் பணி 06-03-1998 அன்று தொடங்கி, இவ்வாண்டு நிறைவடையும் தறுவாயில் உள்ளது. பாலஸ்தாபன கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் இன்று (14-07-2000) காலை நிகழ்ந்தன. மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள், இறையருளை எதிர் வைத்து, 10-09-2000 அன்று நிகழ உள்ளன. இந்தக் காலகட்டத்திலே, இத்திருக்கோயிலில் திருத்தொண்டாற்றி வரும் அனைத்து அன்பர்களுக்கும் பயன் தரத்தக்க வகையில் கும்பாபிஷேகம் குறித்த செய்திகளையும், பணிகளையும், தொகுத்துத்தர எடுக்கப்பட்ட முயற்சியே இச்சிறு நூலின் முதல் பதிப்பு. இந்நூல் மற்றத் திருக்கோயில்களில் தொண்டாற்றி வரும் அன்பர்களுக்கும் பயனுள்ளதாக அமையுமானுல், யாம் பெற்ற பேற்றினை அனைவரும் பெற்றதாக மகிழ்வேன்...

சென்னை-61 R.Sridharan
14-07-2000 SWARNAPURI, CHENNAI-61.

ॐ ॐ ॐ ॐ ॐ

BIBLIOGRAPHY

1. *உத்தர காமிக ஆகமம்*
(தேவநாகரி மற்றும் தமிழ் லிபிக்களில்) - *தமிழாக்கம்:* அல்லூர் சிவத்திரு விச்வநாத சிவாச்சாரியார் - *வெளியீடு:* தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 1999.

2. *பூர்வ காரண ஆகமம்*
(க்ரந்த லிபியில்) - *வெளியிட்டவர்:* மயிலை அழகப்ப முதலியார், சிவஞானபோத அச்சு யந்திர சாலை, 1920.

3. *காரணாகமம்- க்ரியா பாதம்- நித்யார்ச்சனா விதி படலம்*
க்ரந்த மூலமும், தமிழ் உரையும் - தமிழ் உரை ஆக்கியவர்: சிமிழி ப்ரஹ்மஸ்ரீ வெ. விச்வநாத சாஸ்திரிகள், 1946 (கையெழுத்துப் பிரதி தந்து உதவியவர்: ஸ்ரீ ராஜம் குருக்கள் புத்திரர் ஸ்ரீ ரா.ரத்நஸபாபதி குருக்கள், கீழநாளச்சேரி, சிமிழி அஞ்சல், திருவாரூர் மாவட்டம். பிரதிகளைப் பெற உறுதுணை நின்றவர்: திரு ஸோமாஸ்கந்த சிவாசாரியார், திருச்செம்பொன்பள்ளியார் ஆலயம், செம்பொன்னார்கோயில், நாகை மாவட்டம்).

4. *ஸூப்ரபேத ஆகமம்*
(க்ரந்த லிபியில்) - *வெளியிட்டவர்:* மயிலை அழகப்ப முதலியார், சிவஞானபோத அச்சு யந்திர சாலை, 1928.

5. *குமார தந்த்ரம்*
(க்ரந்த லிபியில்) - *வெளியிட்டவர்:* கோ. ஷண்முகசுந்தர முதலியார், சிவஞானபோத அச்சு யந்திர சாலை - (கலி 5006, க்ரோதி, ஐப்பசி) 1905-ஆம் ஆண்டு, அக்டோபர்.

6. *நித்யபூஜா லக்ஷண ஸங்கிரஹம்*
தருமபுர ஆதீனம் வெளியீடு, 1951. தொகுத்தவர்: எஸ்.சுவாமிநாத சிவாச்சாரியார், தலைமையாசிரியர், தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை.

7. *ஆகமாமிர்த வர்ஷிணீ*
(சித்திரங்கள்) - *வெளியிட்டவர்:* இலங்கை நயினாத்தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஸ்தாணிகர், சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்

குருக்கள், 1972.

8. *சைவத் திருக்கோவிற் கிரியை நெறி*
வெளியிட்டவர்: கா. கைலாசநாத குருக்கள், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

9. *வாமதேவபத்ததி*
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலையின் வெள்ளிவிழா ஞாபகார்த்த வெளியீடு, 1969.

10. ***அகில இலங்கை இந்து மாமன்றம் தலைமையகக் கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலர்*** - A special souvenir published on 12-5-1996 by The All Ceylon Hindu Congress, Colombo-2.

11. *ஆலயங்களும், ஆகமங்களும்*
ஆசிரியர்: நஜன், 1983, பிரதிபா பிரசுரம், 39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை-600004.

12. *ஜீர்ணோத்தார தசகம்*
ஸ்ரீநிகமஜ்ஞான சிவாச்சாரியாரின் மூலமும், தமிழ் உரையும், முதல் பதிப்பு, 1980. வெளியிட்டவர்: சி.சுவாமிநாத குருக்கள், ஸ்ரீ மாசிலாமணி பூஜகர், திருவாவடுதுறை.

13. *சிவாகம ஆராய்ச்சி*
25-6-2000 அன்று வெளியிடப்பட்ட ஒரு கட்டுரை. ஆசிரியர்: சாளவ க. ராஜப்பா குருக்கள் என்கிற ஸத்யோஜாத சிவாச்சாரியார், ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தான பரம்பரை ஸ்தானிகர், காஞ்சிபுரம்.

14. *சிவாகம ப்ரச்ன உத்தர சத மாலிகா*
தமிழ்நாடு அர்ச்சகர்கள் சமூக நலச் சங்கத்தின் காஞ்சிபுரம் வட்ட இளைஞர் அணியின் முதல் ஆண்டு விழா நிறைவு மலர், 9-11-1995.

15. *சித்தாந்த சாராவளி - சரியா பாத வியாக்கியானம்*
(க்ரந்த லிபி மூலமும், வ்யாக்யானத்தின் தமிழ் மொழி பெயர்ப்பும்) கோ.ஷண்முக சுந்தர முதலியாரால் முதன் முதலாகவும், பின்னர் (கலி 5017, ராக்ஷஸ, தை) 1917-ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில், சிவஞானபோத அச்சு யந்திர சாலையில், அவரது பேரன் மயிலை

அழகப்ப முதலியாரால் அச்சிடப்பட்டுள்ளது - ஆகமங்களை ஆராய்ச்சி செய்யும் பொருட்டுப் பரமசிவத்தை நோக்கித் தவம் செய்து முக்கண் பெற்றவர் த்ரிலோசந சிவாசாரியார். அவர் சைவ ஆகமங்களின் சித்தாந்த ஸாரத்தை வரிசையாகக் கூறிச் சென்றதின் தொகுப்பு நூலே சித்தாந்த ஸாராவளி. இந்நூலில் ஞாந, க்ரியா, யோக, சரியா பாதங்கள் கூறப்படுகின்றன. இதற்கு அநந்த சிவாசாரியார் வடமொழியில் வ்யாக்யாநம் எழுதி உள்ளார். அதனை பாண்டிச்சேரி வரதாச்சாரியார் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

16. *மஹாகும்பாபிஷேக யாகசாலை கிரியாவாரி விவரம்*
புது டில்லி ராமகிருஷ்ணபுரம் உத்தர சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி ஆலய வெளியீடு, 7-6-1973. (நன்றி: ஸர்வசாதகர் திரு. எம். ஐயாமணி சிவம், திருவாடானை).

17. *மெய்கண்ட சாத்திரம்* என வழங்கும் *சித்தாந்த சாத்திரம்*
சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் வெளியீடு, 1934.

18. *மெய்கண்ட சாத்திரம் (சைவ சித்தாந்தம்)*
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் வெளியீடு, 1956.

19. *சித்தாந்த அட்டகம்*
திருவிடைமருதூர் (திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த) சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய வெளியீடு, 1998.

20. *சைவாநுட்டான விதி*
முதல் பதிப்பு, 1928. நூலாசிரியர்: பஞ்சாக்ஷரம் வாலையானந்த சுவாமிகள், மறு பதிப்பு (1990) : திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி.டி.கே. சாலை, சென்னை-600018.

21. *What is a Temple? What is its significance*
A Paper by Dr. V. Ganapathy Sthapati. Vaastu Vedic Research Foundation. Chennai - Published by Dakshinaa Publishing House. A-5. Sakthi Tripurasundari Apartments. Tiruvanmiyur. Chennai-600041.

22. *மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்*
(Project Madurai. 2001) - Four works of Umapathi Sivachariar. found in the Internet in *pdf* format - prepared by Subashini Kangasundaram.

23. *அபிதான சிந்தாமணி*
தொகுத்தவர்: ஆ.சிங்காரவேலு முதலியார். முதல் பதிப்பு 1910. இரண்டாவது பதிப்பு 1934.

24. *பவித்ரோத்ஸவ விதி*
(க்ரந்த லிபியில்) - *முதலில் வெளியிட்டவர்:* மயிலை அழகப்ப முதலியார், சிவஞாநபோத அச்சு யந்திர சாலை, 1920. அதன் உரிமையைப் பெற்று, உபயோக்தமான வேத மந்த்ரங்களையும் சேர்த்து, 10-11, தம்புச் செட்டித் தெரு, சென்னையிலிருந்து, 1965-ஆம் ஆண்டு, தென்னிந்திய அர்ச்சகர் அஸோஸியேஷன் மறுபதிப்பு வெளியிட்டுள்ளது).

25. *Siva Temple and Temple Rituals*
A Compilation of Papers presented at the second Seminar on *Siva Temple and Temple Rituals* held on 19.07.1983 by the Kuppuswami Sastri Research Institute. Sanskrit College Campus. Mylapore. Chennai-600004. Editor-in-Chief Dr.S.S.Janaki. Director. KSRInstitute - Published on 26 July. 1988.

26. *Dhvaja-Stambha* (Critical Account of its Structural and Ritualistic Details)
Author: Dr. S.S. Janaki - Published in 1988 by the Kuppuswami Sastri Research Institute. Sanskrit College Campus. Mylapore. Chennai-600004.

மேற்கூறிய நூல்களை ஆக்கியோருக்கும், அவற்றை வெளியிட்டோருக்கும், அவை என் கைகளை அடையத் துணை நின்றோருக்கும் நன்றி. - *ஸ்ரீதரன்*

** ** **

பொருளடக்கம்


முதல் *பகுதி* (Section)-யின் ***கிளைப்பகுதி**கள்* (Chapters) 101 -இல் தொடங்கியும், இரண்டாம் பகுதியின் கிளைப்பகுதிகள் 201 -இல் தொடங்கியும், மூன்றும் பகுதியின் கிளைப்பகுதிகள் 301 -இல் தொடங்கியும் எண்ணிடப்பட்டுள்ளன. கிளைப்பகுதியின் *பிரிவுகள்* (Paragraphs) ***.xx என்றும், அதன் ***கிளைப்பிரிவு**கள்* (Sub-Paras) ***.xx.yy என்றவாறும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அமைப்பு இறுதியில் இணைக்கப்பட்டுள்ள *சொல் அகராதியில்* சுட்டப்பட்டுள்ளது.

முதல் பகுதி - நூல் - பக்கம் - 11
SECTION - 1 GENERAL PAGE - 11


இரண்டாம் பகுதி - அனுபவக் குறிப்புகள் - பக்கம் 71
SECTION - 2 PRACTICAL HINTS PAGE - 71

ௐ ௐ ௐ ௐ ௐ

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலய கும்பாபிஷேகக் காட்சிகள்



ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்,
புதிய ராஜகோபுரம்,
ராஜகோபுர
கும்பாபிஷேகக்
காட்சிகள்



பஞ்சாஸந வேதிகை,
யாகசாலே, பஞ்சாஸந
வேதிகையில்
எழுந்தருளியிருந்த
ஸ்வாமி கலசம்,
கும்பாபிஷேக நாளன்று
நிகழ்ந்த திருவிதிஉலா.

SECTION - 1

GENERAL

பகுதி - 1

நூல்

காப்பு

श्रीकान्तो मातुलो यस्य जननी सर्वमङ्गळा ।

जनको धर्मलिङ्गेशः तं वन्दे कुञ्जराननम् ॥

ஸ்ரீ காந்தோ மாதுலோ யஸ்ய ஜநநீ ஸர்வமங்களா । ஜநகோ தர்மலிங்கேஶ: தம் வந்தே குஞ்ஜராநநம் ॥

- ஸ்ரீ தன்மீச விநாயகர் ஸ்துதி

101. முகமன்

101.01. *இந்நூலில் கையாளப்பட்டுள்ள அணுகு முறை:*

முன் மாதிரி என்று ஒன்று இருந்தால், ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியவை எளிதில் விளங்கும் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வகையிலே, கும்பாபிஷேகம் குறித்த, பொதுவாகச் சொல்லப்போனால் சிவாலய ப்ரதிஷ்டா விதி குறித்த, விவரங்களைப் பட்டியலிடப் புகும்போது, ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயிலை ஒரு முன் மாதிரியாகக் (role model) கொண்டு இந்நூல் விரிகின்றது. இப்புத்தகத்தின் மூன்றுவது பகுதியில் தரப்பட்டுள்ள வரைபடம், Model - 1, அத்திருக்கோயிலைச் சென்றடையும் வழியைக் காட்டுகின்றது. முன்மாதிரியாகத் தன்மீசர் செம்பொன்கோயிலை எடுத்துக் கொண்டுள்ளமையால், அத்திருக்கோயிலில் ப்ரதிஷ்டையாகியுள்ள தெய்வங்கள் குறித்த விவரங்கள் முன்மாதிரி-2 (Model - 2) -ஆகக் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னர், அவற்றின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட யாகசாலை ஏற்பாடுகளைப் புரிந்துகொள்வான் வேண்டி, இந்த முன்மாதிரி-2 -ஐச் சற்று உற்று நோக்கிக் கொள்ளுமாறு இறைஞ்சுகின்றேன்.

101.02. *வேதங்கள்:*

வேதங்கள் அனாதியானவை. அவை இறைவனோடு மூச்சுக் காற்றென ஒன்றியவை. அவற்றை மானுஷ சக்திகள் உருவாக்கவில்லை. அவை ப்ரபஞ்சத்தில் அதிர்வுகளாக என்றென்றும் இருப்பவை. அவற்றைக் கண்டறியும் பேறு பெற்றவர்கள் பாக்கியசாலிகள். (For

example, music that is broadcast from TV tower travels towards our TV as electro-magnetic-waves through atmospheric etherial medium. Those waves contain low and very low frequencies also, but we do not hear them. When we fit woofer and sub-woofer to our TV, we hear the low frequency drum beats also very clearly). ருஷிகள் மந்திரங்களை முதலில் கண்டறிந்து, அவற்றின் சக்தியை உணர்ந்து, உலக நன்மைக்காக அவற்றை வெளியிட்டவர்கள். அதனால்தான் ஒரு மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கும் முன் வலக்கையால் சிரஸ்ஸைத் தொட்டு, அந்த மந்திரத்தைக் கண்டறிந்து சொன்ன முனிவரை நினைவு கூர்ந்து, அவரை வணங்குவதாகப் பாவனை செய்து குரு ந்யாஸம் செய்கிறோம்.

101.03. *ஆகமங்கள்:*

தமிழ்நாட்டின் பெரும்பாலான கோயில்கள், அக்கோயில்களின் பின்னே விளங்கும் தத்துவங்கள், அத்திருக்கோயில்களில் கடைப்பிடிக்கப்பெறும் வழிபாட்டு முறைகள் முதலியவை பற்றி நன்றாக அறியவேண்டுமானால், ஆகமங்களைப் பற்றியும், அவற்றில் கூறியுள்ளவை பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். இறைவன் குருவாக இருந்து போதித்தவை ஆகமங்கள். பார்வதி - பரமேச்வரன் பேசிக்கொண்டிருந்ததை, மைத்துனர் விஷ்ணு பக்கத்திலிருந்து ஆமோதித்தார். எனவே, பரமேச்வரன் கூறியதனைத்தும் ஆகமம் என்று பெயர் பெற்றது என்பர்.

101.04. *வேத-ஆகம பாகுபாடு:*

வேதத்துக்கும் ஆகமத்துக்கும் முரண்பாடு ஏதுமில்லை. ஒரு பொருளைப் பற்றிச் சொல்லும்போது,

முதலில் பொதுவாகச் சொல்லவேண்டும். பிறகு, அதை நன்முக விளக்குவதற்காகச் சிறப்பாகச் சொல்லவேண்டும். இம்முறையில் பொதுவாகச் சொன்னது வேதம். கோயில்களைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வது ஆகமம்.

101.05. *சிவ ஆகமங்கள்:*

101.05.01. சைவ ஆகமங்கள் 28. சைவ உப ஆகமங்கள் 207. வைணவ ஆகமங்கள் 108. சாக்த ஆகமங்கள் 77.

101.05.02. சிவாகமங்கள் 28ல் முதல் பத்து சிவபேதமானவை. இவை ப்ரணவர் (அனந்தேசர்) முதலான (ஒரு ஆகமத்திற்கு மூவர் வீதம்) 30 பேருக்கு உரைக்கப்பட்டவை. *அவையாவன:* 1. காமிகம் 2. யோகஜம் 3. சிந்தியம் 4. காரணம் 5. அஜிதம் 6. தீப்தம் 7. சூக்ஷ்மம் 8. ஸஹஸ்ரம் 9. அம்சுமான் 10. சுப்ரபேதம். இவை பக்தி வழிபாட்டைப் பிரதானமாகக் கொண்டவை. இவற்றிற்கு இலக்கியச் சிறப்பும் பொதுமக்கள் ஆதரவும் அதிகம்.

101.05.03. அடுத்த 18-ம் ருத்ரபேதமானவை. இவைகளும் முதலில் கூறிய பத்து சிவபேத ஆகமங்களைப் போல ஸௌம்யமானவைதான் என்றாலும், இவற்றின் நெறிமுறைகள் கடுமையான வ்ரதங்களுடன் கூடியவை. இவை அநாதிருத்ரர் (ஸ்ரீகண்டருத்ரர்) முதலான (ஒரு ஆகமத்திற்கு இருவர் வீதம்) 36 பேருக்கு உரைக்கப்பட்டவை. *அவையாவன:* 1. விஜயம் 2. நிஸ்வாஸம் 3. ஸ்வாயம்புவம் 4. ஆக்னேயம் 5. வீரம் 6. ரௌரவம் 7. மகுடம் 8. விமலம் 9. சந்திரஞானம் 10. முகபிம்பம் 11. புரோத்கீதம் 12. லளிதம் 13. சித்தம் 14. சந்தானம் 15. சர்வோக்தம் 16. பரமேச்வரம் 17. கிரணம் 18. வாதுளம்.

101.05.04. திருமூலர் தன் திருமந்திரத்தில் கூறுவன ஒன்பது: காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், யாமளம், காலாத்ரயம், சுப்ரபேதம், மகுடம்.

101.06. *வைதீக - ஆகம ப்ரதிஷ்டை:*

வேதங்களிலும் சிவாலய நிர்மாணம் மற்றும் வழிபாடு பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. ஆகமங்களில், மிக விரிவாக அவை காணப்படுவது நாம் அறிந்ததே. ஆலய ப்ரதிஷ்டைகள் வேதங்களில் விதித்துள்ளவற்றை முக்கிய ப்ரமாணங்களாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டால் அதை வைதீக ப்ரதிஷ்டை என்பர். இவ்வகை ப்ரதிஷ்டைகள் கேரளாவில் அதிகம். ஆகமங்களில் கண்டுள்ளபடி ஆலய நிர்மாணம் செய்யப்பட்டிருந்தால் அதை ஆகம ப்ரதிஷ்டை என்பர். தமிழ்நாட்டின் பழைய கோயில்களில் அநேகமாக எல்லாமே ஆகம ப்ரதிஷ்டைகள்தான்.

101.07. *வைதீக ப்ரதிஷ்டா விதி:*

வேதங்களை ஒட்டி எழுந்த *கௌதம ஸூத்ரம், வைகாநஸ ஸூத்ரம்* போன்ற நூல்களில் ஆலய நிர்மாணம், பிம்ப ப்ரதிஷ்டை, கும்பாபிஷேகம் ஆகியவற்றை உள்ளடக்கிய *ப்ரதிஷ்டா விதி* பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ருக்வேதத்தைச் சார்ந்த *ப்ரம்ம கர்ம ஸமுச்சயம்* என்ற ப்ரயோக நூலில் ப்ரதிஷ்டா விதி விவரமாகக் கையாளப்பட்டுள்ளது. இவற்றின் துணைகொண்டு அமைக்கப்படுவனவே வைதீக ப்ரதிஷ்டை ஆலயங்கள்.

101.08. *சிறப்பு ப்ரதிஷ்டா விதிகள்:*

மேற்கூறிய வேத மூலங்களைத் தழுவியும், ஆகமங்களில் காணப்படுவனவற்றுள் சிலவற்றை அனுசரித்தும், சில ஆலயங்கள் தமக்கெனத் தனியாகக்

கூட ப்ரதிஷ்டா விதிகள் ஏற்படுத்தி வைத்துக் கொண்டுள்ளன. உதாரணமாக, காஞ்சி காமாக்ஷியம்மன் திருக்கோயிலில் காணப்படும் முறைகள் அக்கோயிலுக்கென விதிக்கப்பட்டுப் பன்னெடுங்காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வருவது. அவ்வாறே, சிதம்பரம் திருக்கோயிலுக்கும் தனி முறைகள் உள்ளன. சென்ற (இருபதாம்) நூற்றுண்டில் நிர்மாணிக்கப் பெற்ற வாரணுசி (காசி) காமாக்ஷி கோயிலுக்கென, காஞ்சி காமகோடி மடத்திலிருந்து சிறப்பு விதிகள் தொகுக்கப்பட்டு, பிறகு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, பூஜா முறைகள் அனுஷ்டிக்கப்படுவதாகக் கூறுவர்.

101.09. *பத்ததிகள்:*

ஆகம ப்ரதிஷ்டை ஆகியுள்ள ஆலயங்களுக்கென பல *பத்ததிகள்* வழக்கில் உள்ளன. வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், மரபு இவற்றின் துணேகொண்டு அமைக்கப்படும் ப்ரதிஷ்டா விதிகளும், வழிபாட்டு முறைகளும் *பத்ததிகள்* என அழைக்கப் பெறுகின்றன.. இவை ஆகமங்களின் வழி நூலாகும். தூர்வாச முனிவர் முதல் பத்ததி ஆசிரியர். காஞ்சி காமாக்ஷியம்மன் ஆலய சக்தி வழிபாட்டு முறையான தூர்வாச கல்பம் என்ற பத்ததி நூலே வகுத்துத் தந்தவர் இவர்தான். அவரைத் தொடர்ந்து பலர் பத்ததிகள் இயற்றியுள்ளனர். அவற்றுள் 18 பத்ததிகள் ப்ராசீனமானவை. அவை அவற்றின் ஆசிரியர்களின் கீழ்வரும் பெயர்களேக் கொண்டே அழைக்கப்படுவன: 1. உக்ரஜோதி 2. ஸத்யஜோதி 3. ராமகண்டர் 4. வித்யாகண்டர் 5. நாராயணகண்டர் 6. விபூதிகண்டர் 7. ஸ்ரீகண்டர் 8. நீலகண்டர் 9. ஸோமசம்பு 10. ஈசானசம்பு 11. ஹ்ருதயசிவன் 12. ப்ரம்மசம்பு 13. வைராக்கியசிவன் 14. ஞானசம்பு 15. த்ரிலோசனசிவன் 16. வருணசிவன் 17. ஈச்வரசிவன் 18. அகோரசிவன். பிற்காலத்தில் வாமதேவர், உத்துங்கசிவன் போன்ற பெரியோரும்,

மற்றவரும் கூட பத்ததிகள் வகுத்துத் தந்துள்ளனர். இவற்றுள் பல பத்ததிகளின் பகுதிகள்தான் கிடைத்துள்ளன. அகோர சிவாச்சார்யார் பத்ததியிலும், ஸோமசம்பு சிவாச்சார்யார் பத்ததியிலும் தீக்ஷை, ப்ரதிஷ்டை, உற்சவம், ப்ராயச்சித்தம் போன்ற பகுதிகள் விவரமாகக் கிடைக்கின்றன. பெரும்பாலும் இவையே, ஆங்காங்குள்ள மரபுக்கு ஏற்றவாறு சிறு சிறு மாறுதல்களுடன், தமிழ்கூறும் நல்லுலகம் முழுதும் கடைப்பிடிக்கப் பெறுகின்றன.

101.10. *வைதீக புனராவர்த்தன ப்ரதிஷ்டை:*


வைதீக ப்ரதிஷ்டை ஆகியுள்ள கோயிலில் புனராவர்த்தன ப்ரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் வைதீக முறைப்படி நடைபெறுதலே பொருத்தமானது. அவ்வாறே, ஆகம ப்ரதிஷ்டை ஆகியுள்ள திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகங்களை ஆகம முறைப்படிச் செய்வதே நல்லது.



101.11. *ஆகம புனராவர்த்தன ப்ரதிஷ்டை:*

ஒரு பழைய திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் ஏற்பாடு செய்யும்போது, இயன்றவரை, அக்கோயிலில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் பத்ததிக்கு ஏற்ற ப்ரதிஷ்டா விதிகளில் அனுபவம்

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்
(தன்மீசர் ஆலயம்,
14.07.2000)



பாலாலயம் (தருணாலயம்) (தன்மீசர் ஆலயம், 14.07.2000)

உள்ள ஸர்வசாதகரைக் கொண்டு நிகழ்ச்சிகளை அமைத்துக் கொள்வது விரும்பத் தக்கது. ஆனாலும், பத்ததிகள் மாறிக் கிரியைகள் செய்தாலும் தவறில்லை. செய்யும் கிரியைகளிலும் (component items that are performed), முறைகளிலும் (methodology), ஒழுங்கிலும் (order) பத்ததிகளுக்கிடையே சிறுச் சிறு வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவை அனைத்தும் ஆகமங்களையே மூலமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளமை நினைவில் கொள்ளப்படுதல் வேண்டும்.

101.12. *இந்த நூல் பயன்படக்கூடிய அளவு:*

இந்தத் தொகுப்பு, ஆகம ப்ரதிஷ்டையான நங்கைநல்லூர் ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலய கும்பாபிஷேகத்தில், காஞ்சீபுரம் ஸர்வசாதகர் ஸ்ரீ ராஜப்பா

குருக்கள் கையாண்ட அகோர சிவாச்சார்யார் பத்ததியை ஒட்டித் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்நூல் மற்ற பத்ததியாளருக்கும் பெரும் அளவில் உதவக்கூடும். வைதீக ப்ரதிஷ்டை ஆகியுள்ள கோவில் கும்பாபிஷேகங்களிலும், இந்நூலில் காணப்படும் விஷயங்கள், குறிப்பாக நிர்வாகம் குறித்த குறிப்பேடுகள், பயன் உள்ளதாக இருக்க வாய்ப்புண்டு.

ௐ ௐ ௐ ௐ ௐ

102. பாலஸ்தாபனம்

102.01. புதியதாக ஆலயம் கட்டப்படும்போது, *இளங்கோயில்* என்றும் அழைக்கப்படும் *பாலாலயம்* ஒன்றை முதலில் அமைத்து, மூலலிங்கத்திற்குப் பதிலாக,



யாகசாலே (தன்மீசர் ஆலயம், 07.09.2000)

அவரது நாமத்தையே தாங்கிய பாலலிங்கம் ஒன்றை அங்கே அமைத்து, வழிபட்டு வரவேண்டும் என்பது ஆகம விதி. அடுத்த 12, அல்லது 24, அல்லது அதிக பக்ஷமாக 36 வருடங்களுக்குள் ஆலய நிர்மாணத்தைப் பூர்த்தி செய்து, மூலலிங்கத்தை அவர்க்குரிய கர்ப்பக்ரஹத்தில் ப்ரதிஷ்டை செய்ய வேண்டும். நிறைவாக, பாலலிங்கத்தில் உள்ள இறைவரை கும்பத்தில் ஆவாஹனம் செய்து, முதன் முதலாக அவ்வாலயத்திற்கு நிகழும் கும்பாபிஷேகம் மூலமாக, அவரை மூலலிங்கத்திற்குள் ஆவாஹனம் செய்ய வேண்டும். இது அநாவர்த்தன ப்ரதிஷ்டை.

102.02. பிற்காலத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்ய நேரிட்டாலும், புனர் ப்ரதிஷ்டைகள் செய்ய வேண்டி வந்தாலும், அல்லது அதிக ஸந்நிதிகள் அமைத்து விரிவாக்கம் செய்ய நேர்ந்தாலும், அல்லது ஆகமங்களில் விதித்துள்ளபடி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அஷ்டபந்தனம் செய்யும்போதும், மீண்டும் பாலாலயம் அமைத்து, இறைவர்களை பாலஸ்தாபனம் செய்து, திருப்பணிகள் நிறைவானவுடன், கும்பாபிஷேகத்தின் மூலமாக அவர்களை மூலஸ்தானத்துக்குத் திரும்பவும் எழுந்தருளச் செய்திடல் வேண்டும். இவ்வாறு ஜீர்ணோத்தாரணத்துக்காக அமைக்கப்படும் பாலாலயங்களுக்குத் *தருணாலயங்கள்* என்று பெயர்.

102.03. ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலயத்தில், 13-7-2000 அன்று மாலை கலாகர்ஷணம் ஆகி, கும்பத்தில் எழுந்தருளிய தேவதைகள், 14-7-2000 காலை பலகைகளில் எழுதப்பட்ட சித்திரங்களில் பாலஸ்தாபனம் ஆகி, புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ள தருணாலயத்தில் எழுந்தருளினர்.

102.04. ஸ்வாமி விமானத்திற்கும், அம்பாள் விமானத்திற்கும் திருப்பணி செய்யவேண்டி இருந்ததால்,

விமானங்கள் 14-7-2000 அன்றே சித்திரங்களில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டன. தக்ஷிணாமூர்த்தி, மஹாவிஷ்ணு ஆகிய கோஷ்ட தெய்வங்களின் ஸந்நிதிகளில் திருப்பணி இல்லை. மஹா கும்பாபிஷேக சமயத்தில் அஷ்ட பந்தனம் மட்டுமே நிகழவேண்டி இருந்தது. ஆனாலும், இவர்கள் அங்கமாக உள்ள, *ஸ்தூல லிங்கம்* எனப்படும் ஸ்வாமி விமானம் பாலஸ்தாபனம் ஆகிவிட்டதால், இவ்விரு மூர்த்திகளும் கூட பாலஸ்தாபனம் செய்யப்பட்டனர்.

102.05. சித்திரங்களில் எழுந்தருளியுள்ளவர்கள் 10-9-2000 அன்று நிகழ்ந்த மஹா கும்பாபிஷேகத்திற்கு





மதுரை மீநாக்ஷி-சுந்தரேச்வரர் ஆலய கும்பாபிஷேக யாகசாலைக் காட்சிகள்

முன்பாக, 8-9-2000 அன்று கும்பாபிஷேகத்தைச் சார்ந்த நிகழ்ச்சிகளின் அங்கமாக, திரும்பவும் கும்பங்களில் ஆவாஹனமாகி, யாகசாலைக்கு எழுந்தருளினர்.

102.06. நால்வர், சேக்கிழார், அருணகிரிநாதர், பைரவர், நவக்ரஹங்கள், ஸர்வமங்கள விநாயகர், குரு விநாயகர், அரசமரத்தடி விநாயகர், நாகர்கள் - ஆகியோரின் ஸந்நிதிகளில் திருப்பணிக்கு அவசியம் இல்லையாதலால், அந்த மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்படவில்லை. மஹா கும்பாபிஷேக சமயத்தில், அந்த மூர்த்திகளுக்கு மீண்டும் அஷ்டபந்தனம் செய்வதற்கு ஏதுவாக, 8-9-2000 அன்று, கும்பத்தில் அவர்களும் கலாகர்ஷணம் செய்விக்கப்பெற்று, யாகசாலைக்கு எழுந்தருளினர்.

102.07. இவ்வாறு திருக்கோயிலின் *அனைத்து* மூர்த்திகளும் 8-9-2000 அன்று கும்பங்களில் ஆவாஹனம் செய்யப்பட்டு யாகசாலைக்கு எழுந்தருளினர். அங்கே, அவர்களுக்கு விரிவாக நான்கு கால பூஜைகள் நிகழ்வுற்றன. பிறகு, 10-9-2000 அன்று, கும்பாபிஷேகக் கிரியை மூலமாக, மூர்த்திகள் அனைவரும் தத்தம் ஸ்தானங்களில் ப்ரதிஷ்டை / புனர்ப்ரதிஷ்டை / ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தனம் ஆகியுள்ள பிம்பங்களுக்கு (கற்சிலைகளுக்கு) திரும்பி, நிலைகொண்டனர்.

ॐ ॐ ॐ ॐ ॐ

103. ப்ரதிஷ்டைகள்

103.01. ஆலய ப்ரதிஷ்டை அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்கு வகைப்படும். தேவாலயங்கள் இல்லாத இடத்தில்

தேவாலயங்களை ஆகம விதிப்படி புதியதாக அமைத்து, அங்கு இறைவனை ப்ரதிஷ்டை செய்வது *அநாவர்த்தன ப்ரதிஷ்டை.*

103.02. பன்னெடுங்காலத்துக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தில், நெடுங்காலமாக நித்திய நைமித்திக பூஜைகள் நிகழ்ந்து வரும் காலகட்டத்தில், எதிர்பாராத வகையில் தீ, வெள்ளம், பெருங்காற்று போன்றவற்றால் ஆலயம் மறைந்து பட்டாலோ, அல்லது குறைவு பட்டாலோ, அல்லது அழிவுற்றாலோ, வழிபாடுகள் நடைபெறாது நின்று விடுகிறது. அந்த சமயத்தில், அத்திருக்கோயிலைத வெளிக்கொணர்ந்து சீர் செய்தோ, அல்லது அதற்கு மாற்றாக அருகில் வேறொரு இடத்தில் புதியதாக ஆலய நிர்மாணம் செய்தோ, அங்கு இறைவனை ப்ரதிஷ்டை செய்வது *ஆவர்த்தன ப்ரதிஷ்டை.*

103.03. நித்திய நைமித்திக வழிபாடுகள் நிகழ்ந்து வரும் காலகட்டத்தில், ஆலயத்தின் பகுதிகள் சீர்கேடு (ஜீரணம்) உற்றாலோ, அல்லது புது ஸந்நிதிகள் அமைத்து ஆலய விரிவாக்கம் செய்வித்திட இறையருள் ஸித்தித்தாலோ, அல்லது ஆகம விதிகளுக்கொப்ப ஆலயத்தின் பகுதிகள் திருத்தி அமைக்கப்பட நேர்ந்தாலோ, அல்லது இறை மூர்த்தங்கள் புனர் ப்ரதிஷ்டை ஆக வேண்டி வந்தாலோ, இறைவரை பாலஸ்தாபனம் செய்து, ஆலயத்தை மீண்டும் அழகாகவும், பலம் மிக்கதாகவும் அமைத்து, இறைவனை மீண்டும் ப்ரதிஷ்டை செய்வதே *புனராவர்த்தன ப்ரதிஷ்டை.* ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் திருக்கோயிலில் பழுதடைந்தவற்றைத் திருத்தி அமைத்தல் எனப்படும் ஜீர்ணோத்தாரண திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனவே, அது புனராவர்த்தன ப்ரதிஷ்டை. புனராவர்த்தன ப்ரதிஷ்டை நிகழ வேண்டிய

இடத்தில் பாலஸ்தாபனம் செய்யாது ஜீர்ணோத்தாரணம் செய்வது குற்றம்.

103.04. தேவாலயத்தினுள் மனிதனுக்கோ அல்லது ஏதாவது ஒரு விலங்கினுக்கோ மரணம் சம்பவித்தாலும், விரும்பத்தகாதவர்களோ, தகாதவைகளோ ஆலயத்திற்குள் வந்து அதன் ஸாந்நித்யத்திற்கு கேடு விளைவித்து விட்டாலும், *அந்தரித ப்ரதிஷ்டை* செய்தல் அவசியம். அதற்கு உரிய ப்ராயச்சித்த வடிவமாக அந்தரித ப்ரதிஷ்டை நடைபெறல் வேண்டும்.

103.05. உலகில் அனைத்துமே, ஆதியில், நீரிலிருந்து தோன்றியவை. எனவே, இறைவனின் ப்ரகாசத்தை (அருள் வழங்கு தன்மையை) ஒரு பிம்பத்திலிருந்து மற்றொரு பிம்பத்திற்கு மாற்றும் செய்கை, இடையிலே கும்பத்தில் வைக்கப்பட்ட நீரின் மூலமே செய்யப்படுகிறது. மூல பிம்பத்திலிருந்து கும்பத்திற்கு மாற்றும் நாளும், பிறகு மீண்டும் மூல பிம்பத்திற்கு மாற்றப்படும் நாளும் மிக அருகில் (காரணாகமப்படி, உத்தம, மத்திம, அதம பக்ஷமாக 5, 7, 30 நாட்களுக்குள்) இருந்தால், கும்பத்தையே பாலபிம்பமாக (பாலஸ்தாபனம் ஆகியுள்ள இறை மூர்த்தமாக) பாவித்து, வழிபட்டும் வரலாம்.

103.06. முப்பது நாட்களுக்குள் விமானம் போன்ற இடங்களில் திருப்பணி நடத்தி முடித்துவிட வாய்ப்பிருந்தால், திருப்பணி நடைபெறும் நாட்களில் மட்டும், ஒவ்வொரு நாள் காலை வழிபாடுகள் முடிந்த உடன், ஸ்வாமியைக் கும்பத்தில் கலாகர்ஷணம் செய்து வைத்திருந்து, மீண்டும் மாலையில் சாந்திஹோமம் செய்து மூலலிங்கத்தில் ஸாந்நித்யத்தைச் சேர்த்து விடுவதாகவும் ஒரு மரபு உண்டு.

103.07. பாலஸ்தாபனம் ஆகி இருக்கும் காலம் அதிகமாக இருந்தால், மூல பிம்பத்திலிருந்து கும்பத்துக்கு வந்த மூர்த்தியை, வேறொரு பிம்பத்திற்கு மாற்றி, அவரைப் பாதுகாத்துப் போற்றி வரவேண்டும். பாலஸ்தாபன இடைவெளிக்கு ஏற்ப, கத்தி, கண்ணாடி, சித்திரப் படம் (ப்ரதி பிம்பம் - ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயிலில் செய்து வைக்கப்பட்டதைப் போல), ஸ்தண்டிலம், மண்டலம், பாதுகை, சூலம் (ஆயுதம்), வஸ்த்ரம், சுவர் சித்திரம், மரப்பதுமை, கற்சிலை போன்றவற்றுள் ஒன்றை பால பிம்பமாக உபயோகப்படுத்த வேண்டும். பின்னர், மூல பிம்பம் (திருப்பணிகள் முடிந்து) தயாரான உடன், மீண்டும் கும்பஸ்தாபனம் மூலமாக, பாலபிம்பத்திலிருந்து கும்பத்திற்கும், கும்பத்திலிருந்து மூல பிம்பத்துக்கும் மாற்றிடல் வேண்டும். வழக்கினை ஒட்டி, முதல் நிகழ்ச்சியை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் என்றும், இரண்டாவதை மஹா கும்பாபிஷேகம் என்றும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளோம்.

103.08. பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்கு செய்யப்படும் கிரியைகளுக்கும், மஹாகும்பாபிஷேகத்திற்கு செய்யப்படும் கிரியைகளுக்கும் ஆகம விதிகளிலும், மந்திரங்களிலும் ஒருவிதமான வித்தியாசமும் இல்லை. ஒரு இரவை அடக்கிய வகையில் ப்ரதிஷ்டை செய்யலாம் என்றொரு குறிப்பு ஆகமங்களில் காணப்படுகின்றது. எனவே, பாலஸ்தாபன கும்பாபிஷேகம், சாதாரணமாக, இரண்டு கால பூஜைகளோடு நடத்தப்பெறுதல் மரபு. பெரும்பாலான ஆகமங்களில் மூன்று நாட்களில் நான்கு கால பூஜைகள் செய்து ப்ரதிஷ்டை செய்வது மிகக் குறைந்த பக்ஷமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மஹாகும்பாபிஷேகத்தின் போது குறைந்தது நான்கு கால யாகசாலை பூஜைகள் செய்யப்படுவது மரபு. அப்போது, பாலஸ்தாபனத்தை விட, கிரியைகள் சற்று விரிவாகச். செய்யப்படும். நிதி நிலைமைக்கும், மற்ற வசதிகளுக்கும் ஏற்ப யாகசாலைகள்,

வேதிகைகள், குண்டங்கள் அமைத்து, இறையருளை முன் வைத்து, நான்கு காலங்களுக்கு அதிகமான (6, அல்லது 8, அல்லது 10, அல்லது 12, அல்லது அதிகபக்ஷமாக 14 காலங்களாக) யாகசாலை பூஜைகளுடன், மிக விரிவாகவும் மஹாகும்பாபிஷேகக் கிரியைகள் செய்வதுண்டு.

ௐ ௐ ௐ ௐ ௐ


104. ப்ரதிஷ்டா கிரியைகள்

மேற்கூறியவாறு, நால்வித ப்ரதிஷ்டைகளின் அம்சமாக, பற்பல கிரியைகள், ஸம்ஸ்காரங்கள், செய்திடல் வேண்டும் என ஆகமங்கள் விதித்துள்ளன. அவை குறித்த விவரங்கள் இப்பகுதியில் சுருக்கமாக தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அக்கிரியைகள் பெரும்பாலும் கீழ்க்கண்டவாறு அமையும்:

104.01. முஹூர்த்த நிர்ணயம்: பஞ்சாங்க (திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம்) சுத்தி உள்ள முஹூர்த்தத்தில்தான் ப்ரதிஷ்டை (கும்பாபிஷேகம்) செய்ய வேண்டும். அவ்வாறான நாள் ஒன்றைக் கண்டு பிடித்து, முஹூர்த்தப் பத்திரிக்கையைக் குறித்துக் கொள்ள வேண்டும். பின்னர், ஸ்வாமி ஸந்நிதியில் தோரணம் கட்டி, 2 ஆஸனப் பலகைகள் இட்டு, தீபம் வைத்து, கணபதி பூஜை. புண்யாஹம். முஹூர்த்தப் பத்திரிக்கைக்கு ஸரஸ்வதி பூஜை. க்ரஹப்ரீதி. புரோகிதருக்கு மரியாதை. புரோகிதர் பத்திரிக்கை வாசித்தல். பத்திரிக்கையை ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்து, பின் எல்லாருக்கும் வழங்குதல். (தற்காலத்தில் அழைப்பிதழ் அச்சிடப்பட்டு வந்த உடன், ஒரு நல்ல நாளில் இந்தச் சடங்கு நிகழ்த்துவிக்கப்பெறுகின்றது).







மதுரை மீநாக்ஷி-சுந்தரேச்வரர் ஆலய கும்பாபிஷேகக் காட்சிகள்

104.02. ஸ்தம்ப ஸ்தாபனம்: யாகசாலை மனைக்கால் முஹூர்த்தம். புதுக் கடப்பாரை, புது மண்வெட்டி, தோகையோடு கூடிய சவுக்கு அல்லது மூங்கில் மரம் இவற்றை அலங்கரித்து, பூஜித்து, நல்ல முஹூர்த்தத்தில் பந்தக்கால் முஹூர்த்தம் செய்திடல் வேண்டும்.

104.03. அனுக்ஞை: விநாயகர், மூலமூர்த்தி முதலாக சண்டேச்வரர் ஈறுகவுள்ள அனைத்துத் தெய்வங்கள், குருமார்கள், பெரியோர்கள், முதியோர்கள் ஆகியோரது அநுமதியைக் கோரிப் பெறும் "உத்தரவு பெறுதல்" என்னும் நிகழ்ச்சியே அனுக்ஞை. புனராவர்த்தன ப்ரதிஷ்டைகளுக்கு, இந்தக் கிரியை மிக விரிவாக, ஸாங்க (ஸ-அங்க), உபாங்க, ப்ரத்தியங்க அனுக்ஞைகளாகச் செய்யப்படும். முதலில் விக்னேச்வர பூஜை. புண்யாஹவாசனம். பிறகு பூதசுத்தி, அந்தர்யஜனம் முதல்

சிவஹஸ்தம் வரை செய்து, விக்னேச்வரர் அனுக்ஞை. பிறகு ஆசார்யார் அனுக்ஞை. அடுத்து, பரமேச்வரன், அம்பிகையிடமிருந்து பெறுவது ஸாங்கானுக்ஞை (ஸஹ-ஆக-96). பின்னர் விநாயகர், தக்ஷிணாமூர்த்தி, ஸுப்ரஹ்மண்யர், நந்திதேவர், சண்டிகேச்வரர் ஆகிய ஐவரிடமும் பெறுவது உபாங்கானுக்ஞை. மற்றுள்ளோரிடமிருந்து பெறுவது ப்ரத்யங்கானுக்ஞை.

104.04. தன பூஜை, திரவ்ய சுத்தி: சாமான்யார்க்கியம் கூட்டிய நீரால் ஸர்வஸாதகர் அனைத்து த்ரவ்யங்களையும் ப்ரோக்ஷணம் செய்து, அத்திரவ்யங்களுக்கு உரிய அதிதெய்வங்களைப் பூஜித்தலே த்ரவ்ய சுத்தி. தனபூஜை செய்வதன் மூலம், பாவம் உள்ள தனமும் சிவார்ப்பணத்துக்கு உரிய தகுதி பெறுகின்றது என்பர். த்ரவ்யங்களை அபிஷேகம் (ப்ரோக்ஷணம்) செய்து, அஷ்ட லக்ஷ்மிகளைப் பூஜித்து, நைவேத்யாதி தீபாராதனைகளைச் செய்து, பட்டில் முடிந்து, ஸர்வஸாதகர் எஜமானரிடம் கொடுத்தல். (கோயிலைப் பரிபாலிக்கும் பொறுப்பு உள்ளவரை *எஜமானன்* என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன).

104.05. திரவிய விபாகம்: திரட்டிய பொருளை உரியவாறு பங்கிடும் கிரியைக்கு திரவிய விபாகம் என்று பெயர். நூதன ஆலய ப்ரதிஷ்டையானால், அதற்கெனத் திரட்டப்பட்ட செல்வத்தை அல்லது த்ரவியத்தை, மூன்று பங்குகளாக்கி, ஒன்றை ஆலய நிர்மாணப் பணிகளுக்கும், இரண்டாவதை கிராமத்தினை அலங்கரித்து விழாக்கோலம் பூணச் செய்வதற்கும் ஒதுக்கி வைத்துத் திருப்பணிகள் செய்த பின், மூன்றுவதை கும்பாபிஷேகச் செல்வுகளுக்காக திரவிய விபாகம் செய்திடல் வேண்டும்! புனராவர்த்தன ப்ரதிஷ்டையானால் திருப்பணிகளுக்கும், கிராமசுத்திக்கும் தேவையான பொருளைக் கணக்கிட்டு வைத்துக் கொண்டு, கும்பாபிஷேகச் செலவுக்கான பொருளைத் திரவிய விபாகம்

செய்திடல் வேண்டும். பொன்னுலமைந்த ஒரு தட்டினைப் பட்டு பீதாம்பரத்தினுல் அலங்கரித்து, கும்பாபிஷேகத்துக்கென ஒதுக்கி வைத்த நிதியை அதில் வைத்து, யானை அல்லது சிவிகை மீது அதை ஏற்றி, கிராமவலம் வரச்செய்து, ஆலயம் கொண்டு வர வேண்டும். மண்டபத்தில் அஷ்டதளத் தாமரையும் கோஷ்டங்களும் அமைத்து வேதிகையில் அந்த தனத்தை வைத்துப் பூஜிக்க வேண்டும். பிறகு அந்தத் தனத்தை 11 சம பங்குகளாக்கி, கீழ்வரும் வகையில் உபயோகத்திற்கென அளிக்க வேண்டும் என்பது ஆகம வாக்யம்: 1 பங்கு யாக த்ரவ்யங்களுக்கு, 2 பங்கு யாகத்திற்கு, 1 பங்கு அபிஷேகத்திற்கு, 1 பங்கு அன்னதானத்துக்கு, 1 பங்கு ஸர்வஸாதகருக்கு, 2 பங்கு மற்ற சிவாச்சார்யார்களுக்கு, 1 பங்கு வேதம் ஓதுவோருக்கு, 1 பங்கு மற்றுள்ள வேதியர்க்கு தக்ஷிணை அளிப்பதற்கு, 1 பங்கு பரிசாரகர், வாத்தியக்காரர், சிற்பி, கலைஞர்கள், மற்ற பணியாளர்களுக்கு மரியாதை செய்வதற்கு.

104.06. ஆசார்ய வரணம்: எஜமானன், ப்ரதிஷ்டை செய்வதற்குத் தகுதி உள்ள சிவாச்சாரியாரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் பொறுப்பினை ஒப்படைக்கும் கிரியைக்கு ஆசார்ய வரணம் என்று பெயர். அத்தகைய சிவாச்சாரியார் *ஸர்வஸாதகர்* என்று அழைக்கப்படுவார். ஸர்வஸாதகருக்கு உரிய வஸ்த்ரங்கள், ருத்ராக்ஷ கோர்வை, கர்ண குண்டலம், வெள்ளி யஜ்ஞோபவீதம், பவித்ர ஸ்வர்ண மோதிரம், வெள்ளி தர்ஜனி, கடீ சூத்ரம், விபூதி ஸம்புடம், வெள்ளி பஞ்சபாத்ர உத்தரிணி ஆகியவற்றை எஜமானன் அவருக்கு ஸமர்ப்பித்து, நமஸ்கரித்து, விபூதி பெற்றுக் கொள்ளுதல்.

104.07. ப்ரஸன்ன கணபதி பூஜை: புண்யாஹவாசனம். பஞ்சகவ்யம் கூட்டுதல். ஸ்நபனம். கணபதி ஹோமம். பூர்ணாஹுதி. அபிஷேகம். நிவேதனம். ப்ரஹ்மச்சாரி பூஜை. கஜ பூஜை. மண்டப பூஜை.

104.08. க்ராம சாந்தி, யந்த்ர பூஜை: கிராமத்தில் வசிக்கும் ப்ரம்மராக்ஷஸர்கள், பைசாஸங்கள், பூதங்கள் ஆகியோரால் ஏற்படக்கூடிய இன்னல்களைத் தடுத்திடச் செய்வதே கிராம சாந்தி. பைரவரை (வடுகரை) பூஜித்து, அக்னி கார்யம் செய்து, பலி கொடுத்து, எட்டு திக்குகளிலும் பலி இட்டு, பூர்ணாஹுதி கொடுத்து, அக்னி விஸர்ஜனம் செய்தலே, தேவாலய வளாகத்திலேயே கிராம சாந்தி செய்யும் விதி. கத்தியை வைத்து பூஜை செய்து, கும்பத்திலும் கத்தியிலும் உள்ள தெய்வங்களை இதயத்திலும் ஒடுக்கிக் கொள்ளுதல்.

104.09. ப்ரவேச பலி: உபத்திரவங்கள் அகலவும், அரிஷ்டங்கள் நிவர்த்தியாகவும், அசுர கணங்கள் விலகவும், அந்தந்த திக்கில் இந்த்ராதி தேவர்கள் எண்மரையும் காவலாக இருக்க வேண்டி, இடையூறுகள் இன்றிக் காக்க வேண்டியே ப்ரவேச பலி நிகழ்த்தப்படுகின்றது. விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், பஞ்சகவ்ய சேர்க்கை. வேதகோஷத்துடன் லக்ஷ்மீ மற்ற பரிவாரங்களுக்கு பூஜையும் சுத்த அன்னங்கொண்டு பலியும், ஆஸனங்களில் யக்ஷ, ராக்ஷஸ, பூத, பைசாஸாதி தேவதைகள் முதலாக வடுகர் ஈறுக அனைத்து பூதாதி தேவதைகளுக்கும் உரிய இடத்தில் உரிய மந்திரங்களை உச்சரித்து பலியும் - ஆகியவை ப்ரவேச பலியின் அம்சங்கள்.

104.10. ரக்ஷோக்ன ஹோமம்: விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், சகளீகரணம், பாத்யம், அர்க்யம். வேதிகையில் பரவப்பட்ட தான்ய நடுவில் அஷ்டதள பத்மத்தில் கும்பம் வைத்து ரக்ஷோக்ன தேவர் ஆவாஹனம். வலது பக்கம் தேங்காயை வைத்து ஸதாசிவ சொரூப த்யானம். நவ சக்தி பூஜை, அஷ்ட பைரவ பூஜை, சிவப்பு அன்ன பலி, பூஷணிக்காய் (கூஷ்மாண்டம்) பலி, நாயுருவி முதலிய ஸமித்துக்களால் பலிகரண ஹோமம், ரக்ஷோக்ன மந்திரத்தால் ஆஹுதி, பூர்ணாஹுதி.

104.11. ஆசார்ய தசவித ஸ்நானம்: புண்யாஹவாசனம், பஞ்சகவ்யம் கூட்டுதல். மதுபர்க்கம் அளித்தல் (நிந்தா தோஷ நிவர்த்தி). ஸ்நானங்கள்: 1. தைலாப்யங்கனம் (ஆரோக்ய ஸித்தி) 2. வபனம் (கர்மாதிகார ஸித்தி) 3. மிருத்திகா ஸ்நானம் (அநாசார நிவர்த்தி) 4. வாருண ஸ்நானம் (ஸ்பர்சதோஷ நிவர்த்தி) 5. மாநஸ ஸ்நானம் (ஆத்ம சுத்தி) 6. பஸ்ம ஸ்நானம் (நித்ய கர்மாதிகார ஸித்தி) 7. பஞ்ச துவக்காஷாய ஸ்நானம் (வியாதி நிவர்த்தி) 8. பஞ்சகவ்ய ஸ்நானம் (சங்க தோஷ நிவர்த்தி) 9. ராஜ ஸ்நானம் (மனோ தோஷ சாந்தி) 10. தீர்த்த கும்ப அஸ்திராபிஷேக ஸ்நானம் (சிவ பாவனு ஸித்தி).

104.12. வாஸ்து சாந்தி:

104.12.01. ஒருவராலும் அழிக்க முடியாத ஆற்றல் பெற்றவராய், கைகால்களை நீட்ட இடம்




வாஸ்து சாந்தி (தன்மீசர் ஆலயம், 07.09.2000)

இன்மையால் மடக்கிக்கொண்டு முடங்கிக் கிடக்கிறர் வாஸ்து புருஷன். இவர் அசைந்தால் பூகம்பாதிகள் தோன்றும். ஒரு பிம்பத்தில் இவரை ஆவாஹனம் செய்து, இவருக்கு வேண்டிய உணவுகளைத் தந்து, மகிழ்வித்து, அனந்தன் முதலிய பாம்புகளைக் கொண்டு இவரை தொடர்ந்து அசையாமல் இருக்குமாறு கட்டிப் போட்டு, இவர் மீது ஐம்பத்து மூன்று தேவர்களையும் ப்ரம்மாவையும் அமர்த்திப் பூஜிப்பதே வாஸ்து ஹோமம் அல்லது வாஸ்து சாந்தி எனப்படுவது. பின்னர், வாஸ்து புருஷ பிம்பத்தை, கொடும்பாவி போல், எரித்து விஸர்ஜனம் செய்துவிட வேண்டும்.

104.12.02. வாஸ்து மண்டலம் அமைத்து (ஸஹ-ஆக--132), மத்தியிலோ உத்தரத்திலோ வாஸ்து கும்ப ப்ரதிஷ்டாபனம். ஈசானன் முதலாய எண்மர், அக்நி முதலாய எண்மர், நிர்ருதி முதலாய எண்மர், வாயு முதலாய எண்மர், ஆபன்-ஆபத்வஜன், சவிதா-சாவித்ரகன், இந்திரன்-இந்த்ரஜயன், ருத்திரன்-ருத்ரஜயன், மரீசி முதல் தராதரர் வரையான அறுவர், ப்ரஹ்மா, காயத்ரீ, சாவித்ரீ ஆகியோரை ஆவாஹனம் செய்து, பூஜித்து பலியிடுதல். கடம், இரண்டு வர்த்தினிகளில் ப்ரஹ்மா, காயத்ரீ, சாவித்ரீ ஆவாஹனம் செய்து பூஜை. கடம், வர்த்தினியில் ஸ்வாமி, அம்பாளை ஆவாஹனம் செய்து பூஜை. அக்னிகார்யம், வாஸ்து பூஜை, ஹோமம், நாடீ சந்தானம், சம்பாதாஹுதி, ஸ்விஷ்டக்ருத் ஹோமம், ஸ்பர்சாஹுதி, ஜயாதி ஹோமம், கூஷ்மாண்ட (பூஷணிக்காய்) பலி, கூஷ்மாண்ட (பூஷணிக்காய் விதைகளால்) ஹோமம், பூர்ணாஹுதி. பலாசு, அத்தி, அரசு முதலியவற்றின் காய்ந்த சருகுகளாலும், தர்ப்பை (வைக்கோல்) முதலியவற்றாலும் நான்கு முழ அளவான உருவம் செய்து, அதில் வாஸ்து புருஷனை ஆவாஹனம் செய்து, அவ்வுருவத்தின் தலைப்பக்கத்தில் ஹோமாக்நி பற்றிக் கொள்ளச் செய்து,

வலது கையில் பலியிட்ட பூஷணிக்காயைத் தாங்கியவாறு, சிவாச்சார்யார் அல்லது பரிசாரகர் அவ்வாஸ்து புருஷனின் கால்களைத் தன் இடக்கையால் பற்றி இழுத்துக் கொண்டு வலமாகச் சென்று, ஈசான்ய திக்கில் உள்ள ஒரு தடாகத்தின் கரையில் விஸர்ஜனம் செய்தல். அவரைத் தொடர்ந்து செல்லும் சிவாச்சாரியார், ப்ரஹ்ம கும்ப நீரால் ப்ரோக்ஷணம் செய்தல்.

104.13. <u>க்ரஹ மகம் அல்லது நவக்ரஹமகம் (நவக்ரஹ ஹோமம்)</u>: நவக்ரஹ மண்டலத்தை முறைப்படி அமைத்து, நவக்ரஹங்களை அதிதேவதை, ப்ரத்யதி தேவதைகளுடன் ஆவாஹனம் செய்து பூஜித்தல். நக்ஷத்ரங்களின் அதிதேவதைகளை பூஜித்தல். அக்னிகார்யம், நவக்ரஹ, நக்ஷத்ர தெய்வங்கள் ஆவாஹனம். ஹோமம், சிவாக்னியாக அக்னியைக் கற்பித்து ஜயாதி ஹோமம், பூர்ணாஹுதி, அந்தர் பலி, பஹிர் பலி, பாரங்முக அர்க்யம்,



ம்ருத்-ஸங்க்ரஹணம் (தன்மீசர் ஆலயம், 07.09.2000)

க்ரஹப்ரீதி தானம் (நவக்ரஹ தானம், தச தானம்).

104.14. திசா ஹோமம்: ஆலயத்தின் முன்பக்கம் (கிழக்கு) சங்கல்பம் செய்துகொண்டு, விக்னேச்வர பூஜை, சகளீகரணம், புண்யாஹவாசனம். பின்னர், சிவாஸ்த்ர தேவரை ஆவாஹனம் செய்து அக்னிகார்யம் செய்து, அவரைக் கும்பநீரில் எழுந்தருளச் செய்து ப்ரோக்ஷணம். அவ்வாறே, தெற்கு மேற்கு வடக்கில், அகோராஸ்த்ரர், பாசுபதாஸ்த்ரர், ப்ரத்யங்கிரிதேவர் ஆகியோரின் சக்தி பெற்ற நீரினால் ப்ரோக்ஷணம்.

104.15. கோ பூஜை. இந்நிகழ்ச்சிக்குப் பசுவும் கன்றும் ஏற்பாடு செய்திடல் வேண்டும். மிரளாத, முட்டாத சாதுவான பசுவாக இருத்தல் நல்லது. திருக்கோயில் வளாகத்துக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குக் கொண்டு வரப்படும் பசு, ஓரிரு மணி நேரம் அங்கேயே இருக்க வேண்டி நேரிடும் என்பதை அப்பசுவின் காப்பாளருக்கு முன்கூட்டியே அறிவித்தல் அவசியம். பசு ஆலயத்தில் இருக்கும் வேளைகளில் அதற்கு அளிக்கத் தீவனத்திற்கும், பசு சென்ற பிறகு வளாகத்தை சுத்தம் செய்வதற்கும் முன்னேற்பாடுகள் தேவை.

104.16. விப்ர போஜனம், புண்யாஹம், பஞ்சகவ்யம் கூட்டுதல், ஹோமம்.

104.17. ம்ருத்ஸங்க்ரஹணம்: சிவாச்சார்யார் அஸ்த்ரராஜருடன் ம்ருத்ஸங்க்ரஹணத்துக்குரிய இடத்தை அடைதல். சகளீகரணம், சாமான்யார்க்யம், ப்ரோக்ஷணம், நிரீக்ஷணம் முதலியவற்றால் ஸ்தல சுத்தி. நவகோஷ்டம் அமைத்து, அஸ்திரராஜருக்கு பூஜை. ப்ரஹ்மா நடுவிலும், சிவதத்துவம் முதலான அஷ்டதத்துவங்கள் மற்ற கோஷ்டங்களிலும் ஆவாஹனம், பூஜை. பலி. பூமி தேவி ஆவாஹனம். அலங்கரிக்கப்பட்ட மண்வெட்டியில் அதற்குரிய தேவதைகளுக்கு பூஜை. அஸ்த்ரராஜர் பூஜை.

ஆசாரியார் கிழக்கு முகமாக நின்று மும்முறை மண் அகழ்தல். நெல், மண், சாணம், பருத்தி ஆகியவற்றால் வெட்டுண்ட குழியை நிரப்புதல். ஸப்த ஸமுத்திரங்களை கும்பத்தில் ஆவாஹனம் செய்து, வெட்டி எடுத்த மண்ணுக்கு ப்ரோக்ஷணம். அலங்காரம். சிவாச்சார்யார் அல்லது பரிசாரகர் தலையில் ஊர்வலமாக யாகசாலை ப்ரவேசம்.

104.18. யாகசாலை நிர்மாணம்:

104.18.01. யாகசாலையை ப்ராகாரத்திற்கு வெளியே அமைத்தல் உசிதம் அல்ல. முதலாம், இரண்டாம், மூன்றும் ப்ராகாரங்களுள் இருக்கலாம். கிழக்கு, ஈசான்ய மூலை (வடகிழக்கு), வடக்கு, வாயு மூலை (வடமேற்கு) ஆகிய திக்குகள் யாகசாலை அமைக்கச் சிறந்தவை. மேற்கு மத்திமம். அக்னி மூலை (தென்கிழக்கு),



நயனோன்மீலநம் (தன்மீசர் ஆலயம், 08.09.2000)

நிர்ருதி மூலை (தென்மேற்கு) அதமம். தெற்கு அதமாதமம்

104.18.02. பூமியை ஒரு முழ ஆழத்துக்குத் தோண்டி, மண்ணை அகற்றிப் புது மண் இட்டு நிரப்பி, யாகசாலை நடுவில் வேதிகை அமையும் இடத்தில் செய்யப்படுவதே ரத்னங்களை இட வேண்டும்.

104.18.03. பிறகு யாகசாலை முழுவதையும் மட்டமாக்கி, மெழுகி, கண்ணாடி போல் பளபளப்பாகப் பூசி, அதன் மீது மாவு தோய்ந்த நூல் கொண்டு சூத்திரங்களை அடித்தல் வேண்டும். இதற்கு சூத்திரபாதம் என்று பெயர்.


104.18.04. மிகப் பெரிய யாகசாலையில், 42 சூத்திரங்கள் இடுவதனால் அமைவது ருத்ரசூத்ரக்ரமம். மிகச் சிறிய அளவினதாக, 14 சூத்ரங்களால் மநுசூத்ரக்ரமமாகவும், 12 சூத்ரங்களால் ரவிசூத்ரக்ரமமாகவும் யாகசாலை அமைக்கலாம். இந்த சிறிய யாகசாலைகளில் ஒன்பது குண்டங்கள் வரை அமைக்கலாம்.

104.19. நயனோன்மீலனம் (கண் திறத்தல்), ரத்ன ந்யாஸம்: புது விக்ரஹங்களோ, சித்திரங்களோ இறைத்தன்மையை ஏற்க வேண்டியிருந்தால் மட்டுமே இக்கிரியையைச் செய்யவேண்டும். ஆவர்த்தன, புனராவர்த்தன ப்ரதிஷ்டைகளுக்கு இந்தக் கிரியைகள் தேவை இல்லை. அரிசி அல்லது நெல் பரப்பிய இருக்கையில் விக்ரஹத்தை வைத்துப் பூஜித்தல். சிவ கும்பமும், சூர்ய சந்த்ர கும்பங்களும், சுற்றிலும் இந்த்ராதி அஷ்ட கும்பங்களும் ஸ்தாபனம் செய்து பூஜித்தல். ஹோமம். திரையிட்டுச் சிற்பியின் உதவி கொண்டு கண்களைத் திறத்தல். பொன், அருகு, தேன், பசுவும் கன்றும், தான்யங்கள், வேதம் ஓதுபவர்கள், ஸுவாஸினி, விப்ரகன்னியர், ப்ரம்மச்சாரி, பக்தஜனங்கள், எஜமானர் ஆகியோர் மீது, படிப்படியாகப் பார்வை விழச் செய்தல். (ஒரு காவியணிந்த ஸந்நியாஸியின் மீதும் பார்வை

விழவேண்டும் என்பதாக ஒரு ஆகமத்தில் குறிப்பு உள்ளது என்றும் கூறப்படுகின்றது). பிம்பங்களுக்கு அஷ்டாதச கிரியைகளின் அங்கமாக, கண் காது மூக்கு போன்ற த்வாரங்களில் (த்வாரங்கள் இல்லாவிடினும் அவை இருப்பதாகப் பாவித்து) ரத்னங்களால் ஸ்பர்சித்தலே ரத்ன ந்யாஸம். அபிஷேகம், அலங்காரம்.

104.20. நூதன பிம்பங்களின் க்ராம ப்ரதக்ஷிணம்..


104.21. ஜலாதி வாஸம்: புது விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை ஆக வேண்டி இருந்தால் மட்டுமே இக்கிரியை நடந்திடல் வேண்டும். நதிக்கரை, குளக்கரை போன்ற புனிதமான, சுத்தமான இடத்தில் குழி ஒன்று கிணறு போல் அகழ்ந்தெடுத்து, அதில் புது விக்ரஹத்தைப் பஞ்சகவ்யத்தால் அபிஷேகம் செய்து, லம்பகூர்ச்சம் கூட்டி, கழுத்தளவு நீரில் கிழக்கு நோக்கியவாறு, (காரணாகமப்படி)



ஜலாதி வாஸம் (தன்மீசர் ஆலயம், 08.09.2000)

மூன்று இரவுகளோ அல்லது ஒரு இரவோ, அல்லது குறைந்த பக்ஷமாக 4 ஜாமங்களோ இருக்கச் செய்தலே ஜலாதிவாஸம். (இக்காலத்தில், குறுகிய நாட்களில் செய்யப்படும் கும்பாபிஷேகக் கிரியைகளில், ஜலாதிவாசம் ஒரு முஹூர்த்த காலமாவது செய்யப்படுகின்றது). ஜலாதிவாஸம் செய்யப்பட்டுள்ள இடத்தில் அணையா விளக்கு தேவை. அட்ட திக்பாலகர்களை பூஜித்தல். பிறகு சாந்தி ஹோமம்.

104.22. சாந்தி ஹோமம்: நவதான்யங்களின் மேல், நடுவில் ஒரு கடமும், சுற்றி எட்டுக் கலசங்களும் வைத்துப், பாசுபதாஸ்த்ர மூர்த்தியையும், வஜ்ரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், துவஜம், கதை, த்ரிசூலம் ஆகிய எட்டு ஆயுதங்களையும் ஆவாஹனம் செய்து பூஜித்தல். பின்னர், பலாசு, அரசு, ஆல், வில்வம், கருங்காலி, அத்தி, நாயுருவி, வன்னி முதலிய ஸமித்துக்களைப் பாலில் தோய்த்து




ஸயனுதி வாஸம் (தன்மீசர் ஆலயம், 08.09.2000)

இட்டும், மற்ற த்ரவியங்களாலும் ஹோமம். கும்ப நீரினுல் அபிஷேகம் அல்லது ப்ரோக்ஷணம்.

104.23. தான்யாதி வாஸம்: ப்ரதிஷ்டை ஆக வேண்டிய புது விக்ரஹங்கள் இருந்தால், அவற்றிற்கு மட்டுமே இக்கிரியை நடந்திடல் வேண்டும். இதற்கு முன் ஜலாதி வாஸமும், சாந்தி ஹோமமும் நிகழ்ந்திருத்தல் வேண்டும். 32 மரக்கால் (சுமார் 100 லிட்டர்) தானியத்தாலும், 16 மரக்கால் அரிசியாலும், 8 மரக்கால் எள்ளாலும் விக்ரஹத்தை மூடி வைத்தல்.

104.24. மூர்த்தி ஹோமம்: தான்யங்களின் மேல் கடம், வர்த்தினி, எட்டுக் கலசங்கள் வைத்து, சிவன், அகோரஸ்திரசக்தி, வஜ்ராதி சக்தியினர் எண்மர் ஆவாஹனம். அகோரஸ்திர மந்திர ஜபம். அக்னிகார்யம், அகோரஸ்திரருக்கு ஹோமம், பூர்ணுஹுதி, கும்ப நீரினுல் புது விக்ரஹத்திற்கு அபிஷேகம் அல்லது ப்ரோக்ஷணம்.



அங்குரார்ப்பணம், ஆசார்ய ரக்ஷாபந்தனம் (தன்மீசர் ஆலயம், 08.09.2000)

104.25. ஸம்ஹிதா ஹோமம்: கும்பத்தில் சிவனை பூஜித்து, ஸம்ஹிதா மந்திர அர்ச்சனை. அக்னிகார்யம். ஸம்ஹிதா மந்திர ஹோமம். பூர்ணுஹுதி. கும்ப நீரினுல் அபிஷேகம் அல்லது ப்ரோக்ஷணம்.

104.26. அங்குரார்ப்பணம்: ஒன்பது நாட்கள், அல்லது 7, 5, 3 நாட்கள், அல்லது குறைந்த பக்ஷமாக ஒரு நாள் முன்னதாக இரவில் அங்குரார்ப்பணம் செய்திடல் வேண்டும். தரையில் சூத்திரங்கள் கீறி அதில் கடம், இரு வர்த்தினிகள் வைத்து, ஸோமனையும் (சந்திரன் - எனவே ஆதவன் மறைந்த பிறகு அங்குரார்ப்பணம் செய்வது சிறப்புடைத்து), க்ருத்திகாவையும், ரோஹிணியையும் ஆவாஹனம். சுற்றி 24 (அல்லது 36, 44, அதிக பக்ஷமாக 48, அல்லது குறைந்த பக்ஷமாக 12) பாதங்களில் 24 (அல்லது 36, 44, 48, 12) பாலிகைகள். பாலிகைச் சட்டிகளில் பலாசு, அரசு, ஆல், கிரீஷு, வில்வம் முதலியவற்றின் தளிர்களை இட்டு, ம்ருத்ஸங்க்ரஹணத்தில் கொணர்ந்த மண்ணுலும், வெண்மணலாலும், சாணத்தாலும் நிரப்புதல். பாலில் நனைந்து ஊறிய விதைகளை, ஓஷதி ஸூக்தம் ஓதியவாறு விதைத்தல். ஸோம கும்ப நீரூற்றல். ஸோம பூஜை. பாலிகைகளை தர்ப்பை கொண்டு மூடி, தினமும் ஸோமகும்ப நீரூற்றிப் பாதுகாத்தல்.

104.27. ரக்ஷா பந்தனம்: கும்ப நீரில் சிவனை ஆவாஹனம் செய்து, விபூதியினுள் ரக்ஷா-ஸூத்ரங்களை வைத்து, அதற்கும் கும்பத்துக்கும் பூஜை. கும்பத்திலிருந்து தன் இதயத்துள் சிவனை ஒடுக்கிக் கொண்ட ஆச்சாரியார் அனைவரது வலது கை மணிக்கட்டிலும் ஸூத்திரத்தைக் (கயிறு) கட்டுதல். (அக்நிகார்யம், சம்பாத ஹோமம், பூர்ணுஹுதி செய்து, அக்நியிலிருந்து கும்பத்துள் சிவனை ஒடுக்கி, பிறகு மேற்கூறியவாறு செய்வதும் உண்டு. சுருக்கமாக, கும்பம் வைக்காமல், ஜபம் மூலம் சிவோகம்பாவனை செய்துகொண்ட சிவாச்சார்யார்,

விபூதியிலிருந்து ரக்ஷா-ஸூத்ரத்தை எடுத்துக் கட்டுவதும் உண்டு).

104.28. ஸூர்யகாந்தாக்நி ஸங்க்ரஹணம்: பூதக்கண்ணுடியின் உதவி கொண்டு, ஸூர்யக் கிரணங்களைக் குவித்து அக்னி உண்டாக்கி யாகசாலைக்கு எடுத்துச் செல்லுதல்.

104.29. ருத்விக் சாதஹாதி வரணம்: சிவாச்சாரியார்களை உபசரித்து, அவரவர்க்கான பொறுப்புகளை அளித்தல்.

104.30. ப்ரஸன்னுபிஷேகம் (ஸஹ-ஆக-176): இது கலாகர்ஷணத்துக்கு முன்பாக மூலலிங்கத்துக்கு நடைபெறும் அபிஷேகம். சங்கற்பம், சகளீகரணம், விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், பஞ்சகவ்ய பூஜை, பஞ்சாமிர்த பூஜை. கட ஸ்தாபனம்; நடுவில் சிவனுக்கு கடமும், சக்திக்கு வர்த்தினியும். சுற்றிலும் அஷ்ட வித்யேச்வர கலசங்கள். கும்ப பூஜை. அக்னிகார்யம். பூர்ணுஹூதி. அக்நியிலுள்ள தெய்வத்தை குண்டத்திலிருந்து கும்பத்தில் ஒடுக்கி, சுவாமிக்கு (மூலலிங்கத்திற்கு) எண்ணெய் முதலிய திரவியங்களால் அபிஷேகம் செய்து, கும்ப நீரினுல் அபிஷேகம். அலங்காரம். தீபாராதனை.

104.31. கும்ப ஸ்தாபனம் அல்லது கடஸ்தாபனம்: நெல், அரிசி, எள், பொரி, நவ தான்யங்கள் இவற்றுல் ஸ்தண்டிலம். கலாகர்ஷணத்துக்காக கும்பஸ்தாபனம் செய்வதானுல், மூலலிங்கத்தின் கருவறை முன் செய்யப்படும். தர்ப்பை, பூ முதலியவற்றை உரிய மந்திரங்களுடன் படிப்படியாகப் பரப்புதல். அஷ்டதளத் தாமரை எழுதுதல். நூல் சுற்றிய, சுத்தமான குடம். பொன், வெள்ளி, பஞ்சலோக, தாமிர, வெண்கல அல்லது பித்தளைக் குடம் உபயோகிக்கவும். ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், இரும்பு ஆகியவற்றுலான குடம் ஆகாது. தூபம் காட்டி, குடத்தைக்

கவிழ்த்து வைத்து, பின் நிமிர்த்துதல். பவித்திரம் வைத்து, நீர் நிரப்புதல். சந்தனம் முதலாய திரவியங்கள் இடல். அந்தஹ்கூர்ச்சம் வைத்தல். ஸ்வர்ணப் பதுமை, நவரத்தினம், மாந்தளிர், தேங்காய் முதலியவற்றை பொருத்திக் கும்பத்தை உருவாக்கல். பட்டு, பூனூல், அலங்கார கூர்ச்சம், சந்தனம், புஷ்பம், மாலை சாத்துதல். இது போலவே வர்த்தினியையும், அஷ்டவித்யேச்வர கலசங்களையும் உருவாக்குதல். இவ்வனைத்து க்ரியைகளுக்கும் தனித்தனியே வேத மந்திரங்களும், ஆகம பீஜாக்ஷரங்களும் உண்டு.

104.32. கலாகர்ஷணம்: பிம்பத்தில் உள்ள கலைகள் அனைத்தையும் ஆகர்ஷித்து, கும்பத்தில் சேர்க்கும் க்ரியையே கலாகர்ஷணம். பயபக்தியுடன், மிக மிக ஜாக்ரதையாகச் செய்ய வேண்டிய கிரியை இதுவாகும்.



ஸூர்யகாந்தாக்நி ஸங்க்ரஹணம் (தன்மீசர் ஆலயம், 08.09.2000)

104.32.01. பரமேச்வரன் தன் ஜீவனை பல்வேறு இடங்களில் (ஆலயங்களில்) ஆழ்ந்திருக்கச் செய்கிறார். அந்த ஜீவனின் சக்தி, ஐயனின் கலைகளாக வெளிப்படுகின்றது. அந்தக் கலைகள் பதினாறு வகைத்து: 1. அகார கலை 2. உகார கலை 3. மகார கலை 4. பிந்து 5. பிறைமதி 6. நிரோதினி 7. நாதம் 8. நாதாந்தம் 9. சக்தி 10. வ்யாபினீ 11. வ்யோமரூபை 12. அநந்தை 13. அநாதை 14. அநாச்ருதை 15. சமனை 16. உன்மனை அக்கலைகள் அனைத்தும் ப்ரகாசம் நிறைந்தவை. அந்த ப்ரகாசமே பக்தர்களுக்கு அருள் செய்பவை. அந்தக் கலைகளை, ப்ரகாசத்தை, பிம்பத்திலிருந்து எடுத்துக், கும்பத்துள் மாற்றி வைப்பதே கலாகர்ஷணம்.

104.32.02. தொடர்ந்து செய்யப்பட்டு வரும் வழிபாடுகளாலும், பல்வேறு நித்திய நைமித்திகக் கிரியைகளாலும், பிம்பத்தின் (ப்ரதிஷ்டை ஆகி உள்ள விக்ரஹத்தின்) ப்ரகாசம் கூடுகின்றது; அதன் விளைவாக அவ்விடத்தில் ஜீவன் மேலும் ஆழமாக வேரூன்றுகின்றது; நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து ப்ரகாசம் வழங்கி (அருள் சுரந்து), வழிபடப்பட்டு வரும் ஆலய பிம்பங்களில் ஜீவன் மிகவும் ஆழ்ந்து இருந்து, மேலும் பல்லாண்டுகள் நிலைத்திருந்து அருள் பாலிக்க வல்லன. இடையே, சில ஆண்டுகள் காலவெள்ளத்தின் கூற்றால், வழிபாடுகள் தடைபட்டு நின்றாலும், பின் ஓர் நாள், அந்த ஜீவன் அந்த இடத்தில், அல்லது அதன் அருகில் வெளிப்பட்டு, ப்ரகாசம் வழங்கத் தொடங்கும்.

104.32.03. ப்ரகாசம் வழங்கிக் கொண்டிருக்கும் பிம்பத்தினை கலாகர்ஷணம் செய்வதால், கும்பத்திற்கு மாற்றப்படுவது ப்ரகாசமேயன்றி, ஜீவன் மாற்றப்படுவதில்லை; நம்மால் ஜீவனை அவ்வாறு மாற்றிடவும் இயலாது. பாலஸ்தாபனம் ஆகியுள்ள

மூலலிங்கம் சில ஆண்டுகளுக்கு முன்னமேதான் நூதன ப்ரதிஷ்டை ஆனதென்றால், அந்த பிம்பம் மீண்டும் கும்பாபிஷேகம் மூலம் ப்ரகாசத்தைப் பெற்று, ஜீவனை வளர்த்திடல் இயலும். ஆனால், புராதனமான பிம்பங்களின் ஜீவனுக்கு சங்கடங்கள் ஏற்படுமாயின், அவை மீண்டும் அந்த ஸாந்நித்யத்தை அடைய பல்லாண்டுகள் பிடிக்கும். எனவே, ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் போன்ற, ஆழமாக ஜீவன் வேரூன்றியுள்ள மிகப் புராதனமான மூலலிங்கங்கள், பாலஸ்தாபனம் ஆகியுள்ள காலத்திலும், அவற்றின் ஜீவனை சங்கடப்படுத்தும் அனுச்சாரங்கள் அணுகாமலும், அந்த ஜீவனுக்கு மதிப்பு தரும் கிரியைகளைக் கொண்டும், மிகவும் ஜாக்கிரதையாகப் போற்றப்பட வேண்டும்.

104.32.04. கலாகர்ஷணத்திற்குப் பின், அனைத்து மூல விக்ரஹங்களும், மரப்பெட்டி கொண்டு மூடப்பட்டு, பணியாட்களால், அவர்தம் கைக்கருவிகள் வீழ்வதினால், பின்னமடையாமல் பாதுகாத்திடப்- படுதல் வேண்டும். புராதனமான மூலலிங்கத்திற்கு அமைக்கப்படும் பாதுகாப்புப் பெட்டியில், முகத்திற்கு நேராக, நான்கு அங்குல சதுரத்திற்கு ஒரு துவாரம் இருத்தல் வேண்டும். அத்தகைய புராதன மூல லிங்கங்களுக்கு நித்திய-நைமித்திக வழிபாடுகளும், பக்தர்களின் தரிசனமும் இல்லை என்றாலுங்கூட, ஸ்தல சிவாச்சாரியார், பயபக்தியுடன், அவற்றிற்கு, தினமும், திரைக்குப் பின்னால், காலையில் திருப்பணிகள் தொடங்கும் முன்னும், மாலையில் பணியாட்கள் அகன்ற பின்னரும், புண்யாஹவாசனம் செய்து, சந்தனம் புஷ்பம் சாத்தி உபசரித்து, நைவேத்யம் அளித்து, ஜபம் செய்து, ஜீவனைப் போற்றி வருதல் அவசியம். அந்த ஸந்நிதியில் எப்போதும் ஒரு நல்ல விளக்கு அணையாமல் எரிந்து கொண்டு இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

104.32.05. கலாகர்ஷண முறை: தர்ப்பை, புஷ்பம் முதலியவற்றுல் மூலலிங்கத்துக்குப் பரிஸ்தரணம். லம்பஹ்றகூர்ச்சம். ஆசனம் முதலாக ஆவரண பூஜை வரை அருச்சனை. நீராஜனம். மூலலிங்கத்துக்கு முன்னுல் ஸ்தண்டிலத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கும்பத்துக்குச் சலாசனம் கற்பித்தல். ஆசனம் முதலாக ஆவரண பூஜை வரை அருச்சனை. தர்ப்பையினுல் நாடீசந்தானம் (ஸஹ-ஆக-269). விரிவாக நியாஸம். மந்திரோச்சாரணத்தினுல் மூலலிங்கத்தில் உள்ள இறைவனைக் கும்பத்தில் சேர்ப்பித்தல் (பாலாலயத்திற்காக). (அல்லது மஹா கும்பாபிஷேகத்தின் போது, பாலலிங்கத்தில் உள்ள இறைவனைக் கும்பத்தில் சேர்ப்பித்தல்). அவ்வாறே, பீடசக்தியை வர்த்தினியிலும், பூர்வாதி கும்பங்களில் அஷ்டவித்யேச்வரர்களையும் சேர்ப்பித்தல். அக்நிகார்யம். யாத்ரா ஹோமம். முக்கனிகளாலும், தேன், நெய், பால் முதலியவற்றுலும் சாந்தி ஹோமம். க்ஷண ஹோமம். பஞ்சப்ரஹ்ம, ஷடங்க மந்த்ர ஹோமம். பூர்ணுஹுதி. அக்நியில் உள்ள மூர்த்தியை சாந்தி கும்பத்தில் சம்யோஜனம் செய்தல். யாத்ராதானம். ப்ரதான கும்பங்கள் யாகசாலையில் உள்ள ப்ரதான வேதிகைக்கு, வலமாக, உலாவாக, எழுந்தருளச் செய்தல்.

104.33. மூர்த்தி ஹோமம்: தான்யங்களின் மேல் கடம், வர்த்தினி, எட்டு கலசங்கள் வைத்து, சிவன், அகோரஸ்திரசக்தி, வஜ்ராதி சக்தியினர் எண்மர் ஆவாஹனம். அகோரஸ்திர மந்திர ஜபம். அக்னிகார்யம், அகோரஸ்திருக்கு ஹோமம், பூர்ணுஹுதி, கும்ப நீரினுல் அபிஷேகம் அல்லது ப்ரோக்ஷணம்.

104.34. யாத்ரா ஹோமம்: கும்பங்களை கருவறையிலிருந்து யாகசாலைக்கு எழுந்தருளச் செய்யும் நேரங்களில், தோஷங்களை அகற்ற, த்ருஷ்ட்யவகலா காஷ்ட்ட முஹூர்த்த, அஹோராத்ர, வார பக்ஷ மாஸ ருது

ஸம்வத்ஸர யுக மந்வந்த்தரங்களை உத்தேசித்து ஆஹுதி அளித்துச் செய்யப்படும் ஹோமம்.

104.35. யாத்ரா தானம்: கும்பங்களை யாகசாலைக்கு எழுந்தருளச் செய்யும் முன் ஹோமம் செய்து, பிறகு செய்வது. நவக்ரஹ தானம். தச தானம் (பசு, பூமி, எள், பொன், நெய், வஸ்த்ரம், தான்யம், வெல்லம், வெள்ளி, உப்பு). மனக்கல்பித தானம்.

104.36. கடோத்வாஹனம்: (கும்ப உத்தாபனம்): கும்பங்களை யாகசாலைக்கு எழுந்தருளச் செய்தல். சிவாச்சார்யார்கள் அல்லது சிவதீக்ஷை பெற்ற பரிசாரகர்கள் தலைமேல் கும்பங்கள் உலா வருதல். வேத கோஷம். திருமுறை ஓதுதல். கொடி (த்வஜம்), குடை (சத்ரம்), சாமரம் (வெண்சாமரம்), விசிறி (வ்யஜனம்), சுருட்டி (தாளவ்ருந்தம்), மகர தோரணம் போன்ற ராஜோபசாரங்கள் முன்னுலும், தீவட்டி அருகிலுமாக எடுத்துச் செல்லுதல். ஆச்சாரியார் கும்பத்தை கூர்ச்சத்தால் தொட்டுக் கொண்டு மூலமந்திரத்தை உச்சரித்தவாறு கும்பங்களுடன் உலா (ஸஹ-ஆக-280).

104.37. யாகசாலா ப்ரவேசம்: யாகசாலை வாசலில் லாஜபுஷ்பம் இறைத்தல். கும்பங்களை ஆஸனங்களில் அமர்த்தி சகளீகரணம்.

104.38. விசேஷ சந்தி: ஆச்சார்யார்கள், நித்ய கர்ம அனுஷ்டானங்கள் முடித்தபின், தினந்தோறும், யாகசாலை பூஜைக்கு முன், செய்வது. ஆசமனம், பவித்ரம் தரித்தல், சகளீகரணம். அங்கந்யாஸம். சங்கற்பம். காயத்ரீ ஜபம். ஸம்ஹிதா தர்ப்பணம், வித்யேச்வர தர்ப்பணம், தத்வாதி தர்ப்பணம், தேவ தர்ப்பணம், ரிஷி தர்ப்பணம், ஸப்த மனுஷ்ய தர்ப்பணம், பூத தர்ப்பணம், தேவ-பிதுர் தர்ப்பணம், விசேஷ பிதுர் தர்ப்பணம் முதலிய தர்ப்பணங்கள். இதுவே விசேஷ சந்தி.

104.39. யாக பூஜை - த்ரவ்யாஹுதிகள்:

104.39.01. கூர்மாஸனம். சாமான்யார்க்யம். சங்கற்பம். விக்னேச்வர பூஜை. புண்யாஹவாசனம். சூர்ய பூஜை. த்வார பூஜை. பூத சுத்தி. ந்யாஸங்கள். அந்தர்யஜனம். ஸ்தான சுத்தி. சிவார்க்யம். த்ரவ்ய சுத்தி. ஆத்ம பூஜை. மந்த்ர சுத்தி. சிவஹஸ்தம். பஞ்சகவ்ய பூஜை. பதினெட்டு மண்டப ஸம்ஸ்காரங்கள் (நிரீக்ஷணம், ப்ரோக்ஷணம், தாடனம், அப்யுக்ஷணம், கனனம், அவகீரணம், பூரணம், சமீகரணம், சேசனம், குட்டனம், சம்மார்ஜனம், லேபனம், கலாமய அப்யர்ச்சனம், த்ரிசூத்ரவேஷ்டனம், சம்பூஜனம், ரேகாதிரயம், வஜ்ரீகரணம், சதுஷ்பத ந்யாஸம்). ப்ரஹ்மா, மஹாலக்ஷ்மீ பூஜை. யாகேச்வர அஸ்த்ர கும்ப சலாஸன பூஜை. பத்து லோகபாலகர் பூஜை. வர்த்தினி கும்ப நீரொழுக, சுவாமி கும்பத்தையும், வர்த்தினியையும் வலம் கொணர்தல். ஸ்திராஸன பூஜை. ஜ்ஞான கட்க ஸமர்ப்பணம். விக்னேச்வரர், ஸதாசிவன் முதலான ஸப்த குரவர் பூஜை. க்ஷேத்ர பாலகர் அர்ச்சனை. ப்ரதான வேதிகையில் ஆதாரசக்தி முதல் ஐந்தாஸன பூஜை (அனந்தாஸனம், ஸிம்ஹாஸனம், யோகாஸனம், பத்மாஸனம், விமலாஸனம்). கும்பத்தின் கீழ் சிவாஸன பூஜை. தண்டபங்கி, முண்டபங்கி, வக்த்ரபங்கி, கலாபங்கி, அஷ்ட த்ரிம்சத் கலா ந்யாஸம், பஹிர்மாத்ருகா ந்யாஸங்களுடன் சிவ த்யானம். சிவனுக்கு வித்யா தேஹம் கற்பித்தல். ஆவாஹனுதி முத்திரைகள். ஸ்வாகதார்க்யம். பாவனபிஷேகம் (யாகசாலையில் விரிவாக அபிஷேகம் செய்ய இயலாதாகையால், உலோகத்தாலான திரிசூலத்தை, இல்லாவிட்டால் மணியை, யாகசாலை ப்ரதான கலசத்துடன் நாடீசந்தானம் செய்து, இறைவர்க்கு அபிஷேகம் செய்வதாக பாவித்துக் கொண்டு, மணிக்கு அபிஷேகம் செய்வது). வஸ்த்ரம். சந்தனம். புஷ்பமாலை. தத்வத்ரய

பூஜை. லயாங்க பூஜை. வர்த்தினி பூஜை, ஆவரண பூஜை. அக்னி கார்யம். குண்ட வலம். அர்க்யம் கூட்டுதல். நிரீக்ஷணம் முதலான பதினெட்டு குண்ட ஸம்ஸ்காரங்கள். குண்ட நடுவில், கூர்ச்ச ரூபமான விஷ்டரத்தில் வாகீச்வர-வாகீச்வரீ ஆவாஹனம், த்யானம். சூர்யகாந்த அக்நியைத் (அல்லது அரணிக் கட்டையிலிருந்தோ அல்லது தீக்ஷிதர்களின் ச்ரௌதாக்நியிலிருந்தோ அக்நியைத்) தருவித்தல். நிர்ருதிக்கு ஒரு துண்டு அக்னி ராக்ஷஸர்க்காகக் கொடுத்தல். நிரீக்ஷணம் முதலாய நான்கு ஸம்ஸ்காரங்களால் அக்னி சோதனை. பிந்துஸ்தான அக்நி, பைந்தாவாக்நி த்யானம். ஸம்ஹார முத்திரையால் பூதாக்னியையும் நாபியக்னியையும் ஒன்று சேர்த்தல். உத்பவ முத்திரை. பூதாக்னி, பிந்துவாக்னி, ஜடராக்னி மூன்றையும் வெளியிலுள்ள அக்னியுடன் சேர்த்தல். ஸம்ஹிதா மந்த்ரத்தால் அக்னி பூஜை. ஸம்ரக்ஷணம். அவகுண்டனம். தேனு முத்திரை. சிவபீஜ அக்னியாக த்யானம். வாகீச்வரரால், ருதுமதியாக ஆவாஹிக்கப்பட்ட வாகீச்வரியின் கர்ப்ப நாடியில் சிவ பீஜாக்னி வைக்கப்படுவதாக பாவித்து; ஆத்ம அபிமுகமாக, ப்ரதான குண்டத்தில் அக்னியை சமர்ப்பித்தல். சௌசாசமனம். தோயபிந்து. ஸமித்துக்கள் ஆஹுதி. கர்ப்ப ரக்ஷைக்காக, தர்ப்பையில் அமைந்த அஸ்த்ர கங்கணம். பும்ஸுவன, சீமந்த, ஜனன, ஜாதகர்ம, ஆசௌச-விசர்ஜன ஸம்ஸ்காரங்களுக்கான ஆஹுதிகள். எள்ளினுல் அக்னிக்கு ஹோமம். ப்ரம்மாதி தெய்வங்களையும், தச திக்பாலகர்களையும் பரிதி விஷ்டரங்களில் பூஜித்தல். இவ்வாறு சிவாக்னி உதிக்கின்றது.

104.39.02. ச்ருக்ச்ருவ ஸம்ஸ்காரம். பதிணெண்வகை ஆஜ்ய ஸம்ஸ்காரம். வக்த்ரைகீகரணம். ஜிஹ்வாதீபனம். "நீ சிவாக்னியாக விளங்குவாயாக" என்று நாமகரணம். சங்கற்பங்கள் மூலம் (பாலாக்கினி ஆதல்,

உபநிஷ்கிரமணம், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம், யௌவனப்ராயமடைதல், வ்ரத ஸமாவர்த்தனம், விவாஹம்) ஸம்ஸ்காரங்களை பாவித்து ஆஹுதிகள். வாகீச்வரி-வாகீச்வரருக்கு ஆஹுதியும், விஸர்ஜனமும்.

104.39.03. ச்ருக்கை நெய்யினால் நிரப்பி, அதன்மீது கீழ் நோக்கிய ச்ருவத்தை வைத்து மூடி, வௌஷட்-அந்த்த (*வௌஷட்* என்று முடியும்) மூலமந்த்ரத்தை உச்சரித்த வண்ணம், யவப்ரமாணமான தாரையாக நெய் முழுதும் ஆஹுதி. இதுவே சிவாக்னிக்கு விவாஹாந்த ஸம்ஸ்கார பூர்த்திக்கான பூர்ணாஹுதி.

104.39.04. ப்ரதான குண்ட அக்கினியை பாகம் செய்து, அமைக்கப்பட்டிருக்கும் நவகுண்டத்தின் ஏனைய எட்டு குண்டங்களில் சேர்ப்பித்தல். ப்ரதான குண்டத்தில் இருப்பது சிவாக்னி. மற்ற எட்டு குண்டங்களில் விளைவன: 1. கிழக்கு: ஆஹ்வநீயம் 2. வடக்கு: கேவலாக்நி 3. மேற்கு: கார்ஹபத்யாக்நி 4. தெற்கு: தக்ஷிணாக்நி 5. அக்கினிமூலை (தென்கிழக்கு): விருத்தாக்நி 6. நிர்ருதி (தென்மேற்கு): யௌவனாக்நி 7. வாயு மூலை (வடமேற்கு): பாலாக்நி 8. ஈசான்யம் (வடகிழக்கு): சாமான்யாக்நி. ஸதாசிவரையும், அஷ்டமூர்த்தீச்வரர்களையும் பூஜித்தல். கும்பம், குண்டம், ஆசாரியார் மூவரும் தொடர்புறும் வண்ணம் நாடீசந்தானம். மந்த்ர-தர்ப்பண, மந்த்ர-தீபன ஆஹுதிகள். ஸ்தாலீபாகம் (ஸஹ-ஆக-399). ஸ்தாலீபாகாக்னி விஸர்ஜனம். சம்பாத ஹோமம்.

104.39.05. ப்ராயச்சித்தம். *விசேஷ த்ரவ்ய ஹோமம்.* நூற்றெட்டு ஆஹுதிகள். பூர்ணாஹுதி. ஒவ்வொரு குண்டத்திற்கும் நிவேதனம்.

104.39.06. ***விசேஷ ஹோம த்ரவ்யங்கள்:*** 1. எள் 2. கடுகு 3. உளுந்து 4. நெல்பொரி 5. சத்துமா 6. பால் 7. தயிர் 8. அச்சு வெல்லம் 9. சர்க்கரை

10. நீவாரம் 11. அவல் 12. யவை நெல் 13. கோதுமை 14. மூங்கில் அரிசி 15. கொள்ளு 16. கருமொச்சை 17. துவரை 18. தினை 19. வெண்கடுகு 20. அவரை 21. நெல் 22. மிளகு நெல் 23. சிவப்பு நெல் 24. கார் நெல் 25. புனுகு சம்பா நெல் 26. சிறு மணி நெல் 27. கருப்பு நெல் (அல்லது) கருங்குறுவை நெல் 28. பசுஞ்சாணம் 29. வரகு 30. புல்லரிசி 31. ராகி 32. அரிசி 33. பச்சைக் கடலை 34. மட்டிப்பால் 35. நெரியரிசிப் பால் 36. வெட்டி வேர் 37. கற்கண்டு 38. பன்னீர் 39. புனுகு, ஜவ்வாது 40. கஸ்தூரி 41. கோரோஜனை 42. தேன் 43. ஜாதிக்காய் 44. கிராம்பு 45. ஏலக்காய் 46. விளாமிச்ச வேர் 47. ஜாதி பத்திரி 48. குங்குமப்பூ 49. பச்சைக் கற்பூரம் 50. கடுக்காய் 51. தான்றிக்காய் 52. நெல்லிக்காய் 53. வால் மிளகு 54. வெள்ளை மிளகு 55. கொப்பரைத் தேங்காய் 56. தாமரைக்கிழங்கு 57. அல்லிக் கிழங்கு 58. கருணைக் கிழங்கு 59. நீலோற்பலக் கிழங்கு 60. செங்கழுநீர்க் கிழங்கு 61. வலம்புரிக்காய் 62. இடம்புரிக்காய் 63. பூலாங்கிழங்கு 64. கடுக்காய் 65. மிளகு, சுக்கு, திப்பிலி 66. மாசிக்காய் 67. சிறுநாகப்பூ 68. ஷண்பக மொட்டு 69. சமுத்ரா பச்சை 70. குங்கிலியம் 71. கோஷ்டம் 72. தக்கோலம் 73. கச்சோலம் 74. முத்தக்காசு 75. கார் போக அரிசி 76. ஜடாமாஞ்சி 77. நன்னாரி வேர் 78. அகில் கட்டை 79. தேவதாருக் கட்டை 80. சந்தனக் கட்டை 81. கரும்பு 82. மஞ்சள் (பூவன்) வாழைப்பழம் 83. செவ்வாழைப் பழம் 84. பச்சை வாழைப் பழம் 85. பேயன் வாழைப் பழம் 86. ரஸ்தாளி வாழைப் பழம் 87. நேந்திரன் வாழைப் பழம் 88. மாம்பழம் 89. பலாப்பழம் 90. விளாம்பழம் 91. மாதுளம்பழம் 92. பேரீச்சம்பழம் 93. நாரத்தங்காய் 94. திராக்ஷைப்பழம் 95. ஆப்பிள் பழம் 96. எலுமிச்சம்பழம் 97. சந்தனம் 98. தாமரைப்பூ 99. வெள்ளரிப்பிஞ்சு 100. இளநீர் 101. செவ்விளநீர் 102. நீலோற்பல பூ 103. மருக்கொழுந்து, தவநம்

104. வெற்றிலைக் கொடி 105. பட்டுத் துண்டு 106. கொட்டைப் பாக்கு 107. தாம்பூலப் பட்டி 108. பலாசக் கட்டை 109. கருங்காலிக் கட்டை 110. அரசங் கட்டை 111. அத்திக் கட்டை 112. ஆலங் கட்டை 113. வன்னிக் கட்டை 114. வில்வக் கட்டை 115. எருக்கஞ் சுள்ளி 116. நாயுருவிச் சுள்ளி 117. மாங்கட்டை 118. பாடலீ மரக் கட்டை 119. மூங்கில் சிம்பு 120. பலா மரக் கட்டை 121. காய்ந்த அருகம் புல் 122. தர்ப்பை 123. நெய் 124. சரு 125. பாலன்னம் 126. எள் அன்னம் 127. மிளகு அன்னம் 128. தயிர் அன்னம் 129. பயறு அன்னம் 130. உளுந்து அன்னம் 131. பாயஸம் 132. தேன் அன்னம் 133. கடுகு அன்னம் 134. பயறு 135. கரும்பு 136. கீரை 137. லட்டுகம் 138. (அபூபம்) வடை 139. ராஜமாஷம்.

104.40. யாக பூஜை - பூர்ணாஹுதிகள்: ஸஹஸ்ராகமம் க்ரியா பாதம் அஷ்டபந்தன விதி படலம் 29-ஆவது ச்லோகத்திலிருந்து யாகசாலைப் பூஜா காலங்கள் குறித்த கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இரவை உள்ளடக்கிய இரு கால யாகசாலை பூஜைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்காக மட்டும் என்று கொள்வர். எனவே, மூன்று நாட்களில் நான்கு கால பூஜைகள் செய்வது என்று மிகக் குறைந்த பக்ஷமாகக் , குறிப்பிடப்பட்டுள்ளமை மஹாகும்பாபிஷேகங்களுக்கு எனக் கொள்வர்.. ஒவ்வொரு கால யாகசாலை பூஜைக்கும், ஒன்றோடொன்று கலக்காமல், தனித்தனியாக பூர்ணாஹுதி சாமான்களும், நைவேத்யங்களும் தயாரித்துச் செய்திடல் வேண்டும்.

104.41. சயனாரோபணம் (சயனாதிவாஸம்): புதிய விக்ரஹங்களை நாமகரணத்திற்கு முன், பூஜைகள் செய்து, ஓர் இரவு சயனத்தில் வைப்பது. அதாவது, ப்ரதிஷ்டைக்கு முன்னால், ப்ரதிஷ்டை ஆகவேண்டிய விக்ரஹங்களை சயனத்தில் இருத்துவதே சயனாரோபணம். பாலலிங்கம்

சித்ரமாகவோ, மரப் பிரதிமையாகவோ இருந்தால், அவற்றிற்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்கு முன்தினம் சயனுரோபணம் செய்திடல் வேண்டும். யாகசாலையின் கிழக்கில் அல்லது வடக்கில், தான்யங்களைப் பரப்பி, அதன்மேல், மெத்தை தலையணை விரிப்புகள் வைத்து, ஐந்து தத்துவங்களைப் பூஜித்து, ஐயனை எழுந்தருளச் செய்து, கிழக்கே தலையும், மேல் நோக்கிய முகமுமாக சயனிக்க வைத்து, சிவப்பு வஸ்த்ரத்தால் மூடுதல். காலடியில் பிண்டிகையும், ஆதார சிலையும். தத்துவ ந்யாஸம். தத்வேச்வர ந்யாஸம். த்ரிகண்ட ந்யாஸம். தலைக்குப் பக்கத்தில் நித்திரா கும்பம், வர்த்தினி, வித்யேச்வர கும்பங்கள். லோகபாலகர்களை அருச்சித்து காவல் காத்திட வேண்டுதல்.

104.42. நாமகரணம்: புதிய விக்ரஹங்களுக்கு, அவை ப்ரதிஷ்டையான பிறகு அவ்வாலயத்தில் அழைக்கப்படக்கூடிய திருநாமத்தினை, மந்திர பூர்வகமாகச் சூட்டுதல்.

104.43. தேவதா (பிம்ப) ஸ்தாபனம்: புதிய விக்ரஹங்களை புஷ்பாஞ்சலியால் சயனத்திலிருந்து எழுப்பி, அவற்றிற்கு உரிய கருவறைக்கு எடுத்துச் சென்று த்ரிபந்தனத்தால் (வாழைப்பழம், வெல்லச் சர்க்கரை, சிமென்ட் அல்லது சுண்ணும்புக் காரை போன்ற கட்டுமானப் பொருள்) ப்ரதிஷ்டை செய்தல். கருவறை வாயிலில், பத்திரபீடத்தில் விக்ரஹத்தினை ஏற்றி, அர்க்யம் கொடுத்து, புண்யாஹவாசனம் செய்து, மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டே, சுப முஹூர்த்தத்தில் ஸ்தாபனம் செய்திடல் வேண்டும்.

104.44. அஷ்ட பந்தனம், ஸ்வர்ண பந்தனம்: விக்னேச்வர பூஜை. புண்ணியாஹம். பலி. உரல்-உலக்கைக்கு பூஜை (ஸஹ-ஆக-494). அஷ்டபந்தன

த்ரவ்யங்களை அபிமந்திரித்தல், இடித்தல் (சுக்காங்கல், குங்கிலியம், கொம்பரக்கு, தேன்மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் - இவ்வெட்டையும் முன்னரே பதப்படுத்தி உருண்டைகளாக வைத்திருந்து, தேவைக்கேற்ப மறுபடி வெண்ணெய் சேர்த்து இடித்துப் பயன் படுத்துவதே தற்போதைய வழக்கம்). ஆஸனமும் மூர்த்தியும் நன்கு ஒன்றி இணையும் வண்ணம் அஷ்டபந்தனம் சாத்துதல் வேண்டும். எட்டுச் சரக்குகளின் கலவையை 'அடுப்பில் வைத்துக் காய்ச்சி, நன்றுக, கைபொறுக்கும் சூட்டுக்கு ஆற வைத்து, அதைக் கொண்டு, பீடத்துக்கும் மூர்த்திக்கும் இடையில் உள்ள (இடை)வெளியை அடைப்பது *மானுட (அஷ்ட) பந்தனம்* எனப்படும். இதற்கு பக்குவ முறை என்றும் பெயர். இதை விடச் சிறந்ததான அபக்குவ முறையில், அஷ்டபந்தன பொருட்களை உரலில் இட்டுக் கலந்து, சூடேறி இளகிச் சாத்தும் பக்குவம் வரும் வரை இடிக்கச் செய்து, சாத்துவர். இதற்கு *தெய்வீக பந்தனம்* என்று பெயர்.

104.45. க்ருத சிரோர்ப்பணம், தைலாபிஷேகம்: அஷ்ட பந்தனத்திற்குப் பின், நெய்யை பூஜை செய்து, மேள தாளத்துடன் ஆச்சார்யார் எடுத்து வந்து கர்ப்பக்ரஹத்தில் வைத்து, ஸ்வாமி சிரஸ்ஸில் தொட்டு வைத்தல். பிறகு ஸ்வாமிக்கு எண்ணெய் சாத்துவர். (தென்தமிழ் மாநிலங்களிலும், இலங்கையிலும் ப்ரயோகத்திலிருக்கும் ஒரு பத்ததியில், சிவ பக்த ஜனங்கள் தாமே ஸ்வாமியைத் தொட்டு க்ருத சிரோர்ப்பணத்திலும், தைலாபிஷேகத்திலும் பங்கு பற்றுவது பழக்கத்தில் இருக்கிறது). இவ்விரு நிகழ்ச்சிகளும் பிம்ப சுத்திக்கு முன்பாக நிகழ்வன.

104.46. பிம்ப சுத்தி: ஸ்வாமிக்கு முன்னால் ஸ்தண்டிலம். 16 கலசங்களில் அஷ்ட மிருத்திகை உதகங்களை நிரப்பி, அலங்கரித்து பூஜை. பஞ்ச கவ்யம்,

பஞ்சாமிர்தம் கூட்டுதல். அக்னிகார்யம். ப்ராயச்சித்த ஆஹுதி. பூர்ணாஹுதி. துவார பூஜை. அபிஷேகம். கும்பங்களின் நீரினால் அபிஷேகம். வாஸனை த்ரவ்யங்கள் சேர்த்து அரைக்கப்பட்ட சந்தனக் காப்பு, வ்யோமவ்யாபி மந்த்ர ஜபம். விரிவான ந்யாஸங்கள்.

104.47. பிம்ப ரக்ஷா பந்தனம்: ஸ்வாமிக்கு மேள தாளத்துடன் ரக்ஷாபந்தனம்.

104.48. தீப ஸ்தாபனம், தீபலக்ஷ்மீ பூஜை: அழகான நெய்தீபத்தை மண்டபத்தில் ஏற்றுதல். விக்னேச்வர பூஜை. புண்யாஹவாசனம். பஞ்ச ப்ரஹ்ம பூஜை. சந்தனம் புஷ்பத்தால் தீபலக்ஷ்மிக்கு அர்ச்சனை, வ்யோம வ்யாபி மந்த்ர ஜபம். தூப தீப ஆராதனை. சுமங்கலிப் பெண் தீபத்தோடு வீதி வலம். கர்ப்பக்ரஹத்தில் தீபத்தை வைத்திடல்.

104.49. லக்ஷ்மீ பூஜை: சுமங்கலிகள், கூட்டமாக, மேள தாளத்துடன், குடை, கொடி, சாமரத்துடன், மஹாலக்ஷ்மியை திருக்கோயில் கர்ப்பக்ரஹத்துக்கு அழைத்துச் செல்லுதல்.

104.50. கந்தலேபனம்: ஸ்வாமிக்கு சந்தனக் காப்பு சாத்துதல்.

104.51. மஸ்தக ஜபம்.

104.52. ந்யாஸார்ச்சனம்.

104.53. சாந்தி கும்பம், நாடீசந்தானம்: மஹாகும்பாபிஷேகத்திற்கு முதல் நாள், விசேஷ த்ரவிய ஹோமத்துக்குப் பிறகு யாகசாலையில் நிகழ்வது. குண்டத்தின் வலப்பக்கத்தில் அரிசியின்மீது கடஸ்தாபனம். ஆசனமூர்த்தி மூலம் சிவனை ஆவாஹனம் செய்தல். பாசுபதாஸ்த்ர கும்பங்களையும் சாந்தி கும்பத்தின் அருகில்

வைத்தல். யாகசாலையிலுள்ள கும்பம், யாககுண்ட அக்கினி, கருவறையிலுள்ள மூர்த்தி ஆகிய மூவரையும் தொடுக்கும் நாடீசந்தானம். குண்டத்தில் சம்பாத ஹோமம். மூர்த்திகளை சாந்தி கும்பத்தில் ஜபித்து, ஜப சங்க்யையால் ஹோமம். நாடீசந்தானம் ஆன மூர்த்திகளுக்கு, சாதாரணமாக, வஸ்த்ரங்கள் அணிவிப்பதில்லை. எனவே தரிசனம் கிடையாது. மறுநாள் கும்பாபிஷேகத்துக்குப் பிறகே வஸ்த்ரம் சாத்துவதாக ஒரு மரபு.

104.54. தத்வார்ச்சனை, ஸ்பர்சாஹுதி:

பிற்சேர்க்கையில் காண்க.

104.55. அவப்ருத யாகம், மஹா பூர்ணாஹுதி: மஹா கும்பாபிஷேகத்தன்று காலை செய்யப்படுவது. ப்ராயச்சித்த ஹோமமாக, இயன்ற வரை மூல மந்திரம் கூறி ஹோமம். க்ஷமா ப்ரார்த்தனை. துணைக் குண்டங்களில் பூர்ணாஹுதி. மேகலைகளில் பலி. பஹிர்பலி. துணைக் குண்டங்களிலிருந்து தேவதைகளை, நாடீசந்தானம் வழியே புஷ்பம் அக்ஷதை தர்ப்பையுடன் எடுத்து, ப்ரதானகுண்டத்தில் சிவனிடம் ஒடுக்குதல். அஷ்டபுஷ்பங்களால் வித்யேச்வரர்களுக்கு அர்ச்சனை. ஜயாதி ஹோமம். யாகசாலை க்ரியைகளின் நிறைவாகச் செய்யப்படும் அவப்ருத யாகம். மஹா பூர்ணாஹுதி. வ்யாஹ்ருதி ஹோமம். பரிதி விஷ்டரங்களில் பலி. அக்னியிலுள்ள மூர்த்தியை, நாடீசந்தானம் வழியே கும்பத்தில் சேர்ப்பித்தல். அர்க்யம். நிரோத முத்திரை. நிரோத அர்க்யம். விஷ்டர, பரிஸ்தரண தர்ப்பைகளை அக்னியிலிட்டுச் சாம்பல் பெற்று ரக்ஷையாகக் கொண்டு நெற்றியில் தரித்தல்.

104.56. யாத்ரா தானம்: கும்பத்தை யாகசாலையிலிருந்து எழுந்தருளச் செய்யும் முன் யாத்ரா

ஹோமம். நவக்ரஹ தானம். தச தானம். மனக்கல்பித தானம் (ஸஹ-ஆக-525).

104.57. கடோத்வாஹனம் (கும்ப உத்தாபனம்): கும்பத்தை யாகசாலையிலிருந்து எழுந்தருளச் செய்தல். (விவரங்கள் 104.36. -இல்).

104.58. மூலாலய ப்ரவேசம்: மூலாலய வாசலில் லாஜபுஷ்பம் இறைத்தல். கும்பத்தை ஸ்தண்டிலத்தில் அமர்த்துதல். சகளீகரணம்.

104.59. *ஸ்தூபி கும்பாபிஷேகம்:* ராஜகோபுரத்திற்கும், ஸ்வாமி விமான ஸ்தூபிக்கும் முதலில் கும்பாபிஷேகம். தொடர்ந்து விநாயகர், ஸ்வாமி, அம்பாள், ஸுப்ரஹ்மண்யர், பரிவார தெய்வங்கள், இறுதியாக சண்டிகேச்வரர் - ஆகியோரது ஸந்நிதிகளின் விமானங்களுக்கும் (ஸ்தூபிகளுக்கும்), த்வஜஸ்தம்பத்துக்கும் கும்பாபிஷேகம்.

104.60. *ஸ்வாமி கும்பாபிஷேகம்:* ஆசன மூர்த்தி மூலம் மூலவருக்கு அருச்சனை. அஷ்டா த்ரிம்சத் கலா ந்யாஸம். கும்பத்திலிருந்து பீஜத்தைக் கூர்ச்சத்துடன் எடுத்து, லயாங்கமாக, மூல மந்த்ர உச்சாரணத்துடன் மூலலிங்கத்தில் சேர்ப்பித்தல். வேத கோஷம், வாத்தியங்கள் முழங்க அபிஷேகம்.

104.61. பரிவார தெய்வங்களுக்குக் கும்பாபிஷேகங்கள்.

104.62. சண்டிகேச்வரர் கும்பாபிஷேகம்.

104.63. க்ரியா பூர்த்தி: கும்பாபிஷேகங்கள் நிறைவானதும், யாகசாலை அடைந்து, ஸ்திராஹுதி. பரிவார தெய்வங்களுக்கு ஆஹுதி, விஸர்ஜனம். ஆத்ம சமாரோபணம். பரிதி விஷ்டர விஸர்ஜனம். ச்ருக்ச்ருவ

விஸர்ஜனம். மூலலிங்கத்தை அடைந்து கிரியைகள் நிறைவேறியதாக விண்ணப்பித்தல்.

104.64. ஆசார்ய உற்சவம், யஜமான உற்சவம். ஆசார்யாருக்கு மரியாதை. தொடர்ந்து, எஜமானருக்கு மரியாதை.

104.65. சண்ட ஹோமம்: சண்டிகேச்வரருக்கு ஹோமம்.

104.66. மஹாபிஷேகம்: கும்பாபிஷேகத்தன்று அனைத்து மூர்த்திகளுக்கும் நடைபெறும் அபிஷேகம். மஹாபிஷேகத்துக்குப் பிறகு மூலலிங்கத்திற்கு மஹா ஹவிஸ் (சுத்த அன்னம்) நைவேத்யம் (ஸஹ-ஆக-554). அத்தோடு கூட திருப்பாவாடை சமர்ப்பணம் (தயிர் சாதத்தை ஸந்நிதி முன் வாழை இலைகளில் நிறைத்துப் பரப்பி வைத்து நைவேத்யம் - இது மரபு).

104.67. திருக்கல்யாணம்: கும்பாபிஷேகத்தன்று மாலையில்.

104.68. திருவீதி உலா: கும்பாபிஷேகத்தன்று மாலையில், திருக்கல்யாணம் ஆன பிறகு.

104.69. ரக்ஷா விஸர்ஜனம்: சிவாச்சார்யார்கள் தங்களது ரக்ஷைகளைக் களையும் நிகழ்ச்சி.

104.70. அவப்ருத ஸ்நானம்: தாங்கள் செய்து வந்த க்ரியைகளின் நிறைவாக, சிவாச்சார்யார்கள் நதிக்குச் சென்று ஸ்நானம் செய்து வருதல்.

104.71. ஆசார்ய உற்சவம்: சிவாச்சார்யார்களுக்கு மரியாதை செய்து, சன்மானங்கள் வழங்கும் நிகழ்ச்சி.

104.72. மண்டல பூஜாரம்பம்: மஹாபிஷேகத்திற்கு மறுநாளிலிருந்து, தினமும் ஒரு காலம், அனைத்து

ப்ரதிஷ்டைகளுக்கும் அபிஷேகம் செய்ய வேண்டும். தைலம் (எண்ணெய்), சுத்தமான ஜலம், பால், (கிடைத்தால்) சிறிதளவு சுத்தமான தேன், சிறிதளவு சுத்தமான சந்தனம், சிறிதளவு வாழைப்பழமும் தேனும் மட்டும் கலந்த பஞ்சாமிர்தம் இவற்றுல்தான் அபிஷேகம் செய்யலாம். அஷ்டபந்தன மருந்து இறுகுவதற்கு முன், அதைக் கரைக்கக் கூடிய அல்லது அதன் பலத்தைக் குறைக்கக்கூடிய எந்த பொருளாலும் அபிஷேகம் செய்யக்கூடாது என்பதே குறிக்கோள். மண்டலாபிஷேகம் தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி நடைபெறுவதே சிறந்தது. தரிசனம் செய்ய வருபவர்கள் ஏமாற்றமடையாமல் இருக்க, அன்றன்றைய மண்டலாபிஷேக உபயதாரர்கள் செய்யக் கூடிய பெரும் உதவி இது.

104.73. தினசரி மண்டல பூஜை: மண்டலாபிஷேக பூஜை, மஹாபிஷேகத்தையும் சேர்த்து, சரியாக நாற்பத்து ஐந்து நாட்கள் (த்ரிபக்ஷம்) நடந்திடல் வேண்டும். இந்தக் காலகட்டத்தை கூட்டுவதற்கு ஆகமச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை எனப்படுகின்றது. குறைப்பதாக இருந்தால் த்விபக்ஷம் (30 நாட்கள்), அல்லது ஏகபக்ஷம் (15 நாட்கள்) மண்டலாபிஷேகம் செய்யலாம் என்று ஸஹஸ்ராகமம் கூறுகின்றது. அஷ்டபந்தன மருந்து இறுகும் வரை அபிஷேகப் பொருட்களில் நியமம் காக்கப்பட வேண்டுமாதலால், மண்டலாபிஷேகக் காலத்தைக் குறைப்பது உசிதமில்லை. (10-9-2000 அன்று கும்பாபிஷேகம் நிகழ்ந்தால், 24-10-2000 அன்று மண்டலாபிஷேகம் பூர்த்தி ஆகும்) ஸஹஸ்ராகமம் ப்ரதிஷ்டா விதி படலம் ச்லோகங்கள் 555, 556, 557 தினசரி மண்டலாபிஷேகம் செய்வது குறித்துப் பின் வருமாறு கூறுகின்றன: "கும்பாபிஷேகத்துக்கு மறு தினத்திலிருந்து சிவாச்சார்யார் 1008 கலசங்களை ஸ்நபநம் வைத்து பூஜிக்க

வேண்டும். இல்லையென்றால், 108 கலசங்களையாவது வைக்க வேண்டும். வைத்து, ஏகாதச ருத்ர ஜபம், அஸ்த்ர மந்த்ர ஜபம், பஞ்ச ப்ரஹ்ம மந்த்ர ஜபம், ஷடங்க மந்த்ர ஜபம் ஆகியவற்றைச் செய்து நித்தியம் சாந்தி ஹோமம் செய்ய வேண்டும். பின்னர் இஷ்டப்படி (தமக்கு விதித்துள்ள பத்ததிப்படி) அக்னியில் ஹோமம் செய்து பூஜையை நிறைவு செய்ய வேண்டும். சிவபெருமானின் உக்ரஹ ஸமனத்திற்காகவும், ஸர்வ தோஷ நிவாரணத்திற்காகவும் இவ்வாறு செய்திடல் வேண்டும்."

104.74. மண்டலாபிஷேக பூர்த்தி: மண்டலாபிஷேகம் நிறைவுறும் நாளன்று, விரிவான அபிஷேகங்கள், அனைத்துப் பொருள்களாலும் ஒரு மஹா அபிஷேகமாக அனைத்து ஸந்நிதிகளிலும் செய்திடல் வேண்டும். மண்டலாபிஷேக பூர்த்தி நாளைக் கூட்டு வழிபாடாக ஏற்பாடு செய்வது, தினசரி நடைபெறும் மண்டலாபிஷேகத்தில் ஒரு நாளைக்கு உபயதாரராகப் பங்கு பற்ற வாய்ப்பு கிட்டாதவர்க்கும், பங்கு பற்ற இயலாதவர்க்கும், வரவேற்கத் தக்கதாக அமையும். ஸஹஸ்ராகமம் ப்ரதிஷ்டா விதி படலம் கூறுகின்ற வகையில் 44 நாட்கள் பூஜை செய்ய இயலாத வேளைகளில், மண்டலாபிஷேக பூர்த்தி சமயத்திலாவது, விரிவாக அக்னிகார்யத்துடன் பூஜைகள் செய்வித்து மண்டலாபிஷேகப் பூர்த்தியை *சங்காபிஷேகமாக* நடத்திடுதல் வழக்கத்தில் இருந்து வருகின்றது. வசதிக்கேற்றவாறு, மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளன்று காலையில், 1008 சங்குகளுக்கோ அல்லது 108 சங்குகளுக்கோ பூஜைகள் செய்து, மூலலிங்கத்துக்கு அபிஷேகம் செய்வர். அந்த நாளுக்கு முதல் நாள் மத்தியானம் முதலே சங்குகளை ஸ்தாபிக்கத் தொடங்கி, அலங்கரித்து, கடங்களும் ஸ்தாபனம் செய்து, மாலையில் அதிவாஸ யாகம் செய்து, பிறகு மறுநாள் காலை புனர்

பூஜையாக இரண்டாங் கால பூஜைகளும் ஹோமங்களும் செய்து, அதன் பின்னர் சங்காபிஷேகம் செய்வதும் உண்டு. தன்மீசர் செம்பொன்கோயிலில் 24.10.2000 அன்று ப்ரதோஷ வழிபாடும் சேர்ந்து அமைந்தது போல அமைந்தால், காலையில் சங்கு ஸ்தாபனமும் ஹோமங்களும் செய்து, மாலையில் இரண்டாங்காலமாக பூஜைகளும் ஹோமங்களும் செய்து, அதன் பின்னர் சங்காபிஷேகம் செய்யலாம்.

104.75. சண்டிகேசர் உற்சவம்: மண்டலாபிஷேக பூர்த்தியன்று சண்டிகேச்வரருக்கு விசேஷ அபிஷேகங்கள் செய்து, இறைவனுரின் நிர்மால்ய மாலைகளை எடுத்துச் சாத்தி, தனியாகச் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து, அதை யாருக்கும் வழங்காமல் பசுமாட்டிற்குக் கொடுத்துவிடவேண்டும், அல்லது நதியில் கரைத்துவிடவேண்டும்.

104.76. யஜமானஸ்ய பல ஸமர்ப்பணம்: மண்டலாபிஷேக பூர்த்தி நாளன்று எஜமானருக்குச் செய்யப்படும் மரியாதை.

ௐ ௐ ௐ ௐ ௐ

105. மங்கலம்

105.01. ஜீர்ணமான பிம்பங்களைப் பூஜிப்பவர்களுக்குக் கெடுதல் உண்டாகும் என்கிறது *காரணாகமம்.*

105.02. ஜீர்ணமான ஆலய பிம்பங்களை, உடனேயே செப்பனிட்டு, முன் உள்ளதுபோல் செய்தவர்களுக்கு, தலைக்குமேல் சிவபுண்ணியம் கிட்டும் என்கிறது *மோஹசூரோத்திரம்.*

105.03. சுட்டகல், கருங்கல் இவற்றல் சிவாலயம் கட்டுவித்தவர்கள், சிவலோகத்தில் தங்கமயமான விமானத்தில் வீற்றிருப்பார்கள் என்கிறது *ஸுப்ரபேதாகமம்.*

105.04. சாஸ்த்ர விதிகளே அறியாமல், தன் இஷ்டப்படிச் செய்பவர், தன்னேயும், செய்விப்பவர்களேயும், இவ்வுலக பரலோக வாழ்க்கைகளே நாசம் செய்துகொண்டவர்களாக ஆக்கிடுவர்; ஆனதால், மிகுந்த முயற்சியுடன், விதி வழுவாது செய்விக்க வேண்டும்; இவ்வாறு செய்விக்கும் எஜமானர், செய்விக்கும் சிவாச்சார்யார்கள் இருபாலாருமே ஸ்ரீ பரமேச்வரரின் திருவடி நிழலில் வீற்றிருப்பார்கள் என்கிறது *ஸர்வஞ்ஞானேத்தராகமம்.*

105.05. சிவாலயம் கட்டுவதில் ஊதியம் பெற்றுப் பணி புரிவோரையும் சிவதர்ம மகிமை ஸ்வர்க்கம் சேர்ப்பிக்க வல்லது என்கின்றது *சிவதர்மம்.* இறைப்பணியிலீடுபடுவதென்பது இறையருள் இருந்தால்தான் இயலும். ஊதியமின்றி, சிவத்தொண்டாக, கும்பாபிஷேகப் பணிகளில் *தீவிரமாக* ஈடுபட்டவர்க்குச், சிறிது காலத்திற்குள்ளேயே எதிர்பாராத சங்கடங்கள் எழுகின்றன என்பது தென்தமிழ் மாநில மக்களின் அனுபவபூர்வமானதொரு நம்பிக்கை! இப்பிறவியில் இந்நாள் வரையும், முற்பிறவிகளிலும் அவர் செய்த அவச்செயல்களுக்காய பலாபலனே விரைவாகத் துய்த்துத் தீர்த்துவிடத்தான் அவ்வின்னல்கள் விளேகின்றன போலும்! பிறவியில்லாப் பேரின்பப் பெருவாழ்வை அடையும் இலக்கை நோக்கி அவர் இன்னும் ஓரடி எடுத்து வைப்பதற்காக ஐயன் அளிக்கும் வாய்ப்போ இவ்வின்னல்கள்!

105.06. செல்வத்தை (தனத்தை) சிவார்ப்பணம் செய்து, ஸ்ரீ சிவபெருமானே ஆராதனே செய்கின்றவர்கள்,

விச்வாஸத்துடன் கொடுத்த பணத்திற்குத் தகுந்தாற்போல் அஷ்டபந்தனம் செய்யவேண்டும்; பணம் உள்ளவர்களுக்கும், பணம் இல்லாதவர்களுக்கும் சிவதர்ம பலனுனது சமமாகவே உண்டாகும்; தனம் பெறும் பேறடைந்தவன் தன்னுடைய தனத்திற்குத் தகுந்தவாறு சிவதர்மத்தைச் செய்ய வேண்டும் என்கின்றது *ஸகஸ்ராகமம்* (ப்ரதிஷ்டா விதி படலம் - ச்லோகம் 54 - 55).

105.07. தீக்ஷிதனுகிய ஆச்சாரியார், பக்தி இல்லாதவனுக பூஜித்தால், ராஜா, ராஜ்யம் இவர்களுக்கு கெடுதல்; அது எவ்விதம் எனில், காட்டில் இருக்கிற துஷ்ட மிருகமாகிற ஸிம்ஹத்தைக் கண்ட யானையானது எப்படி பயம் அடையுமோ, அதுபோல் பக்தியில்லாத ஆச்சாரியனைப் பார்த்த உடனே சிவபெருமான் பயம் அடைந்து (விலகி விடுவார்). மந்திரம் இல்லாமல் அர்ச்சனை செய்தால், அந்த ஈச்வரன் பயம் அடைவார் என்கிறது *காரண ஆகமம்.* (பூஜாவிதி படலம் - ச்லோகம் 311, 312).

105.08. ஆலயங்கள் இனிப் புதிதாகக் கட்டிடல் வேண்டாம் என்கிறுர் காஞ்சிப் பெரியவர்; இருக்கும் ஆலயங்களைச் செவ்வனே பராமரித்து, தேவை உள்ளபோது ஜீர்ணோத்தாரணமும் அஷ்டபந்தனமும் செய்து, வேத ஆகம விதிகளுக்கொப்ப கும்பாபிஷேகங்கள் நடாத்தி, சிவதர்மத்தைப் போற்றி வருதலே இன்றைய தலைமுறையினருக்கு பெரும் பேறு பெற்றுத் தருவதாகும். அவர்களுக்கு, இந்தத் தொகுப்பு நூலில் கண்டுள்ளவை சற்றே பயன்படுமானுல், இந்நூலைத் தொகுத்த பயன் கிட்டியதாகும்.

105.09. 10-9-2000 -இல் நிகழ்ந்த ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில் கும்பாபிஷேகத்தின்போது கிடைத்த அனுபவங்களில் திளைத்து, அவற்றின் சாற்றினை, இனி

வரும் பக்கங்களில் அச்சேற்றி உள்ளேன். இதனுல் இந்நூல் இன்னும் பயனுள்ளதாக அமையுமென ஒரு அசட்டு நம்பிக்கை!

105.10. ஒரே ஒரு கும்பாபிஷேகத்தை அருகிலிருந்து கண்டதனுல், கிடைத்த அனுபவங்கள் எல்லா இடங்களுக்கும் பொருந்திவிடும் என்பது கருத்தல்ல. பல கும்பாபிஷேகங்களேக் காணக் கொடுத்து வைத்தவர்கள், பல கும்பாபிஷேகங்களே நிர்வாகம் செய்து நடத்தி வைக்கும் பேறு பெற்றவர்கள், பல கும்பாபிஷேகங்களுக்கு ஸர்வஸாதகம் செய்து சிவத்தொண்டு ஆற்றிவரும் பெருந்தகையாளர்கள் - ஏராளமாக நம்மிடையே உலவி வருகிறுர்கள். ஆனுல் அவர்களது அனுபவம் நம் போன்ற சாமானியர்களுக்குப் படிக்க உதவியாக ஒரு எளிய புத்தக வடிவில் வந்ததாகத் தெரியவில்லே. எனவே தான் ஏழையேனுல் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டு இந்நூல் விரிந்தது.


105.11. இந்த நூல், குறிப்பாகக் கூறப்போனுல் இந்த நூலிலுள்ள பிழைகள், பேறு பெற்ற அத்தகைய அனுபவசாலிகளேத் தூண்டிவிடட்டும்! இந்த நூலே விட இன்னும் பெரிய அளவில், பயனுள்ள அதிக விவரங்களேத் தாங்கிக் கொண்டு, பிழைகள் இல்லாத ஒரு நூலே அவர்களுள் ஒருவர் எழுதி வெளியிட அந்தத் தூண்டுதல் காரணமாகட்டும்! அந்த நூலின் முதல் பிரதியைப் பெறத் துடித்துக் கொண்டு நான் காத்திருக்கிறேன். இந்த நூலே வெளிக்கொணர நான் பட்ட பாட்டுக்கு நல்ல பலன் கிடைத்ததாக அன்றுதான் நான் மன அமைதி பெறுவேன்.

105.12. அல்லது, குறைந்த பக்ஷமாக, அத்தகைய அனுபவம் பெற்ற பெருந்தகையாளர்கள் என்னேடு தொடர்பு கொண்டு, எனக்கு வித்யாதானம் அளித்து, இதன்

அடுத்த பதிப்பினை பிழைகளின்றி வெளியிட ஊக்குவித்தாலும் அதனைப் பெரும் பேறகக் கருதுவேன்.

வணக்கம்

- இரா. திருவுடையோன் (R.ஸ்ரீதரன்).



SECTION - 2

PRACTICAL HINTS

பகுதி - 2

அனுபவக் குறிப்புகள்



201. நிர்மாணப் பணிகள்

201.01. சில பணிகள், உதாரணமாகக் கருவறைக்குள் செய்யவேண்டிய திருப்பணிகள், பாலஸ்தாபனம் ஆகியுள்ள மஹா கும்பாபிஷேகக் காலங்களில் மட்டுமே செய்ய. இயலும். எனவே நிர்மாணப் பணிகளுக்கான திட்டங்கள் தீட்டும்போது அவற்றைப் பட்டியலிட்டு, மூன்று வகைப்படுத்துவது ஏற்புடையதாயிருக்கும்: (1) பாலஸ்தாபனம் ஆகியுள்ள காலங்களில் மட்டுமே செய்யக்கூடிய (கர்ப்பக்ரஹம், விமானம் போன்ற இடங்களில் பார்க்கப்பட வேண்டிய) திருப்பணிகள் (2) மற்ற இடங்களில் செய்யப்பட வேண்டிய திருப்பணிகளில், எதிர்வரும் கும்பாபிஷேகத்திற்கு முன்னதாகவே நிச்சயமாக செய்து முடிக்க வேண்டிய திருப்பணிகள் (3) எதிர்வரும் கும்பாபிஷேகத்துக்குப் பிறகும் தொடர்ந்து செய்யக் கூடிய திருப்பணிகள். நிதி நிலைமை, கிடைத்துள்ள அவகாசம், பணியாற்றவும் செய்து வாங்கவும் தேவைப்படும் மனித வளம் (human resources) - இவைகளைப் பொருத்து, திருப்பணிகளைத் திட்டமிட்டு, முக்கியத்துவத்திற்கேற்ப வரிசைப்படுத்தி செயலாற்றினல், இறுதியாக மன நிம்மதி கிடைக்கும்.

201.02. கருவறைத் தளங்களுக்கு பாலிஷ் செய்யப்பட்ட கருங்கல்லோ அல்லது சலவைக்கல்லோ பதித்தல் சிறப்புடைத்து. அபிஷேக நீர் சுத்தமாக பக்தர்களின் கைகளுக்குக் கோமுகம் வழியாகச் சென்று சேர்வதற்கு இது உதவும். பீங்கான் ஓடுகள் (ceramic tiles) உபயோகித்தல் உசிதம் அல்ல. கருவறைத் தளத்திற்கோ, அல்லது கருவறைச் சுவருக்கோ சலவைக்கல் அல்லது கருங்கல் பதிக்கும் திருப்பணி பாலஸ்தாபனம்

ஆகியுள்ள மஹா கும்பாபிஷேகக் காலங்களில் மட்டுமே செய்ய இயலும்.

201.03. கருவறைகளுக்கு சலவைக்கல் தளம் அமைக்கும்போது அர்த்த மண்டபத்துக்கும் சேர்த்து அமைப்பது நல்லது. சாதாரணமாக, அர்த்த மண்டபங்கள் அளவில் சிறியதாக இருக்குமாதலால், அதிகச் செலவும் பிடிக்காது.

201.04. சலவைக்கல் தளங்கள் அமைக்கும்போது நீர் விரைவாக வெளியேறச் சரியான *வாட்டம்* வைக்கவேண்டியது அவசியம்.

201.05. கோபுர த்வாரத்திலும் (ராஜகோபுரத்தின் இரு புறத்து நிலைவாயிற்படிக் கற்களுக்கு இடைப்பட்ட பகுதி), த்வஜஸ்தம்பத்துக்கு முற்பட்ட நமஸ்காரம் செய்யும் பகுதியிலும் கூட சலவைக்கல் தளங்கள் அமைத்தால், அவ்விடங்களைச் சுத்தமாக வைத்திருக்க ஏதுவாகும்.

201.06. சலவைக்கல் உள்ளிட்ட எவ்வகையான தளம் அமைத்தாலும், வழுக்கி விடாதவாறு, பாலிஷ் ஓரளவுக்கே செய்யப்படுதல் வேண்டும்.

201.07. ஸந்நிதிகள், கோபுர த்வாரங்கள் (நுழைவாயில்கள்) இவற்றிற்கு மரக்கதவுகள் இருந்தால் அவற்றைச் செப்பனிட்டுப் பொலிவூட்டவேண்டும். புதிதாகக் கதவுகள் அமைக்க வேண்டி இருந்தால் அவை கலை அழகுள்ளவையாகவும், உறுதியானவையாயும் அமைக்கப்படுதல் சிறந்தது.

201.08. கதவுகளைப் பாதுகாப்பாகத் தாளிடுவதற்கான (தரையில் துவாரம், கூறையில் துவாரம், சுவரில் துவாரம் அல்லது வளையங்கள் போன்ற) வசதிகளைச் சரியாக ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக, சலவைக்கல் தளம் அமைத்தால், அதில் துவாரம் வைப்பது

விடுபட்டுப் போகின்றது. பிறகு, கதவினைச் சாத்திச் சரியாகத் தாளிட இயலாமல் போகின்றது!

201.09. மரக்கதவினைத் தவிர, இரும்புச் சட்டக் கதவு (Grill Gate) அமைப்பது விரும்பத் தக்கது. திருக்கோயில் நடை திறந்திருக்கும் காலங்களில் சிவாச்சார்யார் சற்று அகன்று செல்ல வேண்டி நேர்ந்தால், அவர் இரும்புக் கதவை மட்டும் பூட்டிக் கொண்டு செல்லலாம். அன்பர்கள் கருவறைத் தெய்வத்தை தரிசனம் செய்தவாறே செல்ல அது வகை செய்யும்.

201.10. கருவறையைச் சார்ந்த அர்த்த மண்டபத்தில் (அல்லது கருவறை பெரியதாக இருந்தால் அதற்குள்ளேயே) சுவரில் கம்பிகள் அல்லது பைப்புகள் (டவல் ஸ்டான்ட் பொருத்தி வைப்பது போல) பதித்து வைத்தால், வஸ்த்ரங்களைத் தரையில் கிடத்திச் சேர்த்து வைத்து அலங்கோலமாக்கிடாமல் கருவறையைத் துப்புரவாக வைத்திருக்க இயலும். அவ்வாறே, திரைகள் கட்டுவதற்கு ஏதுவாகவும், விளக்குகள் தொங்க விடுவதற்கு வசதியாகவும் கருவறையிலும் அர்த்த மண்டபத்திலும் மேற் கூறையிலும் சுவரிலும் கொக்கிகள், கம்பிகள் போன்றவற்றை பாலாலாயம் ஆகியுள்ள காலங்களில் பொருத்திக் கொண்டுவிட வேண்டும்.

201.11. கோபுர, விமான கலசங்களைச் சுத்தம் செய்து பொலிவுள்ளதாக்க திட்டங்கள் தீட்டிச் செயல்பட வேண்டும்.

201.12. த்வஜஸ்தம்பங்களை (கொடி மரங்கள்) தகடுகளால் மூடிப் பாதுகாக்கலாம். தகடுகளால் மூடப்பட்டு இருக்கும் த்வஜஸ்தம்பங்களை, கும்பாபிஷேக காலங்களில் பிரித்துப் பார்த்து, உள்ளே இருக்கும் மரப்

பகுதியைச் செப்பனிடலாம்; தகடுகளையும் சுத்தம் செய்து அவற்றைப் பொலிவுள்ளதாக்கலாம்.

201.13. தேவதைகளின் கற்சிலா மூர்த்தங்கள் ப்ரதிஷ்டை செய்வதானால், அவை ஒரு பீடத்தின் மீது ப்ரதிஷ்டை ஆக வேண்டும். அந்த பீடத்திற்கும் சக்தி உண்டு. கும்பாபிஷேக யாகசாலை க்ரியைகளில், பீடத்திற்கென வர்த்தினி என்று கூறப்படும் ஒரு கும்பம் வைத்து பூஜித்து, பீடத்துக்கும் கும்ப நீர் அபிஷேகம் செய்யப்படுவது கருத்திற்கொள்ளத் தக்கது. புதுச் சிலைகள் செய்வதானால் அச்சிலைகளை வடிக்கும் சிற்பிகளிடமே அவற்றிற்கான பீடங்களுக்கும் ஏற்பாடு செய்து கொள்வது நல்லது. சில பழைய கோயில்களில் சில ப்ரதிஷ்டா மூர்த்திகளை பீடம் இல்லாமலேயே சிமென்ட் தளத்தின் மீதே அமைத்திருக்கக் காண்பதுண்டு. ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்யும்போது, அச்சிலைகளுக்கும் பீடங்கள் செய்வித்து புனர்ப்ரதிஷ்டை செய்வது நல்லது.

201.14. அவ்வாறே, கோபுர கலசங்கள், விமான கலசங்கள் (ஸ்தூபிகள்) ஆகியவற்றைப் பொருத்தும்போது, சந்தனக் கல் பீடமாக அமைக்கப்படும். அதற்குத் தேவையான சந்தனம் அரைக்கும் வட்ட வடிவக் கற்கள், தேவையான அளவில், தேவைப்பட்ட எண்ணிக்கை முன்னதாகவே வாங்கி வைத்திருக்க வேண்டும்.

201.15. ராஜகோபுரங்களில் சில இடங்களில் கலசங்கள் சுதை வேலைப்பாடுகளாகவே இன்னமும் உள்ளன. கோபுரத் திருப்பணி ஆரம்பித்தால், அவற்றை உலோகக் கலசங்களாக மாற்றுவதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும். தரையோடு கம்பிகள் கொண்டு இணைக்கப்பட்ட கோபுர கலசங்கள் மின்னல் இடி காலங்களில் சுற்றிலும் உள்ள இல்லங்களுக்கு நல்ல

பாதுகாப்பு அளிக்கின்றன என்பது விஞ்ஞான ரீதியான உண்மை.

201.16. ராஜகோபுரங்கள் வழிபடு பொருட்களே. அவற்றின் கலசங்களை இறை உருவாகக் கொண்டு நாம் கையெடுத்துக் கும்பிடுவது எல்லோரும் அறிந்ததே. எனவேதான் கோபுர கலசங்களும் கும்பாபிஷேகத்தின் அங்கமாக யாகசாலைக் கலச நீர் சொரியப்பட்டு புனிதமாக்கப்படுகின்றன. எனவே, கோபுரத்தின் மீது எவரும் கால் வைத்து ஏறக்கூடாது. திருப்பணிகளுக்காக கோபுரத்தின் மீது ஏற வேண்டுமானுல், கோபுரத்தையும் பாலஸ்தாபனம் செய்த பிறகே அதன் மீது ஏறி திருப்பணி வேலைகள் செய்யலாம். தவிர்க்க முடியாத காரணங்களால், சாதாரண காலங்களில் எப்போதாவது ஒருவர் கோபுரத்தின்மீது ஏறத்தான் வேண்டும் என்முல், அவ்வாறு ஏறுபவர் தீக்ஷை பெற்ற சிவாச்சார்யாராகத்தான் இருக்க வேண்டும். அவரும், சிவோகம்பாவனை செய்தகொண்ட பின்னரே கோபுரத்தின் மீது காலடி வைக்கலாம். அவ்வாறில்லையெனில் கோபுரக் கலசங்களில் ஸாந்நித்தியத்திற்கு ஊறு நேரிடும்; "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற முதுமொழி பயனற்றதாகிவிடும்! கோபுர கும்பாபிஷேக சமயத்தில், தோரணங்கள், கொடிகளைத் தாங்கி நிற்கும் கம்புகள் (மரக் குச்சிகள்) போன்றவை கோபுர உச்சியில் கட்டப்படுவது வழக்கம். கும்பாபிஷேகத்துக்குப் பிறகு பல மாதங்கள் அவை அங்கேயே இருந்து பொலிவைக் குறைப்பதைக் காண்கிறேம். அவற்றைக் களைவதற்கென கோபுரத்தின் மீது ஏறுவதும் சாத்தியம் இல்லாமல் போகின்றது! எனவே நார், சணல் போன்ற காலத்தால் இற்றுப்போகும் (bio-degradable) பொருள்களைக் கொண்டு அவற்றைக் கட்டினுல் சில நாட்களுக்குப் பின்

அவை தானுகவே மக்கி விழுந்துவிடும்; கம்பிகள் ப்ளாஸ்டிக் கயிறுகள் போன்றவற்றுல் அவற்றைக் கட்டவே கூடாது.

201.17. புதுச் சிலைகள் அமைக்கும் போதும், இருக்கும் சிலைகளை இடம் மாற்றி அமைக்கும் போதும், அவை ஆகமப்படி எந்த இடத்தில், எந்தத் திசை நோக்கி அமைக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்து கொண்டு, பின்னர் அதற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். ஆகமம் தெரிந்த அறிஞர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோரைக் கலந்து ஆலோசிப்பது நல்லது. அருகிலுள்ள பெரிய, புராதனமான சிவாலயங்களில் அத்தகைய சிலைகள் எவ்வாறு ப்ரதிஷ்டை ஆகி உள்ளன என்பதையும் கண்டறிந்து கருத்தில் கொள்வது நல்லது. இவ்வாறுன ஆய்வுகளுக்குப் பின்னரே ப்ரதிஷ்டை குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டது என்ற முழு விவரத்தை விழா மலர், அறிக்கைகள், கோப்புகள் (files), போன்றவற்றில் பதிப்பித்து வைப்பதும் அவசியம். எதிர்காலத்தில் இதே திருக்கோயிலில் புனராவர்த்தனம் செய்ய வருபவர்க்கு இந்த விவரங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

201.18. புதுச் சிலைகள் தயாராகி வந்ததும், அவற்றை நீர் நிரம்பியுள்ள தொட்டிகளில் அமிழ்த்தி வைத்திருப்பது மரபு. அவை பல நாட்கள் அவ்வாறு இருப்பதனுல் நீர்ப்பாசி பிடித்து இருக்கும். அவற்றைக் கும்பாபிஷேக சமயத்தில் எடுத்து, சுத்தம் செய்து, நயனேன்மீலனம், பிம்ப சுத்தி, ஜலாதி வாஸம், தான்யாதி வாஸம் போன்ற கிரியைகளுக்குத் தயார் ஆக்க வேண்டும். சுத்தம் செய்வதற்கு, காஸ்டிக் சோடா என்ற ரஸாயனப் பொருளை (கைகளில் படாமல்) தடவி வைத்திருந்து தேய்த்துக் கழுவினுல் எளிதாக உள்ளது. பாலஸ்தாபனம் செய்து, பிறகு பெயர்த்து எடுக்கப்பட்டு,

பாதுகாப்பு அளிக்கின்றன என்பது விஞ்ஞான ரீதியான உண்மை.

201.16. ராஜகோபுரங்கள் வழிபடு பொருடகளே. அவற்றின் கலசங்களை இறை உருவாகக் கொண்டு நாம் கையெடுத்துக் கும்பிடுவது எல்லோரும் அறிந்ததே. எனவேதான் கோபுர கலசங்களும் கும்பாபிஷேகத்தின் அங்கமாக யாகசாலைக் கலச நீர் சொரியப்பட்டு புனிதமாக்கப்படுகின்றன. எனவே, கோபுரத்தின் மீது எவரும் கால் வைத்து ஏறக்கூடாது. திருப்பணிகளுக்காக கோபுரத்தின் மீது ஏற வேண்டுமானுல், கோபுரத்தையும் பாலஸ்தாபனம் செய்த பிறகே அதன் மீது ஏறி திருப்பணி வேலைகள் செய்யலாம். தவிர்க்க முடியாத காரணங்களால், சாதாரண காலங்களில் எப்போதாவது ஒருவர் கோபுரத்தின்மீது ஏறத்தான் வேண்டும் என்றுல், அவ்வாறு ஏறுபவர் தீக்ஷை பெற்ற சிவாச்சார்யாராகத்தான் இருக்க வேண்டும். அவரும், சிவோகம்பாவனை செய்தகொண்ட பின்னரே கோபுரத்தின் மீது காலடி வைக்கலாம். அவ்வாறில்லையெனில் கோபுரக் கலசங்களில் ஸாந்நித்தியத்திற்கு ஊறு நேரிடும்; "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற முதுமொழி பயனற்றதாகிவிடும்! கோபுர கும்பாபிஷேக சமயத்தில், தோரணங்கள், கொடிகளைத் தாங்கி நிற்கும் கம்புகள் (மரக் குச்சிகள்) போன்றவை கோபுர உச்சியில் கட்டப்படுவது வழக்கம். கும்பாபிஷேகத்துக்குப் பிறகு பல மாதங்கள் அவை அங்கேயே இருந்து பொலிவைக் குறைப்பதைக் காண்கிறேம். அவற்றைக் களைவதற்கென கோபுரத்தின் மீது ஏறுவதும் சாத்தியம் இல்லாமல் போகின்றது! எனவே நார், சணல் போன்ற காலத்தால் இற்றுப்போகும் (bio-degradable) பொருள்களைக் கொண்டு அவற்றைக் கட்டினுல் சில நாட்களுக்குப் பின்

அவை தானுகவே மக்கி விழுந்துவிடும்; கம்பிகள் ப்ளாஸ்டிக் கயிறுகள் போன்றவற்ருல் அவற்றைக் கட்டவே கூடாது.

201.17. புதுச் சிலேகள் அமைக்கும் போதும், இருக்கும் சிலேகளே இடம் மாற்றி அமைக்கும் போதும், அவை ஆகமப்படி எந்த இடத்தில், எந்தத் திசை நோக்கி அமைக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்து கொண்டு, பின்னர் அதற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். ஆகமம் தெரிந்த அறிஞர்கள் ஒன்றுக்கு மேற்பட்டோரைக் கலந்து ஆலோசிப்பது நல்லது. அருகிலுள்ள பெரிய, புராதனமான சிவாலயங்களில் அத்தகைய சிலேகள் எவ்வாறு ப்ரதிஷ்டை ஆகி உள்ளன என்பதையும் கண்டறிந்து கருத்தில் கொள்வது நல்லது. இவ்வாருன ஆய்வுகளுக்குப் பின்னரே ப்ரதிஷ்டை குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டது என்ற முழு விவரத்தை விழா மலர், அறிக்கைகள், கோப்புகள் (files), போன்றவற்றில் பதிப்பித்து வைப்பதும் அவசியம். எதிர்காலத்தில் இதே திருக்கோயிலில் புனராவர்த்தனம் செய்ய வருபவர்க்கு இந்த விவரங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

201.18. புதுச் சிலேகள் தயாராகி வந்ததும், அவற்றை நீர் நிரம்பியுள்ள தொட்டிகளில் அமிழ்த்தி வைத்திருப்பது மரபு. அவை பல நாட்கள் அவ்வாறு இருப்பதனுல் நீர்ப்பாசி பிடித்து இருக்கும். அவற்றைக் கும்பாபிஷேக சமயத்தில் எடுத்து, சுத்தம் செய்து, நயனுேன்மீலனம், பிம்ப சுத்தி, ஜலாதி வாஸம், தான்யாதி வாஸம் போன்ற கிரியைகளுக்குத் தயார் ஆக்க வேண்டும். சுத்தம் செய்வதற்கு, காஸ்டிக் சோடா என்ற ரஸாயனப் பொருளே (கைகளில் படாமல்) தடவி வைத்திருந்து தேய்த்துக் கழுவினுல் எளிதாக உள்ளது. பாலஸ்தாபனம் செய்து, பிறகு பெயர்த்து எடுக்கப்பட்டு,

பின்னர் கும்பாபிஷேக சமயத்தில் புனர்ப்ரதிஷ்டை ஆகும் சிலைகளைக் கூட இவ்வாறு சுத்தம் செய்யலாம். இவ்வாறு சுத்தமான சிலைகளை, பிறகு தயிரும் அரிசி மாவும் கலந்து தடவி வைத்திருந்து மேலும் தூய்மையாக்கலாம்.

201.19. புதுச் சிலைகள் நிறுவுவதானாலும், இருக்கும் சிலைகளை இடம் மாற்றியோ அல்லது இருக்கும் இடத்திலேயேயோ புனர்ப்ரதிஷ்டை செய்வதானாலும் அவற்றை த்ரிபந்தனம் செய்து பீடத்துடன் நன்றாகப் பொருத்தவேண்டும். த்ரிபந்தனம் என்பது வாழைப்பழம், வெல்லச் சர்க்கரை, சிமென்ட் அல்லது சுண்ணாம்புக் காரை போன்ற கட்டுமானப் பொருள் ஆகிய மூன்றும் சேர்ந்த கலவை. அவற்றைக் குறிப்பிட்ட அளவிலே ஸ்தபதியாரைக் கொண்டு கலந்து பீடத்துடன் இணைத்து ஓரிரு நாட்கள் விட்டுவைத்திருந்து இறுக வைக்கவேண்டும். இதற்காக நல்ல நேரம் குறித்துத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

201.20. த்ரிபந்தனம் செய்வதற்கு முன், சிலைகளுக்கு அடியில் பீடத்தின் மேல் எந்த்ரத் தகடுகளும் நவரத்தினக் கற்களும் வைக்கப்பட வேண்டும். எந்த எந்த்ரம் எந்த சிலைக்கு அடியில் வைக்கப்பட வேண்டும் என்ற நியதி உண்டு. அதனைச் சிவாச்சார்யார்கள் அல்லது ஸர்வஸாதகரிடம் இருந்து தெரிந்து கொள்ளலாம். தங்கம் அல்லது வெள்ளி அல்லது தாமிரம் அல்லது தங்க முலாம் பூசிய பித்தளை மற்றும் வெங்கலத் தகடுகளில் அத்தகைய எந்த்ரங்கள் செய்யப்படும் அல்லது எழுதப்படும். அனுபவம் உள்ள நகை செய்யும் தொழிலாளர்கள், திருக்கோயிலுக்கு உலோகத்தில் உபகரணங்கள் செய்து தரும் கலைஞர்கள், அனுபவம் மிக்க உபாஸகர்கள் போன்றோரிடம் தொடர்பு கொண்டு தேவைக்கேற்ப எந்த்ரங்களைச் செய்வித்து,

அவற்றை முன் கூட்டியே தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே, நகைக் கடைகளில் சொல்லி ஏற்பாடுகள் செய்து, நவரத்தினக் கற்களும் தேவையான "செட்"கள் வாங்கி வைத்திருக்க வேண்டும்.

201.21. திரிபந்தனம் செய்து நன்றுகப் பொருத்தப்பட்ட சிலைகளுக்கு, கும்பாபிஷேகத்துக்கு ஓரிரு நாட்கள் முன்னதாகச் சிவாச்சார்யார்களைக் கொண்டு அஷ்டபந்தனம் செய்விக்க வேண்டும். அஷ்டபந்தனம் செய்யும் முன் சிறிதளவு பாதரஸத்தினை சிலைக்கும் பீடத்திற்கும் இடையில் உள்ள சந்தில் செலுத்தி வைத்தால் "செல்லு" பூச்சிகள் போன்றவற்றுல் அஷ்டபந்தன மருந்து அரிக்கப்படாது என்பர்.

201.22. அஷ்டபந்தன மருந்து தயாரித்து, திருக்கோயிலுக்கு வந்து அதனை இடித்துச் சாத்தி கைங்கர்யம் செய்யும் சிவாச்சாரியார்கள் உள்ளனர். அவர்களது உதவியைப் பெற்றுக் கொள்ளலாம். தற்காலத்தில் அஷ்டபந்தனம் இடிப்பதற்குத் தேவையான உரல்-உலக்கைகள் ஏற்பாடு செய்வதில் சிரமம் உள்ளது. இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

201.23. கர்ப்பக்ரஹங்களில் மூர்த்திகளுக்கு முன்னுல் திரை இருப்பது அவசியம். திருப்பணி நடைபெறும்போது அவை களையப்பட்டிருக்கக் கூடும். அவற்றை மஹா கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் நாடீசந்தானம் செய்வதற்கு முன்னதாகவே மீண்டும் பொருத்திட வேண்டும்.

201.24. கர்ப்பக்ரஹங்களுக்கு முன்னுலும், ப்ராகாரங்களிலும், மற்ற இடங்களிலும் தரிசனம் செய்ய வருவோர் வரிசை காத்திட உதவும் முகத்தான், இரும்புக் குழாய்கள் மற்றும் கம்பிகளாலான தடைவேலிகள் (barricades) அமைக்கப்பட்டிருக்கக் கூடும். திருப்பணி நடைபெறும்

நேரங்களில் அவை களையப்பட்டிருக்கக் கூடும். அவற்றை மஹா கும்பாபிஷேகத்திற்கு முன்பாகவோ, இல்லையென்றால் கும்பாபிஷேகம் முடிந்த ஓரிரு நாட்களுக்குள்ளேயோ, அதே மாதிரியாகவோ அல்லது திருத்தி அமைத்தோ மீண்டும் பொருத்திட முன்னேற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

201.25. புது மணிமண்டபம் அமைப்பதானால், மணி அடிப்பவர் தான் நிற்கும் இடத்திலிருந்து அபிஷேகம் நடைபெறும் ஸந்நிதியைக் காண இயலும் வகையில் அமைக்க முடிந்தால் வசதியாக இருக்கும். புதிதாக மணிமண்டபம் அமைத்தோ, அல்லது இருக்கும் மணிமண்டபத்திலோ, புதிதாக வாங்கிய மணியையோ அல்லது இருக்கும் மணியையோ கட்டுவதற்கு முன், (1) மணியின் எடையைத் தாங்கும் அளவுக்குக் கொக்கிகள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளனவா என உறுதி செய்து கொள்ளல் வேண்டும் (2) மணியைக் கட்டுவதற்கு ஒரு நல்ல முஹூர்த்தம் பார்த்து, மணிக்கு பூஜைகள் செய்து, பிறகு அந்நன்னாளில் மணியை ஏற்றிக் கட்ட வேண்டும்.

201.26. திருக்கோயிலில், இதற்குமுன் நடைபெற்ற திருப்பணிகள், நிகழ்ச்சிகள் குறித்த பற்பல கற்பலகைகளில் பொறிக்கப்பட்டுள்ள செய்திகள் பல இடங்களில் பரவலாகப் பதிக்கப்பட்டிருக்கக் கூடும். அவற்றை ஒன்று சேர்த்து, கால வரிசைப்படி, ஒரு இடத்தில் மீண்டும் பதிப்பித்து, திருக்கோயிலுக்கு வருகை தருவோர் ஒரே இடத்தில் வரலாறு முழுவதையும் படித்துணர வாய்ப்புகள் ஏற்படுத்தி தரலாமா என்பதை ஆலோசித்து முடிவெடுத்து, அதற்கு ஆவன செய்யலாம். தற்போது நிகழ உள்ள கும்பாபிஷேகம் குறித்த செய்தியினை எந்த வகையில் எழுதச் செய்து, எங்கே பதிப்பிப்பது என்று குழுவாகக்

கூடித் தீர்மானித்து, பலகைக் கல் செய்வித்து, அதனைக் கும்பாபிஷேகத்துக்கு 3, 4 நாட்களுக்கு முன்பாகவே பதிக்கச் செய்லாம்.

201.27. பஞ்ச வண்ணம் தீட்டி கோபுரங்களையும் விமானங்களையும் அழகேற்றுவதற்கு, வண்ணங்கள் வாங்குவதற்கு ஆகும் தொகையை விட மனிதப் ப்ரயத்தனம் அதிகமாகின்றது. இருந்தும், 3 அல்லது 5 ஆண்டுகளுக்குள் வண்ணங்கள் பொலிவிழந்து விடுகின்றன. மாற்றுக, பல வண்ணங்களில் கிடைக்கும் *சூப்பர்செம்* போன்ற பொருள்களில் ஒன்றைத் தெரிந்தெடுத்து, ஒரே வண்ணமாகப் பூசுவதனால், செலவும் குறைகின்றது; நேரமும் மிச்சமாகின்றது; கட்டிடத்திற்கு உறுதியும் கூடுகின்றது; அதனால் மிச்சமாகும் நிதியைக் கொண்டு வேறு பல திருப்பணிகளும் செய்திடலாம் - இவ்வாறு கூறுவது தமிழ்நாடு இந்து அறநிலையத் துறையின் சுற்றறிக்கைகளில் ஒன்று - இது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று!

201.28. ப்ராகாரச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் தீட்டி வைப்பது மர்பு. திருக்கோயிலோடு தொடர்பு உடைய பற்பல இறை மூர்த்தங்களின், ஆகம விதிப்படி (அல்லது த்யான ச்லோகங்களில் விவரித்துள்ளபடி) சரியான உருவங்களை நல்ல ஓவியக் கலைஞர்களைக் கொண்டு வரையச் செய்து, அவற்றின் கீழே அல்லது அருகே விளக்க உரைகளும் எழுதி வைக்கலாம். அவ்வாறே திருக்கோயில் வரலாறு அல்லது ஸ்தல புராணங்களை விளக்கும் சித்திரங்களும் வரைவிக்கலாம். இவற்றைத் தீட்டுவிக்க உதவும் நன்கொடையாளர்களின் பெயர்கள் ஆங்காங்கே எழுதப்பட வேண்டுமானால் அது விளம்பரமாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

201.29. இறைவனுல் ஆட்கொள்ளப்பட்ட (ஆதி சங்கரர், திருஞான சம்பந்தர் போன்ற) ஒரு பக்தரின் முக்திக்குப் பிறகுங்கூட அவரது கீர்த்தி ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பரவி நிலைத்து இருந்தால், அவருக்கு ப்ராகாரங்களில் சிலை நிறுவி வழிபடலாம் என்று ஓர் ஆகமத்தில் குறிப்புகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இதைக் கருத்தில் கொண்டு, திருப்பணிகள் செய்யும்போது, (அ) தகுதி பெற்ற பக்தர்களுக்கு மட்டும் ஸந்நிதிகள் அமைத்திடலும் (ஆ) மற்றவர்க்கு திருக்கோயில் ப்ராகாரத்தில் சிலைகள் அமைக்காமல் இருத்தலும் சிறந்தது.

201.30. ஸந்நிதிகளில் எழுந்தருளி இருக்கும் மூர்த்திகள், ராஜகோபுரத்தில் வடிக்கப்பட்டுள்ள சுதைகளாக இருக்கும் மூர்த்திகள் - ஆகியவற்றின் பெயர்களை, கும்பாபிஷேக நாளுக்கு முன்னதாகவே, தரிசனம் செய்ய வரும் சாதாரண பக்தர்களின் சௌகர்யம் கருதி, பெயின்ட்டினுல் நிரந்தரமாக எழுதி வைத்திடல் வேண்டும். இதற்கான பட்டியலைத் தயாரித்து, ஒன்றுக்கு மேற்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், எழுதப்பட உள்ள வாசகங்கள் பொருத்தமாகவும் பிழைகளற்றதாகவும் உள்ளனவா எனப் பரிசோதனை செய்து, அதன் பின்னரே அப்பட்டியல் ஓவியக் கலைஞர் கைகளில் சேர்ப்பித்திடப் படுதல் வேண்டும். முன்மாதிரி-3 (Model-3).

201.31. ப்ராகாரச் சுவர்களில், தரை மட்டத்திலிருந்து 4, 5 அடி உயரத்தில் சுமார் ஆறு அங்குல அளவிற்கு வண்ணத்தினுல் பட்டி கட்டி, அதில் வலம் வரும் பக்தர்களின் கவனத்தை ஈர்க்கும் அறிவிப்புகளை எழுதி வைக்கலாம். முன்மாதிரி-3 (Model-3).

ௐ ௐ ௐ ௐ ௐ

202. பாலஸ்தாபனம்

202.01. பாலஸ்தாபன கும்பாபிஷேகத்துக்கும் விரிவான நிகழ்ச்சி நிரல் அமைத்து, அழைப்பிதழ்களும், அறிவிப்புகளும் அச்சிட்டு வழங்கி, அன்பர்களை நிகழ்ச்சிகளில் பங்கு பற்ற வைப்பதே சிறந்தது. முன்மாதிரி-4 (Model-4).

202.02. பாலஸ்தாபன கும்பாபிஷேகத்துக்குத் தேவையான யாகசாலைகள், கலசங்கள், பூஜா த்ரவ்யங்கள், புஷ்பங்கள், உபகரணங்கள், நைவேத்யங்கள், பூஜை செய்வதற்குத் தேவையான சிவாச்சார்யார்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்து ஸர்வஸாதகருடன் கலந்தாலோசித்து முடிவு செய்து, பட்டியல் தீட்டி, - முன்மாதிரிகள் 5 முதல் 10 வரை (Models-5 to 10) - செயலாற்றுதல் நல்லது.

202.03. பாலஸ்தாபன நாளுக்கும் கும்பாபிஷேக நாளுக்கும் இடைப்பட்ட காலம் 10 நாட்களுக்கு மேல் இருந்தால், எந்தெந்த பிம்பங்களை (தெய்வங்களின் சிலைகளை) பாலஸ்தாபனம் செய்யவேண்டும், எந்தெந்த பிம்பங்களை பின்னர் கும்பாபிஷேக சமயத்தில், நேராகக் கும்பத்தில் கலாகர்ஷணம் செய்து உடனடியாக யாகசாலைக்கே எடுத்துச் சென்று விட முடியும் என்பதையும் உறுதி செய்துகொண்டு ஆவன செய்திடல் வேண்டும்.

202.04. பாலஸ்தாபனம் செய்து, கும்பாபிஷேக நாள் வரை வைத்திருந்து ஆராதிப்பதற்குக் கும்பங்கள் (அதாவது, நீர் நிரப்பப் பெற்ற கடம் அல்லது வர்த்தினி அல்லது கலசம்) மட்டும் போதுமா, அல்லது சித்ர படங்கள் தேவையா, அல்லது மரப்ரதிமைகள்

தேவையா என்பதை ஸர்வஸாதகரோடு கலந்தாலோசித்து, அவற்றை ஏற்பாடு செய்துகொள்ளல் வேண்டும்.

202.05. திருக்கோயிலுக்கு, நித்திய நைமித்திக வழிபாடுகளுக்கு வருகை தரும் பக்த ஜனங்கள், உபயதாரர்களாகக் கூட்டு வழிபாட்டில் பங்கு பற்றும் வகையில், *பாலஸ்தாபன கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்* ஒன்றிரண்டினை (உதாரணமாக, முதல் நாள் காலை கணபதி ஹோமத்திற்கும், இரண்டாம் நாள் காலை நடைபெறும் அவப்ருத யாகத்துக்கும்), ஸர்வஸாதகருடன் கலந்தாலோசித்து, முன்கூட்டியே அறிவித்து, அனைவருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய மனநிறைவு ஏற்படுத்தித் தரவேண்டும். விருப்பம் உள்ளவர்களிடமிருந்து ஒரு *சிறு* தொகை உபயமாகப் பெற்றுக் கொண்டு, அத்தகைய உபயதாரர்களுக்கு சங்கல்பம் செய்து வைத்து, அந்த நிகழ்ச்சியின் நிறைவில் அவர்களுக்குச் *சிறப்பாக* ப்ரசாதம் வழங்கலாம்.

202.06. *சில* விக்ரஹங்கள் பாலஸ்தாபனத்துக்குப் பிறகு அகற்றப்பட்டு, *சில* நாட்கள் சென்று, மீண்டும் அதே இடத்திலேயோ, அல்லது வேறு இடத்திலேயோ புனர் ப்ரதிஷ்டை ஆக வாய்ப்புகளுண்டு. இடைப்படும் நாட்களில் அச்சிலைகளில் காயம் படாமலும், அவற்றின் ஸாந்நித்யத்துக்கு ஊறு நேராமலும் அவை பாதுகாப்பாகக் கையாளப்பட்டு, பத்திரமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ

203. மஹா கும்பாபிஷேகம்

203.01. சிவாச்சார்யார்களுக்கு ஜாகை, உணவு வசதிகள் ஏற்பாடு செய்திட வேண்டும். எந்தெந்த நாட்களில், என்னென்ன உணவு வகை தயார் செய்து, எந்த நேரத்தில், எத்தனை பேருக்கு, எந்த இடத்தில் அளிக்கப்பட வேண்டும் என்பதற்கு முன் கூட்டியே ஸர்வஸாதகருடன் கலந்தாலோசித்துத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வித்திடல் வேண்டும். மடி ஆசாரத்துடன், சிவாச்சார்யார்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஜாகையிலேயே சமையல் ஏற்பாடுகள் செய்து வைப்பதே வழக்கம்.

203.02. சமையலறைகள், தங்குமிடங்கள், குளியலறைகள், கழிவறைகள் இவற்றைப் பொறுப்பான ஒருவர் முன்னதாகவே நன்கு பரிசோதித்து, அனைத்து இடங்களும் ப்ரகாசமாக (well-lit with bulbs etc., in place), காற்றோட்டமாக (well-ventilated with fans etc.,), சுத்தமானதாக (clean and hygenic) உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நிகழ்ச்சிகளின் இறுதி வரை அவற்றை அவ்வாறே காப்பாற்றி வந்திட ஒருவருக்குப் பொறுப்பும் (responsibility), அவருக்குப் பணியாட்களும் (helpers), உபகரணங்களும் (spares, consumables, accessories, tools and implements) ஏற்பாடு செய்திடல் அவசியம்.

203.03. சிவாச்சார்யார்களைச் சந்தித்து அழைத்து வரவும், திருப்பி அனுப்பி வைக்கவும் ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

203.04. கும்பாபிஷேக நாளன்றும் அதை முன் பின் அடுத்த ஓரிரு நாட்களிலும், கைவசம் ஓரிரண்டு கார்களோ அல்லது வான்களோ (passenger cars or vans) தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம். வாடகைக்காவது அவற்றைப் பெற்று வைத்திருத்தல் எதிர்பாராது எழும் அத்தியாவசியங்களைப் பூர்த்தி செய்யும்.

203.05. *ஸுவாஸினி:* வயது முதிர்ந்த, மாதத் தொல்லை நீங்கிய, தெய்வபக்தி மிகுந்த, ஒரு அன்னையை முன்கூட்டியே தெரிந்தெடுத்து, நியம நிஷ்டையோடு அவரை இருக்குமாறு வேண்டிக்கொண்டு, நயனோன்மீலனம் க்ரியையின்போது தரிசனத்திற்காக அவரை வரித்து வருதல் சிறந்தது.

203.06. *கன்யா:* எட்டு வயதிற்கு உட்பட்ட, தெய்வபக்தி மிகுந்த, ஒரு சிறுமியை முன்கூட்டியே தெரிந்தெடுத்து, நியம நிஷ்டையோடு அவளை இருக்கச் செய்து, நயனோன்மீலன க்ரியை தரிசனத்திற்காக அழைத்து வருதல் சிறந்தது.

203.07. *கட ஊர்வலம்:* யாகசாலைகளிலே கடங்கள் (பெரிய குடங்கள்), வர்த்தினிகள் (சிறிய குடங்கள்), கலசங்கள் (சிறு சொம்புகள்) என்று பல அளவிலான கும்பங்கள் நிறைய வைத்து வழிபடப் பெறுகின்றன. கலசங்களில் பல, அபிஷேகத்திற்காக எடுத்துச் செல்லப்படுவதில்லை. நிகழ்ச்சிகளின் நிறைவாக, சண்ட ஹோமமும் ஆச்சார்ய ரக்ஷா விஸர்ஜனமும் ஆனபிறகு, அவ்வாறு யாகசாலையில் தங்கி நிற்கும் கலசங்களைக் கொணர்ந்து, அவற்றுள் இருக்கும் புனித நீரை, கும்பாபிஷேகமான பிறகு திரும்பி வரும் கும்பங்களில் எஞ்சி வரும் நீரோடு கலந்து, அதை ப்ரசாதமாக விநியோகிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இத்தகைய

கலசங்களைத் தவிர, மீதமுள்ள கலசங்களும், வர்த்தினிகளும், கடங்களும் அபிஷேகம் செய்வதற்குரிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியவை. அவை அனைத்தையுமே ஊர்வலமாக எடுத்துச் செல்வது என்பது இயலாத காரியம். ஸ்வாமி கடம், அம்பாள கடம், ராஜகோபுர கடம், ஸ்வாமி விமான கடம் போன்ற சில குறிப்பிட்ட கடங்களையும், இயன்றால் சில வர்த்தினிகளையும் கலசங்களையும் கூட, ஸர்வஸாதகரோடு கலந்து பேசி, ஊர்வலமாக எடுத்துச் செல்ல முடிவெடுக்க வேண்டும். ஊர்வலமாகச் செல்ல வேண்டாத ஆனால் அபிஷேகம் செய்வதற்கான, மற்ற கடங்களையும், வர்த்தினிகளையும், கலசங்களையும், யாகசாலையில் மஹாபூர்ணாஹுதி ஆனவுடன், கட ஊர்வலம் புறப்படுவதற்கு முன்னாலேயே, சிவ தீக்ஷை செய்துகொண்டுள்ளவர்களது கரங்களால் எடுத்துச் செல்ல வைத்து, அததற்கு உரிய இடங்களில் அவற்றைச் சேர்ப்பித்து விடச் செய்ய வேண்டும். அவை சென்று சேரும் இடங்களில், அவ்விடத்திற்கு உரிய சிவாச்சார்யார்கள் அந்த நேரம் முதல் அபிஷேகம் முடியும் வரை பொறுப்பேற்று இருக்கச் செய்திடல் வேண்டும். அதன் பின்னரே, எஞ்சியுள்ள முக்கிய கடங்களும் வர்த்தினிகளும் கலசங்களும் ஊர்வலமாகப் புறப்பட வேண்டும். எந்தெந்த கடங்கள் வர்த்தினிகள் கலசங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதற்கு விரிவான திட்டங்கள் தீட்டப்பட்டு அனைவருக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டு, அதன்படி செயலாக்குதல் நன்மை பயக்கும். முன்மாதிரி-11 (Model-11).

203.08. பற்பல காரணங்களைக் கருதி, மஹா கும்பாபிஷேக நாளன்று பொதுமக்களை தரிசனத்துக்கு

உள்ளே விடுவதற்குக் காலதாமதம் ஆகக் கூடும். உதாரணமாக:-

203.08.01. திருக்கோயில் வளாகம் சிறியதாக இருக்கலாம். அதிக அளவிலே மக்கள் வெள்ளம் உள்ளே அலைமோதினுல், கும்பங்கள் உலாவாகச் சென்று அவற்றுக்கு உரிய இடங்களை அடைவதற்குக் கால தாமதம் ஆகலாம், இடையூறுகள் ஏற்படலாம்; ஒவ்வா நிகழ்ச்சிகளும் உண்டாகலாம். எனவே கடோத்வாஹன காலத்தில் உள்ளே அன்பர்கள் இருப்பதைத் தவிர்ப்பது நல்லது என்று கருதப்படுவதுண்டு.

203.08.02. திருக்கோயிலுக்கு வரும் அனைவரையும் சமமாகக் கருதாமல், விசேஷ அனுமதிச் சீட்டுகள் விற்பதன் மூலமும் அல்லது சிறப்பு அடையாளச் சீட்டுகள் வழங்கியும் சிலரை மட்டும் கோயிலுக்கு உள்ளே (தொண்டுக்காக அன்றி) கும்பாபிஷேக தரிசனத்துக்காக இருக்கச் செய்து ஏளனப்படுத்தப்பட்ட நிர்வாகிகளும் உண்டு. அவ்வாறு பாகுபாடு காட்டாமல் அனைவரையும் வெளியே காத்திருக்க வைத்து, பின்னர் க்யூ வரிசையில் அனுமதித்து, *இறைவன்முன் அனைவரும் சமம் என்று காட்டும் உங்களோடு ஒத்துழைக்கிறேன்* என்று ப்ரபலஸ்தர்கள் க்யூவில் நின்று தரிசனத்துக்கு வந்து, அதன் பயனுக நற்பெயர் பெற்ற நிர்வாக ஒருங்கிணைப்பாளர்களும் உண்டு. வெளியே நிற்கும் பலரின் சாபத்திற்குத் தாம் இரையாக விரும்பாமல், பயபக்தியுடன் அனைவரையும் பின்னர் உள்ளே வருமாறு வணங்கி வேண்டிக்கொண்டு, அவர்கள் ஒத்துழைப்புடன் அமைதி காக்கும் நிர்வாகிகளால் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுவதும் உண்டு.

203.08.03. மஹா கும்பாபிஷேகத்துக்கு முதல் நாள் இரவு, அனைத்துக் கருவறை மூர்த்திகளுக்கும் தைலக்காப்பு சாத்தப்படும். அதன் பிறகு நாடீசந்தானம் செய்யப்படும். அந்த நேரம் முதல், மறுநாள் காலை கும்பாபிஷேகம் ஆகும் வரை, அந்த மூர்த்தங்களுக்கு வஸ்த்ரங்கள் சாத்தும் வழக்கம் இல்லை. எனவே தரிசனமும் இல்லை. அபிஷேகக் காலங்களில் வஸ்த்ரம் சாத்தித்தான் அபிஷேகம் செய்யப்பட வேண்டும் என்பது ஆகம விதி. ஆனால் நாடீசந்தானத்துக்குப் பிறகு செய்யப்படும் கும்பாபிஷேகம் மட்டும் இதற்கு விலக்கு. (அப்படி என்றால், அந்த (கும்ப நீர்) அபிஷேகத்தை நாம் தரிசனம் செய்வது முறையல்ல என்பதாக கருதவும் வகை உண்டு).*

203.08.04.(அ) தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகளில் கடைப்பிடிக்கப்படும் ஒரு பத்ததியில் (இதற்குரிய ப்ரமாணம் கிடைக்கவில்லை), கும்பாபிஷேகத்துக்குச் சற்று முன்னதாக, லக்ஷ்மீ பூஜை என்ற பெயரில் அம்பாளுக்கு ஒரு சுமங்கலியைக் கொண்டு பூஜை செய்வித்துப், பிறகு அம்பாளுக்கு வஸ்த்ரம் சாத்தி, அந்த வஸ்த்ரத்துடன்தான் கும்பாபிஷேகம் செய்வதாகவும், எனவே அந்த அபிஷேகத்தைப் பொதுமக்கள் காணலாம் என்றும், அவ்வாறு செய்யாவிடில் மற்றவர்கள் கர்ப்பக்ரஹ கும்பாபிஷேகத்தைக் காணமுடியாது என்ற பதில்

---

* இந்தப் புத்தகத்தின் இரண்டாவது பதிப்பிலுள்ள இந்தப் பகுதி குறித்து வந்த கருத்துக்கள்: கும்பாபிஷேகத்தின்போது வஸ்த்ரம் சாத்திச் செய்யலாம் என்றும் ஒரு கருத்து. சிலைகளின் அமைப்பிலேயே உடைகளும் ஆபரணங்களும் வடிக்கப்படுவதால், வஸ்த்ரம் சாத்தாமல் கும்பாபிஷேகம் செய்வதைக் காண்பது தவறில்லை என்றொரு அபிப்ராயம்! இந்த வாத-ப்ரதிவாதங்கள் மூலலிங்க பிம்பத்துக்குத் தேவையில்லை என்று மற்றொரு கருத்து).

அவரது ஒரு கேள்விக்குக் கிடைத்ததாகவும் பல கும்பாபிஷேகங்களை முன் நின்று நடத்தி வைக்கும் பேறு பெற்றவரும் காஞ்சி ஸ்ரீமடத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவருமான ஓர் அன்பர் நினைவு கூறுகின்றார். * (ஆ) காஞ்சி காமாக்ஷியம்மன் கோயிலில் கடந்த (இருபதாம்) நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த கும்பாபிஷேகத்தின் போது அம்பாளுக்கு ஆகும் கும்பாபிஷேகத்தைக் காண எவருமே அனுமதிக்கப்படவில்லை என்பதையும் அக்கும்பாபிஷேக நாளில் அருகிலிருந்த அதே பெருந்தகையாளர் நினைத்துப் பார்த்துப் பகர்கின்றார். (இ) வைணவத் திருக்கோயில்களில் முஹூர்த்தத்தின்போது மஹாசம்ப்ரோக்ஷணம்தான் நிகழ்த்துவிக்கப்பெறுகின்றது. முஹூர்த்த நாளுக்கு முன்னதாகவே, ஸ்வாமிக்கு தைலாப்யங்கனமும், தொடர்ந்து திருமஞ்சனமும் ஏகாந்தமாகத்தான் (பக்தர்களுக்குத் தரிசனம் இல்லாமல்) செய்விக்கப்படுகின்றது. தைலாபிஷேகத் திருநீராட்டுக்குப்பின், வஸ்த்ரம் சாத்தி, பக்தர்கள் முன்னிலையில் விசேஷமாகத் திருமஞ்சனம் நிகழ்கின்றது. அவ்வாறு முன்னதாகவே விசேஷ திருமஞ்சனம் நிகழாத சில (சிறு) கோயில்களில் மட்டுமே முஹூர்த்த நாளன்று தைலாப்யங்கனமும், திருமஞ்சனமும் திரைக்குப்பின் செய்யப்பட்டு, பின்னர் வஸ்த்ரம் சாத்தி, ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பெறுகின்றது. - இவற்றையெல்லாம் ஆராயும்போது, சைவத்

---

* இந்தப் புத்தகத்தின் இரண்டாவது பதிப்பிலுள்ள இந்தப் பகுதி குறித்து வந்த ஒரு கருத்து: காளஹஸ்தியில் மட்டும், சிவதீக்ஷையான ஆசார்ய-பத்நிக்கு மூலஸ்தான ப்ரவேசம் இருப்பதாகத் தெரிகின்றது. மற்ற இடங்களில் ஸுவாஸிநிகள் மூலஸ்தானத்துக்குள் செல்வது உசிதமா என்பது ஆராயப்பட வேண்டிய விஷயம். அப்படி நடந்துகொண்டிருந்தால், அது லௌகீக ஸௌகர்யப்படி அமைந்ததாகவும் இருக்கலாம்.

திருக்கோயில் கும்பாபிஷேக நாளன்று, ஸ்தூபி கும்பாபிஷேக தரிசனமும், கர்ப்பக்ரஹங்களில் நடைபெறும் மஹாபிஷேகமுமே பொதுமக்கள் தரிசனத்துக்கு முக்கியமானவையாகின்றன. எனவே, அன்பர்களுக்கு, கோபுர மற்றும் விமான கலசங்களுக்கு ஆகும் கும்பாபிஷேக தரிசனமும், கருவறை மூர்த்திகளுக்குக் கும்பாபிஷேகம் ஆன பிறகு அந்தத் தெய்வங்களின் தரிசனமும், தொடர்ந்து அத்தெய்வங்களுக்கு நடைபெறும் மஹாபிஷேக தரிசனமும் கிடைக்குமாறு ஏற்பாடுகள் செய்வதே பொருத்தமாகும் என்று எண்ணவும் வகை உண்டு.

மேற்கூறிய காரணங்கள் ஏதாவதொன்றினால், மஹா கும்பாபிஷேக நாளன்று, பொதுமக்களை வெளியே காத்திருக்க வைத்துவிட்டு *, கோபுர மற்றும் விமான கலசங்களுக்கு ஆகும் கும்பாபிஷேகத்துக்குப் பிறகு, சற்று நேரம் கழித்து அவர்களைத் தரிசனத்துக்கு உள்ளே விடுவதாக ஏற்பாடுகள் செய்ய நேரிட்டால், பல நாட்கள் முன் கூட்டியே அதற்கான திட்டங்கள் தீட்டி, அறிவிப்புகள் அச்சிட்டு அனைவருக்கும் வழங்கி,

---

* இந்தப் புத்தகத்தின் இரண்டாவது பதிப்பிலுள்ள இந்தப் பகுதி குறித்து உரையாடிய ஒரு பெரியவர், *ஆகம வாக்யங்கள் குறிப்பாக அவ்வாறு கூறாத நிலையில், மூலஸ்தான கும்பாபிஷேகத்தைக் காணக் கூடாது என்று சொன்னால் பொதுமக்கள் ஒப்புக்கொள்வார்களா* என்றொரு அச்சத்தை எழுப்பியுள்ளார். நியாயமானதே! அங்கங்கே உள்ள மரபு, இடவசதி, மனோபாவம், நம்பிக்கை இவற்றை அனுசரித்து மக்களுக்கு இறைவர்மீது பக்தியும், ச்ரத்தையும் (நம்பிக்கையும்) குறையாத அளவிலே, ஆகமங்களிலே செய்யக்கூடாது என்று சொன்னவற்றை விலக்குவது ஒன்றில் மட்டும் குறிப்பாக கவனம் செலுத்தி, மற்ற விஷயங்களில் விட்டுக் கொடுத்து (compromise - செய்துகொண்டு) ஆலய நிர்வாகத்தை நடத்திக் கொண்டு செல்ல வேண்டி உள்ள இக் காலகட்டத்தில் இந்த விஷயம் குறித்த முடிவுகளை எல்லா இடங்களுக்கும் ஏற்புடையதாகக் கொள்ள இயலாதென்றே தோன்றுகிறது!

விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அவசியம். முன்மாதிரி-12 (Model-12). அது மட்டுமல்லாது, கோபுர கும்பாபிஷேகத்துக்கும், கருவறை கும்பாபிஷேகத்துக்கும் இடைப்பட்ட நேரத்தை மிகக் குறுகிய அளவினதாகப் பார்த்துக் கொள்ளுதல் சாலச் சிறந்தது. உதாரணமாக, காலை 07.30 -க்கு மேல் 08.00 மணிக்குள் கோபுர கும்பாபிஷேக முஹூர்த்தமும், 08.00 -க்கு மேல் 08.30 மணிக்குள் கர்ப்பக்ரஹ கும்பாபிஷேக முஹூர்த்தமும் அமைந்திருந்தால் ... 07.55 மணிக்கு கோபுர கும்பாபிஷேகங்களைச் செய்வித்து, 08.10 மணிக்கு அனைத்துக் கருவறைகளிலும் ஒருசேரக் கும்பாபிஷேகங்கள் செய்வித்து, 08.20 மணி அளவில் பொதுமக்களுக்குத் தரிசனம் செய்ய . அனுமதி அளித்துவிட்டால் குறை கூறுவோர் குறைவாகவே இருப்பர். 07.35 மணிக்கு கோபுர கும்பாபிஷேகத்தை முடித்துவிட்டுப் பிறகு 08.00 மணிக்கு மேல் கர்ப்பக்ரஹ கும்பாபிஷேகம் செய்யத் தொடங்கினால், 07.35 முதல் 8.20 மணி வரை அனைவரையும் ராஜகோபுரத்திற்கு வெளியே காத்திருக்கச் செய்யவேண்டி வரும்; அதனால், பொறுமை இழந்த அந்தப் புனிதர்களில் பலர், பயனிலாச் சொற்கள் கூற வகையாகும். அவர்களை அவ்வாறு பேச வேண்டிய நிலைக்குத் தள்ளிய பாவம் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள தொண்டர்களைச் சார்ந்துவிடும்!

203.09. மேற்கூறியவாறு ஏற்பாடுகள் செய்வதானால், கும்பாபிஷேகம் ஆனவுடன் சாத்த வேண்டிய புது வஸ்த்ரங்கள் மற்றும் மாலைகள், செய்ய வேண்டிய நைவேத்யங்கள் ஆகியவற்றை அனைத்து ஸந்நிதிகளுக்கும் தனித்தனியாக முன்னரேயே அனுப்பி வைத்துவிட்டால், கும்பாபிஷேகம் செய்யும் சிவாச்சார்யார்கள், புது வஸ்த்ரங்கள் சாத்தி, மாலை

அணிவித்து அலங்கரித்து, தூப தீப நைவேத்யாதி உபசாரங்கள் செய்வித்து, பொதுமக்களின் தரிசனத்துக்குத் தயாராக்கலாம். தொடர்ந்து மஹாபிஷேகத்தையும், விரைவாக அனைத்து ஸந்நிதிகளிலும் ஒரே சமயத்தில் செய்விப்பதே சிறந்தது.

203.10. மேற்கூறியவாறு, கும்பாபிஷேகத்துக்குப் பிறகு செய்யவேண்டிய நைவேத்யங்களை அனுப்பியதைத் தொடர்ந்து, மஹாபிஷேகத்துக்குத் தேவையான தைலம், பஞ்சாமிர்தம், பால் ஆகியவற்றையும், ஒவ்வொரு பிம்பத்திற்குமான புது வஸ்த்ரங்கள், அலங்கார மாலைகள், புஷ்பம் ஆகியவற்றையும், மஹாபிஷேகத்திற்குப் பிறகு செய்ய வேண்டிய நைவேத்யத்தையும் அந்தந்த ஸந்நிதிக்கு அனுப்பி வைத்து விட்டால், கும்பாபிஷேகக் கிரியைகள் முடிந்த உடன், சிறிது கூட தாமதம் இன்றி மஹாபிஷேகம் செய்து, புத்தாடை சாத்தி, அலங்கரித்து, தூப தீப நைவேத்யாதி உபசாரங்கள் செய்வித்து, எல்லா ஸந்நிதிகளையும் கண்டு செல்லும் அன்பர்கள் மனம் களிக்குமாறு செய்யலாம்.

203.11. மேற்கூறிய செயல் முறையை ஒரு விரிவான நிகழ்ச்சி நிரலாகத் தயாரித்துத் தொண்டர்களுக்கும் சிவாச்சார்யார்களுக்கும் அச்சிட்டு வழங்கி முறைப்படுத்தலாம். முன்மாதிரி-13 (Model-13).

203.12. ராஜகோபுர மற்றும் ஸ்தூபி கும்பாபிஷேகம் ஆகும்போது கும்ப நீர் தன் சிரஸ்ஸின்மீது படவேண்டும் என்பதற்காக நெருக்கி அடித்துக் கொண்டு நிற்போர் பலரைக் காண இயலும். அவர்களைத் திருப்தி செய்வதற்காக, மேலே இருந்து சிவாசார்யார்கள் கும்ப நீரை எடுத்துத் தெளிப்பர். கலசத்தில் பட்டு இழிந்து கீழே வரும் புனித நீர் (கோமுகி நீர் போல) மக்களைச்

சென்றடைவது வேறு விஷயம். ஆனால் நீரை எடுத்துத் தெளிப்பது...? தேவதைகளை யதாஸ்தானம் (விஸர்ஜனம்) செய்யாமல்தான் ஆலயங்களிலே அபிஷேகம் செய்வது மரபு. அவ்வாறெனில், தேவதைகள் ஆவாஹனம் ஆகி உள்ள நீர், மூர்த்தங்களுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு நிர்மால்யம் ஆகாமல், ப்ரோக்ஷணம் செய்யப்படுவது முறைதானா என்றொரு கேள்வி எழுகிறது. பல ஆலயங்களில் கலச நீரை ப்ரோக்ஷணம் செய்வதில்லை. ப்ரசாதமாக உட்கொள்ளும் *தீர்த்தமாகத்தான்* அதை வழங்கி வருகிறார்கள். இந்த அடிப்படையில் ஆராய்ந்தால், தற்காலத்தில் மிகவும் ப்ரபலம் ஆகி வரும் "விசைத் தெளிப்பான் (Sprinklers)" மூலமாக கும்பாபிஷேகக் கலச நீரைத் தெளிப்பதுகூட முறைதானா என்பது சர்ச்சைக்கு இடமாகிறது. ஆகம ஞானம் மிக்க சிவாசார்யப் பெருமக்கள்தான் இதை ஆராய வேண்டும். எனவே, கோபுர கும்பாபிஷேகம் ஆன உடன், உள்ளே தரிசனத்திற்காக (அல்லது தரிசனத்துக்குப் பின்) வரிசையில் வரும் அன்பர்களுக்கு கும்பாபிஷேகக் கலச தீர்த்தம் (உட்கொள்ளுவதற்கு) ப்ரசாதமாக அளிக்கப்பட ஏற்பாடு செய்வது அனைவருக்கும் மனநிறைவைத் தருவதைக் கண்கூடாகக் காண முடிகின்றது. இந்த ஏற்பாடுகளைச் செய்து, முன் கூட்டியே ஒலிபெருக்கியில் அறிவித்து வந்தால், மக்கள் நெருக்கி அடித்து முந்தாமல், நிம்மதியாகக் க்யூ வரிசையில் வந்து அமைதி காத்திட உதவுவர்.

203.13. யாகசாலைகளிலும், திருக்கோயில் வளாகத்திலும், விழாக்காலத்தில் அதிக அளவில் தேவைப்படும் மின் விளக்குகளுக்கு ஏற்பாடு செய்தல் மிக மிக அவசியம். அவ்வாறே மின் தோரண விளக்குகள், மின் விளக்குப் பிம்பங்கள் முதலியன அமைப்பதாக முடிவெடுத்தால் அவற்றிற்கான ஏற்பாடுகள் செய்திடல் அவசியம். இந்த

ஏற்பாடுகள் தரிசனம் செய்ய வருபவர்க்கும், திருத்தொண்டு ஆற்றுபவர்க்கும் ஊறு விளைவிக்காத வகையிலும், மின் உபயோகத்திற்கான பாதுகாப்பு விதிகளை அனுசரித்தும் அமைதல் மிக மிக முக்கியம். திருக்கோயில் வளாகத்திற்கு கிடைத்துள்ள மின் இணைப்பின் திறம், இவ்வாறு அதிக அளவில் மின் உபயோகம் செய்வதற்குப் போதுமானதாக இராது என்று தோன்றினால், மின் விநியோகத் துறையினரைக் கலந்தாலோசித்து ஆவன செய்வது இன்றியமையாதது. கும்பாபிஷேகத்திற்குத் திட்டங்கள் தீட்டுவோர், தரிசனம் செய்ய வரும் அப்பாவி மக்களின் உயிரைப் பணயம் வைத்து அலக்ஷியமாகச் செயல்படுவது அழகல்ல!

203.14. பெட்ரோமாக்ஸ் லைட், எமர்ஜென்ஸி லைட் போன்றவை ஒன்றிரண்டு முக்கிய இடங்களிலும், மாற்று ஜெனரேட்டர் ஏற்பாடுகள் பொதுவாகவும், அவற்றை இயக்குவதற்கு எந்நேரமும் தயார் நிலையில் இருக்கும் அலுவலர்களும் ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

203.15. ஒவ்வொரு யாகசாலை அல்லது ஸ்தண்டிலத்திற்கும் அதன் பெயரை ஒரு பலகை அல்லது அட்டையில் எழுதச் செய்து, கண் பார்வையில் கட்டி வைத்தால், தரிசனம் செய்ய வரும் அன்பர்களுக்கு உதவியாக இருக்கும்.

203.16. திருக்கோயிலுக்கு, நித்திய நைமித்திக வழிபாடுகளுக்கு வருகை தரும் பக்த ஜனங்கள், உபயதாரர்களாகக் கூட்டு வழிபாட்டில் பங்கு பற்றும் வகையில், *மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்* ஒன்றிரண்டினை (உதாரணமாக, விழா நிகழ்ச்சிகளின் ஆரம்பமாக ஏற்பாடாகும் கணபதி ஹோமத்திற்கும், கும்பாபிஷேகத்துக்கு முதல் நாள் மாலை நடைபெறும் (மூன்றுங்கால) பூஜையின்போது செய்யப்பெறும்

விசேஷ த்ரவ்ய ஹோமத்துக்கும்), ஸர்வஸாதகருடன் கலந்தாலோசித்து, முன்கூட்டியே அறிவித்து, அனைவருக்கும் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய மனநிறைவு ஏற்படுத்தித் தரவேண்டும். விருப்பம் உள்ளவர்களிடமிருந்து ஒரு சிறு தொகை உபயமாகப் பெற்றுக் கொண்டு, அத்தகைய உபயதாரர்களுக்கு சங்கல்பம் செய்து வைத்து, அந்த நிகழ்ச்சியின் நிறைவில் அவர்களுக்குச் சிறப்பாக ப்ரசாதம் வழங்கலாம்.

203.17. ஒவ்வொரு யாகசாலைக்கும், ஸ்தண்டிலத்திற்கும் தனித்தனியே உபயதாரர்கள் பதிவு செய்யலாம். அவர்களுக்கு சங்கல்பம் செய்து வைத்து, நிகழ்ச்சியின் நிறைவில் சிறப்பாக ப்ரசாதம் வழங்கலாம்.

203.18. ஒவ்வொரு கடத்துக்கும், வர்த்தினிக்கும், கலசத்துக்கும் தனித்தனியே உபயதாரர்கள் பதிவு செய்யலாம். அவர்களுக்கு சங்கல்பம் செய்து வைத்து, நிகழ்ச்சியின் நிறைவில் சிறப்பாக ப்ரசாதம் வழங்கலாம். அவ்வாறுக ப்ரசாதங்கள் அனைத்துக் காலங்களிலும் பைகளில் வழங்குவதானுல், அந்தப் பைகளை ஒவ்வொரு காலத்திற்கெனத் தனியாக நிறம் உடையதாகத் தயாரித்தால் விநியோகம் செய்பவர்க்கு வசதியாக இருக்கின்றது.

203.19. உபயதாரர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் கோயில் மரியாதையாக சேஷ வஸ்த்ரம் கொடுக்கலாம், அல்லது பரிவட்டம் கட்டி அல்லது நூதன வஸ்த்ரம் போத்தி (*பொன்னுடை போத்துதல்*) கௌரவிக்கலாம். அதற்கான ஏற்பாடுகளைத் முன்கூட்டியே தீர்மானித்துத் திட்டமிட்டுச் செயலாற்ற வெண்டும். திருக்கோயில் அல்லது கும்பாபிஷேகம் குறித்த செய்திதனை அந்த வஸ்த்ரங்களில் அச்சிடுவதானுல், அதனை ஒரு ஓரமாக

(துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டால் மற்றவர்கள் படிக்கக் கூடிய மாதிரி கீழ்ப்பக்கம் வரும் வகையில்) அச்சிடுவதே சிறந்தது; துணி முழுவதும் அச்சிட்டு விட்டால், அதை உடுத்திக் கொண்டிருக்கும்போது கீழே உட்கார வேண்டி நேர்ந்தால், இறைவன் பெயர் மீது அமர்வது போல இருக்கிறதே என்று மனது சங்கடப்படுபவர்கள் உண்டு.

203.20. திருவாசி, ப்ரபை, தூபக்கால் தீபக்கால் அடுக்குத் தீப ஆராதனைத் தட்டுகள், பஞ்ச தீபி ஆராதனைக் கும்பமும் தட்டுக்களும், தர்ப்பணம் த்வஜம் சுருட்டி போன்ற உபசாரப் பொருட்கள், ஸஹஸ்ரதாரா, தாம்பாளங்கள், செம்புகள், குடங்கள், மணிகள், பஞ்ச பாத்ர-உத்தரிணிகள் போன்ற பூஜா உபகரணங்கள் முதலானவை பித்தளையாலானவை. கும்பாபிஷேக நாளுக்கு முன்னதாக அவை அனைத்தையும் சுத்தம் செய்வித்துப் பொலிவுள்ளதாக்கிக் கொள்ள ஏற்பாடுகள் செய்திட வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ

204. அழைப்பிதழ், அறிவிப்புகள், விழா மலர்

204.01. பாலஸ்தாபனத்துக்குப் பிறகு, மஹாகும்பாபிஷேகம் வரை, திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகள், திருக்கோயிலில் பூஜைகள் இல்லையோ என்று சந்தேகிக்கக்கூடும். கோயிலின் நுழைவாயில்களிலும், மற்ற ப்ரதான இடங்களிலும், மிகப் பெரிய துணிகளில் எழுதப்பட்ட செய்திகளைக் (Banners) கொண்டு மூர்த்திகள் பாலஸ்தாபனம் ஆகியுள்ளமையையும், திருவாலயம் உள்ள

4

இடத்தையும், பூஜைகள் வழமை போல நடந்து வருவதையும் அறிவித்திடல் வேண்டும்.

204.02. பாலஸ்தாபன கும்பாபிஷேகம், மஹா கும்பாபிஷேகம் ஆகியவற்றிற்கு சம்பிரதாயமான முறையில் பத்திரிக்கைகள் (அழைப்பிதழ்கள்) அச்சிட்டு வழங்குதல் வேண்டும். அத்தகைய பத்திரிக்கைகளின் ஆரம்பத்தில் பஞ்ச மூர்த்திகளின் வடிவம் பொறிக்கப்படுதல் மரபு.

204.03. பத்திரிக்கைகளின் முன்னேடி (proof), நிர்வாகக் கமிட்டியினரின் அங்கீகாரம் பெறுவது மட்டுமல்லாது, ஸர்வஸாதகரின் பார்வைக்குச் சென்று வருவதும் அவசியம். மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ் ஒன்றின் மாதிரி வடிவம் முன்மாதிரி-14 (Model-14) -இல் அச்சிடப்பட்டுள்ளது.

204.04. பத்திரிக்கைகள் (அழைப்பிதழ்கள்), விரிவான நிகழ்ச்சி நிரல்களையும், அன்பர்களுக்குத் தேவையான செய்திகளையும் தாங்கியவையாக இருத்தல் நல்லது.

204.05. கும்பாபிஷேகப் பத்திரிக்கை தயாராகி வந்த பிறகு, ஒரு நல்ல முஹூர்த்தத்தில், புண்யாஹம் முதலாய கிரியைகளைச் செய்து, ஸ்வாமிக்கு முதல் பத்திரிக்கையை சமர்ப்பித்து, பிறகு அவையோருக்கு அதைப் படித்துக் காட்டி அறிவித்து, பின்னர் காஞ்சி மடம் போன்ற மரபுக் குருமார்களுக்கு பத்திரிக்கைகள் கொடுத்து விட்டு, அதன் பின்னரே மற்றவர்க்கு பத்திரிக்கைகள் அனுப்புவது ஒரு சம்ப்ரதாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. எனவே, பத்திரிக்கைகள் பல நாட்கள் முன்னதாகவே தயாராகுதல் அவசியம்.

204.06. கும்பாபிஷேகப் பத்திரிக்கை நல்ல தாளில் பல வண்ணங்களில் அச்சிடப்படுவது வழக்கம். எனவே அவை அதிகமாகத் தொகை செலவிட்டுத் தயாரிக்கப்பட வேண்டி வரும். அவற்றை அனைவருக்கும் தாராளமாக விநியோகம் செய்வதென்பது இயலாத செயல். அது மட்டுமின்றி, பத்திரிக்கைகள் குறிப்பிட்ட நாளுக்குப் பிறகுதான் விநியோகம் செய்யப்படும் (இதற்கு முந்தைய பிரிவைக் காண்க). அதற்கு முன்பே மக்களுக்கு நிகழ்ச்சி அறிவிக்கப்பட வேண்டுமெனில் என் செய்வது? நிகழ்ச்சி நிரல் விவரங்களோடு சேர்த்து உள்ள கும்பாபிஷேகப் பத்திரிக்கையின் வாசகத்தை, *அழைப்பிதழ்* என்பதற்கு பதிலாக *அறிவிப்பு* என்று மாற்றிப் பெயரிட்டு, சாதாரணத் தாளில், நிறையப் பிரதிகள் அச்சிட்டு, அனைவருக்கும் தாராளமாகப் பல நாட்கள் முன்பிருந்தே வழங்கத் தொடங்கிடலாம்!

204.07. கும்பாபிஷேகத்தை அறிவிக்கும் மிகப் பெரிய துணிகளில் எழுதப்பட்ட செய்திகளை (Banners), பல நாட்களுக்கு முன்னதாகவே தயார் செய்து, ஊரின் பல இடங்களில், முக்கியமாக மற்ற திருக்கோயில் வளாகங்களில் அல்லது வளாகங்களுக்கு அருகே, கட்டச் செய்திடல் சிறந்தது.

204.08. கும்பாபிஷேகத்தை அறிவிக்கும் சுவரொட்டிகள் (Wall Posters) தயார் செய்து ஒட்டுவிக்கலாம். இவற்றைப் பல நாட்களுக்கு முன்னதாகவே தயார் செய்து வைத்து விடுவதே நிம்மதி. ஆனால், கும்பாபிஷேகத்துக்கு 3, 4 நாட்களுக்கு முன்தான் அவற்றை ஒட்டுவிக்க வேண்டும். இல்லையென்றால், அவை மற்ற சுவரொட்டிகளால் மறைக்கப்படவும், காற்று மழையினாலும், மாடுகளாலும், மனிதர்களாலும் கிழிந்து படவும் வாய்ப்புண்டு. அத்தகைய சுவரொட்டிகள் எங்கெல்லாம் ஒட்டப்பட

வேண்டும் என்று முன் கூட்டியே திட்டமிட்டுப் பட்டியல் தயாரித்து, அவற்றை ஒட்டும் பொறுப்பினை ஏற்றுள்ள தொண்டர்களிடம் கொடுக்க வேண்டும். முன்மாதிரி-15 (Model-15).

204.09. கும்பாபிஷேகப் பத்திரிக்கையும், விழா மலர் பிரதிகளும் நன்கொடையாளர்களுக்கும், பொருள்கள் உவந்து அளித்த பெருந்தகையாளர்களுக்கும், உபயதாரர்களுக்கும், விழா மலர் விளம்பரதாரர்களுக்கும் தவறுமல் அனுப்பப்படுதல் வேண்டும். எனவே நன்கொடைகளும், பொருளும், உபயத் தொகையும், விளம்பரங்களும் பெறும்போது, தருபவரின் முழு விவரங்களும், முகவரியும் கட்டாயமாகப் பதிவு செய்து வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அஃதன்றியும், திருக்கோயிலோடு நெருங்கிய தொடர்பு உடைய தொண்டர் ஒருவரின் மூலமாக அந்த நன்கொடைகள் முதலானவை பெறப்பட்டிருந்தால், அவர்களது விவரங்களோடு பெற்றுத் தரும் அத்தொண்டர் குறித்த விவரங்களும் எழுதி வைத்துக் கொள்ளப்பட வேண்டும். பத்திரிக்கை அனுப்புவதற்கும், பின்னர் ப்ரசாதம் அனுப்புவது அல்லது மரியாதை செய்வது போன்றவற்றிற்கும் இத்தகைய குறிப்புகள் அத்தியாவசியம்.

204.10. சென்ற நாட்களில், இத்திருக்கோயிலுக்கென பல்வகையில் தொண்டு புரிந்தவர்களும், ஊதியம் பெற்றுப் பணி புரிந்தவர்களும் பலர் இருப்பர். இடம் பெயர்ந்து சென்றுள்ளமை, இயலாமை, தள்ளாமை, முதுமை, உடல் நலமின்மை, ஓய்வோ நேரமோ இல்லாமை, மனத் தாங்கல் இன்னபிற காரணங்களால் அவர்கள் நம்மிடையே இருந்துங்கூடத் திருக்கோயிலுக்கு வருகை தராதிருக்கலாம்; அல்லது, பெரும் அளவில் தற்போதைய கும்பாபிஷேகப்

பணிகளில் பங்கு பற்றுதிருக்கலாம். அனைவரையும் கலந்தாலோசித்து, நினைவுக்கு எட்டிய வரை யோசிக்கச் செய்து, விவரங்களைத் தெரிந்துகொண்டு, அத்தகைய முன்னுள் முக்கியஸ்தர்களின் பட்டியல்களைத் தயாரித்து, அவர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பிடுதலும், திட்டங்களுக்கு ஏற்றவாறு மரியாதை செய்திடலும் வேண்டும்.

204.11. விழா மலர் வெளியிடுவதென்பது ஒரு பெரிய பணி. அதற்கெனத் தனிக் குழு அமைத்துச் செயல்படுவதே சிறந்தது. விளம்பரங்கள் வேண்டிப் பெறுவது, கட்டுரைகளும் செய்திக் குறிப்புகளும் வரவேற்றுப் பரிசீலித்து இணைப்பது, அச்சகத்தோடு தொடர்பு கொண்டு மலரை வெளிக்கொணர்வது, விளம்பரதாரர்களுக்குப் பிரதிகள் அனுப்பி வைப்பது போன்ற பல பணிகள் அக்குழுவினரால் செய்யப்பட வேண்டும். எனவே, அக்குழுவின் உறுப்பினர்களுக்கு, குறிப்பாகக் கும்பாபிஷேகத்திற்கு முந்நாட்களில், வேறு பெரிய பணிகள் இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அச்சகத்தோடு கலந்தாலோசித்து, கும்பாபிஷேகத்துக்குக் குறைந்தது நான்கு நாட்கள் முன்னதாக விழா மலரின் பிரதிகள் கைக்கு வந்து சேருவது போல் ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால்தான் தனிப் பிரதிகளைப் பொதிந்து (*பாக்கிங்* செய்து) வைத்திருந்து, கும்பாபிஷேகத்தன்று மலர் வெளியான உடனேயே, விழாவுக்கு வருகை தந்திருக்கும் பெரியவர்களுக்கும், வெளியூர்வாசிகளுக்கும் பிரதிகளை வழங்கிட வசதியாக இருக்கும். இவ்வாறு செய்வதற்கேற்ப, மலரில் சேர்க்க வேண்டிய கட்டுரைகளுக்கு ஒரு இறுதி நாளும் (dead-line / cut-off date), விளம்பரங்களுக்கு ஒரு இறுதி நாளும், தகவற் பகுதிப் பக்கங்களுக்கு (Information

pages) ஒரு இறுதி நாளும் வெகு நாட்களுக்கு முன்னமேயே குறிப்பிட்டு, அனைவருக்கும் அறிவித்து, அந்தத் தேதிகளைத் தவறாது கடைப்பிடித்தல் அவசியம்.

204.12. தகவல் பகுதி பக்கங்கள் விழா மலரின் முன் பக்கமிருந்துக் கடைசிப் பக்கம் வரை எந்த இடத்திலும் பதிப்பிக்கப்படலாம். அவை கீழ்க்காணும் செய்திகளில் பலவற்றைத் தாங்கி இருக்கலாம்: அறிவிப்புகள் (Announcements), செய்திகள் (Messages), பதிப்புரை (Editorial), நிர்வாகம் குறித்த தகவல்கள் (Organisational information), கடந்த கால நிகழ்ச்சிக் குறிப்புப் புகைப்படங்கள் (Photo Gallery pages depicting past events), கடந்த நாட்களில் முன் நின்று வழிகாட்டிய ஆன்றோர்களின் விவரங்கள் (Lists of different categories of Patrons of yester-years), தற்போதைய குழுக்களின் உறுப்பினர்கள் (Lists of members of different Committees functioning now), திருக்கோயில் பண்டிகைகளும் திருவிழாக்களும் (List of Festivals conducted in the temple), நன்கொடையாளர்கள் பட்டியல் (Lists of Donors), விளம்பரதாரர்கள் பட்டியல் (Lists of Advertisers), முதலியன. விழா மலர்களில் தற்கால நிர்வாகிகள் மற்றும் தனி மனிதர்கள் குறித்த செய்திகளையும், படங்களையும் தவிர்த்தல் சீலமுடைத்து. விழா மலரை ஊர்தியாக்கி அதன்மீது உலாப்போந்து தன்னை விளம்பரப் படுத்திக் கொள்கின்றார்களோ என்று ஒரு சராசரி மனிதன் சலிப்புறு வண்ணம் பார்த்துக்கொள்ளுதல் நல்லதல்லவா!

204.13. விளம்பரங்கள் திருக்கோயிலைச் சார்ந்த வெளியீட்டில் பதிப்பிக்கப்படுவதற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். ஒரு பாலாரையோ, அல்லது குறிப்பிட்ட பகுதி அல்லது வகுப்பு அல்லது குழுவினரையோ உயர்த்தி அல்லது தாழ்த்தி அல்லது அடித்தள உணர்ச்சிகளைத் தூண்டுமாறு அமைந்துள்ள விளம்பரங்களைத் தவிர்ப்பதே நல்லது.

204.14. விழா மலரின் பிரதிகள் எவரெவர்க்கு வழங்கப் படுதல் வேண்டும் என்று கலந்தாலோசித்து முடிவெடுத்து, அதற்கொப்ப எண்ணிக்கையிலான பிரதிகள் அச்சிடப்பட வேண்டும். கும்பாபிஷேகப் பிரசாதத்துடன் தாமதமன்னியில் விழா மலரின் பிரதிகளும் உரியவரின் கைகளைச் சென்றடைந்தால்தான் மலருக்கு மதிப்பு.

ௐ ௐ ௐ ௐ ௐ

205. யாகசாலைகள்

205.01. முதலாவதாக, எந்த இடத்தில் யாகசாலைகள் அமைப்பது, எந்தெந்த தெய்வங்களுக்குத் தனியாக யாகசாலையோ ஸ்தண்டிலமோ அமைப்பது, எந்தெந்த தெய்வங்களுக்கு மற்ற யாகசாலை அல்லது ஸ்தண்டிலங்களில் கலசங்கள் சேர்த்து வைப்பது, மொத்தம் எத்தனை யாகசாலைகள் மற்றும் ஸ்தண்டிலங்கள் அமைப்பது, எத்தனை சிவாச்சார்யார்களைக் கொண்டு யாகசாலை பூஜைகள் நிகழ்விப்பது என்பதையெல்லாம் ஸர்வஸாதகரோடு கலந்து பேசி முடிவு செய்திடல் வேண்டும். முன்மாதிரிகள்-16,17 (Models-16,17).

205.02. திருக்கோயில் வளாகத்தில் யாகசாலைக்கென அமைக்கப்பட்டுள்ள தனி இடங்களோ அல்லது யாகசாலை நிறுவுவதற்கேற்ற பெரிய மண்டபங்களோ இல்லாதிருப்பின், தாற்காலிகமாக யாகசாலை நிறுவுவதற்கென ஒரு இடத்தைத் தெரிந்தெடுத்து, அங்கே பந்தல்கள் அமைத்தல் அவசியம்.

205.03. அப்படித் தாற்காலிகமாக அமைக்கப்படும் யாகசாலையின் தளங்கள் (தரை), அன்பர்கள் வெளியே நின்று தரிசனம் செய்யும் இடத்தில் உள்ள தரையை விடச் சற்று உயரமாக இருப்பது அவசியம். இதனால் ஐயன் எழுந்தருளும் கலசம் வீற்றிருக்கப்போகும் புனிதத் தலம், நம் கால் படும் சாதாரணத் தரையை விட உயரத்தில் இருப்பது சாத்தியமாகிறது. அத்தோடன்றி, மழைநீர், கழிவு நீர் போன்றவை வெளியிலிருந்து யாகசாலையை நோக்கி ஓடாமல் தடுத்து நிறுத்தப்பட இந்த அமைப்பு வகை செய்கின்றது. எனவே பந்தல் போடும் முன்னமேயே, தேவையானவாறு மண் அடித்து, உயர்த்தி, இறுக்கி, சாணமிட்டு மெழுகி யாகசாலைத் தரையை தயாராக்கிடல் வேண்டும்.

205.04. யாகசாலைப் பந்தல் மட்டப்பந்தலா அல்லது கும்பிடு கொட்டகையா (குதிரை முதுகுப் பந்தலா) என்பதை, கும்பாபிஷேகக் கிரியைகள் நிகழும் நாட்களில் மழை வர வாய்ப்புண்டா என்பதைக் கொண்டு முடிவு செய்யவேண்டும். ஹோம குண்டங்களுக்கு மேல் பகுதிகளில் தகர அல்லது ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளைப் பொருத்துவது அவசியம். கும்பிடு கொட்டகைகளின் வாட்டம் சரியாக அமைந்திடல் வேண்டும்; கீற்றுக்களும் நெருக்கமாக இடப்படுதல் வேண்டும்; இல்லையேல் மழை நீர் கசிந்து இறங்கும் அபாயம் ஏற்படும். அவ்வாறே, கொட்டகை இறங்கி முடியும் இடத்தில் மழைநீர்-வாரி ஏற்பாடுகள்

பொருத்தமானதாக இருத்தல் வேண்டும். இல்லை என்றால், நீர் வழிந்து ஓடி யாகசாலைக்குளேயே நிரம்பி நிற்கும் அபாயம் ஏற்படும். இடைஞ்சலான மூலைகள், சுதைகள் அமைந்துள்ள இடங்கள், ஆகியவை பந்தல்களின் இடையே அல்லது மூலைகளில் வந்து, அவற்றைச் சுற்றி மழை நீர்க் கசிவு ஏற்படலாம். இதற்கென, பாலிதீன், தார்ப்பாலின் போன்ற பொருட்களாலான (அல்லது தற்காலத்தில் சிமெண்ட் அடைத்து அனுப்புவதற்குச் சாக்குப் பைகளுக்குப் பதிலாக உபயோகப் படுத்தப் பெறும் பாலிதீன் கோணிகள் தயாரிப்பதற்கு உதவும் பொருளாலான) விரிப்புக்களைத் தருவித்து, அவற்றை கீற்றுகளின் இடையில் செலுத்திப் பொருத்தி, அத்தகைய இடைஞ்சலான மூலைகளிலும் சுதைகளையும் சுற்றி இட்டு, மழை நீர்க் கசிவினைத் தடுக்கலாம்.

205.05. யாகசாலைப் பந்தல்கள் அமைப்பு வேலையைத் தொடங்கும் முன், ஒரு நல்ல முஹூர்த்தத்தில், பந்தக்கால் முஹூர்த்தக் கிரியையைச் செய்திடல் வேண்டும். யாகசாலைப் பந்தல் அமைப்பு, அவற்றிற்குள் ஒலி-ஒளி ஏற்பாடுகள், பிறகு அவற்றுள் வேதிகைகள்-குண்டங்கள் அமைப்பு, பின்னர் அவற்றைச் சுத்தம் செய்து அலங்கரித்தல் - ஆகியவற்றிற்குப் பல நாட்கள் தேவைப்படும். எனவே, பந்தக்கால் முஹூர்த்தம், மஹாகும்பாபிஷேகத்துக்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பாகச் செய்யப்பட வேண்டி இருக்கும்.

205.06. சுவாமி, அம்பாள் யாகசாலைகளின் நாற்புர வாயில்களிலும், த்ரிசூலங்கள் பொருத்தப்படவேண்டும். அதற்கான மரப்பலகை வடிவங்கள் (cut-outs in plywood) ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

205.07. யாகசாலைகளின் நாற்புர வாயில்களிலும், த்வார பூஜை செய்வதற்கு ஏற்புடையதாக, தெய்வ உருவங்கள் வரையப்படுவதுண்டு. நடுவில் மஹாலக்ஷ்மி, லக்ஷ்மியின் இடது பக்கத்தில் ஸரஸ்வதி, வலது பக்கத்தில் கணபதி - ஆகிய அமர்ந்த நிலையிலுள்ள மும்மூர்த்தியரைப் பலகைகளில் வரையச் செய்து, வாயிற்படிகளின் மேலே பொருத்தி வைக்கலாம்.

205.08. திருக்கோயில் வாயில்களிலும் வளாகத்தினுள்ளும் வாழை மரங்களும், மாவிலைத் தோரணங்களும், தென்னம் பாளை, பூ மற்றும் குருத்தோலைத் தோரணங்களும் கட்டுவது மரபு. அவ்வாறே யாகசாலை வாயில்களிலும் அலங்காரம் செய்வதுண்டு. இவை தவிர, நால்வகை இலைகள் யாகசாலை வாயில்களில் மட்டும், சிறப்பாகத் தோரணங்களாகக் கட்டுவதற்கு ஏற்றவை என்ற குறிப்புகள் ஆகமங்களில் காணப்படுகின்றன. கிழக்கு வாயிலுக்கு ஆல மர இலையும், மேற்கு வாயிலுக்கு அரச மர இலையும், வடக்கு வாயிலுக்குக் கொன்றை மர இலையும், தெற்கு வாயிலுக்கு அத்தி மர இலையும் தோரணங்களாகக் கட்டப்படுதல் உத்தமம்.

205.09. வெட்டி வேரினால் விமானங்கள் அமைத்து யாகசாலைகளுக்கு அலங்காரம் செய்வது மரபு. மற்றவற்றிற்கு இயலாவிடினும், ஸ்வாமி (ப்ரதான) யாகசாலைக்கு மட்டிலுமாவது வெட்டி வேர் விமானம் செய்வித்திட முயற்சிக்கலாம். விமானம் அமைப்பதற்கு அனுபவம் உள்ள பூக்காரர் கிடைக்காவிட்டால், வேதிகைக்கு மேல் (அவரைப் பந்தல் போன்ற) பந்தல் இட்டு, அதன்மீது வெட்டிவேரைப் பரப்பி *வெட்டிவேர்ப் பந்தல்* அமைத்துக் கொள்ளலாம்.

205.10. கும்பங்கள் அங்கே எழுந்தருள ஆயத்தமாக யாகசாலைகள் சிவாச்சார்யார்களால் புனிதமாக்கப்பட்டது முதல், கும்பாபிஷேகம் நிறைவுற்று சண்ட ஹோமம் ஆகி சிவாச்சார்யார்கள் ரக்ஷா விஸர்ஜனம் செய்து கொள்ளும் வரை, சிவாச்சார்யார்கள் அல்லாத மற்ற எவரும் யாகசாலைக்குள் ப்ரவேசம் செய்யக் கூடாது. ஸர்வஸாதகரோடு கலந்து பேசி, யாகசாலைக்குள்ளே தொண்டு செய்வதற்காகச் சில சிவாச்சார்யார்களையே (அவர்கள் *பரிசாரகர்கள்* - ஏவல் தொழிலாளர்கள் - என்ற பொதுப் பெயரால் அழைக்கப் பெறுவர்) ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அத்தோடு கூட, திருக்கோயில் அமைப்பும் நிலவரங்களும் தெரிந்த ஒன்று அல்லது இரண்டு தொண்டர்களை ஸர்வஸாதகரோடு கலந்து பேசித் தெரிந்தெடுத்து, அவர்களை உடை உணவு பழக்க வழக்கங்கள் பேச்சு ஆகியவற்றில் நியமங்களைக் கடுமையாகக் காக்கச் செய்து, அவர்களை மட்டும், ஸர்வஸாதகர் அழைக்கும் நேரங்களில் மட்டும், யாகசாலைக்கு உள்ளே சென்று சிறு தொண்டுகள் செய்ய அனுமதிக்கலாம்.

205.11. யாகசாலைப்பந்தல் அமைக்கும்போது, மற்ற தேவைகளுக்கேற்ப, பந்தல்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, தன்மீசர் செம்பொன்கோயில் கும்பாபிஷேகத்தின்போது யாகசாலைக் கொட்டகையைத் தவிரக் கீழ்க்கண்ட ஐந்து பந்தல்களுங் கூட அமைத்துக் கொள்ளப்பட்டன: (i) வேதங்கள், திருமுறைகள் ஓதுபவர்கள் இருக்க குதிரை முதுகுக் கொட்டகை, (ii) வர்ணனையாளர்களுக்குரிய இடத்தில் தட்டுப்பந்தல், (iii) தொண்டர்கள் தங்க வேண்டிய இடத்திற்கு ஒரு குதிரை முதுகுப் பந்தல், (iv) தரிசனம் காண வருவோர் யாகசாலை எதிரே நின்று பார்க்கும் இடத்தில் ஒரு தட்டுப்

பந்தல், (V) ப்ரசாதங்கள் வழங்குவோர் இருக்கும் இடத்தில் ஒரு தட்டுப்பந்தல்.

ௐ ௐ ௐ ௐ ௐ


206. வேதிகைகள், குண்டங்கள்

206.01. யாகசாலை வேதிகைகளும் (pedestals), குண்டங்களும் (sacrificial fire-places) ஸர்வஸாதகர் குறிப்பிடுவது போல், அவர் முன்னிலையில், ஸ்தபதியாரைக் கொண்டு செய்வித்திடல் வேண்டும். அவற்றை, இயன்றவரை, சுடப்பெறாத பச்சைச் செங்கற்கள் கொண்டு, சேற்றைக் குழைத்துக் கட்டுதல் மரபு. யாகசாலைப் பந்தல் பிரிக்கப்பட்ட பிறகு, குண்டங்களும் வேதிகைகளும் நம்மால் களையப்படக் கூடாது, மழை நீர் காற்று போன்ற இயற்கை விளைவுகளால் அவை கரைந்து சென்றிடுதல் உத்தமம் என்று ஒரு நியதி இருப்பதனால், அவை விரைவாகக் கரைந்திட இந்த வகையில் கட்டுவது உதவும்.

206.02. சில இடங்களில், கும்பாபிஷேகத்துக்குச் சில நாட்களுக்குப் பிறகு, பக்தர்களின் நலன் கருதியும், ப்ரதோஷ நாளில் வீதி உலா எடுத்துச் செல்வது போன்ற தெய்வ கார்யங்களுக்காகவும், தானாகவே கரைந்திடாத வேதிகைகளையும் குண்டங்களையும் நாம் அகற்ற வேண்டி நேரிடும். அப்படிச் செய்வதானால், ப்ராயச்சித்தமாக, சாந்தி ஹோமம் செய்துவிட்டுப் பிறகு அவற்றைக் களையலாம் என்பர்.

206.03. *பஞ்சாஸன வேதிகை:*

206.03.01. ஒரு ப்ரதான யாகசாலைக்காவது பஞ்சாஸன வேதிகை அமைப்பதற்கு ஸர்வஸாதகர் முயல்வர். கூர்மம் (ஆமை), அஷ்ட நாகங்கள், அஷ்ட ஸிம்ஹங்கள், அஷ்ட பூதங்கள் (சிவ கணங்கள்), அஷ்டதள பத்மம் (தாமரை) - இவற்றை முறையே கீழிருந்து மேலாக ஒன்றின் மீது ஒன்று அமரச் செய்து அமைப்பதே பஞ்சாஸனம். பெரும்பாலும் பஞ்சாஸன வேதிகை சிவபெருமான் எழுந்தருளும் கலசத்தைத் தாங்கி நிற்பதற்காக மட்டுமே அமைக்கப்பெறும். இந்த விதிக்கு விலக்காக, விநாயகர் அல்லது முருகக் கடவுள் முக்கிய ப்ரதிஷ்டையாக அமையும் சில திருக்கோயில்களில் கூட ப்ரதான மூர்த்திகளுக்கு பஞ்சாஸன வேதிகை அமைக்கப்படுவதுண்டு. அவ்வாறே, அன்னை முக்கிய தெய்வமாக அமைந்துள்ள கோயில்களில் பெண் பூத கணங்களுடன் பஞ்சாஸன வேதிகை அமைப்பதுண்டு. மற்ற தெய்வங்களுக்குப் பஞ்சாஸன வேதிகை அமைக்கப்படுவதில்லை.



206.03.02. பஞ்சாஸன வேதிகையின் அடித்தளத்தின் (foundation) மீது அமரும் கூர்மம், தன்மீது ஒரு முக்கோண பீடத்தைத் தாங்கி இருக்கும். அந்த முக்கோணப் பீடத்தின் மீது எட்டு நாகங்கள் அமரும். நாகங்கள் ஒரு சதுரப் பீடத்தைத் தாங்கி இருப்பது போல அடுத்த தளம் அமையும். எட்டு ஸிம்ஹங்கள் சதுர பீடத்தின் மீதிருந்து, மேலே ஒரு எண்கோண பீடத்தைத் தாங்கியிருக்கும். எண்கோண பீடத்தின்மீது அமரும் எட்டு பூதங்கள் மேலே ஒரு பெரிய அஷ்டதளத் தாமரையைத் தாங்கி இருக்கும். பத்மத்தின் நடுவே ஒரு சிறு அறுகோண பீடம் அமைக்கப்படும். கலசம் இந்த அறுகோண பீடத்தின் மீது அமரும்.


206.03.03. பூதங்கள் அமரும் எண்கோண தளத்துக்கு மேலே ஒரு வட்ட (உப)பீடத்தை அமைத்து, அதனைத் தாமரை செயவதற்கு ஆதார பீடமாகக் கொள்வது ஒரு எளிமையான முறை. முக்கோண, சதுர, எண்கோண, வட்ட வடிவ பீடங்களை முன்னதாகவே சிமிண்ட் பலகையாக (R.C.C.Slab) அறுத்துக் காய வைத்துத் தயாரர்க வைத்திருந்தால் விரைவாக பஞ்சாஸன வேதிகையை உருவாக்கலாம். அல்லது கடப்பைக் கல் போன்ற பலகைக் கற்களை (Slab Stones) அறுத்துப் பீடங்களைச் செய்விக்கலாம். அவ்வாறு தயாராக்கப்படும் பலகைப் பீடங்களின் நடுவில் ஒரு துவாரம் வைத்திருந்தால், வேதிகை கட்டும்போது, மையமாக ஒரு கம்பியையோ குழாயையோ நிறுத்திப் பதிப்பித்து, பீடங்களை அதனுள் செலுத்தி, நேராகவும் சரிந்து வீழாமலும் வேதிகையை எழுப்பலாம். வேதிகை எழும்போது, நடுவில் உள்ள குழாயைச் சுற்றி சுமார் 15 அங்குல சதுரத்திற்குத் தூண் போல செங்கல்லால் கட்டி எழுப்பினுல், அந்தத் தூண் பீடங்களைத் தாங்கி நின்று கொள்ளும்; பின்னர், எட்டு நாகங்கள், எட்டு

ஸிம்ஹங்கள், எட்டு பூதங்கள் ஆகிய சிறு பதுமைகளை வெளியில் செய்து காய வைத்து, வேதிகையின் உள்ளே பொருத்தி விடலாம். அடித்தளத்தில், தூணைச் சுற்றிக் கூர்மப் பதுமையை சுதை வேலை போல் உருவாக்கி விடலாம். அவ்வாறே, மேல் தளத்தில் வட்ட உபபீடத்தின் மேலும், அதனைச் சுற்றியவாறும், பத்மத்தை அமைத்து விடலாம். பத்மத்தின் நடுவே உள்ள அறுகோண பீடத்தில் நடுவே ஒரு பள்ளம் (depression) வைத்திருந்தால், ப்ரதான கலசம் உறுதியாக அமர்ந்து விடும். வர்த்தினியையும் உப கலசங்களையும் ப்ரதான கலசத்தைச் சுற்றி (பத்மத்தின் இதழ்களில் இருப்பது போல) அமர்த்தி விடலாம்.

206.03.04. குறைந்த பக்ஷமாக, 42 அங்குலம் அளவுள்ள சதுரமாக அடித்தளம் அமைக்கலாம். (யாகசாலையின் அளவு 16' x 16' -க்கு அதிகமாக இருந்தால், இன்னும் பெரிய அளவில் பஞ்சாஸன வேதிகை அமைக்கலாம்). 42" x 42" அடித்தளம் அமைத்தால், அதனை அடுத்து வரும் பீடம் 42" பக்க அளவுள்ள சம பக்க முக்கோணம். பிறகு, 42" பக்க அளவுள்ள சதுர பீடம். அதற்கு மேல் வருவது 42" பக்க அளவுள்ள சதுரத்தை எடுத்து மூலைகளைக் கத்தரித்து உருவாக்கப்பட்ட சம பக்க எண்கோண பீடம். இறுதியாக 39" விட்ட அளவுள்ள வட்ட உபபீடத்தைச் சுற்றி அமைக்கப் பெறும் தாமரைப் பீடம். அந்தத் தாமரைப் பீடத்தின் மேல், மையமாக அமைக்கப் படுவது 12" விட்ட அளவுள்ள வட்டத்துக்குள் அடங்கும் சமபக்க ஷட்கோண பீடம். ஒவ்வொரு பீடத்திற்கான சிமின்ட் அல்லது கடப்பைக் கல் பலகை சுமார் ஒன்று முதல் ஒன்றரை அங்குல கனம் எடுத்துக் கொள்ளும். முக்கோண பீடம் 6" உயரம், சதுர பீடம் 9" உயரம், எண்கோண பீடம் 9",

பத்ம பீடம் 18" என்று வைத்துக் கொண்டால், வேதிகையின் உயரம் (6 + 9 + 9 + 18 + 1½x4 =) 48 அங்குலமாக (சுமார் 4 அடியாக) அமையும். அதன் மீது ஷட்கோண பீடமும் பிறகு கலசமும் வரும்போது, ஐயனே நிமிர்ந்து நோக்கி வணங்க ஏதுவாகும்.

206.03.05. மேலே உள்ள ஷட்கோணம் என்பது விமலாஸனம். அது ஆகாய தத்துவத்தைக் குறிக்கும். அடுத்து உள்ள எட்டு இதழ்த் தாமரை என்பது பத்மாஸனம். அது வாயு தத்துவத்தைக் குறிக்கும். அடுத்து உள்ள எண்கோண பீடம் என்பது யோகாஸனம். அது அக்னி தத்துவத்தைக் குறிக்கும். அடுத்து உள்ள சதுர பீடம் என்பது ஸிம்ஹாஸனம். அது ஜல தத்துவத்தைக் குறிக்கும். அடுத்து உள்ள முக்கோண பீடம் என்பது அனந்தாஸனம். அது ப்ருத்வீ தத்துவத்தைக் குறிக்கும்.



206.04. வேதிகையின் அளவு, யாகசாலையின் அளவைப் பொருத்தும், அதன் மீது வைக்கப்பட உள்ள கலசங்களின் அளவு மற்றும் எண்ணிக்கையைப்

பொருத்தும் அமையும். ஒவ்வொரு யாகசாலைக்கு உள்ளும் அமைய வேண்டிய வேதிகையின் அளவும், இடமும் ஸர்வஸாதகரின் ஆலோசனையின் பேரில் முடிவு செய்யப்பட வேண்டும். ஸ்ரீ தன்மீசர் செம்பொன் கோயிலில் ப்ரதான (ஸ்வாமி) யாகசாலை 16 அடி சதுரமாகவும், மற்ற நான்கு யாகசாலைகளும் 10 அடி சதுரமாகவும், பத்து ஸ்தண்டிலங்களும் 6 அடி சதுரமாகவும் வரையறுக்கப்பட்டன (that is, they were so marked; they were not walled up to this measurement; the four entrances on the four sides of each yaagasaalai and each sthandilam were denoted by non-load bearing poles erected at the proper places, so that they will contribute to the disciplines prescribed for construction of yaagasaalais). ஒவ்வொரு யாகசாலை அல்லது ஸ்தண்டிலத்திற்கென சதுரிக்கப்பட்ட இடத்தினுள் ஒரு வேதிகையும், ஒரு குண்டமும் அமைக்கப்பட்டன. பெரும்பாலான வேதிகைகள் 2½ அடிக்கு 2½ அடி சதுரமாக, 4 அடி உயரம் கொண்டதாக அமைக்கப் பெற்றன. சில வேதிகைகள் மட்டும், அதிக எண்ணிக்கையில் கலசங்களைத் தாங்க வேண்டி இருந்தமையின், 2 அடிக்கு 4 அடி நீண்ட சதுரமாக அமைக்கப்பட்டன.

206.05. *யாக குண்டங்கள்:* ஒவ்வொரு யாகசாலைக்குள்ளும் அமைய வேண்டிய யாக குண்டத்தின் அமைப்பு ஸர்வஸாதகரின் ஆலோசனையின் பேரில் முடிவு செய்யப்பட வேண்டும். பொதுவாக, வேதிகைகளின் கிழக்குப் பக்கத்தில் யாக குண்டங்கள் கட்டப்பெறும். யாக குண்டங்கள் பல அளவுகளிலும் கோணங்களிலும் கட்டப்பெறும்.

உதாரணமாக, ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயிலில் கீழ்க்கண்டவாறு குண்டங்கள் அமைக்கப் பட்டன: 1. ஸ்வாமி யாகசாலே: நவ குண்டம் (மற்ற யாகசாலே / ஸ்தண்டிலங்களில் ஏக குண்டம்) (நவகுண்டங்கள்: (i). கிழக்கில் சதுரம், (ii). ஆக்கிநேயத்தில் யோநி, (iii). தெற்கில் அர்த்த சந்த்ரன் (அரை வட்டம்), (iv). நிர்ருதியில் முக்கோணம் (பஞ்ச கோணம் அமைக்கலாம் என காமிகாமகத்தில் காணப்படுகின்றது), (v). மேற்கில் வ்ருத்தம் (வட்டம்) (மேற்கில் பஞ்சகோண குண்டம் அமைக்க வேண்டுமென்பதாக ஸஹஸ்ராகமத்தில் ஒரு குறிப்பு காணப்படுகின்றது), (vi). வாயு திக்கில் அறு கோணம், (vii). வடக்கில் பத்மம், (viii). ஈசான்யத்தில் எண்கோணம், (ix). ப்ரதான குண்டம் ஈசான்யத்துக்கும் கிழக்குக்கும் இடைப்பட்ட பகுதியில் அமையும். மூல லிங்கத்தின் ஆவுடையார் வட்ட வடிவமாக இருந்தால் வ்ருத்த குண்டமும், சதுர வடிவாக இருந்தால் சதுர குண்டமும் ப்ரதான குண்டமாக அமைக்க வேண்டும் - ஸஹ-ஆக-85). 2. விநாயகர் யாகசாலே: ஐங்கோண குண்டம். 3. அம்பாள் யாகசாலே: பத்ம குண்டம். 4. ஸுப்ரஹ்மண்யர் யாகசாலே: அறு கோண குண்டம். 5. நூதன ராஜகோபுர யாகசாலே: சதுர குண்டம். 6. ஸ்வாமி விமான ஸ்தண்டிலம்: வ்ருத்த (வட்ட) குண்டம். 7. உற்சவ மூர்த்தியர் ஸ்தண்டிலம்: வ்ருத்த குண்டம். 8. பஞ்ச கோஷ்ட மூர்த்தியர் ஸ்தண்டிலம்: சதுர குண்டம். 9. பைரவர் ஸ்தண்டிலம்: எண் கோண குண்டம். 10. வீரபத்ரர் ஸ்தண்டிலம்: முக்கோண குண்டம். 11. ஆஞ்ஜநேயர் ஸ்தண்டிலம்: சதுர குண்டம். 12. வெளி ப்ராகார மூர்த்திகள் ஸ்தண்டிலம்: வ்ருத்த குண்டம். 13. நவக்ரஹ ஸ்தண்டிலம்: பத்ம குண்டம். 14. பக்தர்கள்

(நால்வர் ஸந்நிதி) ஸ்தண்டிலம்: சதுர குண்டம். 15. சண்டிகேச்வரர் ஸ்தண்டிலம்: அர்த்த சந்த்ர குண்டம்.

206.06. யோநி குண்டம் நீங்கலாக, மற்ற குண்டங்களுக்கு ஒரு சிறு யோநி எனப்படும் இலை போன்ற சின்னம் மேல்-விளிம்பில் அமைக்கப்படும். அந்த இலையைத் தாங்கும் கொடி, குண்டத்தின் உள்ளிருந்து வருவது போல் அமைக்கப்படும். சிவாச்சார்யார் எந்த திசையை நோக்கி அமர்ந்து ஹோமம் செய்யப் போகிறார் என்பதைப் பொருத்து, அவர் உட்காரும் பக்கத்திற்கு அருகே இந்த இலைச் சின்னம் அமைய வேண்டும்.

ॐ ॐ ॐ ॐ ॐ

207. யாகசாலைப் பொருட்கள்

207.01. யாகசாலைக்குத் தேவையான கலசங்கள் (குடம், சொம்பு போன்ற பாத்திரங்கள்), கலச வஸ்த்ரங்கள், புஷ்பம், பூஜா த்ரவ்யங்கள், ஹோம த்ரவ்யங்கள், உபகரணங்கள், நைவேத்யங்கள் - முன்மாதிரிகள்-18 முதல் 23 வரை (Models-18 to 23) ஆகியவற்றை ஸர்வஸாதகரோடு கலந்து பேசி முடிவு செய்து பட்டியலிட்டு, வெகு நாட்களுக்கு முன்னரேயே அவற்றைச் சேகரிக்கவும், ஏற்பாடுகள் செய்யவும் தொடங்க வேண்டும்.

207.02. ஹோமங்களுக்குத் தேவையான மரக் கட்டைகளுக்கு முன் கூட்டியே விறகுக் கடைகளில் சொல்லி வைத்திருந்து ஏற்பாடுகள் செய்தல் அவசியம். அல்லது மரக்கிளைகளை வெட்டிக் காயவைத்து எடுத்து வைக்க வேண்டும். அன்பர்களது இல்லங்களில்

கிடைக்கும் வெட்டுண்ட மரத் துண்டுகளையும் பெற்று வர ஏற்பாடுகள் செய்ய வேண்டி நேரிடும்.

207.03. பசுஞ்சாண விரட்டிக்கும், பஞ்சகவ்யம் தயாரிக்க வேண்டிய பொருட்களுக்கும் முன் கூட்டியே சொல்லி வைத்திருந்து ஏற்பாடுகள் செய்தல் அவசியம். பூர்வாங்க பூஜைகள் தொடங்கி, கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி, நான்கு கால பூஜைகள் போன்ற ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பஞ்ச கவ்யம் கூட்டி கிரியைகள் செய்யப்படும். எனவே ஸர்வஸாதகரோடு கலந்தாலோசித்து, பல நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளைகளில், பஞ்ச கவ்யத்திற்கான பொருட்களைத் தருவிக்க இயன்றால் மிக மிகச் சிறப்பாக அமையும்.

207.04. ஒரு காராம் பசுவிடமிருந்து, முன்கூட்டியே பால் பெற்று, பய பக்தியுடன், நெய்யும் தயிரும் தயாரித்து வைத்திருந்து, பூஜை நாளன்று அதே மாட்டின் பாலும், கோஜலமும், கோமயமும் பெற்று, பஞ்சகவ்யம் கூட்ட முடிந்தால் சிறப்பாயிருக்கும். (ஐந்து குறிப்பிடப்பட்ட வெவ்வேறு வகையான பசுக்களிடமிருந்து ஐந்து பொருட்களும் பெற்று பஞ்சகவ்யம் கூட்டுவது சிறப்பு என்றும் ஒரு ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளதாக இயம்புவர்).

207.05. அஷ்டமங்களப் பலகைகள் ஏற்பாடு செய்திடல் வேண்டும் (ஸஹ-ஆக-194). குறிப்பிட்ட எட்டு வகையான மங்களப் பொருட்களை தேவகன்னியர் தாங்கி நிற்பது போன்று வரையப்படுவதே அஷ்டமங்களப் பலகைகள். சுமார் 12"x6" அளவுள்ள ப்ளைவுட் பலகைகளில் தேவகன்னிகையரின் சித்திரங்கள் வரைவித்து, அவற்றை யாகசாலையில் பயன்படுத்துதல் மரபு.

207.06. தசாயுதப் பலகைகள் ஏற்பாடு செய்திடல் வேண்டும். பத்து வகையான ஆயுதங்களை, பத்து பலகைகளில் (சுமார் 6"x6" அளவுள்ள ப்ளைவுட் பலகைகள்) சித்திரங்களாக எழுதி, அவற்றை யாகசாலையில் பயன்படுத்துதல் மரபு. சிவகணங்கள் ஆயுதங்களைத் தாங்கி நிற்பது போன்று (சற்றுப் பெரிய 12"x6" ப்ளைவுட் பலகைகளில்) எழுதி வைப்பதும் உண்டு.

207.07. யாகசாலை த்ரவ்யங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போதும், கும்பங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போதும், தீவட்டி, குடை, சாமரம், விசிறி, சுருட்டி (தாளவ்ருந்தம்), மகர தோரணம் போன்ற உபசாரப் பொருட்களை எடுத்துச் செல்லலாம். குறைந்த பக்ஷமாக தீவட்டியும், குடையும் எடுத்துச் செல்ல வேண்டும். விரிவாகச் செய்வதானால், முகபடாம் அணிந்த யானைகளுக்குக் கூட ஏற்பாடு செய்யலாம்! அதற்கான ஏற்பாடுகளைக் கண்ணுறுதல் வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ

208. யாகசாலைக் கலசங்கள்

208.01. கும்பாபிஷேக நாளன்று, மஹா பூர்ணாஹுதிக்குப் பிறகு கடங்கள், வர்த்தினிகள், கலசங்கள் புறப்பட்டு, அது அதற்கு உரிய இடத்திற்கு சிவாச்சார்யார்களால் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே அஷ்டபந்தனம் சாத்தி வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட ஸ்தாபிகள், பிம்பங்கள் மீது அபிஷேகம் செய்யப்பட வேண்டும். எனவே, அதுவரை அபிஷேக நீரைத் தாங்கி யாகசாலையில் அமர்ந்திருந்த ஒவ்வொரு கும்பமும் (கடங்கள் etc.,), ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்தில் அபிஷேகம்

செய்யப்படுவதற்கென, குறிப்பிட்ட தேவதை அல்லது தேவதைகளை ஆவாஹனம் செய்வித்து பூஜிக்கப்பட்டுள்ளதாகும். அந்த கும்பங்கள் மாறுது உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது அவசியமாகும். இதற்கென, ஆரம்பத்தில் கும்பங்களுக்கு நூல் சுற்றும்போது, ஒவ்வொன்றிலும் ஒரு குறிப்பு (label) வைக்கப்பட்டு அதன்மேல் நூல் சுற்றப்பட்டால் பிழையின்றி அவை தங்களது இடத்தைச் சேர வசதியாக இருக்கும். பேப்பர் லேபல்கள் நீர் பட்டு அழிந்திடும். எனவே, அழிந்திடாத மை கொண்ட பேனாவினால் (permanent marker pen) எழுதப்பட்ட துணி லேபல்கள் தயாரித்து உபயோகித்தல் சிறந்தது. அதற்கென உபயோகப்படுத்தப்பெறும் துணி, புதியதாயும் (கோடி வஸ்த்ரம்), தடிப்பானதாகவும் (stiff), வெள்ளை வண்ணத்திலும் இருப்பது சிறந்தது. அதில் ஒரு அங்குலத்துக்கு மூன்று அங்குல அளவில், எத்தனை கும்பங்கள் உண்டோ அத்தனைக்குத் தேவையான கட்டங்கள் (grid) வரைந்து கொண்டு, ஒவ்வொரு கட்டத்தினுள்ளும் ஒரு கும்பம் எழுந்தருளும் யாகசாலையின் பெயர், எந்த ஸ்தூபி அல்லது பிம்பத்திற்கு அபிஷேகம் செய்ய அந்தக் கும்ப நீர் உபயோகப்படப்போகிறது என்ற குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்ளலாம். கும்பத்துக்கு நூல் சுற்றத் தொடங்கும்போது, கட்டங்களின் கோட்டோடு வெட்டி, லேபல்கள் போல எடுத்துக் கொண்டு, அவற்றை ஒவ்வொரு கும்பத்தின் மேலும் வைத்து நூல் சுற்றிவிட்டால், பிறகு தேவதைகளை ஆவாஹனம் செய்வதற்கும், கடைசியாக எடுத்துச் சென்று அபிஷேகம் செய்வதற்கும் வசதியாக இருக்கும்.

208.02. கடங்கள், வர்த்தினிகள், கலசங்கள் ஆகியவற்றிற்கு உபயதாரர்கள் ஏற்பாடு செய்வதாக

இருந்தால், அவை ஒவ்வொன்றிலும் யாகசாலேயின் பெயரையும் ஆவாஹனமாகும் தெய்வத்தின் பெயரையும் பொறித்து வைக்கலாம். இவ்வாறு பெயர் வெட்டுவதனுல் உபயதாரர்களுக்கு, அவை ஒன்றேடொன்று மாறி விடாமல், அவரவர் உபயம் அளித்த கலசத்தையே அவரவர்க்குத் தருவது எளிதாக இருக்கும். அதன்றியும், உபயதாரர்கள் அக்கலசங்களேப் போற்றிப் பாதுகாத்து வரும் எதிர்காலத்துக்கு அது ஒரு நினைவுப் பொருளாகவும் அமையும். அப்படிக் கலசங்களேப் பெற்றுச் செல்லும் உபயதாரர்களிடம், அவற்றை பூஜை அறையிலும், பூஜைகளுக்கும் மட்டும் உபயோகிக்குமாறும், தினசரிக் காரியங்களுக்கு உபயோகிக்க வேண்டாம் என்றும் ஆலோசனே வழங்கப்படுதல் வேண்டும்.

208.03. கும்பாபிஷேகம் கழிந்த பிறகு, கடங்களில் (கடம் அல்லது வர்த்தினி அல்லது கலசம்) ஒன்றுகூட காணுமற் போய்விடாமல் பாதுகாப்பது அவசியம். அவ்வாறே, கடங்களே உபயதாரர்களுக்கு அளிக்கும்போது, அவை மாறிவிடாமல் பார்த்துக் கொள்வதும் மிக மிக அவசியம். ஒரு கடத்துக்குக் குறிப்பாக உபயம் தந்தவர், அந்த கடத்தை ப்ரசாதமாகப் பெறவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமே. எவருக்குமே இந்த எதிர்பார்ப்புக்கு ஏமாற்றம் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது நம் கடமை.

ௐ ௐ ௐ ௐ ௐ

209. வஸ்த்ரங்கள்

209.01. மஹாகும்பாபிஷேக நாளன்று, முதலில்

கும்பாபிஷேகத்துக்குப் பிறகு அனைத்து மூர்த்திகளுக்கும், பரிவார தெய்வங்களுக்கும், உற்சவ மூர்த்திகளுக்கும் புது வஸ்த்ரங்கள் சாத்த வேண்டும். இவை சிறிது நேரத்திற்கே பிம்பங்களை அலங்கரிக்கப் போவதால், சற்று விலை குறைவான வஸ்த்ரங்களாக இருக்கலாம்.

209.02. மஹாபிஷேகம் ஆனவுடன், அதே மூர்த்திகளுக்கும், பரிவார தெய்வங்களுக்கும், உற்சவ மூர்த்திகளுக்கும் மீண்டும் புது வஸ்த்ரம் அணிவிக்க வேண்டும். இவை சற்று உயர்வானதாக இருப்பது பொருத்தமாக இருக்கும்.

209.03. மாலையில், திருக்கல்யாண நிகழ்ச்சியின் போது ஸ்வாமிக்கும் (ஸோமாஸ்கந்தர்), அம்பாளுக்கும் (ஸோமாஸ்மகந்தரோடு திரு வீதி உலா வரும் த்வி-புஜ உலா-அம்பாள்), நல்ல புது வஸ்த்ரங்கள் சாத்த வேண்டும்.

209.04. மேற்கூறிய காலங்களுக்கான வஸ்த்ரங்களைத் தனியாகக் கணக்கிட்டு வாங்கி வைத்திடுதல், மற்றும் தைத்து வைத்திடல் அவசியம். அவற்றைத் தனித்தனியாக, குறிப்புச் சீட்டுகளுடன் (Labels) கட்டி வைத்திடல் வேண்டும். - முன்மாதிரி-24 (Model-24).

ॐ ॐ ॐ ॐ ॐ

210. நைவேத்யங்கள்

210.01. யாகசாலை பூஜைகளின்போது ஆஹுதி அளிப்பதற்கான ஹோம பக்ஷணங்களும், நைவேத்யங்களும், ஒவ்வொரு கால பூஜைக்கும் தேவை. அவை என்னென்ன என்பதையும், எவ்வளவு தேவை என்பதையும் ஸர்வஸாதகரோடு கலந்தாலோசித்துத்

தீர்மானித்து அவற்றைத் தயாரிக்க வேண்டும். ஒன்றேடொன்று கலக்காமல் தனித்தனியே அவை தயாரிக்கப்பட்டு, எடுத்து வைக்கப்பட்டிருந்து, யாகசாலைகளுக்கு அனுப்பப் படுதல் வேண்டும் என்றெரு நியதியும் உண்டு.

210.02. சில வேளைகளில் செய்யப்படும் நைவேத்யங்கள், பின்னர் தரிசனம் செய்ய வருவோருக்கு விநியோகமும் ஆகும். அவ்வாறன வேளைகள் யாவை, நைவேத்யங்கள் என்ன என்பனவற்றை அனைவரோடும் கலந்தாலோசித்து முடிவெடுத்து, அதற்குத் தகுந்தவாறு அதிக அளவில் நைவேத்யங்கள் தயாரித்தல் வேண்டும்.

210.03. உபயதாரர்களுக்கு ப்ரசாதங்கள் வழங்குவதாக நிச்சயம் செய்யப்பட்டுள்ள பூஜா காலங்களில், அதற்கான தேங்காய், பழம், தாம்பூலம், திருமடப்பள்ளி நைவேத்யம் போன்றவைக்கும், அவற்றை இட்டு வழங்குவதற்கான பைகள், தொன்னைகள், இலைகள், பாக்கெட்டுகள் போன்றவற்றிற்கும் ஏற்பாடுகள் செய்திடல் வெண்டும்.

ॐ ॐ ॐ ॐ ॐ

211. தூய்மை

211.01. திருக்கோயில் வளாகமும், சுற்றுப்புறமும், மெய்யன்பர்கள் நின்று கொண்டு கோபுர கும்பாபிஷேக தரிசனம் செய்யும் இடங்களும் தூய்மையாக இருப்பது முக்கியம். திருப்பணி நடைபெற்ற தலமாதலால் கழிவுப் பொருட்கள் பல இடங்களிலும் குவிந்து கிடக்க வாய்ப்புண்டு. அவற்றைக் கும்பாபிஷேகத்திற்குச் சில நாட்கள் முன்னதாக சுத்தம் செய்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

211.02. தரிசனம் செய்ய வருவோருக்குத் தூய்மையான குடிநீர் கிடைக்க ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும். கீழ்நிலைக் குடிநீர்த் தொட்டி (underground sump) மட்டும் பயன்படுத்தப் பெறுவதானால் அதனை சுத்தம் செய்து, அதிலிருந்து கை-பம்ப் உபயோகித்தோ, எலக்ட்ரிக் பம்ப் உபயோகித்தோ, இராட்டினம் உபயோகித்தோ, நீர் இறைத்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

211.03. கோயிலுக்கு அண்மையானதும், பக்தர்கள் தரிசனம் செய்யப் பெரும் அளவில் நடந்து வர உள்ளதுமான சாலைகளில் வாழும் நல்ல உள்ளங்களில் சிலரை அணுகி, ஊக்குவித்து, பானகம் நீர்மோர் குளிர்ந்த குடிநீர் ஆகியவற்றை வழங்கிடத் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

211.04. தூய்மை காப்பதில் நகராண்மைக் கழகத்திற்கு பங்கு தந்து பயன் காண வாய்ப்புகள் உண்டென்றால், அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

211.05. ஒவ்வோர் நாள் இரவிலும், பூஜைகள் முடிந்த உடன், யாகசாலைகளையும், திருக்கோயில் வளாகத்தையும் சுத்தம் செய்திட ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும். யாகசாலைகளைத் தர்ப்பைக் கட்டு, மாவிலைக் கொத்து போன்றவற்றை மட்டுமே உபயோகித்துச் சுத்தம் செய்யவேண்டும்.

211.06. யாகசாலையில் எந்நேரமும் குறைந்தது ஒரு நல்ல விளக்காவது எரிந்துகொண்டிருக்குமாறு ஏற்பாடுகள் செய்திடல் அவசியம்.

211.07. ஒவ்வோர் நாளும், அதிகாலையில் யாகசாலைகள் மற்றும் திருக்கோயில் வளாகத்தினை நீர் தெளித்து, மாக்கோலமும், இழைகோலமும் இட்டிட ஏற்பாடுகள்

தேவை. இப்பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட, தாய்க்குலத்தின் அங்கத்தினர்களைத் தொண்டர் குழாத்தில் அவசியம் சேர்த்திருத்தல் வேண்டும்.

211.08. வாஸ்து சாந்தி நிறைவடைந்த உடன், யாகசாலை மற்றும் திருக்கோயில் வளாகத்தினைச் சுத்தப்படுத்திட ஆயத்தநிலை செய்து வைத்திட வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ

212. நிகழ்ச்சிகளின் வர்ணனை

212.01. கருவறைகள், யாகசாலைகள், ஸ்தூபிகள் போன்ற பல இடங்களில் நடைபெறும் அனைத்துக் கிரியைகளையும், அனைத்து மெய்யன்பர்களும், மஹா கும்பாபிஷேக நாளன்று, ஒரு சேரக் கண்டு உய்வது எளிதன்று. எனவே, நடைபெறும் நிகழ்ச்சிகளின் அதே-நேர வர்ணனைக்கு (running commentry) ஏற்பாடுகள் செய்திடல் அவசியம்.

212.02. நிகழ்ச்சிகளின் வர்ணனையாளர்களை (commentators) முன்கூட்டியே தெரிவு செய்து, அவர்க்குத் தேவையான ஸ்தல புராண வரலாறுகளையும், திருப்பணிகள் குறித்த விவரங்களையும், நிகழ்ச்சி நிரல்கள் குறித்த விரிவான செய்திகளையும் ஈந்து, அவர்தம் வர்ணனை பயனுள்ளதாக, சுவையானதாகச் செய்திடல் வேண்டும்.

212.03. வர்ணனையாளர்கள் இருந்து, நடந்து, இடம் பெயர்ந்து சென்று ஆற்ற வேண்டிய பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டு, ஒரு ஒருங்கிணைப்பாளரது தலைமையின்கீழ் அவர்களை ஒற்றுமைப்படுத்தி,

கேட்போர் அனைவரையும் அவர்களது சேவையின் சிறப்பை உணர்ந்திடச் செய்தல் வேண்டும்.

212.04. அவர்கள் அனைவருக்கும் ஒலிபெருக்கிச் சாதனங்களோடு தொடர்பு அறுந்திட வாய்ப்பில்லாத வகையில் இணைப்புகள் ஏற்படுத்தித் தந்திடல் அவசியம். இந்நாட்களில் ப்ரபலமாகி வரும் 'கம்பி இல்லா பேச்சுக்குழல்கள்' (cordless microphones) இவ்வகையில் மிகவும் உதவியாக இருக்கக் கூடும்!

212.05. *கோபுரே, சிகரே, த்வாரே, ப்ராகாரே, பலிபீடகே, அர்ச்சகே, மூலலிங்கேது ஸப்த தர்சனம் உத்தமம்* என்று ஆகமங்கள் கூறுகின்றன. கோபுரம், விமான ஸ்தூபி, திருக்கோயில் வாயில் (த்வாரம்), ப்ராகாரம், பலிபீடம், மூலலிங்கத்துக்கு அர்ச்சனை செய்து வெளியே வரும் அர்ச்சகர், மூலலிங்கம் ஆகிய ஏழுமே இறைவன் உறையும் இடங்களாகும் என்கின்றன ஆகமங்கள்; அவற்றில் எதை வணங்கினாலும் இறைவனை வணங்குவதாகும்; சம பலனை அளிக்க வல்லதாகும். கும்பாபிஷேக காலங்களில், இட நெருக்கடி காரணமாக, உள்ளே சென்று தரிசிக்க இயலாவிட்டாலும், கோபுரத்திற்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தை மட்டுமாவது தரிசித்தால் போதும்; அது முழுப்பலனையும் அளிக்க வல்லது. அதே போல, ஆலயத்திற்குள் வர இயலாத நாட்கள் அல்லது வேளைகளில் கூட, பக்தர்கள் இறைவனை வணங்கி முழுப் பயனையும் பெற வேண்டும் என்பதற்காகவே கோபுரங்கள் உயரமாக எழுப்பப் படுகின்றன. இந்த உண்மைகள் பக்தர்களிடையே கும்பாபிஷேக்துக்குப் பல நாட்கள் முன்னதாகவே திரும்பத் திரும்ப எடுத்துக் கூறப்பட வேண்டும். இதன் விளைவாகக் கும்பாபிஷேக நாளன்று அலைமோதும் மக்கள் வெள்ளத்தை அமைதிப்படுத்துவது எளிதாகும். அந்த நேரங்களில்

வர்ணனையாளர்களுங்கூட இச்செய்தியைத் திரும்பத் திரும்ப ஒலி பரப்பிக்கொண்டிருப்பது நல்லது.

212.06. நிகழ்ச்சிகளின் வர்ணனையாளர்கள், நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் குறித்தும், அவை தொடர்புள்ள வேத ஆகமச் சான்றுகள் குறித்தும், திருக்கோயில் வரலாறு, அமைப்பு, திருப்பணிகள் குறித்தும், தரிசனம் செய்ய வந்துள்ளோரின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு நிர்வாகிகள் தரும் செய்திகளையும் அறிவித்துக் கொண்டிருக்க வேண்டும். மந்த்ரங்கள் ஒலிபெருக்கியில் வரவேண்டிய நேரங்களில் அவற்றுக்கு முன்னுரிமை ஈந்து, அவை என்ன என்பதைச் சிறு விளக்கமாக முன்னதாகவோ அல்லது பின்னதாகவோ அறிவித்து, தங்கள் வர்ணனையைப் பரிமளிக்கச் செய்தல் சிறந்தது.

212.07. இந்த நூலில் வேறோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, கும்பாபிஷேக சமயத்தில் பொதுமக்களைச் சற்று நேரம் வெளியே காக்க வைத்திருந்து, பின்னரே தரிசனத்துக்கு அனுமதி வழங்க வேண்டி வரும். அச்சமயங்களில் காத்திருப்போரின் பொறுமையின்மையைச் சமனப்படுத்துவது வர்ணனையாளர்களின் திறமையில்தான் உள்ளது என்றால் அது மிகையாகாது. என்ன நடந்து கொண்டிருக்கிறது, ஏன் தாமதமாகின்றது, எப்போது தரிசனம் கிடைக்கும், அதுவரை சிந்தனை ஓட்டத்தை எவ்வாறு இறை உணர்வு மிக்கதாக வைத்துக் கொள்ளலாம் என்பன போன்ற அறிவிப்புகளைச் சுவைபட ஒலிபரப்பிக் கொண்டு இருக்க வேண்டும். இவ்வாறான சமயங்களில், கேட்போரின் சிந்தனையைக் கஷ்டப்படுத்தாமல், எளிதில் புரியும் வண்ணம் பயனுள்ள செய்திகளைத் தந்து, மக்களின் கவனத்தை

ஈர்த்து நிலைநிறுத்திக் கொண்டு இருப்பதற்கு வேறு மாற்றே கிடையாது.

212.08. வர்ணனையாளர்கள், தங்களால் இயன்றவரை, நர ஸ்துதியைத் தவிர்த்திடல் தேவை. இறைப்பணியை ஆற்றுபவர்கள் ப்ரதிபலனையும், விளம்பரத்தையும் எதிர்பார்க்காது அப்பணிகளைச் செய்பவர்களே. வர்ணனையாளர்களும் அவ்வாறான இறைப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களே. இறைப்பணி செய்வோர்க்கு அவர்தம் செயலுக்குப் பலனாக இறையருள் முழுமையாக ஸித்திக்க வேண்டுமெனில், அச்செயல்கள் பற்றி விளம்பரங்கள் இல்லாதொழிவது இன்றியமையாதது.

212.09. வர்ணனையாளர்களுக்கு மட்டுமன்றி, யாகசாலைகள், வேத பாராயணம், திருமுறை பாராயணம், பாதுகாவல் கட்டுப்பாட்டு அறை ஆகிய அனைத்து இடங்களை ஒன்றிணைத்து ஒலிபெருக்கிகளும், தகவல் தொடர்பு வசதிகளும் தேவைக்கேற்ப அமைக்கப்படுதல் வேண்டும்..

ௐ ௐ ௐ ௐ ௐ

213. தரிசனம் சிறக்க வழிவகை செய்தல்

213.01. கும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகளுக்கு வருகை தருவோருக்கு உதவவும், அவர்களை ஒழுங்கு படுத்தவும் தொண்டர் குழாமும் (volunteers), அவர்க்கான பயிற்சியும், ஒருங்கிணைப்பும் திட்டமிடப்படுதல் வேண்டும்.

213.02. தொண்டர்களுக்குச் சின்னங்கள் (badges) கொடுத்து அணியச் செய்யலாம். அதற்கான ஏற்பாடுகள்

முன்கூட்டியே செய்யப்படுதல் அவசியம். எத்தனை வகைகள் (badges meant for different grades / levels of volunteers and designs to denote such levels), எத்தனை எண்ணிக்கைகள் (how many numbers) தேவை, அவை எங்கே அணியப்பட வேண்டும், எந்த நாட்களில் எந்த வேளைகளில் அணியப்பட வேண்டும் ஆகியவற்றைத் திட்டமிட்டு அனைவருக்கும் அறிவித்திட்டால் மட்டுமே, பெருஞ்சிலவில் சின்னங்கள் தயாரித்து வழங்குவதற்குப் பயன் கிடைக்கும்.

213.03. சில - பல தொண்டர்கள் மேல் சட்டை அணியாமல் தொண்டாற்ற விழைவர் அல்லது தொண்டாற்ற வேண்டி வரும். அவர்கள் சட்டையில் சின்னங்கள் அணிவதென்பது இயலாத காரியம். உபயதாரர்களுக்கு மரியாதை செய்வதற்காகக் கும்பாபிஷேகச் செய்திகள் தாங்கிய துண்டுகள் தயாரிப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தால் (1) உபயதாரர்க்கு மரியாதை கும்பாபிஷேக நாளுக்குப் பிறகு செய்வதாக இருந்தால், அத்தகைய துண்டுகளை அதிக அளவில் தயாரித்து, தொண்டர்களுக்கு முன்னதாகவே வழங்கி அவர்களை விழா நாட்களில் இடுப்பில் கட்டி வரச் செய்யலாம், அல்லது (2) அத்தகைய துண்டுகளைத் தொண்டர்க்கென வேறு வண்ணத்திலே தயாரித்து அவர்களை அணியச் செய்யலாம். இவ்வாறு செய்வதன் மூலம் தொண்டர்க்கு மரியாதை செய்த பலனும் கிட்டும்; தொண்டர்களைக் கூட்டத்தினிடையே தனியே பிரித்துக் காட்டி, தரிசனம் செய்ய வருவோருக்கு அவர்தம் சேவை எளிதில் கிடைக்கவும் வழிவகை செய்யும்..

213.04. முதலுதவிப் படையினர் (St.John's Ambulance Brigade போன்றோர்), தீயணைப்புத் துறையினர், காவல் துறையினர், மின் விநியோகத் துறையினர் ஆகியோருக்கு முன்கூட்டியே கும்பாபிஷேக நிகழ்ச்சி நிரல் குறித்துத் தெரிவித்து, முன் ஏற்பாடுகள் செய்திடல் அவசியம். தீயணைப்புத் துறையினருக்குத் தேவையான நீர் எங்கிருந்து பெற இயலும் என்பதை அறிந்து வைத்திருத்தல் நல்லது. காவல் நிலையம், தீயணைப்பு நிலையம் ஆகியவற்றின் தொலைபேசி எண்கள் பெரும்பாலான தொண்டர்களிடம் இருக்குமாறு செய்தல் நல்லது.

213.05. திருக்கோயிலில் தொண்டு புரியும் பல்வேறு குழுக்களின் அங்கத்தினர்கள் மட்டுமின்றி, மற்ற இடங்களில் செயலாற்றி வரும் தொண்டு நிறுவனங்கள், சமயப் பணி மன்றங்கள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு, அவர்களது அங்கத்தினர்களின் உதவியையும் பெற்று, சேவார்த்திகளுக்கு உதவலாம். ஆனால் அவ்வாறு திரட்டப்படும் தொண்டர்களின் எண்ணிக்கை (மற்றும், அத்தொண்டர்களுடைய பெயரைக் கூறிக்கொண்டு உள்ளே நுழைந்திட்ட சமயோசித புத்தி படைத்த அன்பர்கள் சேர்ந்த எண்ணிக்கை!) அதிகமாகி, தரிசனம் செய்ய வருபவர்க்கு உதவி குறைவாகவும், உபத்திரவம் அதிகமாகவும் ஆகிவிடாமல் பார்த்துக் கொள்வது இன்றியமையாதது!

213.06. அங்க ந்யாஸம், கர ந்யாஸம், சிவோகம்பாவனை போன்றவற்றால் தன் அவயங்களையும் உள்ளத்தையும் சுத்தி செய்துகொண்டு, இறை வயப்பட்டு, பரார்த்த பூஜை செய்வது என்ற நியதி சிவாச்சார்யார்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆகம விதிப்படி செய்யப்படும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில், யாகசாலை கும்பத்து நீரை எடுத்து கலசங்கள் மற்றும் பிம்பங்கள்

மீது சொரிவதான கும்பாபிஷேகக் கிரியைகளை, முறையாக ஆச்சார்ய அபிஷேகம் செய்துகொண்ட சிவாச்சார்யார்களைக் கொண்டு, அவர்தம் கைகளினால் மட்டும் செய்வித்தலே உத்தமம். கோபுரங்கள் மீதும், விமானங்கள் மீதும், கும்பாபிஷேக வேளையில் மற்றவர்கள் ஏறி நிற்பதும், கருவறைகளுக்குள் சென்று அருகிலிருந்து அபிஷேகக் காட்சிகளை கண்ணுறுவதுங்கூட உசிதம் அல்ல. கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்தி வைக்கும் உத்தம சீலர்கள், தாம் மேற்கொண்ட பணி *மெய்யன்பர்கள் கும்பாபிஷேகத்தை நன்கு கண்டு களிக்க உதவுவதே* என்பதை உணர்ந்து ஒழுகி, அவர்தம் வாழ்த்துக்களைப் பெறுதலே முறை; அதுவே அவர்களுக்குப் புண்ணியம் பயப்பது; அச்சீலர்கள் பட்ட பாட்டிற்குப் பலன் அளிப்பது! அவ்வாறின்றி, கும்பாபிஷேகத்தைக் கண்டுய்ய வரும் மெய்யன்பர்களது கண்பார்வைக்கு குறுக்காக, இடையூறுக, இடராக நின்றிருப்பதால், இறுமாப்புற்றவன் என்ற பொல்லாப் பழி கூட விழ வாய்ப்புள்ளதே! ஆன்மீகம் போற்றும் பார்வையாளர்கள் மனம் வருந்தி, குமுறி, நம்மைப் பற்றி ஒவ்வாச் சொற்கள் நவில வாய்ப்பளிப்பது அழகோ?

ௐ ௐ ௐ ௐ ௐ

214. பாதுகாப்பு

214.01. கலாகர்ஷணம் ஆகி கும்பங்கள் யாகசாலைகளை அடைந்து அங்கே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இரவுகள் கொலுவிருக்கின்றன. 2 கால பூஜைகளோடு பாலஸ்தாபனமானால் இடைப்படுவது 1 இரவு. 4 கால பூஜைகளோடு கும்பாபிஷேகமானால் இடைப்படுவது 2 இரவுகள்; அதிக கால பூஜைகளானால் 2-க்கு மேல்

இரவுகள் இடைப்படும். அந்நாட்களில், யாகசாலைகளுக்கு இரவுக் காவல் அவசியம். அப்போது, பஜனை நிகழ்ச்சிகள், இசைப்பேருரைகள், தெய்வீகக் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை இரவு நேர *ஜாகரண்* - கண்விழித்துப் காவல் புரிவது - நிகழ்ச்சிகளாக ஏற்பாடு செய்யலாம். கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் இரவு நாட்டியம், சங்கீதம் (பஜனை) போன்ற உபசாரங்களால் இறைவனை மகிழ்வித்துக் காத்திருக்க வேண்டும் என்று பொருள்படும் "ந்ருத்ய கீத உபசாரை ஸஹ ராத்ரோ ஜாகரணம் க்ருத்வா" என்றொரு ஆகம வாக்யம் உண்டு.

214.02. மேற்கூறிய இரவுக் காவலுக்கும், பகல் நேரத்தில் (குறிப்பாகக் கும்பாபிஷேக நாளன்று) பக்தர்களை ஒழுங்கு செய்வதற்கும், போதிய தொண்டர்கள் இல்லை எனின், அலுவலகங்களுக்குக் காவல் பொறுப்பு மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்களை அணுகி அவர்களது சேவையை ஏற்பாடு செய்து கொள்வது குறித்து ஆலோசிக்கலாம்.

214.03. மஹா கும்பாபிஷேகத்திற்காகக் கும்பங்கள் புறப்பட்டுச் சென்ற பிறகு, யாகசாலைகளுள் புகுந்து, புண்ணியம் தேடி, புனிதப் பொருள்களை பற்றி இழுத்துச் செல்லும் பக்தர்களால் ஊறு விளைய வாய்ப்புகள் உண்டு. எனவே, அனைத்து யாகசாலைகளுக்கும் பலத்த காவல் தேவை.

214.04. கும்பாபிஷேகம் நிறைவடையும் தறுவாயில், பொறுப்புள்ள அன்பர் ஒருவர், தன் குழுவுடன் சென்று, அனைத்து இடங்களையும் சோதித்து, ஆங்காங்கே கிடக்கும் உபகரணங்களைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டுவதாக, முன்னமேயே நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

ॐ ॐ ॐ ॐ ॐ

215. புகைப்படங்கள்

215.01. கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை புகைப்படம் (நிழற்படம் - Still Photography) எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும். புகைப்படக் கலைஞர்கள், இறை உணர்வு மிக்கவராயும், உடை உள்ளம் செய்கைகள் ஆகியவற்றில் நியம நிஷ்டைகள் அனுசரிப்பவராயும், பய பக்தியுடன் நிகழ்த்தப்பெறும் கிரியைகளுக்கு ஊறு விளைவிக்காதவராயும் இருப்பதே சிறந்தது. இல்லையென்றால், தொண்டர் படையினரில் சிலரே அப்பணியை மேற்கொண்டு விடலாம்!

215.02. புகைப்படம் எடுக்கும் தொழிலாளர்கள் திருமணம் போன்ற அடிக்கடி நிகழும் விழாக்கள் பலவற்றில் பணியாற்றி இருப்பார்கள். ஆதலால், அவர்கள் அத்தகைய வைபவங்களில் எங்கே படம் எடுக்க வேண்டும், எத்தனை படங்கள் எடுக்க வேண்டும் என்பதில் அனுபவம் உள்ளவர்களாக இருப்பர். ஆனால் கும்பாபிஷேக விழாக்களில் பணியாற்றிய அனுபவம் அநேகமாக அவர்களுக்கு இருக்கவே இருக்காது. எனவே, எந்தெந்த இடங்களில், எந்த நிகழ்ச்சிகளைப் படம் எடுக்க வேண்டும், எத்தனைப் படங்கள் எடுக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு ஐயமற முன் கூட்டியே சொல்லிக் கொடுப்பது அவசியம். அது மட்டுமின்றி, அவ்வப்போது அவர்களது பணியையும் கண்காணித்து வரவேண்டும். இல்லையென்றால், முக்கியமாக எடுக்கப்பட வேண்டிய காட்சிகள் விடுபட்டுப் போகவும், தேவையற்ற நிகழ்ச்சிகள் எடுக்கப்படவும், ஒரே நிகழ்ச்சியைத் தேவையின்றிப் பல கோணங்களில் எடுத்து விரயப்படுத்தவும் வாய்ப்புகள் ஏராளமாகும். இந்த கசப்பான உண்மை

கும்பாபிஷேகத்துக்குப் பிறகு அவரது பணிக்கான தொகையைக் கணக்கிட்டுத் தரும்போதுதான் புரியும், நெஞ்சு வலியையும் தரும்!

215.03. வீடியோ, டீ.வீ. (Video, C.C.T.V.) இவை தேவைதானு என்பதை ஆலோசிக்க வேண்டும். இவற்றை அமைத்து, நடத்தித் தரும் பணியை மேற்கொண்டோர் தங்கள் கடமைக்கான் வேண்டித் திரியும்போது, பய பக்தியுடன் ஆன்மீக உணர்வு பொங்க நிகழ்த்தப் பட்டுக் கொண்டிருக்கும் கும்பாபிஷேகக் கிரியைகளுக்கு இடையூறு நிகழ அதிக வாய்ப்புகள் உருவாகின்றதாகவும், அவ்வாறு எடுக்கப்படும் ஒளி-நாடாக்கள் ஒரு சிலரிடம் மட்டுமே தங்கி இருந்து பொதுவாக அனைவருக்கும் பயன்படுவதில்லை என்பதாகவும், அந்த நாடாக்களும், நிழற்படங்களைப் போலன்றி, விரைவாகவே பயனற்றதாகி விடுகின்றன என்பதும் பலரது கருத்து!

215.04. நிழற்படமாயினும் சரி, வீடியோவாயினும் சரி, மூலஸ்தான மூர்த்திகளைப் படம் எடுப்பது முற்றிலுமாகத் தடை செய்யப்பட வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை!

ௐ ௐ ௐ ௐ ௐ

216. மஹாபிஷேகம்

216.01. கும்பாபிஷேகம் ஆனவுடன், ஸர்வஸாதகரால் வெளியிலிருந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ள சிவாச்சார்யார்கள் தங்கள் தலங்களுக்குத் திரும்ப ஆயத்தமாகி விடுவர். ஸ்தல ஸ்தானிகர்களின் எண்ணிக்கையைப் பொருத்து, அனைத்து

ஸந்நிதிகளிலும் ஒரு சேர மஹாபிஷேகம் நடைபெறுவதற்கும், பின்னர் அன்பர்கள் தரிசனம் செய்தவாறு செல்லுங் காலத்தில் அனைத்து ஸந்நிதிகளிலும் தீப ஆராதனை செய்வதற்கும், அதிகப்படியாக சிவாச்சார்யார்கள் தேவைப் படக் கூடும். ஸர்வஸாதகரோடு கலந்தாலோசித்து, அதற்கென சில சிவாச்சார்யார்களை நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

216.02. அஷ்டபந்தன கும்பாபிஷேகம் ஆன பிறகு செய்யப்படும் முதல் அபிஷேகம் மஹாபிஷேகம். மண்டலாபிஷேகத்தின் முதல் நாள் அபிஷேகமும் மஹாபிஷேகமே. எனவே இதனைக் காண அதிக அளவில் மக்கள் விழைவர். கருவறைக் கும்பாபிஷேகத்தைக் காண பொதுமக்களை அனுமதிக்க இயலாத நிலை இருந்தாலும், மஹாபிஷேகத்தைக் காணவாவது அவர்களைக் க்யூ வரிசையிலாவது அனுமதிப்பதே நல்லது. மண்டலாபிஷேக-மஹாபிஷேகத்துக்குப் பல அபிஷேக த்ரவ்யங்கள், அதிகமாக அல்லது முற்றிலுமாகப், பயன்படுத்தக் கூடாதென்ற நியதி உண்டு. எனவே, நிறையப் பால் ஏற்பாடு செய்து வைத்திருந்து, மூல லிங்கத்திற்கு நிதானமாக நிறைய நேரம் பால் அபிஷேகம் செய்தால் பக்தர்களில் பெரும்பாலானோர் வரிசையாகச் செல்லும்போதே, கண் குளிர, அத்திருக்காட்சிதனைக் கண்டுய்ய வாய்ப்பு கிட்டும்.

ॐ ॐ ॐ ॐ ॐ


217. திருக்கல்யாணம்

217.01. மஹா கும்பாபிஷேகத்தன்று மாலை,

ஸ்வாமிக்கும்-அம்பாளுக்கும் விசேஷ திருக்கல்யாண மஹோத்ஸவம் செய்து வைக்க வேண்டும் என்பது ஆகமங்கள் கூறும் விதி. அதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்திடல் வேண்டும். இந்தத் திருக்கல்யாணத்துக்கு ஸோமாஸ்கந்தர் உற்சவ மூர்த்தியையும், அதற்கேற்ற த்வி-புஜ அம்பாள் உற்சவ விக்ரஹத்தையும் பயன் படுத்துவது மரபு.

217.02. ரிஷப வாஹனங்களில் ஐயனையும் அம்மையையும் திருவீதி உலாவுக்கென அமர்த்தி அலங்கரித்து ஆயத்தமாக்கி, அவ்வாறே திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, திருக்கல்யாண உற்சவத்தை நிகழ்த்திஞல், பின்னர் தாமதமின்றி திருவீதி உலாவைத் தொடக்லாம்.

217.03. திருக்கல்யாண மஹோத்ஸவத்திற்கு வெளியே இருந்து வந்துள்ள சிவாச்சார்யார்களது உதவி



திருக்கல்யாணம் (தன்மீசர் ஆலயம், 10.09.2000)

தேவையா என்பதையும் முன் கூட்டியே நிச்சயம் செய்து, ஸர்வஸாதகருடன் ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

217.04. திருக்கல்யாணத்திற்கெனத் தனியாகப் புது வஸ்த்ரங்களும், நைவேத்யங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். நைவேத்யங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டுமானல் அதற்குத் தகுந்த அளவில் அவை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ

218. பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா

218.01. மஹாகும்பாபிஷேகத்தன்று பஞ்சமூர்த்தியரின் திருவீதி உலா ஏற்பாடு செய்தல் மரபு. இந்த வைபவத்தை நிகழ்த்துவதற்கும் வெளியே இருந்து வந்துள்ள சிவாச்சார்யார்களது உதவி தேவையா என்பதையும் முன் கூட்டியே நிச்சயம் செய்து ஸர்வஸாதகரோடு ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

218.02. பஞ்ச மூர்த்தியரின் அலங்காரத்திற்குத் தேவையான உபகரணங்கள் (நகைகள், அவயவங்கள், ஆயுதங்கள் போன்றவை) முன் கூட்டியே ஏற்பாடு செய்து வைப்பது அவசியம்.

218.03. திருவீதி உலாவுக்குத் தேவை (1) ஸோமாஸ்கந்தர் விக்ரஹம் (2) அதற்கேற்ற த்விபுஜ அம்பாள் விக்ரஹம் (உலா-அம்பாள்) (3) விநாயகர் விக்ரஹம் (4) வல்லீ-தேவஸேனு ஸமேத ஸுப்ரஹ்மண்யர் விக்ரஹங்கள் (5) சண்டிகேச்வரர் விக்ரஹம். முன்கூட்டியே திட்டமிட்டு, தேவையான விக்ரஹங்களை சுவாமிமலையில் உள்ள கலைக்கூடங்கள் போன்ற

உற்பத்தித் தலங்களிலிருந்து தருவித்து, அவற்றிற்கான கிரியைகளைக் கும்பாபிஷேக சமயத்தில் செய்து தயாராக்குதல் வேண்டும்.

218.04. ஸ்வாமி, அம்பாள், சண்டிகேச்வரர் ஆகிய மூவருக்கும் ரிஷப வாஹனமும், வல்லி - தேவஸேனு - ஸுப்ரஹ்மண்யருக்கு ஒருசேர மயில் வாஹனமும், விநாயகருக்கு மூஷிக வாஹனமும் ஏற்பாடு செய்து திருவீதி உலா நடத்திட இயலுமாயின், அது மிக மிகச் சிறந்தது.

218.05. திருவீதி உலாவுக்கென சிறப்பு அலங்கார சாதனங்கள், அலங்காரத்திற்குத் தேவையான புஷ்பப் பொருள்கள், அலங்காரம் செய்வதற்குத் தேவையான கயிறு நார் கொம்புகள் முதலிய சாதனங்கள், பெட்ரோமாக்ஸ் விளக்குகள், நாதஸ்வரம்,



திருவீதி உலா (தன்மீசர் ஆலயம், 10.09.2000)

படிச்சட்டங்கள், வாஹனங்கள், ஸ்வாமியை படிச்சட்டங்களோடு இணைக்கத் தேவையான கயிறுகள், வாரைகள், வாரை கட்டக் கயிறு, ஆயக்கால்கள், தேவைக்கேற்பச் சப்பரம் போன்ற இழுத்துச் செல்ல தேவையான சாதனங்கள், குடைகள், சாமரங்கள், தாள வ்ருந்தங்கள், ஆலவட்டங்கள், கொடிகள், மகர தோரணங்கள், அலங்காரப் பொருட்கள், ராஜோபசார பரிவாரங்கள், முகபடாம் சூட்டப்பெற்ற யானைகள், வாணவேடிக்கைகள் முதலியன இயன்றவரை முன்கூட்டியே திட்டமிடப்பட்டு சேகரிக்கப்படுதலும் ஏற்பாடு செய்யப்படுதலும் வேண்டும்.

218.06. திருவீதி உலா செல்ல வேண்டிய தடம் குறித்து முன்னமேயே பரிசோதித்துக், கலந்தாலோசித்து முடிவுகள் மேற்கொள்ளப் படுதல் அவசியம். அந்தத் தடங்களைப் பார்வையிட்டு, சாலைகளைச் செப்பனிடுதல், மரக்கிளைகளைக் களைதல் போன்ற பணிகளை முன்கூட்டியே செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

218.07. பஞ்ச மூர்த்தியரின் உலா வழித்தடம் குறித்த அறிவிப்புகளை முன்னதாகவே அனைவருக்கும் தெரியச் செய்தால், அவரவர்கள் பூஜா த்ரவ்யங்களோடு காத்திருக்கவும், அடுத்த தெருக்களில் உள்ளவர்கள் தெருக்கள் சந்திக்கும் இடங்களுக்கு வந்து வழிபட்டுச் செல்லவும் வசதியாக இருக்கும்.

218.08. மூர்த்திகள் உலா வரும் தடத்தில், சற்று முன்னதாக, இரு தொண்டர்கள் சென்று, ஆங்காங்கே காத்திருக்கும் அன்பர்களது பூஜா த்ரவ்யங்களைப் பெற்று, தாங்கள் எடுத்துச் செல்லும் கத்திகளைக் கொண்டு தேங்காய்களை உடைத்து வைத்திருப்பது, பைகளில் தருவோரது த்ரவ்யங்களைத் தாங்கள் எடுத்துச் செல்லும் தட்டுகளில் அடுக்கி அவற்றை ஆயத்தமாக

வைத்திருப்பது போன்றவற்றைத் திட்டமிட்டுச் செய்தால், திருவீதி உலா நிகழ்ச்சி மிகவும் நன்றுக நடந்து முடிகின்றது. உடைக்கப்பட்ட தேங்காய்களின் இரு மூடிகளில் நுனி மூடி (கண்கள் இல்லாத மூடி) திருக்கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சுவாமியை எடுத்துச் செல்லத் தோள் கொடுக்கும் தொண்டர்களுக்கும் மற்றவர்க்கும் ப்ரசாதமாகக் கொடுக்கப்படுவது வழக்கம்.

218.09. திருவீதி உலாவில், ஸ்வாமிகளைத் தூக்குவதற்காகத் தொண்டர் படையோ, தேவைப்பட்டால் கூலிப் படையோ ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

218.10. திருவீதி உலாவின்போது நாதஸ்வர கலைஞர்கள் மல்லாரி வாசிப்பது மரபு. அந்த மரபு காக்கப்பட வேண்டும்.

218.11. ஸ்வாமியைத் தூக்கும் *சிவ பாதம் தாங்கிகளாம்* தொண்டர் குழுக்களில் சில அனுபவமும் ஆர்வமும் ஆழ்ந்த இறை உணர்வும் கொண்ட இளைஞர்களைக் கொண்டது. அவர்கள் இறைவனைச் சுமந்தபடி நடமாடிச் செல்வது காண்பதற்கரிய காட்சி. அதற்கு ஏற்ப நாதஸ்வர கலைஞர்கள் மகுடி, காவடிச் சிந்து போன்ற ராகங்களையும், மெட்டுக்களையும் வாசிக்குமாறு ஏற்பாடுகள் செய்யலாம். அகண்டதாக உள்ள வீதிகள், சந்திகள் ஆகிய இடங்களைத் தெரிந்தெடுத்து, முன்னதாகவே அவ்விடங்களுக்குச் சென்று கற்கள், குப்பைகள் முதலியவற்றை அகற்றி *சிவ பாதம் தாங்கிகள்* அங்கே ஆனந்தக் கூத்தாடிட வகை செய்தல் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

218.12. திருவீதி உலா நிறைவு செய்து ஸ்வாமி ஆலயம் திரும்பிய உடன், அவருக்கு உபசாரங்கள் செய்து, நைவேத்யங்கள் செய்து, அவற்றை அனைவருக்கும்

விநியோகம் செய்வர். இதற்கென, சுண்டலும் காய்ச்சிய பாலும் நிவேதனமாக ஏற்பாடு செய்வது வழக்கம்.

ௐ ௐ ௐ ௐ ௐ

219. பணியாளர்க்கு மரியாதை

219.01. ஸ்தபதியாருக்கும், அவரோடிணைந்து திருக்கோயிலில் நிர்மாணப் பணி செய்தோருக்கும், மஹா கும்பாபிஷேகத்தின் போது மரியாதைகள் செய்யப்படுதல் வேண்டும். அவரையும், மற்றவர்களையும் கலந்தாலோசித்து அதற்குரிய ஏற்பாடுகளைத் திட்டமிட்டு செய்தல் வேண்டும்.

219.02. அவ்வாறே, திருக்கோயிலில் சாதாரண நாட்களில் பணி புரியும், பணி புரிந்த, ஏனைய அன்பர்க்கும், கும்பாபிஷேகத்தை ஒட்டி திருக்கோயில் பணியில் ஈடுபட்டு நின்றோர்க்கும், எவ்வகையில் யார் யாருக்கு மரியாதைகள் செய்திட வேண்டும் என்பதனை முன் கூட்டியே நிச்சயித்து, அதற்குரிய ஏற்பாடுகளைத் திட்டமிட்டு செய்தல் வேண்டும்.

219.03. கும்பாபிஷேகப் பணிகளில் சிலர் தாமாகவே முன் வந்து, அமைதியாகப் பணியாற்றி உதவுவதைக் காணலாம். சாதாரணமாக அவர்கள் எந்த குழுவிலும் இடம் பெறுதவர்களே! அவர்களுள் பெரும்பாலானவர்களின் பெயர்கள் கூட நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுக்குத் தெரிய வராது! ஐயனின் அருளால் காலம் அத்தகையோரை முன் கொணர்ந்து அளித்து உதவும்; அவர்களை நிர்வாகிகளுக்குக் காட்டித் தரும். அவர்களுக்கு, கும்பாபிஷேகத்தின் நிறைவாக மரியாதை செய்யப்படுதல் வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ

220. திருக்கோயில் பராமரிப்பு

220.01. கற்பூரம், அதுவும் பயங்கரமான புகை எழச் செய்து சுற்றுச் சூழலை நாசம் செய்யும், தற்காலத்தில் கடைகளில் விற்கப்படும் ரஸாயனக் கலவையினுலான கற்பூரம்! அதை உபயோகித்து இறைவனுக்குத் தீபாராதனை செய்ய வேண்டும் என்று வேதங்களிலோ ஆகமங்களிலோ சொல்லப் பட்டுள்ளதாகத் தெரியவில்லை என்பது வேத ஆகம வல்லுநர்களின் கூற்று! எனவே சிவாலயங்களில் கற்பூர ஹாரத்தி செய்வது பல திருக்கோயில்களில் நிறுத்தப்பட்டு வருகின்றது. நெய் தீபம் கொண்டே ஆராதனை செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்வதற்குச் சான்று ஸகலாகம ஸங்க்ரஹே ச்லோகங்கள் 778, 779 -இல் காணப்படுகின்றன. *கோ க்ருதேன தைலேன கற்பூர வர்த்தி தீபிகாம்* என்ற வாக்கியம், பசுவின் நெய்யை (*கோ க்ருதம்*) எடுத்து இளக்கித் தைலமாக்கி (*தைலேன*), (உணவிற்குச் சேர்க்கும் பச்சைக்) கற்பூரத்தை அதனோடு சேர்த்து (*கற்பூர*), அந்தக் கலவையில் திரியை (*வர்த்தி*) நனைத்து (அல்லது ஊற வைத்திருந்து) எடுத்து, அதைக்கொண்டு தீபம் (*தீபிகாம்*) ஏற்றி வழிபடுவது *உத்தம தீப ஆராதனை* என்று சொல்லப்பட்டுள்ளது. ஆட்டு நெய் தவிர மற்ற நெய்களால் தீபம் ஏற்றி ஆராதிப்பது இரண்டாம் பக்ஷம்; ஆட்டு நெய் அல்லது நல்லெண்ணெயால் தீபம் ஏற்றி ஆராதனை செய்வது மூன்றும் பக்ஷம். மரங்களில் விளையும் கொட்டைகளிலிருந்து கிடைக்கும் விதைகளிலிருந்து எடுக்கப்படும் (பருத்தி, ஆமணக்கு போன்ற) எண்ணெயைக் கொண்டு தீபம் ஏற்றி ஆராதனை செய்யக் கூடாது. இலுப்பெண்ணெய் இதற்கு விலக்கு;

அது இலுப்பை நெய் என்றே அழைக்கப் படும்; அதை ஒரு எண்ணெயாகக் கருதுவதில்லே.

220.02. தற்போது தயாராகி வரும் கற்பூர வில்லேகளில், ரஸாயனக் கலவைகளின் வீர்யம் காரணமாக, திருக்கோயிலுள்ளும், கருவறைகளிலும், விக்ரஹங்கள் மீதும், நிறையக் கரி படிகின்றது; பாடுபட்டுத் திருப்பணி செய்து பொலிவூட்டிய திருக்கோயில் வளாகம், நம் கண்களின் முன்னேயே பொலிவு குன்றுவதைக் காணுதல் முறையா? பல பழம் பெரும் ஆலயங்களில் கூட நெய் தீபாராதனே முறை மேற்கொள்ளப்பட்டுவிட்டதே? கும்பாபிஷேகத்துக்குப் பிறகு, திருக்கோயிலுள் கற்பூரத்துக்கு மாற்றுக, நெய் தீபம் மட்டுமே உபயோகித்தல் வேண்டும் என்று ஏன் முடிவு செய்யலாகாது?

220.03. அன்பர்கள் தாங்கள் நேர்ந்து கொண்ட தெய்வங்களின் ஸந்நிதியில் விளக்கேற்றி வழிபடுவது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று. ஆனுல், அவ்வாறு ஏற்றப்படும் விளக்குகளே அங்கேயே அவர்கள் விட்டு விட்டுச் செல்ல வேண்டும் என்று எந்த விதியும் இல்லே! எனவே, விளக்கேற்றி வழிபடுபவர்கள், வழிபட்ட பின் அவரவர் ஏற்றிய விளக்குகளே அவர்களே எடுத்துச் சென்று, வெளி ப்ராகாரங்களில் அமைக்கப்பட்டுள்ள திருவிளக்கு மாடங்களில் அவற்றை விட்டுச் செல்ல வேண்டும் என்ற விதியை அமுலாக்க வேண்டும். அவ்வாறு செய்வதனுல், திருக்கோயில் வளாகம் கரி படிந்து மாசுறுவதைத் தவிர்க்கலாம்; அன்றியும், ஸந்நிதிக்கு அருகே ஏற்றப்பட்ட விளக்குகளால் மூர்த்திக்குச் சாத்தப்பட்டிருக்கும் வஸ்த்ரமே தீப்பிடித்துக்கொள்வது போன்ற ஒவ்வாத நிகழ்ச்சிகளேயும் தவிர்க்கலாம்.

220.04. விளக்கேற்றிய எண்ணெய் விரல்களைத் திருக்கோயில் சுவரில் தடவிச் சுத்தம் செய்து கொள்ளும் அதி-சுத்தமானவர்களும், தான் படிக்கும் வகுப்பு எண்ணைத் திருக்கோயில் சுவரில் எழுதுவதால் பாஸ் ஆகிவிடலாம் என்று தப்புக் கணக்கு போடும் அறியாச் சிறுவர்களும் திருக்கோயிலுக்கு விஜயம் செய்யக் காண்கிறோம்! அவர்களையும் நால் வகை உபாயங்களாலும் அறிவுறுத்துதல் அவசியம்! விளக்கு ஏற்றுவதற்காக உபகரணங்கள் எடுத்து வருபவர்கள் எண்ணெய்க் கையைத் துடைத்துக்கொள்ள ஒரு சிறு துண்டும் எடுத்து வரலாமே! விளங்குமாறு எடுத்துக் கூறினுல் நல்ல பயன் கிடைப்பது கண்கூடு.

220.05. ஆலய வளாகங்களினுள் நிறுவப்பட்டுள்ள பல வழிபடு பொருள்களை (த்வஜஸ்தம்பம், பலிபீடம், நந்தி, நவக்ரஹங்கள், கோஷ்டத்தில் ப்ரதிஷ்டை ஆகி உள்ள மூர்த்தங்கள் போன்றவை) அன்பர்கள் தொட்டு வணங்குவதைக் காண்கிறோம். சிலர் உதட்டிலும் மார்பிலும் தொட்டுக்கொண்ட கையோடு அவற்றைத் தொடுகின்றனர். சிலர் நந்திதேவரைக் கட்டிப்பிடித்துக் காதுகளில் ஓதுகின்றனர்! இவை எல்லாம் முறையானதன்று. ஆகம ப்ரதிஷ்டை ஆகியுள்ள ஆலயங்களிலே சிவோகம்பாவனை செய்யக் கூடிய தீக்ஷை பெற்ற சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே வழிபடு பொருட்களை தொட உரிமை உண்டு. மற்றவர்கள் தொடுவதால் இறை-ஸாந்நித்யம் குறைவு பட வாய்ப்புண்டு. அதனுல், அவ்வாறு தொடுபவர்களுக்கு தோஷம் விளையுமேயன்றி புண்ணியம் கிட்டுவதில்லை. இதனை அடிக்கடி ஒலிபெருக்கி அறிவுப்புகளின் மூலமும், சுவர்களில் எழுதி வைத்துள்ள அறிவுப்புக்களின் மூலமும் மக்களுக்கு அறிவுறுத்திக் கொண்டே இருத்தல் இன்றியமையாததாகின்றது.

220.06. ஆலயத்துள் நந்தியைக் கட்டிக் கொண்டு தொ(அ)ழுவோருக்கு ஒரு வார்த்தை: த்வஜஸ்தம்பத்துக்கு அருகிலுள்ள வ்ருஷப தேவரின் பின் புறமாக நின்று மூலலிங்கத்தை தரிசிக்க வேண்டும் என்பதாகத் தான் சைவ சித்தாந்த சாத்திரங்கள் கூறியுள்ளனவே தவிர (பிற்சேர்க்கையில் முழு விவரங்கள் காண்க), வாகனத்தின் காதில் ஓதுவதால் குறைகள் தீரும் என்று சாத்திரங்களில் உள்ளதாகத் தெரியவில்லை. புண்ணியம் தேட, தம் குறைகளை நீக்க வேண்டி ஐயனின் அருள் வேண்ட, கோயிலுக்கு வந்துவிட்டு, ஒவ்வாத செயல்களைச் செய்து தோஷத்தைச் சுமந்து வீடு திரும்புவது சரியா? அன்பர்களுக்கு இதனை அடிக்கடி எடுத்தியம்புவது அவசியமாக உள்ளது.

220.07. சிவாலயங்களிலும், ஆண்டிற்கு ஒரு முறை சிறப்பாக பவித்ரோத்ஸவம் செய்வது ஆலய ஸாந்நித்யத்தை போற்றும் முறைகளுள் ஒன்றாகும். விவரங்கள் பிற்சேர்க்கையில் காண்க.

ௐ ௐ ௐ ௐ ௐ

221. நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு, நிர்வாகம்

221.01. இது போட்டிகள் மிகுந்த உலகம்; இங்கே பொறாமைக்கும் பஞ்சமில்லை. நமது ப்ாரம்பர்யத்தையும் கலாச்சாரத்தையும் காத்து வருவதற்கு சங்கல்பம் செய்து கொண்டு, அதில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டவாறேதான் இந்த இருபத்து ஒன்றும் நூற்றாண்டிலே நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம். ஆனால் நம்முள் ஊறி இருந்த *போதுமென்ற மனமே பொன் செயும் மருந்து* என்ற பாரம்பர்ய மனப்பாங்கை (traditional mind-set) வழியில் எங்கேயோ

பறிகொடுத்துவிட்டுப் பரிதவிக்கிறோம். அவசியமற்றதும், தகுதிக்கு மேற்பட்டதும், சக்திக்கு அப்பாற்பட்டதுமான தேவைகளை நாகரிகம் என்ற பெயரால் பெருக்கிக் கொண்டு விட்டோம். அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் வழிவகைகளைத் தேடிப்பிடித்துக் கொள்வதிலேயே கண் திறந்திருக்கும் நேரம் முழுவதையும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். Enterprising, indispensable, modern, time-saving, space-saving, moving with times என்றெல்லாம் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு வருகிறோம். யாரும் காணாத நேரத்திலே, நம்முள் ஆயிரக்காணக்கான ஆண்டுகளாக வழி வழியாக வேரூன்றி நிற்கும் அந்த உண்மையான பாரம்பர்ய மனப்பாங்கு நம்முள் தலை தூக்கும்போது, தனிமையிலே மனம் நொந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில், இறை உணர்வு அதிகம் இருந்தாலும், தொண்டாற்ற வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து காணப்பட்டாலும், திருக்கோயில் தொண்டுக்கென நேரத்தை ஒதுக்கக் கூடியவர்கள் மிகச் சிலரே; அவர்களுள்ளும் நேரத்தை ஒதுக்கிக் கொண்டு தொண்டாற்ற வருபவர்கள் மிக மிகச் சிலரே. அந்தச் சிலரும், *பட்டதே போதும் பட முடியாதினித் துயரம்; பெற்றதே போதும் பேறென்ன கண்டோம்?* என்று வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிய *Sixty Plus* வயோதிகர்கள்தான். அநேகமாக அவர்களுள் ஒருவர்தான் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துத் தரும் பொறுப்பினில் இருப்பவராக இருப்பார்! அவர் சுற்று முற்றும் பார்த்தால் அவர்க்குத் துணை நிற்போர் அவரை விட மூத்தவர்களாகத்தான் இருப்பர்; அதுவும் எண்ணிக்கையில் மிகச் சிலரே இருப்பர்! இறை உணர்வு மிக்கு, தொண்டாற்றும்

ஆர்வம் காரணமாக, நிதி மற்றும் பொருளுதவிகள் பெற்றுத் தந்து, நேரம் கிடைத்த சில சமயங்களில் மட்டும் திருக்கோயிலை மறக்காமல் வலம் வந்து கொண்டிருக்கும் இளைஞர்கள், அவ்வப்போது நிர்வாகப் பொறுப்பு மேற்கொண்டோரை எதிர்பட்டு, அலுவலக பாணியில் கேட்கும் கேள்விகள் *நீ நடத்தித்தான் பாரேன்* என்று அவர்க்கு மறுமொழி பெற்றுத் தருவதில் ஆச்சர்யம் இல்லை! ஆனால், அவ்வாறு பதிலளித்தது தவறு என்பது பின்யோசனையில் (retrospective analysis) அந்த முதியவர்க்குப் பளிச்சிடும்! இளைஞர்கள் இதைப் புரிந்துகொண்டால் கேள்விகளைத் தவிர்க்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்! அந்த முதியவரின் இடத்தைப் பின்னொரு நாள் தான் பற்றிக் கொள்ள வேண்டியமைக்கு இந்நாளில் ஐயன் அனுக்ரஹிக்கும் பயிற்சியாக எண்ணித் தன் கண்ணோட்டத்தைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளலாம்!

221.02. கும்பாபிஷேகத்துக்கு மூன்று, நான்கு வாரங்களுக்கு முன்பிருந்து, *தினந்தோறும்* ஒரு குறிப்பிட்ட நேரத்தில் (மாலை 7 மணி அளவில்?) திருக்கோயில் வளாகத்தில், திருத்தொண்டர்கள் அனைவரும் ஒன்று கூடி ஆய்வுக் கூட்டம் (review meeting) நடத்துவதென்ற ஒரு ஒழுங்கினை (discipline) ஏற்படுத்திக் கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. இதன் மூலம் ஆயத்த நிலையின் ஆய்வு (review of preparedness), கருத்துப் பரிமாற்றம் (exchange of views), தகவல் பரிவர்த்தனை (exchange of information) ஆகியவற்றிற்குத் தாமதமற்ற வாய்ப்புகள் உருவாகி, திருப்பணிகள் தடையுறுது நடந்து சிறத்திட ஏதுவாகின்றது.

221.03. ஆய்வுக் கூட்டத்தில் அனைத்துச் செயல்களையும் விரிவாக ஆராய்வதென்பது இயலாத செயல். எனவே, குறிப்பிட்ட கோணங்களில் ஆழ்ந்து திட்டமிட்டுச் செயலாற்ற, சிறு சிறு குழுக்களை அமைப்பது அவசியமாகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட சில குழுக்களின் மாதிரி அறிக்கை ஒன்று (முன்மாதிரி-25, Model-25), பின் வரும் பக்கங்களில் இடம் பெற்றுள்ளது. இந்தக் குழுக்களின் செயல்பாட்டுத் திறன் குறித்து அளவளாவி, அனைத்துக் குழுக்களின் செயற்பாட்டையும் ஒருங்கிணைக்கும் பணி மட்டுமே தினசரி நிகழும் ஆய்வுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலாக இருக்க முடியும்.

221.04. மேற்கூறிய ஆய்வுக் கூட்டங்களில் பங்கு பற்றுவோருக்கு ஒரு முக்கிய ***வேண்டுகோள்:*** மற்றொரு அன்பர் ஒரு பொறுப்பை ஏற்றுச் செய்கையில் அவருக்குத் தனது ஆலோசனைகளை விநயத்துடன் விளக்கிக் கூறிவிட்டு, அத்தோடு நாம் வாளா இருக்க வேண்டும். நமது கருத்தைத் திருப்பித் திருப்பிக் கூறி, அவருக்குச் சலிப்பு ஊட்டுதல் கூடாது! "நாம் அனைவரும் செய்வது பிரதிபலனை எதிர்நோக்காத பொதுப்பணி. ஒருவரால் அனைத்துப் பணிகளையும் செய்ய இயலாதாகையால் பலர் ஒன்று கூடிச் செய்கிறோம்" என்ற எண்ணமும், ஒவ்வொருவரும் ஒரே செயலைச் செய்கையில் அவரவர் தமது முத்திரையைப் பதித்துச் செய்வதே வழக்கம், அதுதான் மனித இனத்தின் பெருமை, அதனால்தான் மனித இனமே வளர்ந்துள்ளது என்ற உணர்வும் நம்மிடையே மேலோங்கி நின்றிடல் இன்றியமையாதது! நம்மால் செய்ய இயலாத, அல்லது செய்ய நேரமில்லாத செயலை மற்றொரு அன்பர் செய்து தர முயல்கையில், அவர் செய்கையைப் பாராட்டி ஊக்குவித்து, அதிக

பக்ஷமாக, இயன்ற அளவு திறமையாக, அவர் செயலாற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்து, அவர் ஆற்றிய பணிக்காக அவரை வணங்குதலே முறை! தற்பெருமை கூறல், ஏளனம் இழையோட கருத்துக்கள் கூறுதல், உயர்ந்த குரல் கொடுத்துத் தாம் முதன்மை பெற்றிட முயலுதல், "நான் விலகிக் கொள்வேன்" என அச்சுறுத்தல் போன்ற செய்கைகள் பொதுப்பணிகளை ஒருங்கிணைத்துச் செல்லும் கூட்டங்களில் பங்கு பற்றுவோருக்கு ஒவ்வாதவை - அதுவும் இறைப்பணி மேற்கொண்டுள்ளபோது!

221.05. இறைப்பணியாகக் கருதி, பிரதிபலன் எதுவும் எதிர்பாராது, கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நிர்வாகம் செய்து நடத்திச் செல்வோருக்கு (பட்டு உணர்ந்த பலரது அனுபவ ரீதியாக) சில வார்த்தைகள்:

221.05.01. பலனை எதிர்பாராமல் உடலுழைப்பும், நேரமும் அர்ப்பணிக்கும் அன்பர்களைத் தவிர மற்றவர்கள், கூலியோ விலையோ பெற்றுக்கொண்டுதான் பணிகள் செய்து தருகின்றனர், அல்லது பொருள்கள் கொடுத்து உதவுகின்றனர். அவர்களுள் பெரும்பாலோர் திருக்கோயில் கும்பாபிஷேகக் குழுவோடு தொடர்பு மேற்கொள்வது லாபம் சம்பாதிப்பதற்காகவே! இதைக் கும்பாபிஷேகப் பணிகளை இறைப்பணியாகக் கருதி முன்னின்று நடத்தி வைப்பவர்கள் எப்போதும் தங்கள் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்! இல்லையென்றால், அவர்கள் மனம் நொந்து, பலர் மீது வெறுப்பு மேலிட்டு, அதன் விளைவாகப் பொது வாழ்க்கையிலேயே கசப்பும் காழ்ப்பும் மிகையாகித் தளர்ந்திட வேண்டி நேரிடும்!

இன்னும் சொல்லப் போனுல், அவர்கள் தமது உடல் நலம் குன்றி, அவதியுற்று, நிகழ்ச்சிப் பொறுப்புகளிலிருந்து வெளியேறி, அது வரை பட்ட பாட்டுக்கு பலன் ஏதுமின்றி, அவச் சொல் கேட்கவேண்டிய அவல நிலை கூட கண்டிப்பாக நேரிட வாய்ப்புகள் உண்டாகக் கூடும்!

221.05.02. கிணற்றைச் சுத்தம் செய்வது, தண்ணீர் டாங்க்கை சுத்தம் செய்வது, திருக்கோயில் வளாகத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வது, சிறு சிறு எலக்ட்ரிக் வேலைகளைச் செய்விப்பது, கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்குவது, அவற்றை எடுத்துக் கொண்டு வருவது, அன்பர்கள் உவந்தளிக்கும் பொருட்களை அவர்கள் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வருவது, மற்ற திருக்கோயில்களுக்குச் சென்று பொருட்கள் வேண்டிப் பெறுவது, அவ்வாறு பெற்றவற்றை எடுத்துக் கொண்டு வந்து பின்னர் அவற்றை அவர்களிடம் சரியான முறையில் திருப்பிச் சேர்ப்பிப்பது, தையற் கலைஞரை அழைத்து வந்து பெண் தெய்வ மூர்த்தங்களுக்கு வஸ்த்ரங்கள் தைத்து வாங்கிக் கொள்வது, அழைப்பிதழ்கள் விழா-மலர்கள் போன்றவற்றிற்கான எழுத்துக்களை உருவாக்குவது, அவற்றிற்கு மற்றவரிடம் ஒப்புதல் பெறுவது, அச்சகத்தாரோடு தொடர்பு கொண்டு அவற்றைத் தயாரித்துக் கொணர்வது, அழைப்பிதழ் அனுப்ப வேண்டியவர்களின் பட்டியல்கள் தயார் செய்வது, அழைப்பிதழில் பெயர்கள் எழுதி அவற்றை போஸ்ட் செய்வது அல்லது நேரில் சென்று வழங்குவது, திருப்பணிக்காக அப்புறம் எடுத்து வைக்கப்பட்ட

திரைகள் சுவர்க்கடிகாரங்கள் படங்கள் அறிவிப்புப்பலகைகள் போன்றவற்றை மீண்டும் அவற்றுக்கு உரிய இடங்களில் பொருத்தி நேர் செய்வது, பெயர்கள் அறிவிப்புகள் முதலானவற்றைச் சுவர்களிலும் பலகைகளிலும் எழுதுவிப்பது .... போன்ற வேலைகள் சாதாரண நாட்களில் மிக மிகச் சிறிய பணிகள். அவை ஒவ்வொன்றும் கும்பாபிஷேக நேரத்தில் மிகப் பெரிய காரியங்களாக முன் வந்து நிற்கும்! அவற்றை இறைப்பணியாகக் கருதிச் செய்வதற்குத் தகுந்த தொண்டர்கள் இல்லையென்றால் ... கூலி கொடுத்து ஒரு பணியை நிறைவேற்றிக் கொள்வது என்பது எவ்வளவு மன வருத்தமும் உளைச்சலும் தரத் தக்க செயல் என்பதைப் *பட்டவர்களே உணர்வர்!* நம்மிடையே உலவி நற்பெயர் பெற்றவர்களில் கூட, பலர் "பொதுக் காரியந்தானே மெதுவாகச் செய்யலாம், யார் கேட்கப் போகிறார்கள்! பொதுப் பணந்தானே இஷ்டத்துக்குக் கண்ணை மூடிக்கொண்டு வானளாவிய தொகை கேட்கலாம்!!" என்ற நினைப்பு உள்ளவர்கள்தான் என்ற கசப்பான உண்மை புலப்படத் தொடங்கியதும், நமக்கு வாழ்க்கையே வெறுத்துப் போவதில் ஆச்சரியமென்ன?


221.05.03. விக்ரஹங்கள் செய்து தரும் கலைஞர்க்குத் தற்போது நிறைய "ஆர்டர்" கிடைத்து வருவதால், அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் நமது "ஆர்டரை"ச் செய்து தருவது சற்று துர்லபமாக உள்ளது என்பது பலரது அனுபவம். அது மட்டுமல்லாது, அவர்கள், பேச்சுத் திறமையில் வல்லவர்களில்லையாதலால், மற்றவர்கள் மனம்

புண் படும்படி பேசுகிறோம் என்பதை அறியாமல், அலக்ஷியமாகப் பேசி மனத்தை முறிப்பதும் வாடிக்கை என்கிறுர் ஒருவர்! இவற்றைக் கருத்தில் கொள்ளாது மனம் நைந்த நிர்வாகிகளும் உண்டு!

221.05.04. விக்ரஹம் செய்து தரும் கலைஞர்கள், ஸ்தபதியாருக்கு உதவும் கலைஞர்கள் பணியாளர்கள், பந்தல்கள் சாரங்கள் அமைத்துத் தருபவர்கள், அஷ்டபந்தனம் தயார் செய்து இடித்து வைத்துத் தருபவர்கள், வாழை மரம் தோரணங்கள் தந்து கட்டி யாகசாலை அலங்காரம் செய்து தருபவர்கள், ஒலி ஒளி அமைப்பாளர்கள், ஜெனரேட்டர் செட் வாடகைக்குத் தந்து பொருத்தி ஓட்டுபவர்கள், மராமத்துப் பணிகள் செய்து வளாகத்தைச் சீராக்குபவர்கள், திருப்பணிக்குப் பொருட்கள் வழங்கும் வியாபாரிகள், நிர்மாணப்பணியில் புண்ணியங்கருதி ஒரு சிறு பகுதிக்கு உதவி விட்டுத் தம் பிடியில் சிக்கித் தவிக்கும் திருக்கோயில் நிர்வாகத் தொடர்புடைய அப்பாவிகளை வசங்கொண்டுப் பின்னர் பெரிய பலகையை நிறுவி விளம்பரம் தேடத் துடிக்கும் புண்ணியத்தை வியாபாரமாக்கும் பெரிய மனிதர்கள், விளம்பரங்களும் நன்கொடைகளும் பெற்றுத் தந்துத் தன்னை முதன்மையாகக் காட்டிக் கொண்டுத் தன் வியாபாரத்தை அபிவிருத்தி செய்து கொள்ளத் துடிக்கும் சில புத்திசாலிகளான வியாபாரிகள், புகைப்படம் எடுத்துத் தருபவர்கள், தண்ணீர் வசதி செய்து தருபவர்கள், சமையற் கலைஞர்கள், தையற் கலைஞர்கள் - போன்றோரில் பெரும்பாலாருக்கு (ஏன், சிற்சில சிவாச்சார்யார்களுக்குங் கூட!), இது போன்ற பொதுக் காரியங்கள், அதுவும் இறை

உணர்வு மிக்க சாத்வீகமான மனிதர்களால் நடத்தப் பெறும் திருக்கோயில் நிகழ்ச்சிகள் எல்லாம் - *அதிக வருவாய் ஈட்ட நல்ல வாய்ப்பு அளிக்கும் தருணங்கள்* என்ற நினைப்பே அதிகமாக உள்ளதை நாம் கண்கூடாகக் காண முடிகின்றது! இதை உணர்ந்து கொண்டு பொறுமையாக நிர்வாகம் செய்யாவிட்டால், தொண்டாற்றும் நிர்வாகிகளின் உடல் நலமும் மன நலமும் கெட்டொழியுமே தவிர, வெளியே நின்று வேடிக்கை பார்ப்போருக்கும் குறை கூறுவோருக்கும் ஒரு பாதிப்பும் இருக்காது! "நான் செய்திருந்தால் இப்படிச் செய்திருப்பேன்" என்று பலர் நிச்சயம் கூறுவதைக் கேட்க வேண்டி இருக்கும். கும்பாபிஷேகத்துக்குப் பிறகு அப்படிக் கூறுபவர்கள், மற்ற நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அப்படிக் கூறுபவர்களைக் காட்டிலும் மிக அதிகமாகவே இருப்பர். ஏனென்றால், அடுத்து வரும் பல ஆண்டுகளுக்கு இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி வராது, எனவே தான் கூறுவதை நிறைவேற்றிக் காட்டவேண்டிய கட்டாயத்துக்குத் தான் உட்பட நேரிடாது என்ற தைரியம்தான்! இதைக் கருத்தில் கொண்டாலன்றி கும்பாபிஷேகப் பணியில் பங்கு பற்ற வரும் தொண்டர்கள் மன அமைதி காண்பது துர்லபமே!

ௐ ௐ ௐ ௐ ௐ



↑ கைலாஸநாதர்-லலிதா மஹாத்ரிபுரஸுந்தரி (பஞ்ச ப்ரஹ்மாஸநஸ்திதா) ↓
ராஜகோபுர த்வார சுதை வேலைப்பாடுகள் (துன்மீசர் அலயம், 10.09.2000)




SECTION - 3
MODELS

பகுதி - 3
முன்மாதிரிகள்



MODEL - 1 ⇩ முன்மாதிரி - 1

ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில் செல்லும் வழி




MODEL - 2 ⇩ முன்மாதிரி - 2

ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில் ஸந்நிதிகள்

Sri Dhanmisar Semponkoil (Sri Dharmalingeswarar Temple)

TEMPLE LAY-OUT Easwaran Colony, SarvamangalaNagar, Nanganallur, MS-61.



ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில் ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலயம், ஈச்வரன் காலனி ஸர்வமங்களாநகர், நங்கைநல்லூர், சென்னை-61.

மஹா கும்பாபிஷேகம் 10-9-2000

1. ஸ்ரீ தன்மீச விநாயகர்.

(தனி ஸந்நிதி, தெற்கு ப்ராகாரத்தில்).

2. மூஷிகம், பலி பீடம்.

(கருவறைக்குள்ளேயே உள்ள மூஷிகம் மற்றும் பலிபீடம் வெளியே மண்டபத்திற்கு கும்பாபிஷேக சமயத்தில் மாற்றப்பட்டது).

3. ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்

(1000 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட, மூலலிங்கம் - கிழக்கு நோக்கிய கருங்கல் கருவறை).

4. கைலாய நந்தி, பலி பீடம்

(இறைவனுருக்கு அருகில்).

5. அதிகார நந்தி, பலி பீடம்

(கொடிக்கம்பம் அருகில்).

6. ஸ்ரீ ஸர்வ மங்களாம்பிகை

(தெற்கு நோக்கிய தனி ஸந்நிதி, இறைவனுருக்கு இடப்பாகம்).

7. ஸிம்ஹம், பலி பீடம்.

8. ஸ்ரீ வல்லி, தேவஸேனு ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர்

(தனி ஸந்நிதி - மேற்கு நோக்கி, மேற்கு ப்ராகாரத்தில்).

9. மயில், பலி பீடம்.

10. பஞ்ச கோஷ்டம் - விநாயகர்

(மஹாகும்பாபிஷேகத்தின்போது புது ப்ரதிஷ்டை)

11. பஞ்ச கோஷ்டம் - தக்ஷிணாமூர்த்தி.

12. பஞ்ச கோஷ்டம் - மஹாவிஷ்ணு.

13. பஞ்ச கோஷ்டம் - ப்ரஹ்மா

(மஹாகும்பாபிஷேகத்தின்போது புது ப்ரதிஷ்டை)

14. பஞ்ச கோஷ்டம் - விஷ்ணு துர்க்கை
(மஹா கும்பாபிஷேகத்தின்போது, ஆகமப்படி, புனர்ப்ரதிஷ்டை)

15. நால்வர், சேக்கிழார், அருணகிரிநாதர்.

16. சண்டிகேச்வரர்
(மஹா கும்பாபிஷேகத்தின்போது, ஆகமப்படி, புனர்ப்ரதிஷ்டை)

17. ஸ்ரீ பைரவர் (வடுகர்)

18. நவக்ரஹங்கள்.

19. ஸ்ரீ ராம பாதுகையும், பக்த ஆஞ்சநேயரும்
(மஹாகும்பாபிஷேகத்தின்போது புது ப்ரதிஷ்டை)

20. ஸ்ரீ வீர பத்ரர்
(சூலாயுதத்தில் பாலஸ்தாபனம் ஆகியுள்ளவர், கும்பாபிஷேக சமயத்தில், புதிய சிலா சொரூப்மாக ப்ரதிஷ்டை செய்யப்பட்டார்).

21. ஸ்ரீ ஸர்வ மங்கள விநாயகர்
(வெளி ப்ராகாரத்தில், அம்மன் ஸந்நிதிக்கு எதிரே).

22. ஸ்ரீ குரு விநாயகர்
(வெளி ப்ராகாரத்தில், கோயிலின் தெற்கு வாசலுக்கு எதிரே).

23. அரசமரத்தடி விநாயகர், நாகர்கள் (இரு ஜோடி).

24. கொடிமரம் (த்வஜ ஸ்தம்பம்).

MODEL - 3 ⇩ முன்மாதிரி - 3

ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில்

ஸந்நிதிகளில் எழுத வேண்டிய பெயர்கள்

பெயின்டர் எழுத வேண்டியவை:

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்

- (ஸ்வாமி ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ ஸர்வமங்களாம்பிகை

- (அம்பாள் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ நர்த்தன விநாயகர்

- (பஞ்ச கோஷ்ட விநாயகர் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

- (பஞ்ச கோஷ்ட குரு ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ மஹாவிஷ்ணு

- (பஞ்ச கோஷ்ட விஷ்ணு ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ ப்ரஹ்மா

- (பஞ்ச கோஷ்ட ப்ரம்மா ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ விஷ்ணு துர்க்கை

- (பஞ்ச கோஷ்ட துர்க்கை ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ சண்டிகேச்வரர்

- (சண்டிகேச்வரர் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ பைரவர்

- (கோஷ்ட பைரவர் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ ஆஞ்ஜநேயர், ஸ்ரீராம பாதுகை

- (ஆஞ்ஜநேயர் ஸந்நிதிக்கு மேல்)

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர்

- (பக்தர்களின் சிலைக்கு மேல்)

ஸ்ரீ தன்மீச விநாயகர்

- (விநாயகர் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ ஸர்வமங்கள விநாயகர்

- (அம்பாளுக்கு எதிரே கோஷ்ட விநாயகர் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ குரு விநாயகர்

- (தெற்கு வாசலுக்கு எதிரே கோஷ்ட விநாயகர் ஸந்நிதிக்கு மேல்)

ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர், ஸ்ரீ தேவஸேனை

- (முருகன் ஸந்நிதிக்கு மேல்)

சந்த்ரன்

- (ராஜகோபுர மேற்குப்பக்க இடது கோஷ்ட சுதைக்குக் கீழ்)

ஸூர்யன்

- (ராஜகோபுர மேற்குப்பக்க வலது கோஷ்ட சுதைக்குக் கீழ்)

பால விநாயகர்

- (ராஜகோபுர கிழக்குப்பக்க இடது கோஷ்ட சுதைக்குக் கீழ்)

பால முருகன்

- (ராஜகோபுர கிழக்குப்பக்க வலது கோஷ்ட சுதைக்குக் கீழ்)

ஸ்ரீ அகோர வீரபத்ரர்

- (வீரபத்ரர் ஸந்நிதிக்கு மேல்)

அலுவலகம்

- (ஆஃபீஸ் ரூம் கதவுக்கு மேல்)

திருமடப்பள்ளி

- (சமையலறைக் கதவுக்கு மேல்)

ராஜகோபுரத்தில் ஸ்தபதியார் எழுத வேண்டியவை:

ஸ்ரீ ஏகாம்ரேச்வரர்

- (மேற்குப் பக்க முதல் நிலே சுதைக்குக் கீழ்)

ஸ்ரீ காமாக்ஷி

- (மேற்குப் பக்க முதல் நிலே சுதைக்குக் கீழ்)

ஸ்ரீ அகிலாண்டேச்வரி

- (கிழக்குப் பக்க முதல் நிலே சுதைக்குக் கீழ்)

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்

- (கிழக்குப் பக்க 2-ஆம் நிலே சுதைக்குக் கீழ்)

ஸ்ரீ ஸர்வமங்களாம்பிகை

- (கிழக்குப் பக்க 2-ஆம் நிலே சுதைக்குக் கீழ்)

உட்ப்ராகார சுவரில் எழுத வேண்டியவை:

ப்ராகாரச் சுவர்களில், தரை மட்டத்திலிருந்து 4, 5 அடி உயரத்தில் சுமார் ஆறு அங்குல அளவிற்கு கருநீல வண்ணத்தினுல் பட்டி கட்டி, அதில் வலம் வரும் பக்தர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கீழ் வரும் அறிவிப்புகளே எழுதவும்.


விதிகளுக்கு உட்பட்டு, இறை அருளால் இயற்கை இயங்கி வருவதால்தான் நாம் வாழ இயலுகின்றது. நாம் விதிகளே மீறி நடப்பது இறைவனுக்கு இழைக்கும் அநீதியாகும். இவ்வாலயத்தினுள் கற்பூரம் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது. நெய் தீப ஆராதனே மட்டுமே செய்யப்படும். பக்திக்குத் தேவை

அகத்தூய்மை; அகத்தூய்மைக்கு உதவுவது புறத்தூய்மை; அசுத்தம் செய்யாதீர். ♣ இது 'கோ'வின் இல், கோயில்; இது நம் இல்லத்தை விட சுத்தமாக, பொலிவாக இருக்க வேண்டும். ♣ விளக்கினை ஏற்றி வழிபாடு செய்வோர் அவ்விளக்குகளைத் திருவிளக்கு மாடத்தில் விட்டுச் செல்லவேண்டும். ♣ சுவர் கை துடைப்பதற்கல்ல; எண்ணெய்க் கையைத் துடைக்க துண்டு எடுத்து வருக. ♣ ஆலயத்தினுள் (நந்தி தேவர் - வ்ருஷப தேவர், பலிபீடம், கொடிமரம், நவக்ரஹங்கள், கோஷ்டத்தில் ப்ரதிஷ்டை ஆகியுள்ள மூர்த்தங்கள் போன்ற) வழிபடு பொருட்களை தொடுவதும், தொட்டு வணங்குவதும் தோஷம் தரும் செய்கைகள்; சிவாச்சாரியார்களன்னியில் மற்றவர்கள் அவற்றைத் தொட அனுமதி இல்லை. ♣ நந்திதேவரைக் கட்டிக் கொண்டு அவர் காதில்தான் குறைகளை ஓத வேண்டும் என்பது இல்லை; அவ்வாறு செய்வது பாவச் செயல்; நந்திதேவரின் பின்புறம் நின்று வேண்டிக் கொள்வதே சரியான முறை. ♣ ஆலய பூஜைக் காலம் தவிர மற்ற நேரங்களில் மணி அடிப்பது குற்றம். ♣ அமைதி காத்திடுக. ♣ ஐயனின் புகழ் கூறும் சொற்கள் அன்றி வேறு ஏதும் பேசற்க. ♣ வேத பாராயண காலத்தில் அருகில் இருப்பவரோடு பேசிக் கொண்டிருப்பது குற்றம். ♣ ஆடவர் உடையைத் தவிர்த்து, முழு உடலை மறைக்கும் பாரம்பர்ய உடை அணிந்து ஆலயம் வரும் பெண்களே தமிழ்நாட்டின் கண்ணியம் காக்கும் கண்கள்; அவர்களே மற்ற அன்பர்களின் இறை உணர்வுக்கு ஊறு விளைவிக்காத தாய்க்குலத்தின் பிரதிநிதிகள். ♣ பாதணிகள், லுங்கிகள் அணிந்து ஆலயத்துள்

வருவதைத் தவிர்த்திடுக. ஆலய வளாகத்தினுள் போட்டோ, வீடியோ எடுக்க அனுமதி இல்லை. உச்சிக் காலத்துக்குப் பிறகு ராஜ-வ்ருக்ஷத்தைச் (அரச மரத்தைச்) சுற்றி வந்து வணங்குவது தவறு. ஆலயம் என்பது பொதுச் சொத்து. மின் விளக்குகளை எரியவிட்டும், மின் விசிறிகளை ஓடவிட்டும் செல்லாதீர்கள். ஆலயத்திற்கு இழப்பு ஏற்படுத்தி நீங்கள் பாவம் ஈட்டாதீர்கள். ஆலய வழிபாடு, நிர்வாகம், திருப்பணிக்கென செலுத்தும் நிதியையும், பொருட்களையும், குறிப்பிடப்பட்ட நிர்வாக உறுப்பினரிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்க. ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிக்கென குறிப்பிடப்பட்டுள்ள நாளில் மாற்றம் தேவை எனக் கருதுவோர், முன் கூட்டியே நிர்வாகத்தினரோடு தொடர்பு கொள்க. குற்றம் - குறைகள் நீக்கவும், மேம்பாடுகள் சேர்க்கவும் ஆலோசனை வழங்க விரும்புவோர் நிர்வாக உறுப்பினரைத் தொடர்பு கொண்டு உதவிடுக. புறங் கூறலைத் தவிர்த்திடுக.



MODEL - 4 ⇩ முன்மாதிரி - 4



பாலஸ்தாபன கும்பாபிஷேக பத்திரிக்கை

ஈச்வரன் காலனி, ஸர்வமங்களா நகர், நங்கைநல்லூர்,
சென்னை-600061

ஸ்ரீ ஸர்வமங்களாம்பிகை உடனுறை ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் எழுந்தருளியுள்ள

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலயம்
(ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில்)

பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

கோலமே! மேலை வானவர் கோவே! குணம்குறி இறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள் காலகா லா!காம நாசா!
ஆலமே அமுதுண்(டு) அம்பலஞ் செம்பொற் கோயில்கொண்(டு) ஆடவல் லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத் தொண்டனேன் நணுகுமா நணுகே.

- திருமாளிகைத் தேவர்.

தன்மீசத்தேவரின் அருளினை முன் வைத்து, நூதன ராஜகோபுர, ஜீர்ணோத்தாரண திருப்பணிகள் நிறைவுற்று, 10-09-2000 அன்று அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நிகழ உள்ளமையை எதிர்நோக்கி, நிகழும் விக்ரம ஆண்டு, ஆனி மாதம், 30-ஆம் நாள், 14-7-2000, வெள்ளிக்கிழமை, மூலா நக்ஷத்ரம், அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில், காலை 0745 மணிக்கு மேல்

0830 மணிக்குள், ஐந்து யாகசாலைகளில் இரண்டு கால பூஜைகளுடன், திருக்கோயிலில் ப்ரதிஷ்டை ஆகியுள்ள மூர்த்திகள் அனைவருக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழ உள்ளது. அன்பர்கள் அனைவரும் வந்திருந்து தரிசித்து அம்மையப்பனின் அருளுக்குப் பாத்திரராகும்படி கேட்டுக்கொள்கிறேம். *(பாலஸ்தாபனத்திற்குப் பிறகு கும்பாபிஷேகம் வரை, உற்சவ மூர்த்திகளை முன்வைத்து, அனைத்து வழிபாடுகளும் நடைபெறும்)*

- ஸர்வமங்களா ஸேவா ஸமாஜ் திருப்பணிக் கமிட்டி.

நிகழ்ச்சி நிரல்

விக்ரம ஆண்டு ஆனி மாதம் 29-ஆம் தேதி
13-07-2000, வியாழக்கிழமை

காலை 09.00 - 13.00

கணபதி ஹோமம், ப்ரஹ்மசாரி பூஜை, அனுக்ஞை, ம்ருத்ஸங்க்ரஹணம், நூதன சித்ரங்களுக்கு அஷ்டாதச க்ரியையின் முதல் பகுதி (நயனோன்மீலனம், ஜலாதிவாசம் வரையான கிரியைகள்).

மாலை 18.00 - 22.00

வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம், நூதன சித்ரங்களுக்கு அஷ்டாதச க்ரியையின் இரண்டாம் பகுதி (சயனுரோபணம் வரையான கிரியைகள்). கலச ஸ்தாபனம், கலாகர்ஷணம், அதிவாச யாகம், தத்வார்ச்சனு, ஸ்பர்ஸாஹுதி, பூர்ணாஹுதி.

விக்ரம ஆண்டு ஆனி மாதம் 30-ஆம் தேதி
14-07-2000, வெள்ளிக்கிழமை

காலை 06.00 - 09.30

அவப்ருத யாகம், மஹா பூர்ணாஹுதி, 07.45 க்குமேல் 08.30 க்குள் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்,

மஹா தீபாராதனை.

* கூட்டு வழிபாடாக நிகழ உள்ள கணபதி ஹோமம், அவப்ருத யாகம் ஆகிய இரு நிகழ்ச்சிகளிலும், தலா ரூ.100-க்குக் குறையாமல் செலுத்தி, அன்பர்கள் உபயதாரராகி, முன்னதாகவே வந்திருந்து சங்கல்பம் செய்துகொண்டு பங்கேற்குமாறு வேண்டுகிறோம்.

MODEL - 5 ⇩ முன்மாதிரி - 5

யாகசாலைகள் - பாலஸ்தாபனத்துக்கு

1. யாகசாலை - 1

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்

2. ஸ்தண்டிலம் - 4

ஸ்ரீ ஸர்வமங்களா தேவி- 1,
ஸ்ரீ விநாயகர்-1,
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர்- 1,
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி - 1.
(விஷ்ணு, துர்க்கை, சண்டிகேச்வரர்,
சண்டிகேச்வரர் விமானம். 2 நந்திகள்,
2 பலிபீடங்கள் ஆகியவை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி
ஸ்தண்டிலத்திலேயே சேர்க்கப்படும்).

MODEL - 6 ⇩ முன்மாதிரி - 6

யாகசாலைக் கலசங்கள் -

பாலஸ்தாபனத்துக்கு

1. ஸ்வாமி யாகசாலை

கடம் 1 ஸ்ரீ தர்மலிங்கேச்வரர்
வர்த்தினி 1 பீட சக்தி
கலசம் 38
விமானம் - 1,
அஷ்டவித்யேச்வரர் - 8,
யாக ரக்ஷகர்-ரக்ஷகி - 2,
மற்ற தேவதைகள் - 27

2. அம்பாள் ஸ்தண்டிலம்

கடம் 1 ஸ்ரீ ஸர்வமங்களாம்பிகை
வர்த்தினி 1 பீட சக்தி
கலசம் 13
விமானம் - 1
ஸிம்ஹம் - 1
பலிபீடம் - 1
அஷ்டவித்யேச்வரர் - 8
யாக ரக்ஷகர்-ரக்ஷகி - 2

3. விநாயகர் ஸ்தண்டிலம்

கடம் 1 ஸ்ரீ தன்மீச விநாயகர்
வர்த்தினி 1 பீட சக்தி
கலசம் 13
விமானம் - 1
மூஷிகம் - 1
பலிபீடம் - 1
அஷ்டவித்யேச்வரர் - 8

யாக ரக்ஷகர்-ரக்ஷகி - 2.

4. ஸுப்ரஹ்மண்யர் ஸ்தண்டிலம்

கடம் 1 ஸ்ரீ ஸ்கந்தர்
வர்த்தினி 2 ஸ்ரீ தேவஸேனு, ஸ்ரீ வள்ளி
கலசம் 13

விமானம் - 1
மயில் - 1
பலிபீடம் - 1
அஷ்டவித்யேச்வரர் - 8
யாக ரக்ஷகர்-ரக்ஷகி - 2.

5. தக்ஷிணுமூர்த்தி ஸ்தண்டிலம்

கடம் 1 ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி
கலசம் 18

விஷ்ணு - 1
துர்க்கை - 1
சண்டிகேச்வரர் - 1
சண்டிகேச்வரர் விமானம் - 1
நந்தி - 2
பலிபீடம் - 2
அஷ்டவித்யேச்வரர் - 8
யாக ரக்ஷகர், ரக்ஷகி - 2.

கடம் என்று குறிப்பிடப்படுவது சுமார் 10 லிட்டருக்குக் குறையாமல் கொள்ளளவு உள்ள குடம். *வர்த்தினி* என்று குறிப்பிடப்படுவது சுமார் 5 லிட்டருக்குக் குறையாமல் கொள்ளளவு உள்ள குடம். *கலசம்* என்று குறிப்பிடப்படுவது சுமார் 1 லிட்டருக்குக் குறையாமல் கொள்ளளவு உள்ள சொம்பு.

MODEL - 7 ⇩ முன்மாதிரி - 7

பூஜா த்ரவ்யங்கள் -

பாலஸ்தாபனத்துக்கு

மஹா கும்பாபிஷேகத்தைச் சார்ந்த குறிப்புகளில் காண்க (Model - 21).

புஷ்பங்கள் - பாலஸ்தாபனத்துக்கு

13-07-2000 காலை	...	மாலை	- 5
	...	தொடுத்தது	- 25 முழம்
	...	உதிரி	- 2 கூடை
13-07-2000 மாலை	...	மாலை	- 7
	...	தொடுத்தது	- 100 முழம்
	...	உதிரி	- 2 கூடை
14-07-2000 காலை	...	மாலை	- 7
	...	தொடுத்தது	- 25 முழம்
	...	உதிரி	- 2 கூடை

MODEL - 8 ⇩ முன்மாதிரி - 8

உபகரணங்கள் - பாலஸ்தாபனத்துக்கு

1. மாவிலைக் கொத்து
2. மாவிலைத் தோரணம்
3. வில்வம்
4. தர்ப்பை
5. செங்கல் (5 ஹோமகுண்டங்கள் - ஸ்தபதியார் நிறுவ வேண்டி)
6. மண் மடக்கு - 15
7. மண் கலசம் - 2
8. பாலிகைச் சட்டி - 12
9. தர்ப்பாசனம் - 10
10. மூங்கில் தட்டு - 6
11. கூடை - 6
12. கோஜலம்
13. கோமயம்
14. புற்று மண்
15. ஆற்று மண்
16. சமுத்திர மணல்
17. மலை அடிவார மண்
18. நந்தவன மண்
19. புனித நதிகளின் நீர்
20. சமுத்திர ஜலம்
21. கண்ணாடி - 1
22. பூஜை தட்டு - 5
23. மணி - 5
24. பஞ்சபாத்ரம் உத்தரணி - 5 செட்
25. தீபாராதனைத் தட்டு - 5
26. தூபக்கால் - 1
27. குத்துவிளக்கு - 5

28. விளக்குத் திரி நூல்
29. தீப்பெட்டிகள்
30. அலங்காரக் குடை
31. தீவட்டி ... (உலா செல்வதற்கு)
32. பசு - கன்று ஏற்பாடு
33. ஸுவாஸினி, கன்யா, பிரம்மச்சாரி ஏற்பாடு
34. நாதஸ்வர ஏற்பாடு

MODEL - 9 ⇩ முன்மாதிரி - 9

நைவேத்யங்கள் - பாலஸ்தாபனத்துக்கு

13-07-2000 காலை

சர்க்கரைப் பொங்கல்- 1 கிலோ அரிசி, வெண் பொங்கல் - விநியோகத் தேவைக்கு, அப்பம் - 28, வடை - 28, சுண்டல் - கால் கிலோ கடலை, கொழுக்கட்டை - 28.

13-07-2000 மாலை

பாயஸம் - 1 லிட்டர், எலுமிச்சம்பழ சாதம் - 1 கிலோ அரிசி, தேங்காய் சாதம் - 1 கிலோ அரிசி, தயிர் சாதம் - அரைக்கிலோ அரிசி, ரவா கேஸரி - கால் கிலோ ரவை, தேன்குழல் (முறுக்கு) - 28.

14-07-2000 காலை

வெண் பொங்கல் - 1 கிலோ அரிசி (விநியோகத்திற்கும் தேவைப்பட்ட அளவு சேர்த்துக் கொள்ளலாம்), சர்க்கரைப் பொங்கல் - 1 கிலோ அரிசி (விநியோகத்திற்கும்

தேவைப்பட்ட அளவு சேர்த்துக் கொள்ளலாம்), மைசூர் பாக் (இனிப்பு)- 28, தேன்குழல் (முறுக்கு)- 28.

ஒரு வேளைக்குச் செய்து எஞ்சியுள்ள த்ரவியங்களை (மீண்டும்) உபயோகப்படுத்தி, அடுத்த வேளைக்கு நைவேத்யங்கள் தயாரித்தல் ஆகாது.

MODEL - 10 ⇩ முன்மாதிரி - 10

சிவாச்சார்யார்கள் - பாலஸ்தாபனத்துக்கு

ஸர்வஸாதகர்	- 1
ப்ரதம ஆச்சார்யார்	- 1
ஆச்சார்யார்	- 4
உதவியாளர்	- 2
ஸ்தல குருக்கள்	- 2

ஆக மொத்தம் - 10

MODEL - 11 ⇩ முன்மாதிரி - 11

யாகசாலைக் கலசங்களின் உலா குறித்த விரிவான விவரங்கள்

LEGEND:

- ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட வேண்டிய கடங்கள், வர்த்தினிகள், கலசங்கள்.
- ➡ முன்னதாகவே எடுத்துச் சென்று உரிய இடங்களில் வைக்கப்பட வேண்டிய கடங்கள், வர்த்தினிகள், கலசங்கள்.
- யாகசாலையிலேயே ஸம்யோஜன அல்லது விசர்ஜன கிரியைகள் செய்து, விட்டு வைக்கப்பட வேண்டியவை.

1. விநாயகர் யாகசாலை:

- விநாயகர் கடம், விநாய்கர் விமான கடம்.
- ➡ விநாயகர் பீட வர்த்தினி, மூஷிக கலசம், பலிபீட கலசம், அஷ்டவித்யேச்வரர் கலசங்கள் 8.
- யாக ரக்ஷுகர்-ரக்ஷுகி* கலசங்கள் 2, மற்ற தேவதைகளுக்கான 28 கலசங்கள். (* இவற்றை பாசுபதாஸ்த்ர கலசங்கள், யாகேச்வரசிவம் கலசங்கள் என்பதாகவும் அழைப்பதுண்டு).

2. ஸ்வாமி யாகசாலை:

- ஸ்வாமி கடம்.
- ➡ ஸ்வாமி பீட வர்த்தினி, அஷ்டவித்யேச்வரர் கலசங்கள் 8.
- யாக ரக்ஷுகர்-ரக்ஷுகி கலசங்கள் 2, மற்ற தேவதைகளுக்கான 27 கலசங்கள்.

3. அம்பாள் யாகசாலை:

- அம்பாள் கடம், அம்பாள் விமான கடம்.
- அம்பாள் பீட வர்த்தினி, ஸிம்ஹ கலசம், பலிபீட கலசம், அஷ்டவித்யேச்வரர் கலசங்கள் 8.
- யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2, மற்ற தேவதைகளுக்கான 28 கலசங்கள்.

4. ஸுப்ரஹ்மண்யர் யாகசாலை:

- ஸுப்ரஹ்மண்யர் கடம், ஸுப்ரஹ்மண்யர் விமான கடம்.
- தேவஸேனு வர்த்தினி, வள்ளி வர்த்தினி, மயில் கலசம், பலிபீட கலசம், அஷ்டவித்யேச்வரர் கலசங்கள் 8.
- யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2, மற்ற தேவதைகளுக்கான 28 கலசங்கள்.

5. ராஜகோபுர யாகசாலை:

- ராஜகோபுர கடம் (ராஜகோபுரத்தின் நடு கலசத்துக்கு), மற்ற நான்கு ராஜகோபுர கலசங்களுக்கு அபிஷேகம் செய்வதற்குரிய 4 கலசங்கள்.
- ஒன்றுமில்லை.
- பீட வர்த்தினி, அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2, மற்ற தேவதைகளுக்கான 28 கலசங்கள்.

6. ஸ்வாமி விமான ஸ்தண்டிலம்:

- ஸ்வாமி விமான கடம்.
- த்வஜஸ்தம்ப கடம், இரண்டு நந்தி கலசங்கள், இரண்டு பலிபீட கலசங்கள்.
- பீட சக்தி வர்த்தினி, அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2.

7. பஞ்ச கோஷ்ட ஸ்தண்டிலம்:

ஒன்றுமில்லை.

பஞ்ச கோஷ்ட மூர்த்திகளுக்கு உரிய ஐந்து கடங்கள்.

அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2.

8. பைரவர் ஸ்தண்டிலம்:

ஒன்றுமில்லை.

பைரவர் கடம், பீட சக்தி வர்த்தினி.

அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகிக்கான 2 கலசங்கள்.

9. வீரபத்ரர் ஸ்தண்டிலம்:

ஒன்றுமில்லை.

வீரபத்ரர் கடம், வீரபத்ரர் விமான கடம், பீட சக்தி வர்த்தினி.

அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகிக்கான 2 கலசங்கள்.

10. ஆஞ்ஜநேயர் ஸ்தண்டிலம்:

ஒன்றுமில்லை.

ஆஞ்ஜநேயர் கடம், ஆஞ்ஜநேயர் விமான கடம், பீட சக்தி வர்த்தினி, ஸ்ரீ ராம பாதுகா கலசம்.

அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2.

11. வெளி ப்ராகார விநாயகர்கள் ஸ்தண்டிலம்:

ஒன்றுமில்லை.

அரச மரத்தடி விநாயகர் கடம், அரச மரத்தடி விநாயகர் பீட வர்த்தினி, ஸர்வமங்கள விநாயகர் கலசம், குரு விநாயகர் கலசம், நான்கு நாகர் கலசங்கள்.

❋ அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகிக்கான 2 கலசங்கள்.

12. நவக்ரஹ ஸ்தண்டிலம்:
- ஒன்றுமில்லை.
- ➡ ஸூர்யன் கடம், பீட சக்தி வர்த்தினி, எட்டு நவக்ரஹ கலசங்கள்.
- ❋ யாக ரக்ஷகர்-ரக்ஷகி 2 கலசங்கள்.

13. உற்சவ மூர்த்தியர் ஸ்தண்டிலம்:
- ஒன்றுமில்லை.
- ➡ ஸோமாஸ்கந்தர்-ஸ்வாமி கடம், ஸோ-அம்பாள் கடம், ஸோ-ஸ்கந்தர் கடம். மற்ற உற்சவ மூர்த்திகளுக்கு 17 கலசங்கள்.
- ❋ அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகி கலசங்கள் 2.

14. பக்தர்கள் ஸ்தண்டிலம்:
- ஒன்றுமில்லை.
- ➡ திருஞானசம்பந்தர் கடம், நால்வர் எழுந்தருளியுள்ள பீடத்திற்கான வர்த்தினி, சேக்கிழார் எழுந்தருளியுள்ள பீடத்திற்கான வர்த்தினி, அருணகிரிநாதர் எழுந்தருளியுள்ள பீடத்திற்கான வர்த்தினி, அப்பர்-சுந்தரர்-மாணிக்கவாசகர் ஆகிய மூவருக்கான கலசங்கள், சேக்கிழார்-அருணகிரிநாதர் ஆகிய இருவருக்கான கலசங்கள்.
- ❋ அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகிக்கான 2 கலசங்கள்.

15. சண்டிகேச்வரர் ஸ்தண்டிலம்:

ஒன்றுமில்லை.

சண்டிகேச்வரர் கடம், சண்டிகேச்வரர் விமான கடம், பீட சக்தி வர்த்தினி.

அஷ்ட வித்யேச்வரர் கலசங்கள் 8, யாக ரக்ஷகர்-ரக்ஷகிக்கான 2 கலசங்கள்.


MODEL - 12 ⇩ முன்மாதிரி - 12

உ

அன்பர்க்கு வேண்டுகோளும், தரிசன முறையும்

1. கும்பாபிஷேக நாளன்று தரிசனம் செய்ய வரும் அன்பர்கள், வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வழியாகச் சென்று, விரைவாக தரிசனம் செய்து கொண்டு, பின்னால் வருபவர்களுக்கு இடம் விட்டு, முன் நோக்கி நகர்ந்து செல்லுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

2. கும்பாபிஷேக நாளன்று, ராஜகோபுர கும்பாபிஷேகத்திற்குப் பின், கர்ப்பக்ரஹங்களில் கும்பாபிஷேகம் ஆகி, பின்னர் யாகசாலைக் கிரியைகள் பூர்த்தியாகி, தொடர்ந்து மஹாபிஷேகம் செய்து, அலங்காரங்கள் நடக்கும். கர்ப்பக்ரஹ கும்பாபிஷேகம் ஆனவுடன் (சுமார் 08.20 மணி அளவில்) அன்பர்கள் திருக்கோயிலுக்குள் வந்து தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர். உள்ளே நடைபெற வேண்டிய கிரியைகள் விரைவாக, ஆனால் மந்த்ர-தந்த்ர லோபம் (குறைகள்) ஏற்பட்டுப் புனிதம் குறைந்து படாமல் நடைபெறுவதற்காகவும், தரிசனம் செய்ய வரும் அன்பர்களின் வசதிக்காகவும் இந்த விதிகள் அமுலாக்கப்படுகின்றன. நிலைமையைப் புரிந்துகொண்டு,



அன்பர்கள் அனைவரும் அமைதி காத்து, ஒத்துழைக்குமாறு அனைவரின் பாதங்களையும் பணிந்து வேண்டிக் கொள்கிறோம்.

3. கும்பாபிஷேகத்திற்கு முன் இரு நாட்களிலும் வழக்கம் போல் தரிசனம் உண்டு. யாகசாலை தரிசனம் செய்ய விழைவோர், "க்யூ வரிசை" முறையைக் கடைப்பிடித்து, பின்னால் வருபவர்களது தேவையையும் கருத்தில் கொண்டு, விரைவாக தரிசனம் செய்து செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


4. கலச உபயதாரர்கள் முதல் மூன்று கால யாகசாலை பூஜை ப்ரசாதங்களை, பூர்ணாஹுதிக்குப் பிறகு, அடையாளச் சீட்டுக்களைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம். நான்காம் கால ப்ரசாதம், கும்பாபிஷேக நாளன்று காலை 11 மணி அளவில் வழங்கப்படும். ஒரு காலத்தில் பெற இயலாத ப்ரசாதத்தை, அடுத்த காலத்தில் சேர்த்துப் பெற்றுக் கொள்ளலாம்; ஆனால் அதற்குப் பிறகு அதனைத் தேக்கி வைப்பது இயலாத காரியம்; ஊறு விளைவிப்பதுங்கூட. கலசங்கள், 11.9.2000 முதல் அடையாளச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு வழங்கப்படும்.

5. ஆலயத்தின் உள்ளே கும்பாபிஷேக நிர்வாகம் மற்றும் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள், அனைவரின் நலனுக்காகவும், பொது நோக்கோடும், இறை உணர்வோடும், உடல் சோராது மெய் வருத்தம் பாராது உழைக்க இறைவன் அருளை வேண்டியவாறும், தம் கடமைகளை ஆற்றிக் கொண்டு அல்லாடுகிறுர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களோடு ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேம். அவர்கள் அறியாது இழைக்கும் சிறு பிழைகளை, பெரும் உள்ளத்தோடு நீவிர் பொறுத்தருளி, விழாவைப் பரிமளிக்கச் செய்திடுமாறும் வேண்டிக்கொள்கிறேம்.



25.8.2000 - விழாக் குழுவினர்

MODEL - 13 ⇩ முன்மாதிரி - 13



அருள்மிகு ஸர்வமங்களாம்பிகை உடனுறை ஸ்ரீ
தர்மலிங்கேச்வரர் எழுந்தருளியுள்ள
ஸ்ரீ தன்மீசர் செம்பொன்கோயில்

மஹா கும்பாபிஷேகம் 10-9-2000

கும்பாபிஷேக நாளுக்கான விரிவான நிகழ்ச்சி நிரல்

காலை

05.30 மணி அவப்ருத யாகம், நான்காம் கால யாகசாலை பூஜைகள்.

06.30 மணி மஹா பூர்ணாஹுதி.

06.30 TO 07.00 முன்பாகவே செல்ல வேண்டிய கடங்கள், வர்த்தினிகள், கலசங்களை எடுத்துச் சென்று உரிய இடங்களில் சேர்ப்பித்தல் அவற்றை அபிஷேகம் செய்ய வேண்டிய சிவாச்சார்யார்கள் உடன் சென்று அந்தந்த இடங்களில், ஸர்வஸாதகரிடமிருந்து கொடி மூலம் ஸமிக்ஞையும், ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பும் எதிர்நோக்கி இருக்க வேண்டும். (அனைத்து இடங்களுக்கும் உரிய பூஜா உபகரணங்கள், நைவேத்யங்கள் ஆகியவை எடுத்துச் சென்று

வைக்கப்படுதல் வேண்டும். M.V.S. & T.V.S. to co-ordinate with SarvaSadhakar.)

06.30 TO 07.00 யாத்ரா தானம்.

07.00 கடங்கள் புறப்பாடு. ஸ்வாமி கடம் ஸ்தல குருக்கள் ஸ்ரீ ராஜசோளீச்வர சிவாச்சார்யார் அவர்களாலும், அம்பாள் கடம் ஸ்தல குருக்கள் ஸ்ரீ சிவராம சிவாச்சார்யார் அவர்களாலும், எடுத்துச் செல்லப்படும். மற்ற கடங்கள் மற்ற சிவாச்சார்யார்களால் எடுத்துச் செல்லப்படும். ஸர்வஸாதகர் மேற்கொண்டு விவரங்கள் கொடுப்பார்.

07.30 கடங்கள் உரிய இடத்தை அடைந்து தயார் நிலையில் இருத்தல். ராஜகோபுரம், மற்றும் விமானங்கள் மீதுள்ள சிவாச்சார்யார்கள் தாங்கள் தயார் ஆன உடன் பச்சைக் கொடி காட்ட வேண்டும். கீழே, ஸந்நிதிகளில் இருக்கும் சிவாச்சார்யார்களும் தங்கள் தயார் நிலையை ஸர்வஸாதகருக்கு அறிவித்துக் காத்திருக்க வேண்டும்.

07.30 TO 08.00 ராஜகோபுரம் கும்பாபிஷேகம், விமானங்கள் கும்பாபிஷேகம்.

சுமார் 07.50 மணி அளவில் ஸர்வஸாதகரிடமிருந்து பச்சைக் கொடி ஸமிக்ஞையும், ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பும் வந்த உடன் அனைத்து விமானங்களுக்கும், ராஜகோபுரத்துக்கும் ஒரே நேரத்தில் அபிஷேகம் செய்து, வஸ்த்ரம் சாத்தி, தூப தீப நைவேத்யங்கள் செய்து தீபாராதனை செய்ய வேண்டும். அனைத்து கடங்கள், வர்த்தினிகள், கலசங்களிலிருந்தும் அபிஷேகம் செய்யும்போது, ஒவ்வொன்றிலும் சிறிதளவு அபிஷேக ஜலத்தை,

அன்பர்களுக்கு ப்ரசாதமாக அளிப்பதற்காக வைத்திருக்க வேண்டும். கீழே இறங்கி வரும்போது அனைத்து கடங்கள், வர்த்தினிகள், கலசங்களைப் பாதுகாப்பாக, ஜலத்துடன் எடுத்து வந்து, ஸ்வாமி ஸந்நிதியில் அதற்கெனக் காத்திருக்கும் தொண்டரிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும். (கும்பாபிஷேகம் ஆன உடன் அணிவிக்க வேண்டிய வஸ்த்ரங்கள், நைவேத்யங்கள், பின்னர் மஹாபிஷேகத்திற்குத் தேவையான த்ரவ்யங்கள் - ஆகியவற்றை அனைத்து ஸந்நிதிகளுக்கும் சேர்ப்பிக்க வேண்டும். M.V.S. & T.V.S. to co-ordinate with SarvaSadhakar.)

08.00 - 08.10 ஸந்நிதிகளில் கும்பாபிஷேகம்.

ஸர்வஸாதகரிடமிருந்து ஸமிக்ஞை வந்த உடன் அனைத்து ஸந்நிதிகளிலும் ஒரே நேரத்தில் அபிஷேகம் செய்து, வஸ்த்ரம் சாத்தி, தூப தீப நைவேத்யங்கள் செய்து தீபாரதனை செய்ய வேண்டும். அனைத்து கடங்கள், வர்த்தினிகள், கலசங்களிலிருந்தும் அபிஷேகம் செய்யும்போது, ஒவ்வொன்றிலும் சிறிதளவு அபிஷேக ஜலத்தை, அன்பர்களுக்கு ப்ரசாதமாக அளிப்பதற்காக வைத்திருக்க வேண்டும். தீபாரதனை முடிந்த உடன்,. அனைத்து கடங்கள், வர்த்தினிகள், கலசங்களைப் பாதுகாப்பாக, ஜலத்துடன் எடுத்து வந்து, ஸ்வாமி ஸந்நிதியில் தொண்டரிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும்.
(மஹாபிஷேகம் ஆன உடன் அணிவிக்க வேண்டிய வஸ்த்ரங்கள், மஹாபிஷேக நைவேத்யம் - ஆகியவற்றை அனைத்து ஸந்நிதிகளுக்கும் சேர்ப்பிக்க வேண்டும். M.V.S. and T.V.S. to co-ordinate.)

08.15 - 08.25 சண்டிகேச்வரர் ஹோமம், யாகசாலை கிரியைகள் பூர்த்தி. கும்பாபிஷேகம் ஆன மூர்த்திகளுக்கு அலங்காரம், தூப தீப நைவேத்யம், தீபாராதனை. உடனே திரையிட்டு, மஹாபிஷேகத்துக்குத் தயாராக்குதல்.

08.30 - 08.45 அனைத்து மூர்த்திகளுக்கும் ஒரே சமயத்தில் மஹாபிஷேகம், அலங்காரம், தூப தீப நைவேத்யம், ஸ்வாமிக்கு திருப்பாவாடை நைவேத்யம், அனைத்து ஸந்நிதிகளிலும் தீபாராதனை.

ஸ்வாமி ஸந்நிதி, விநாயகர்-முருகன்-வீரபத்ரர் ஸந்நிதிகள் - இவற்றில் ஸ்தல சிவாச்சார்யார்கள் மஹாபிஷேகம் செய்வர். மற்ற ஸந்நிதிகளில் கும்பாபிஷேகம் செய்த சிவாச்சார்யார்களே மஹாபிஷேகமும் செய்வார்கள். ஸர்வஸாதகர் மேற்கொண்டு விவரங்கள் அளிப்பார்.

காலை 08.20 மணி முதல் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதி.

பிறகு பீடத்தில் பூஜித்த ஆத்ம தத்வத்தையும், அதற்கு மேலே பீடத்தின் மத்தியில் உள்ள வித்யாதத்வத்தையும் ஸந்தானமாகச் செய்துகொண்டு, த்விவசனமாக *ஓம் ஹாம் ஹீம் ஆத்மதத்வ வித்யாதத்வாப்யாம் நம: அதிபாப்யாம் ஓம் ஹாம் ஹீம் க்ரியா ஜ்ஞாநீப்யாம் நம:* என்று பீடத்தின் கீழ்பாகம் பீடத்தின் நடுபாகம் இரண்டையும் சேர்த்து பூஜித்து தத்வ-தத்வேச்வரிகளையும், மூர்த்தி-மூர்த்தீச்வரிகளையும் எட்டு

திக்குகளில் இவ்வாறே *ஓம் ஹாம் ஹாம் லாம் லாம் க்ஷமா மூர்த்திப்யாம் நம: அதிபாப்யாம் ஓம் ஹாம் ஹாம் தாரிகாப்யாம் நம:* என இருமையாகக் கூறி எட்டு திக்குகளிலும் அந்தந்த மூர்த்தி-மூர்த்தீச்வரிகளை பீஜாக்ஷரங்களுடன் இருமையாக விளித்துப் பூஜிக்க வேண்டும்.

பிம்பத்தைச் சுற்றி எட்டு திக்குகளிலும் இந்த்ராதிகளை ரக்ஷைக்காக பூஜிக்கவேண்டும். பிறகு சாந்தி கும்பத்துடன் யாகசாலைக்குத் திரும்பவும்.

இரண்டாவது ஸ்பர்ஸாஹூதி

ஓம் ஹாம் ஆதார சக்தயே நம: என்று யாகசாலை அக்நியில் பூஜித்து அதற்கு மூன்று ஆஹுதிகள் கொடுக்கவும். பிம்பத்தில் பூஜித்தது போல் ஸந்தான மார்க்கமாக *ஓம் ஹாம் ஹீம் ஆத்மதத்வ வித்யாதத்வாப்யாம் நம: அதிபதிப்யாம் ஓம் ஹாம் ஹீம் ப்ரஹ்ம விஷ்ணுப்யாம் நம:* என்று பூஜித்து, மூன்று ஆஹுதிகளைக் கொடுத்து, *ஓம் ஹாம் ஹாம் லாம் லாம் க்ஷமா மூர்த்திப்யாம் நம: அதிபதிப்யாம் ஓம் ஹாம் ஹாம் ஸர்வாப்யாம் நம:* என இருமையாகக் கூறி எட்டு திக்குகளிலும் அந்தந்த மூர்த்தி-மூர்த்தீச்வரரை இருமையாக விளித்து பூஜித்து, மும்மூன்று ஆஹுதிகள் கொடுக்க வேண்டும். விஷ்ணு பாக சுத்திக்காக மூலமந்த்ரத்தால் *(ஓம் ஹீம் விஷ்ணவே ஸ்வாஹா)* என்று 1000, 500 அல்லது 100 ஹோமம் செய்து, பூர்ணாஹுதி கொடுக்க வேண்டும். வித்யாதத்வத்தினுடைய மூர்த்தி- மூர்த்தீச்வரரது ஸாந்நித்யத்திற்காக ஸம்ஹிதா மந்த்ரத்தினால் 1000, 500 அல்லது 100 ஹோமமும், த்ரவ்யங்கள் காலம் இவற்றின் குறைகளை நீக்கும் பொருட்டு மீண்டும் ஸம்ஹிதா மந்த்ரத்தினால் 1000, 500 அல்லது 100 ஹோமமும் செய்ய வேண்டும். பிறகு பூர்ணாஹுதி கொடுக்க வேண்டும்.

பீடசுத்திக்காகவும் அவ்வகையாகவே ஹோமம் செய்தல் வேண்டும். பிறகு பூர்ணாஹுதி கொடுக்கவேண்டும்.

தொடர்ந்து, சாந்தி கும்பத்தில் ஸம்ஹிதா மந்த்ரத்தினால் முன்போல ஸம்பாத ஆஹுதி கொடுத்து, சாந்திகும்பங்களுடன் ஆசார்யரும் ருத்விக்குகளும் கர்ப்ப க்ரஹத்தை இரண்டாவது முறையாக அடையவேண்டும்.

முன் செய்தது போல, சாந்தி கும்ப ஜலத்தை மாவிலையினால் பிம்பத்தின் மத்ய பாகத்தை ப்ரோக்ஷணம் செய்திடல் வேண்டும். தர்ப்பையை மடித்து, தர்ப்பையின் மத்ய பாகத்தினால் பிம்பத்தின் மத்ய பாகத்தை ஹோமம் செய்த மந்த்ரங்களை ஜபித்தவாறே தொடவேண்டும். வித்யாதத்வ-தத்வேச்வர மூர்த்தி-மூர்த்தீச்வர மூல ப்ரஹ்மாங்க மந்த்ரங்களை முன்போல் ஜபிக்கவும். ஹ்ருதய பீஜத்தினால் (*ஹாம்*) ஸாந்நித்யம் செய்து, கவச மந்த்ரத்தினால் அவகுண்டனம் செய்து, வித்யா தத்வாதிபதியின் ஆக்ஞையை கேட்கும்படி ப்ரார்த்திக்கவேண்டும். அந்த பாகத்தின் தோஷத்தை நீக்கும் பொருட்டும், அதில் ஸாந்நித்யமாக விளங்குமாறும் விஷ்ணுவை ப்ரார்த்திக்க வேண்டும். மறுபடியும், கும்ப ஜலத்தை மாவிலையினால் எடுத்து லிங்கத்தின் நடு பாகத்தையும் மேல் பாகத்தையும் *ஓம் ஹ்ரீம் ஹௌம் வித்யாதத்வ சிவதத்வாப்யாம் நம:* என பிந்துவிலிருந்து நாதாந்த உச்சாரணமாகக் கூறி ப்ரோக்ஷித்து, பூஜை செய்து, *அதிபதிப்யாம் ஓம் ஹ்ரீம் ஹௌம் விஷ்ணு சிவாப்யாம் நம:* என்று ஸந்தான க்ரமமாக பூஜிக்க வேண்டும். முன் போல எட்டு திக்குகளிலும் மூர்த்தி-மூர்த்தீச்வரரை த்விவசனமாக பூஜிக்க வேண்டும்.

சாந்தி கும்ப ஜலத்தை மாவிலையினால் பீடத்தின் மத்ய பாகத்தை ப்ரோக்ஷணம் செய்திடல் வேண்டும். தர்ப்பையை மடித்து, தர்ப்பையின் மத்ய பாகத்தினால் பீடத்தின் மத்ய பாகத்தை ஹோமம் செய்த மந்த்ரங்களை

ஜபித்தவாறே தொடவேண்டும். வித்யாதத்வ-தத்வேச்வரீ மூர்த்தி- மூர்த்தீச்வரீ மூல ப்ரஹ்மாங்க மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். ஹ்ருதய பீஜத்தினல் (*ஹாம்*) ஸாந்நித்யம் செய்து, கவச மந்த்ரத்தினல் அவகுண்டனம் செய்து, வித்யா தத்வாதிபத்யையான ஜ்ஞாந சக்தியின் ஆக்ஞையைக் கேட்கும்படி ப்ரார்த்திக்கவேண்டும். அந்த பாகத்தின் தோஷத்தை நீக்கும் பொருட்டும், அதில் ஸாந்நித்யமாக விளங்குமாறும் ஜ்ஞாந சக்தியை ப்ரார்த்திக்க வேண்டும். மறுபடியும், கும்ப ஜலத்தை மாவிலையினல் எடுத்து பீடத்தின் நடு பாகத்தையும் மேல் பாகத்தையும் *ஓம் ஹீம் ஹௌம் வித்யாதத்வ சிவதத்வாப்யாம் நம:* என பிந்துவிலிருந்து நாதாந்த உச்சாரணமாகக் கூறி ப்ரோக்ஷித்து, பூஜை செய்து, *அதிபாப்யாம் ஓம் ஹீம் ஹௌம் ஜ்ஞாநீச்சாப்யாம் நம:* என்று ஸந்தான க்ரமமாக பூஜிக்க வேண்டும். முன் போல எட்டு திக்குகளிலும் மூர்த்தி- மூர்த்தீச்வரிகளை த்விவசனமாக பூஜிக்க வேண்டும்.

சுற்றிலும் ரக்ஷைக்காக இந்த்ராதியரை பூஜிக்க வேண்டும். பிறகு யாகசாலைக்கு வரவேண்டும்.

மூன்ருவது ஸ்பர்ஸாஹுதி

ஓம் ஹாம் ஆதார சக்தயே நம: என்று யாகசாலை அக்நியில் பூஜித்து, அதற்கு மூன்று ஆஹுதிகள் கொடுத்து, பிம்பத்தில் பூஜித்தது போல் ஸந்தான மார்க்கமாக *ஓம் ஹீம் ஹௌம் வித்யாதத்வ சிவதத்வாப்யாம் நம: ஓம் ஹீம் ஹௌம் விஷ்ணு சிவாப்யாம் நம:* என்று பூஜித்து மூன்று ஆஹுதிகளைக் கொடுக்கவும். பிறகு, *ஓம் ஹாம் ஹாம் லூம் லூம் க்ஷமா மூர்த்திப்யாம் நம: அதிபதிப்யாம் ஓம் ஹாம் ஹாம் ஸர்வாப்யாம் நம:* என இருமையாகக் கூறி, எட்டு திக்குகளிலும் அந்தந்த மூர்த்தி- மூர்த்தீச்வரரை பூஜித்து, மும்மூன்று ஆஹுதிகள் அளிக்க வேண்டும். ருத்ர பாக சுத்திக்காக மூலமந்த்ரத்தால் *(ஓம் ஹௌம் சிவாய ஸ்வாஹா)* என்று 1000, 500 அல்லது 100 ஹோமம் செய்து

பூர்ணாஹுதி கொடுக்க வேண்டும். ருத்ர பாகத்தினுடைய மூர்த்தி- மூர்த்தீச்வரரது ஸாந்நித்யத்திற்காகவும், த்ரவ்யங்கள் காலம் இவற்றின் குறைகளை நீக்கும் பொருட்டும் ஸம்ஹிதா மந்த்ரத்தினால் 1000, 500 அல்லது 100 ஹோமமும் செய்யவேண்டும். பிறகு பூர்ணாஹுதி கொடுக்க வேண்டும். பீடசுத்திக்காகவும் அவ்வகையாகவே ஹோமம் செய்தல் வேண்டும். பிறகு பூர்ணாஹுதி கொடுக்கவேண்டும்.

சாந்தி கும்பத்தில் ஸம்ஹிதா மந்த்ரத்தினால் முன்போல ஸம்பாத ஆஹுதி கொடுக்க வேண்டும். ஆதாரசிலைக்கும் விருபத்திற்கும் தனித்தனியாக செய்ய வேண்டிய கிரியைகளுக்காக ஆசார்யரே 100 ஹோமங்கள் செய்து, அவைகளையும் சாந்தி கும்பத்தில் ஸம்பாத ஆஹுதி செய்ய வேண்டும்.

சாந்தி கும்பங்களுடன் ஆசார்யரும் ருத்விக்குகளும் கர்ப்பக்ரஹத்தை மூன்றாவது முறையாக அடையவும். முன் செய்தது போல, சாந்தி கும்ப ஜலத்தை மாவிலையினால் பிம்பத்தின் மேல் பாகத்தையும், பீடத்தின் மேல் பாகத்தையும் ப்ரோக்ஷணம் செய்க. தர்ப்பையின் நுனியினால் பிம்பத்தின் சிரோ பாகத்தையும், பீடத்தின் அக்ர பாகத்தையும் தொட்டுக் கொண்டு ஹோமம் செய்த மந்த்ரங்களை மீண்டும் ஜபிக்க வேண்டும். சிவ தத்வ-தத்வேச்வர மூர்த்தி-மூர்த்தீச்வர மூல ப்ரஹ்மாங்க மந்த்ரங்களை முன்போல் ஜபிக்கவும். ஹ்ருதய பீஜத்தினால் (*ஹாம்*) ஸாந்நித்யம் செய்து, கவச மந்த்ரத்தினால் அவகுண்டனம் செய்து, சிவ தத்வாதிபதியின் ஆக்ஞையை கேட்கும்படி ப்ரார்த்திக்கவேண்டும். ருத்ர பாகத்தில் தோஷத்தை நீக்கும் பொருட்டும், அதில் ஸாந்நித்யமாக விளங்குமாறும் ருத்ரனை ப்ரார்த்திக்க வேண்டும். பீடத்திற்கும் இச்சா சக்தியை ப்ரார்த்தித்து அவ்வாறே செய்ய வேண்டும்.

ஆதார சக்திக்காக முன்பே ஹோமம் செய்தவாறே, ஆதார சிலையிலும் ப்ரோக்ஷித்து ஜபிக்க வேண்டும்.

வ்ருஷபத்திற்காக ஹோமம் செய்த மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். சுற்றிலும் ரக்ஷைக்காக இந்த்ராதியரை பூஜிக்க வேண்டும்.

ப்ராயச்சித்த ஆஹுதிகள்

பிறகு யாகசாலைக்குச் சென்று, நடந்த கிரியைகளில் இருந்திருக்கக்கூடிய குறை கூடுதல் இவற்றால் ஏற்படும் தோஷங்கள் நீங்க மூல, ப்ரஹ்மாங்க மந்த்ரங்களாலும், அகோராஸ்த்ர, பாசுபதாஸ்த்ர, சிவாஸ்த்ர, ம்ருத்யுஞ்ஜயாதி மந்த்ரங்களாலும் தனித்தனியாக 100 அல்லது இயன்றவரை அக்நியில் ஹோமம் செய்யவும். அக்நியில் இருக்கும் பகவானுக்கு சரு, ஆசமன தாம்பூலங்கள் கொடுத்து பூர்ணாஹுதி செய்யவும்.

சிவனை அக்நியில் நிலைநிறுத்தி, வ்யாஹ்ருதிகளாலும் (*பூ ஸ்வாஹா* ..) அக்நியாதிகளாலும் (*அக்நயே ஸ்வாஹா* ...) ஹோமம் செய்து அதிவாஸ யாகத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

குண்டத்துக்கு எதிரே ஸ்தண்டிலம் அல்லது வாழை இலை இட்டு, அதில், மேகலையில் பூஜித்த ப்ரஹ்மாதியர் இந்த்ராதியர்களின் பொருட்டு, அன்னத்தால் பலி அளிக்க வேண்டும். நேரிடையாக பலி இட்டால், அன்னம் குண்டத்தில் வீழ்ந்தோ கீழே சிதறியோ தோஷங்களை விளைவிக்குமாதலால், மேகலையில் நேரிடையாக பலி இடுதலைத் தவிர்க்க வேண்டும்.

ச்ரோத்ர வந்தநம், க்ஷமா ப்ரார்த்தனை

பிறகு கர்ப்பக்ரஹம் சென்று சாந்தி கும்ப ஜலத்தினால் அபிஷேகம் செய்துவிட்டு, பகவானை அஷ்ட புஷ்பத்தினால் பூஜை செய்து, பகவானுடைய வலது காதிலே, நமது மயக்கத்தினாலோ, தெரிந்தோ தெரியாமலோ, ப்ரம்ம பாகம் முதல் மூன்று பாகங்களிலும் நம்மால் செய்யப்பட்ட கிரியைகளில் குறையோ கூடுதலோ

இருப்பின், அவைகள் அனைத்தையும், என்னால் செய்யப்பட்ட கர்மா பூர்த்தி ஆனாலும் ஆகாவிட்டாலும், உன்னுடைய அனுக்ரஹத்தினாலே பூர்த்தியானதாகக் கொள்ள வேண்டியது என ப்ரார்த்தித்து, ஞாந சக்தியையும் அங்கே ந்யாஸம் செய்ய வேண்டும்.

அவ்வாறே பீடத்திற்கும் ப்ரார்த்தித்து, க்ரியா சக்தியை ந்யாஸம் செய்யவேண்டும். ஆதாரசிலையையும் வ்ருஷபத்தையும் ப்ரார்த்தித்து ந்யாஸம் செய்யவேண்டும்.


ஹாரத்தி

அவகாசம் இல்லாத காரணத்தினால், மூன்றாவது பாகம் ஸ்பரிசம் ஆனவுடன் சாந்தி கும்ப கலச ஜலத்தை அபிஷேகம் செய்து, அஷ்ட புஷ்பார்ச்சனை செய்து, வலது காதில் *க்ஷமா ப்ரார்த்தனை* செய்துவிட்டு, பிறகு யாகசாலைக்கு வந்து முன் கூறிய ப்ராயச்சித்த ஹோமங்கள் செய்து பூர்ணாஹுதி செய்து முடிப்பதே இப்போது அனுஷ்டானத்தில் உள்ளது.

ஆசார்யார்களின் பக்தி-ச்ரத்தையுடன் கூடிய கிரியைகள் ஆலயத்தில் ஐயனை நிலைபெறச் செய்து, அவனது அருளை ப்ரகாசமாக வழங்கச் செய்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

** ** **





D - 1

த்வஜஸ்தம்பம்

1. தொடக்கவுரை

ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் ஆலயத்தில் பழைய த்வஜஸ்தம்பம் 05.06.2002 அன்று பாலஸ்தாபநம் செய்யப்பெற்று, 14.06.2002 அன்று அகற்றப்பட்டது. 21.06.2002 அன்று புதிய த்வஜஸ்தம்பம் ப்ரதிஷ்டை (நிலைநிறுத்துதல், பதிப்பித்தல்) செய்யப்பெற்றது. பின்னர் அதற்கு செப்புக் கவசம் அணிவித்து, தன்மீசத் தேவனின் பேரருளை முன் வைத்து, 26.08.2002 அன்று கும்பாபிஷேக முஹூர்த்தம் அமைக்கப்பட்டது. இந்தத் திருப்பணியில் திளைத்த அனுபவங்களின் அடிப்படையிலும், ஸ்ரீ ராஜப்பா சிவாசாரியார் காட்டிய வழி பற்றிச் சென்றும், சென்னை - வெட்டுவாங்கேணியில் உள்ள வாஸ்து-வேத ஆராய்ச்சி நிறுவனத்தில் டாக்டர் கணபதி ஸ்தபதியார் 19.6.2002 அன்று பொறுமையுடன் அளித்த பேட்டியின்போது எனது சிற்றறிவுக்கு எட்டியவற்றினை உள் நிறுத்தியவாறும், அதே நாளில் திருவான்மியூர் ஸ்ரீ மருந்தீச்வரர் (பால்வண்ணநாதர்) ஆலயத்தில் த்வஜஸ்தம்ப அமைப்பையும் அதன் அருகே சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்த கொடிக்கவி விளக்கத்தையும் உற்று நோக்கியும், பின் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகங்களில் காணப்படுவனற்றைப் புரிந்து கொண்ட வகையிலுமாக, இப்பகுதி தொகுக்கப்பட்டுள்ளது.

1. *உத்தர காமிக ஆகமம்* - T N HR&CE, 1999.

2-4. சிவஞாநபோத அச்சு யந்திர சாலை வெளியிட்ட க்ரந்த லிபி நூல்கள்: - *பூர்வ காரண ஆகமம்,* 1920. *ஸுப்ரபேத ஆகமம்,* 1928. *குமார தந்த்ரம்,* 1905.

5. *காரணாகமம்- க்ரியா பாதம்- நித்யார்ச்சனா விதி படலம்* க்ரந்த மூலமும், தமிழ் உரையும் - (கையெழுத்துப் பிரதி)
6. *ஆகமாமிர்த வர்ஷிணீ* - இலங்கை கைலாசநாத குருக்கள்.
7. *வாமதேவபத்ததி* - தருமபுர ஆதீன வெளியீடு, 1969.
8. *சித்தாந்த சாத்திரம்* - சைவ சித்தாந்த மகா சமாஜம், 1934.
9. *மெய்கண்ட சாத்திரம்* - தருமபுர ஆதீன வெளியீடு, 1956.
10. *சித்தாந்த அட்டகம்* - திருவாவடுதுறை ஆதீனம், 1998.
11. *What is a Temple?* - by Dr. V. Ganapathy Sthapati.
12. *மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்*, 2001.
13. *Dhvaja-Stambha* (Critical Account of its Structural and Ritualistic Details) - by Dr. S.S. Janaki, Director, Kuppuswami Sastri Research Institute, Chennai. 1988.

2. த்வஜஸ்தம்பத்தின் முக்கியத்துவம்

2.1. கொடிகளும் கொடிக்கம்பங்களும் அரசுகள், அரசர்கள், தலைவர்கள் பெருமையை, உரிமையைப் பறை சாற்றுவன. இறைவனின் புகழை, பெருமையைப் பறை சாற்றி நிற்கும் ஆலய த்வஜஸ்தம்பங்களே அவற்றிற்கு முன்னோடி என்றால் அது மிகையாகாது.

2.2. உற்சவங்கள் அல்லது விழாக்கள் கொண்டாடுவதென்பது நமது பாரம்பர்யத்தோடு இணைந்த ஒன்று. சங்க காலத்தில் கூட பலவகையான விழாக்கள் நாட்டின் கண் நடைபெற்றதை அக்கால இலக்கியங்களால் அறிகிறோம். விழாக்கள் எல்லாம் உயிர்களுக்கு இன்பம் நல்குதற் பொருட்டே செய்யப்படுகின்றன என்கின்றது பதிற்றுப் பத்து (15). விழா எடுப்பதற்கு முன், விழா இனிது நடைபெற வேண்டி இறை வழிபாடு செய்வர். அவ்வமயம் கால்கோள் செய்யப்பட்டு வந்திருக்கின்றது. சிவபிரானது குமாரனாகிய முருகப்பெருமானுக்கு விழா எடுப்பதற்குக்

கால்கோள் செய்யப்பட்டதைக் கலித்தொகை (83:14-95) கூறுகிறது. கொடிக்கம்பம் நட்டுக் கொடியேற்றி, இறைவழிபாடு செய்து விழாவைத் துவக்கும் முறையே கால்கோள் எனப்பட்டது. அவ்வகையாகவே, இந்நாட்களிலும், ஆலய உற்சவங்களிலும், தொடக்கத்தில் கொடி ஏற்றுதல் (த்வஜோரோஹணம்) நிகழ்கின்றது. உற்சவத்தின் நிறைவு நாளன்று அவ்வாறு ஏற்றப்பட்ட கொடிகள் இறக்கப்படுகின்றன. எனவே, த்வஜஸ்தம்பம் உற்சவங்களுக்கு இன்றியமையாததாகின்றது.

2.3. உற்சவ காலங்களில் கொடி ஏற்றும்போது கொடிமரத்துக்கு வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், பால் சாதம் ஆகியவற்றை நைவேத்யம் செய்து பலியாக இடவேண்டும்; பின்னர் அந்த பலிச் சோற்றை ப்ரசாதமாக அன்பர்களுக்கு விநியோகிக்க வேண்டும்; அதனைப் பெற்று உண்பவர்க்குப் பிள்ளை இல்லாக் குறை நீங்கும் என்கிறது மகுடாகமத்தின் சிவோத்ஸவ விதி படலத்திலுள்ள 94-ஆவது ச்லோகம். இதே விவரத்தை பூர்வகாரண ஆகமம், மஹோத்ஸவ விதி படலம் 69-ஆவது ச்லோகமும் உறுதி செய்கின்றது.


2.4. எங்கு த்வஜயஷ்டி* வைக்கப்படுகிறதோ அங்கு (1) அகாலமரணம் ஏற்படாது (2) செல்வம் பெருகும் (3) திருட்டு பயம் ஒழியும் (4) அவமானம், கலக்கம் ஏற்படாது (5) பிணக்கங்கள் தீரும் (6) நோய்கள் அகலும் (7) நல்ல மழை பொழியும் (8) எல்லா உயிரினங்களுக்கும் சுபிக்ஷம் உண்டாகும் (9) பசுக்கள் நன்கு பால் கொடுக்கும் (10) கொடியேற்றத்தைப் பார்ப்பவர்கள் அதற்கு முன் செய்த பாபச் செயல்களின் தாக்கத்திலிருந்து விடுபடுவர் -

---

* கொடிமரத்தின் உச்சியில் குறுக்கு வாட்டில் இணைக்கப்படும் மூன்று மரச்சட்டங்களுக்கு யஷ்டி பலகைகள் என்று பெயர்.

என்கின்றன உத்தர காமிக ஆகமம், ஆறுவது படலமான மஹோத்ஸவ விதி படலம், ச்லோகங்கள் 93-96.

2.5. ஆலய த்வஜஸ்தம்பங்களில் ஏற்றப்படும் கொடிகள் அனைத்து உயிர்களுக்கும் இன்பமளிப்பன.



கொடி மரமும், வ்ருஷபக் கொடியும்


நன்றி: TN HR&CE Dept..(உத்தர காமிக ஆகமம்)

ஆன்மாக்கள் முக்தியின்பம் பெறவேண்டியே இறைவன் கொடி கட்டி உற்சவம் கொண்டருள்கிறார். எனவேதான் ஆலய கொடிக்கம்பங்கள் *காரண லிங்கங்கள்* எனப்படுகின்றன. கொடிகள் ஒரு காரணத்துடன் (குறிக்கோளுடன்) ஏற்றப்படுவன. உறுதி, ஒற்றுமை, ஒன்றுபட்ட முயற்சி இம்மூன்றின் சின்னமே கொடி. அது ஏற்றப்படும் த்வஜஸ்தம்பம், ஆன்மாக்கள் மேல் இறைவன் கொண்டுள்ள வெற்றியின் சின்னம்.

2.6. த்வஜஸ்தம்பத்தில் ஏற்றப்படும் கொடியின் அமைப்பு, ஆலயத்தின் மூல தெய்வத்தைப் பொறுத்தது. கொடிகளில் வரையவேண்டிய இலச்சினைகளும் (emblems), அவை எந்தெந்த வண்ணங்களில் வரையப் படவேண்டும் என்ற குறிப்புகளுங்கூட ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

2.7. சிவாலயங்களில் வ்ருஷபக் கொடி ஏற்றுவிக்கப்படும். வ்ருஷபம் தர்மத்தைக் குறிக்கிறது. இறைவன் அறமே வடிவானவன். ஆகவே, தர்மத்தைக் குறிப்பிடும் வ்ருஷபக் கொடி அவனுடையது. வினையின் பயனை நுகர்வித்து, உண்மை ஞானம் கூடச் செய்து, உயிர்களின் குற்றங்களை மாற்றி, குணங்களை ஓங்கச் செய்வதற்கே இறைவன் காத்திருக்கிறான் என்பதை உணர்த்துவதற்காகவே அவனது கொடி அசைந்தாடுகின்றது.

2.8. உற்சவ ஆரம்பத்தில் கொடி ஏற்றப்பட்ட உடன் முதன் முதலாக அது எந்தத் திசையை நோக்கிப் பறந்தாடத் துவங்குகிறது என்பதைக் கொண்டு பலாபலன்களை அறியலாம் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 85, 86).



1. கொடியின் சிரஸ்
2. கொடியின் புச்சம்
3-10. அஷ்ட மங்கலம்
(கண்ணாடி,
பூர்ண கும்பம்,
விளக்கு, மணி,
ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகா,
சங்கு, சாமரம்)


வ்ருஷபக் கொடியின் அமைப்பு

2.9. *துண் எனப்* * பகைவரைத் திடுக்கிட வைப்பது பறக்கும் கொடி. நாம் ஞானம் பெறத் தடைகளாக இருக்கும் ஐம்புலன்கள் என்னும் பகைவர்களை திடுக்கிடச் செய்தவாறு

* மணிவாசகரின் பத்தாவது திருத்தசாங்க பாடலிலிருந்து.

பரஞாந வெளியில் பறப்பதே இறைவனின் வ்ருஷபக் கொடி.

2.10. ஆலயம் புகும்போது, இறை உருவ வடிவமான கோபுரத்தை முதலில் வணங்குகிறேம். பிறகு கொடி மரத்தை வணங்குகிறேம். அதில் பறக்கும் அல்லது பறக்கவிருக்கும் கொடி நம்முள் உள்ள பகைவர்களான ஐம்புலன்களையும் திடுக்கிடச் செய்து அடக்கவிருப்பதை உணர்ந்து, புலனடக்கம் வேண்டி நின்று, இறைவனைப் பிரார்த்தித்து,



வ்ருஷபக் கொடி
(மற்ெறுரு அமைப்பு)
(நன்றி: ஆகமாமிர்த வர்ஷிணி)

சரணாகதியாக (ஆண்கள் எட்டு அங்கங்களும் தரையில் பட அஷ்டாங்கமாகவும், பெண்கள் ஐந்து அங்கங்கள் தரையில் பட பஞ்சாங்கமாகவும்) விழுந்து கும்பிட வேண்டும். சிவாலயத்தில் வேறு எந்த இடத்திலும் விழுந்து கும்பிடக்கூடாது.

2.11. த்வஜஸ்தம்பத்தின் அருகிலுள்ள பலிபீடத்தில் ஆணவ மலத்தை பலியாக இடுவதாகச் சிந்தையில் கொள்ளுதல் வேண்டும்; அதாவது, அகந்தை, மமதை, ஆசை, கோபம், மயக்கம், அஞ்ஞானம் இவற்றைப் பலியாக இட்டு, அதை ஏற்குமாறு இறைவனை வேண்டிக் கொள்ள வேண்டும். அத்துடன், அவனை வழிபடுவதற்கு ஞான ஒளியைத் தருமாறு அவனிடமே பிரார்த்திக்க வேண்டும்.

2.12. த்வஜஸ்தம்பத்தை அடுத்து, இறைவனை நோக்கியவாறு இருப்பது ஐயனின் வ்ருஷப வாகனம். அது தர்ம தேவதையின் உரு. அதன் பின்னால் நின்ற வண்ணம், மூலலிங்கத்தை நோக்கி *அறத்தின் பின் நின்று ஒழுகி, அறம் காட்டும் வழி நடந்து உன்னை அடைய அருள்வாயாக* என்று வேண்டிக் கொள்ளல் வேண்டும். அந்த வ்ருஷப தேவரைத் தொடுவதோ, அவரது காதுகளில் நம் குறைகளை ஓதுவதோ தோஷம் விளைவிக்கும் செய்கைகள். நமது குறைகளை அறியாதவனா இறைவன்? அறவிடையின் பின் நின்று, *அறவழி ஒழுகி உன்னை அடைய அருள் செய்* என்று வேண்டிக் கொண்டாலே நம் குறைகளைக் களைந்து வாழ்வை நிறைவாக்க மாட்டாதவனா சிவபிரான்?

2.13. *குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும் அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்* போதாது என்கின்றார் திருநாவுக்கரசர். உருவமற்ற இறைவனை உணர்வதற்கு உருவத் துணை வேண்டும். உருவம் உள்ளத்தில் பதிவதுபோல் அருவம்

பதிவதில்லை. உள்ளத்தில் பதியும் உருவமாக, ஆனால் உறுப்புகளற்ற குறியாக (அடையாளமாக), விளங்கி நமக்கு அருள் பாலித்து வருவதே சிவலிங்கம்.

2.14. *லய:* என்ற வினைச் சொல்லுக்கு லயித்தல், அதாவது ஒன்றுபடுதல் அல்லது மறைந்திருத்தல் என்பது பொருள். அந்த வினைச் சொல்லிலிருந்து தோன்றிய சொற்களே ஆலயம், லிங்கம் ஆகிய வழக்கில் உள்ள இரு சொற்களும். எனவே, லிங்கம் என்ற சொல்லுக்கு தன்னுள் லயித்திருக்கும், அதாவது மறைந்திருக்கும், ஒரு பொருளைக் குறிக்கும் *குறி* அல்லது *அடையாளம்* என்பதே பொருள். அதுபோன்ற பல லிங்கங்களைத் தன்னுள் கொண்ட காரணத்தினால் இறைவனின் திருக்கோயில்களும் *ஆலயங்கள்* (மறைந்திருப்பவற்றைக் கொண்ட இடம்) எனப்படுகின்றன. ஆலயம் என்பதற்கு ஆன்மா லயிக்க வேண்டிய, அதாவது இறைவனோடு ஒன்ற வேண்டிய, இடம் என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

2.15. நடைமுறையிலே, ஆகமங்கள், ஆலயங்கள் ஆகியவை பற்றி நாம் பேசும்போது, *லிங்கம்* என்ற சொல்லை ஒரு தனிப்பட்ட உருவம் அல்லது அமைப்பு, அதிலும் குறிப்பாகக் கருவறை மூர்த்தம் என்பதைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கின்றோம். சொல்லாராய்ச்சி (étymology) விளக்கத்தைப் பார்ப்போமானால், லிங்கம் என்ற சொல் *எல்லாமும் எதனுள் ஒடுங்குமோ, எதிலிருந்து அவை எல்லாம் மீண்டும் தோன்றுமோ, அந்த மூலப்பொருளுக்கு லிங்கம் என்று பெயர்* என்ற விளக்கம் புலனாகின்றது.

"லயம் க³ச்ச²ந்தி பூ⁴தாநி ஸம்ஹாரே நிகி²லாநி ச ।

நிர்க³ச்ச²ந்தி யதஶ்சாபி லிங்கோ³க்திஸ்தேந ஹேதுநா ॥"

என்கின்றது அஜிதாகமம் (க்ரியா, 3, 17, 8).

2.16. கருவறையில் சிவனின் சின்னம் ஆவுடையார் மேல் பதிக்கப்பெற்ற பாணமாக அமைந்துள்ளது. அந்த

மூலலிங்கம் *சூக்ஷும லிங்கம்* எனப்படுகின்றது. கருவறையின் மேல் உள்ள விமானத்தின் உச்சியில் உள்ள ஸ்தூபி *ஸ்தூல லிங்கம்* எனப்படுகின்றது. இங்கு கோபுர கலச வடிவாக சிவனின் சின்னம் அமைந்துள்ளது. கருவறை முன் த்வஜஸ்தம்பம் அருகே உள்ள பலிபீடம் *பத்ர லிங்கம்* எனப்படுகின்றது. இந்த பீடத்தில் பலி இடும் கல் போல சிவனின் சின்னம் அமைந்துள்ளது. *பத்*ரம் என்றால் மங்களம். ஆணவ மலத்தைப் பலியாக ஏற்றுக் கொண்டு, பதிலுக்கு மங்களங்களை அருளுவது பத்ர லிங்கம். கொடிக்கம்பம் *காரண லிங்கம்* எனப்படுகின்றது. (இதனோடு இணைத்து மூலலிங்கத்தை மஹாகாரண லிங்கம் என்றும் குறிப்பிட்டுப் பேசுவர்). காரண லிங்கத்தில் நெடிதுயர்ந்த த்வஜஸ்தம்பத்தின் தண்டமே சிவனின் சின்னமாக அமைந்துள்ளது. *லிங்கம்* என்று நாம் சாதாரணமாகக் குறிப்பிடும்போது "கர்பக்ருஹத்தில் ஆவுடையார் மேல் பதிந்திருந்து அருளும் பாணம்" என்ற உருவகத்தை அச் சொல் சுட்டிக் காட்டி நம் உள்ளத்தில் பக்தி உணர்வினைத் தட்டி எழுப்பிடினும், *லிங்கம்* என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது ஒரு *சின்னம், குறி* அல்லது *அடையாளம்* என்பதைத்தான் எனக் கொண்டு நோக்கினால் ஸ்தூல, பத்ர, காரண லிங்கங்களின் பெயர் விளக்கம் புலனாகும்.


2.17. ஆன்மா சென்று லயிக்க வேண்டிய *ஆ-லயத்தி*னுள், இறைவன் சிவத்தைச் (மங்களங்களைச்) செய்வதற்காக, ஐந்து இடங்களில் உருவம் தாங்கி நின்று, அதாவது சின்னங்களாக (லிங்கங்களாக) இருந்து அருள்பாலிக்கின்றான் என்பர். அந்த பஞ்ச லிங்கங்களாவன:

2.17.1 மூல லிங்கம் (கருவறையினுள்). இதுவே ஸூக்ஷுமலிங்கம். உடலுக்கு உயிர் போன்றது.

2.17.2. ஸ்தூல லிங்கம் என்ற விமானக் கலசம். (உடலை எடுத்துச் சென்று கரை சேர்ப்பது *ஆகாயவிமானம்*; ஆன்மாவை எடுத்துச் சென்று கரை சேர்ப்பது *ஆலயவிமானம்*!). ஸ்தூலம் என்பது உயிரைத் தாங்கி நிற்கும் உடல் போன்றது. விமானம் காணும் உடலாகவும், கருவறை லிங்கம் உள்ளுறை உயிராகவும் இருக்க, முதலில் விமானத்தைத் தரிசித்து வணங்கிய பிறகே, உள்ளே உள்ள லிங்கத்தைத் தரிசிப்பது முறை. "ஸ்தூலலிங்கம் நமஸ்க்ருத்ய சாலயம் து ப்ரவேசயேத் । ஸ்தூலலிங்கம் விமாநம் ஸ்யாத் ஸூக்ஷ்மலிங்கம் ஸதாசிவம் । பலிபீடம் பத்ரலிங்கம் லிங்கத்ரயமிஹோச்யதே ॥" என்கின்றது அம்ஶுமான் ஆகமம்.

प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्रवित्तम:

"Prasadam purusham mathva
pujayet mantra vittamaha".



TEMPLE AS HUMAN FORM

[illegible]

2.17.3. கொடிக் கம்பத்தின் அருகே உள்ள பத்ர லிங்கம் என்ற பலிபீடம்.

2.17.4. காரண லிங்கம் என்ற கொடிக்கம்பம்.

2.17.5. சிவோகம்பாவனே செய்து நிற்கும் சிவாசாரியார். (எல்லா ஆகமங்களே அறிந்தவனும், அமைதியானவனும், சிவலிங்க வழிபாட்டில் ஈடுபட்டவனும், நித்ய ஹோமத்தோடு கூடியவனும், சிவபெருமானுக்கு நிவேதனம் தயார் செய்பவனும், க்ருஹபலி முதலியவைகளேச் செய்பவனும், பிக்ஷை அளிப்பவனும், நிந்தனே இல்லாதவனும் ஆன சிவாசாரியாரை சிவனுகவே அறிய வேண்டும். - *உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகங்கள் 312, 313*).

2.18. கோயில் என்பது இறைவனின் உறைவிடம் என்பதை விட கோயிலே இறைவனின் சொரூபம் என்று கொள்ள வேண்டும் என்கிறுர் திரு கணபதி ஸ்தபதி (See Picture - *Courtesy: Dr.Ganapati Sthapati*). *ப்ராஸாதம் புருஷம் மத்வா பூஜயேத் மந்த்ரவித்தமஹ* என்ற உபநிஷத் வாக்யம் மந்த்ரங்களே நன்கு கற்றுணர்ந்த பூஜாரி கோயிலேயே இறைவன் என்று உணர்ந்து, அதற்கு மரியாதை செய்து பூஜிக்க வேண்டும் என்றுரைக்கின்றது.

2.19. அன்றியும், கருவறையை முதலாகக் கொண்டு கோவிலே நாம் நீட்டமைப்பில் நோக்கிஞலும், நெட்டமைப்பில் ஆராய்ந்தாலும், மனித உடலின் தலே, பாதம் முதலிய உறுப்புக்களும், (மூலாதாரம் முதலாய) ஆறு சக்ரங்களும் குறிப்பிடப்படுவது விளங்கும். உதாரணமாக, ஒரு யோகி (அல்லது இறைவன்) காலே நீட்டித் தலே நிமிர்ந்து படுத்திருக்கும் முறையாக கோயில் அமைந்துள்ளதாக உருவகித்து நோக்கினுல், பாதம் போன்றது முன்கோபுரம்; விரல்கள் போன்றவை அதன்

சிகரக் கலசங்கள்; மூலாதாரத்தை ஒத்தது கொடிக்கம்பம்; சிரஸ் போன்றது கருவறை; சிரஸ்ஸின் மத்தியை ஒத்தது கருவறையில் எரியும் தீபம்; அந்த தீப ஒளி இறைவனின் அருவுருவத்தை நினைவூட்டும். புறக் கோவில் அமைப்பு உடற்கோயிலின் பரிணமம் என்பதற்கு திருநாவுக்கரசரின் *காயமே கோயில் ஆக கடிமனம் அடிமை ஆக* என்ற தேவாரமும், *உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்* என்ற திருமூலரின் திருமந்திரமும் சான்றாகும்.

2.20. கோவில்களில் கோபுரம் கடவுளின் *விராட்சொரூபம்*. ஸ்தூபி (கருவறை விமான கலசம்) இறைவனுடைய *ஸ்தூலரூபம்*. கருவறையுள் இருக்கும் திருமேனி *சூக்குமலிங்கம்*. கர்பக்ருஹ மண்டபம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்நாந மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் ஆகிய ஆறு முக்கியமான மண்டபங்களும் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டாநம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களைக் குறிக்கும். மூலமூர்த்தி, நந்தி, பலிபீடம் ஆகியவை முறையே பதி, பசு, பாசத்தைக் குறிக்கும். சரீரம் நேராக இருந்து அசையாது தியானித்தால், பரமாநந்த சொரூபியாகிய பரமசிவம் தரிசனமாகும் என்ற தத்துவத்தை மூலமூர்த்திக்கு நேராக நின்றுகொண்டிருக்கும் கொடிக்கம்பம் குறிப்பிட்டுணர்த்தும். இவ்வாறும் ஒரு விளக்கம் உண்டு.

2.21. த்வஜஸ்தம்பங்களை ப்ரதிஷ்டை செய்வதிலும், பராமரிப்பதிலும், போற்றுவதிலும் மிகுந்த கவனம் தேவை என்பதும், ஆலயத்தின் ப்ரகாசம் (ஸாந்நித்யம்) மேலும் மேலும் ஓங்கி நின்று அன்பர்களுக்கு அருள் செய்வதில் த்வஜஸ்தம்பங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதும் மேற்கூறியனவற்றால் புலனாகும்.


3. சைவ சித்தாந்தத்தில் த்வஜஸ்தம்பம்

3.1. கொடியேற்றம் என்பது பொதுவாக ஆலயங்களில் கும்பாபிஷேகங்களின் போதும் மற்ற திருவிழாக்களின் போதும் நடைபெறுகின்ற ஒரு முக்கியச் சடங்கு. இச்சடங்கின் உட்பொருளை மிக அழகாக சைவ ஆகமத் தத்துவங்களைப் புகுத்தி ஐந்தே பாடல்களில் கொடிக்கவி என்ற நூலில் விளக்குகின்றார் அதன் நூலாசிரியரும் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவருமான உமாபதி சிவாச்சாரியார்.

3.2. இந்நூல் எழக் காரணம் குறித்து ஒரு சுவையான வரலாறும் உண்டு. தில்லை மூவாயிரவரில் ஒருவரான உமாபதி சிவாசாரியார் சிதம்பரத்துக்கு அருகில் உள்ள கொற்றவன்குடி என்னும் ஊரில் மடம் அமைத்து வாழ்ந்திருந்தவர். ஒரு அமயம் மற்ற தில்லை வாழ் அந்தணர் கொடியேற்றத் தொடங்கியபோது, கொடிக்கம்பத்தில் கொடி மேலெழாமலேயே இருந்தது. மனக்கவலை கொண்ட அவர்களுக்கு "உமாபதி வந்தால் கொடி ஏறும்" என்ற வானில் எழுந்த திருவாக்கு வகை கூறிற்று. அவர்களும் உமாபதி சிவாசாரியாரை அணுகி வேண்டினர். சிவாசாரியார் தில்லைக்குச் சென்று "ஒளிக்கும் இருளுக்கும்" எனத் தொடங்கும் கட்டளைக் கலித்துறைப் பாடலைப் பாடிய உடன், கொடி தானாகவே மேலே ஏறிற்று! அப்பாடல் *கொடிக்கவி* என்னும் நூலுக்கு முதல் பாடலாயிற்று. பின்னர், சிவாசாரியார் அடுத்து வரும் நேரிசை வெண்பாப் பாடல்களைப் பாடி நூலை நிறைவு செய்தார்.

3.3. இந்நூல் வடிவில் சிறிதாக இருப்பினும் சைவ சித்தாந்தத்தின் மூலக்கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்து பெருமை சேர்க்கின்றது.

3.4. கடவுளுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள தொடர்பை **பதி-பசு-பாசம்** என்ற தத்துவத்தால் விளக்குபவர்கள் சைவ சித்தாந்திகள். சைவ சித்தாந்தம்



மஹோத்ஸவத்தில் கொடி
ஏற்றப்பட்ட த்வஜஸ்தம்பம்

கடவுள் ஒருவரே என்று வலியுறுத்துகின்றது; அவரே மங்களங்களைச் செய்யும், செய்விக்கும் சிவபிரான்; அந்த *சிவம்* எனப்படுவது எல்லாவற்றிற்கும் மேலானதாய, அருவம் உருவம் இல்லாததாய, குணம் குறிகள் அற்ற, தனித்தியங்க வல்ல, என்றும் இருக்க வல்ல ஒன்று; அதுவே ***பதி*** எனப்படுவது; அது எண்ணிறந்த ஆன்மாக்களுக்கும் அறிவாகி, அசலமாய், அகண்டிதமாய், ஆனந்த உருவாய், மலங்களால் கட்டுண்டவர்களுக்கு எட்டாததாய், அணுவும் ஆகி, அண்டமும் ஆகி விளங்குவது.

3.5. பாசத்தால் கட்டுண்டு உழல்வதால் ஆன்மாக்கள் ***பசு*** என்று பெயர் பெறுகின்றன.

3.6. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் ***பாசம்*** எனப்படும்.

3.7. பசுக்கள் பதியின் அருளுடன் பாசத்திலிருந்து விடுபட்டு முத்தி அடையவேண்டும். இதற்கான உத்திகள், இடைப்பட்ட நிலைகள், அவற்றின் தன்மைகள் ஆகியவற்றை விளக்குவனவே சைவ சித்தாந்தக் கோட்பாடுகள். தமிழர்களின் முதிர்ந்த சிந்தனைச் செறிவு, நாகரிக முதிர்ச்சி, ஆழ்ந்த சமய உணர்வு போன்றவற்றிற்கு சைவ சித்தாந்த கோட்பாடுகள் சான்றுகளாக விளங்குகின்றன. சைவ சித்தாந்தத்தை விளக்கும் ஆதாரபூர்வ சாத்திர நூல்களாக பதினான்கு நூல்கள் போற்றப்படுகின்றன. இவை அனைத்தும் 12, 13, 14 -ஆம் நூற்றுண்டிலே தோன்றியவை. சைவ சித்தாந்த நூல்கள் மெய்கண்ட சாத்திரம், அல்லது சைவ சித்தாந்த சாத்திரம் என்று வழங்கப்பெறுகின்றன. பதினான்கு சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் *கொடிக்கவி* பதினொன்றுவது.

3.8. கொடிக்கவியிலுள்ள பாடல்கள் கொடி ஏற்றுதலின் பெருமை பகர்கின்றதோடு, சைவ சித்தாந்தத்

தத்துவச் செறிவு மிக்கதாகவும் உள்ளன. ஆகம முறைப்படி நடைபெறும் கொடியேற்று விழா தொடர்பான நிகழ்ச்சிகள் அக் கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்டுவனவாக அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

3.9. இறையாகிய பதியும், ஆசைகளுக்கு மூலமான பாசமும் சேர்ந்து இருக்கும் இடம் பசுவாகிய (ஆன்மாக்கள் என்றழைக்கப்பெறும்) உயிர்களிடத்தில்தான். அப்படி பதியும் பாசமும் ஒன்று சேர்ந்து இருந்தாலும், இறைசக்தியானது, உயிரைப் பாசங்கள் தாக்கா வண்ணம் அருள் புரிந்துகொண்டே இருப்பதை நாம் உணர வேண்டும். உயிர் உலகியல் இன்பங்களில் ஈர்க்கப்பட்டுக் கீழ் நோக்கிச் செல்லாமல், பதியை நோக்கி மேலே செல்ல வேண்டும் என்பதை உணர்த்த கொடி கட்டப்படுகின்றது என்பதை கொடிக்கவியின் முதல் மூன்று பாடல்கள் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன.

3.10. ஓம் என்னும் மூலமந்திரத்திலிருந்து எழுகின்ற ஐந்தெழுத்து (பஞ்சாக்ஷர) மந்திரமாகிய *நமசிவய*, மற்றும் அவ்வைந்து எழுத்துக்களிலிருந்து எழுகின்ற பல மந்திர அக்ஷரங்கள், அவற்றிலிருந்து உருவாகும் ஒலி அலைகள், அவ்வொலி அலைகளைத் தாங்கி நிற்கும் மொழிகள், இவை அனைத்திற்கும் அப்பாற்பட்ட மௌன நிலை - ஆகிய அனைத்துமே உயிரோடு கலந்திருக்கின்ற பரம்பொருளையே (பசுவினுள் குடியிருக்கும் பதியையே) உணர்த்துகின்றன. இறைச்சக்தி எல்லையற்ற கருணை கொண்டது. உயிர்கள் (பசுக்கள்) மலங்களிலிருந்து (பாசத்திலிருந்து) நீங்கித் தெளிவு பெற்று, அந்தத் தெளிந்த அறிவுடனே மாறுமல் இருக்கின்ற நிலையே சிவப்பேறு, அல்லது முத்தி நிலை. இக்கருத்துக்களை இந்நூலின் நான்காவது ஐந்தாவது பாடல்கள் விளக்குகின்றன.

3.11. இவ்வகையாக, கொடி ஏற்றுதலும்,

கொடிக்கம்பமும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை நிலை நிறுத்திக் காட்டுதற்கு எத்துணை இன்றியமையாததாக உள்ளது என்பது வெளிப்படும்.

3.12. உமாபதி சிவம் அருளிய கொடிக்கவி

கட்டளைக் கலித்துறை

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்ஒன்று மேலிடில்ஒன்(று)
ஒளிக்கும் எனினும் இருள்அட ராதுஉள் உயிர்க்(கு)உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்(து)உள தேனும் திரிமலத்தே
குளிக்கும் உயிர்அருள் கூடும் படிகொடி கட்டினனே. 1

(உயிரின் குறிக்கோள் கூறும் பாடல். *இதன் உரை: ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்* - ஆணவத்துக்கும் ஞானத்துக்கும் இடம் ஒன்றே. *ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்* - ஞானம் மேலிட்ட காலத்து ஆணவம் ஒளிந்து நிற்கும்; ஆணவம் மேலிட்ட காலத்து ஞானம் ஒளிந்து நிற்கும். *எனினும் இருள் அடராது* - ஒன்று மேலிட்ட காலத்திலே ஒன்று ஒளித்து நின்றாலும் ஞானத்தை ஆணவம் பொருந்தாது. *உள்ளுயிர்க்கு உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே குளிக்கும்* - முற்பிறவிப் பயன்களாலே நம் உள்ளே சிறிது சிவஞானம் விளங்கினாலும், நாம் மும்மலங்களில் மூழ்கித்தான் கிடப்போம். *உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே* - இப்படி மும்மலங்களிலே மூழ்கிக் கிடக்கின்ற நம் ஆன்மாவுக்கு அருள் கூடுவதற்காக, குருவருளால் மலங்கள் நீங்கித் திருவருள் கிடைப்பதற்காக, தீக்ஷா க்ரமங்களில் ஒன்றான கொடியைக் கட்டினேன்).

நேரிசை வெண்பா

பொருளாம் பொருள்ஏது போ(து)ஏது கண்ஏது
இருளாம் வெளிஏது இர(வு)ஏது - அருளாளா!
நீபுரவா வையம்எலாம் நீஅறியக் கட்டினேன்
கோபுர வாசல் கொடி. 2

(உயிருக்கு அருளும் முறைமை கூறும் பாடல். *இதன் உரை:*

பொருளாம் பொருள் ஏது - பொருளிலே அழியாத பொருள் எது? (கர்த்தா எது? அது சிவ பரம்பொருளே). *போது ஏது* - கிரணமாகிய சக்தி எது? (சூரியன் இது எனக் காட்ட கதிர்கள் இருப்பது போல, சிவம் இது என உயிர்களுக்குக் காட்டும் சக்தியே திருவருள்). *கண் ஏது* - கண் போன்ற ஆன்மா எது? (திருவருள் என்னும் சக்தியால் சிவத்தைப் பார்க்கும் பேறு கொண்டதுதான் ஆன்மா). *இருளாம் வெளி ஏது* - அறியாமையால் மும்மலங்களில் உழலும் "சகல நிலே" எது? *இரவு ஏது* - "கேவல நிலே" எது? இவற்றை எல்லாம் விளக்க, *அருளாளா* - அருளேயுடையவனே. *நீ புரவா வையமெல்லாம் நீ அறிய* - வையகமாகிய மும்மலங்களிலே பொருந்தாமல் ஆன்மாக்களிடமாகப் பொருந்தி இருக்கின்ற தேவரீர் சாக்ஷியாக. *கோபுர வாசல் கொடி கட்டினேன்* - கோபுர வாசலிலே கொடி கட்டினேன்).

நேரிசை வெண்பா

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா(து) உணர்(வு)அரிய தன்மையனே - நோக்கிப்
பிறித்(து)அறிவு தம்மில் பிரியாமை தானே
குறிக்கும்அருள் நல்கக் கொடி. 3

(திருவருளை வேண்டும் பாடல். *இதன் உரை: வாக்காலும் ... தன்மையனே* - வாக்கால் மனத்தால் எக்காலத்திலும் அறிதற்கு ஒண்ணுத தன்மை உடையவனே. *பிறித்து* - பாசம் பசு ஆகியவற்றினின்றும் பிரித்து. *நோக்கி* - ஆராய்ந்து ஒன்றும் புலப்படாமல். *அறிவு ... கொடி* - அறிவுக்கு அறிவாய் பதி பற்றிய ஞாநம் உள்ளவரோடு கூடியிருந்தே அறிய முடியும் என்பதை உணர்ந்து, உலகினேர் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டி, கொடி கட்டினேன்).

நேரிசை வெண்பா

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருஎழுத்தும் - நெஞ்(சு)அழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி. 4

(திருவைந்தெழுத்து விளக்கம் தரும் பாடல். *இதன் உரை: அஞ்செழுத்தும் ... நாலெழுத்தும்* - "சிவாய நம" என்ற ஐந்தெழுத்தும், "ஓம் ஆம் ஔம் சிவாய நம" என்ற எட்டெழுத்தும், "ஓம் நமச்சிவாய" என்ற ஆறெழுத்தும், "ஓம் சிவாய" என்ற நாலெழுத்தும் விதிப்படி உச்சரித்து. *பிஞ்செழுத்தும் ... நெஞ்சழுத்தி* - "வ" என்ற பிஞ்சு எழுத்தாகிய சக்தியையும், "சி" என்ற பெருவெழுத்தாகிய சிவனையும் இதயத்தில் வைத்தால். *பேசும் ... கொடி* - "வா" என்ற பேசும் எழுத்தாகிய திருவருள் எனும் சக்தி "சி" என்ற பேசா எழுத்தாகிய சிவத்தினோடு இரண்டறக் கலக்கும்படி செய்து மோக்ஷம் அளிக்கும் என்று உலகுக்கு உணர்த்த வேண்டி கொடி கட்டினேன். இந்தப் பாடலிலே ஸ்தூல, ஸூக்ஷ்ம, அதி ஸூக்ஷ்ம, ஸூக்ஷ்மா-ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரங்கள் என்ற நான்கு வகை பஞ்சாக்ஷரங்களையும் அவற்றை உச்சரிக்கும் முறைப்படி உச்சரித்தலால் பெறக்கூடிய பேறு விளக்கப்பட்டது).

நேரிசை வெண்பா

அந்த மலம்அறுத்திங்(கு) ஆன்மாவைக் காட்டிஅதற்(கு)
அந்த அறிவை அறிவித்(து)அங்(கு) - இந்(த)அறிவை
மாறுமல் மாற்றி மருவுசிவப் பே(று)என்றும்
கூறுமல் கூறக் கொடி. 5*

** ** **

3.13. த்வஜாரோஹண காலத்தில் த்வஜத்தை ப்ரதிஷ்டை செய்யும் சடங்குகளைக் கவனித்தால், த்வஜஸ்தம்ப தத்துவம் வெளிப்படையாகின்றது. ஆகமங்களின் கூற்றுப்படி, த்வஜஸ்தம்பத்தின் அதிதேவதை சிவன்; அந்த ஸ்தம்பமே சிவனைக் குறிப்பதாகும்;

---

* இந்தப் பாடல் தருமபுரம் ஆதீனம் வெளியிட்டுள்ள புத்தகத்திலும், மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டத்தின் இணைய தளத்திலும், சென்னை குப்புஸ்வாமி சாஸ்திரி ஆய்வு நிலையம் வெளியிட்டுள்ள *த்வஜஸ்தம்பம்* என்ற நூலிலும் காணப்படுகின்றது. சைவ சித்தாந்த மகா சமாஜம், மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்டுள்ள புத்தகங்களில் காணப்படவில்லை.

நெடிதுயர்ந்த கொடிமரம் மூன்று பகுதிகளைக் கொண்டது; அவையாவன 1. சதுரமான அடிப்பகுதி பிரம்ம பாகம்; 2. எண்கோண கட்டிட அமைப்பு (பீடம் அல்லது வேதிகை) விஷ்ணு பாகம்; 3. வட்டமான நீண்ட மரப்பகுதி (தண்டம்) ருத்ர பாகம். த்வஜாரோஹண காலங்களில், த்வஜதண்டம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முறையே அப்பகுதிகளில் ஆத்ம தத்வம், வித்யா தத்வம், சிவ தத்வம் ஆகியவை மந்த்ரங்களால் ந்யாஸம் செய்யப்படுவது இதை ஊர்ஜிதம் செய்கின்றது. த்வஜஸ்தம்பமும் கருவறை லிங்கத்தைப் போலவே ஸகல, நிஷ்கல, ஸதாசிவனை, அவருடைய பஞ்ச க்ருத்யங்களைக் குறிக்கும் என்பது இவ்வகையாகப் புலனாகின்றது.

3.14. கருவறைச் சிவலிங்கத்தைவிட, த்வஜஸ்தம்பம் ஒரு வகையில் வேறுபட்டு நிற்கின்றது (மேம்பட்டு நிற்கின்றது என்று கூடச் சொல்லலாம்!). த்வஜஸ்தம்ப தண்டத்தின் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியாகிய மேற்பகுதி, சிவனின் எல்லையற்ற விஸ்தாரத்தை அடையும் சக்தியைக் குறிப்பதாகும் என்பதே அது.

3.15. உடலாக உருவகப் படுத்தப்படும் த்வஜஸ்தம்பத்தின் உச்சியிலுள்ள குவிந்த பகுதியைத் (tapering portion) *தலையுச்சி* எனக் கொள்ளல் வேண்டும் என்கிறது உத்தர காரண ஆகமம். தண்டம் முகம்; கொடியின் இரு புறக் கயிறுகளும் இரு கைகள்; தர்ப்பைக் கட்டு அல்லது கூர்ச்சம் என்பது சடைமுடி; கொடியின் துணி தோல்; தண்டத்தின் அடியில் உள்ள மேடை ஐயனின் பீடம்; கொடியில் காணப்படும் வ்ருஷபம் மும்மலங்களுடன் கூடிய ஆத்மா (*பசு*); கொடியை ஏற்ற உபயோகப்படுத்தப்பெறும் கயிறு அரனிடமிருந்து பிரியாத திருவருட்சக்தி (பராசக்தி); கயிறு இல்லாமல் கொடி ஏறாது - அது போல, திருவருட்சக்தியின் கருணையாலல்லாது ஆத்மா உயர்ந்து சென்று சிவத்தின் (*பதியின்*) பக்கலை அடைந்து

ஞான வெளியில் மகிழ்ந்தாட இயலாது; த்வஜ தண்டத்தைச் சுற்றிக் கட்டப்படும் தர்ப்பைக் கயிறு மும்மலங்களாகிய *பாசத்தைக்* - முக்கியமாக ஆணவ மலத்தைக் - குறிக்கும். இவ்வாறு கூறும் ஆகமங்கள் ஒன்றைக் கூறுவதாகக் காணவில்லை என்கிறார் டாக்டர் ஜானகி (Dr.S.S.Janaki, Director, Kuppusami Sastri Research Institute, Sanskrit College Campus, Chennai-600004. - Please refer to her book called *Dhvaja-Stambha*). அதாவது, ஆரோஹணத்தில் மேல் நோக்கிக் கொடி செல்லும் வழியில் இடைப்படும் ஆறு வளையங்கள் மூலாதாரத்திலிருந்து, ஆயிரம் இதழ்கள் கொண்ட ஸஹஸ்ராரம் வரை உள்ள உடலின் ஆறு சக்ரங்களைக் குறிக்கின்றது என்பதே அது; ஆயினும் இது வெளிப்படை.

3.16. மேற்கூறியவாறு, த்வஜஸ்தம்பத்தின் உருவ அமைப்பும், அதில் ஆண்டு தோறும் நிகழும் கொடியேற்ற விழாச் சடங்குகளும், கொடிமரத்திற்கும் கருவறையிலுள்ள மூலலிங்கத்திற்கும், அமைப்பிலும் செயலிலும் உள்ள ஒற்றுமையை காட்டுவனவாம். மூலலிங்கத்தின் ஸூக்ஷ்மம் காரணலிங்கத்தில் தெளிவாகிறது! த்வஜாரோஹணம் என்னும் நிகழ்ச்சி, த்வஜபடத்திலுள்ள வ்ருஷபம் ஆறு சக்ரங்களாம் வளையங்கள் ஊடே மேலே சென்று அமர்வது மூலம், பசுக்களான ஆத்மாக்கள் பராசக்தியின் உதவியால் மேலே சென்று உய்வதைக் காட்டுகின்றது.

3.17. சைவ சித்தாந்தத்தின்படி, பசுவான ஆத்மா, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை உபாயங்களால் பாசங்களை விட்டொழித்து, படிப்படியாக ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம் ஆகிய நிலைகளைக் கடந்து, சிவஸாயுஜ்யத்தை அடைவதே மோக்ஷம் அல்லது முத்திநிலை அல்லது சிவப்பேறு எனப்படுகிறது. இதற்கு இன்றியமையாதது *தீக்ஷை*. அந்த வகையிலே, கொடியேற்றி நிகழ்த்தப்பெறும் மஹோத்ஸவமே *சாம்பவீ*

தீக்ஷை எனப்படுகின்றது. அதாவது, பசுக்களான ஜீவர்கள்பால் கருணை கூர்ந்து, பதியாம் ஐயனே இறங்கி வந்து அவர்களை உய்விக்கின்றான் என்கின்றன சாத்திரங்கள். தீக்ஷை என்ற சடங்கிற்கு பத்து க்ரியாங்கங்கள் (தீக்ஷா கிரியை நடைபெறும்போது செய்யப்படும் செயல்கள்) சொல்லப்பட்டுள்ளன. மஹோத்ஸவ காலத்தில் நிகழும் யாகம், வாஹன ஊர்வலம் போன்ற பத்து வகைக் கிரியைகள் சாம்பவீ தீக்ஷா கிரியைகளே என்கின்றது யோகஜ தந்த்ரம்.

3.18. யோக தந்த்ர முறை முழுவதுமே த்வஜஸ்தம்பத்தில் அடங்கி உள்ளதாகக் கொள்ளப்படுகின்றது. த்வஜஸ்தம்பமே ஸுஷும்நா நாடி; அதன் அடியிலுள்ள பீடம் குண்டலிநீ; ஸ்தம்பத்திலுள்ள ஆறு வளையங்கள் இக்குறிப்பீட்டை உறுதிப் படுத்துவன.

4. த்வஜஸ்தம்ப திருப்பணி


4.1. பாக்கு மரம், பலாச மரம் (பொரசு மரம், கல்யாண முருங்கை), கருங்காலி மரம், அரச மரம், ஆல மரம், சந்தன மரம், சால வ்ருக்ஷம் (தேக்கு மரம்), இலுப்பை மரம், மா மரம், மூங்கில் இனத்தைச் சார்ந்த மரங்கள், வன்னி மரம், வில்வ மரம் ஆகிய மரங்களை த்வஜஸ்தம்பம் செய்ய உபயோகிக்கலாம் (உத்தர காமிக ஆகமம், ஆறுவது படலமான மஹோத்ஸவ விதி படலம்).

4.2. முற்றாத மரங்கள் (பால வ்ருக்ஷம்) த்வஜஸ்தம்பம் செய்யப் பயன்படா (குமார தந்திரம்).

4.3. தென்னை மரம், பனை மரம், மருத மரம் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம் (குமார தந்திரம்).

4.4. தேவதாரு மரம் பயன்படுத்தலாம் (ஸுப்ரபேத ஆகமம்).

4.5. பலா மரம், குறுக்கத்தி மரம், புன்னை மரம் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம் (மகுடாகமம், சிவோத்ஸவ விதி படலம்).



1. நான்கு பட்டை - ப்ரம்ம பாகம் (ஆத்ம தத்வம்)
2. எட்டு பட்டை - விஷ்ணு பாகம் (வித்யா தத்வம்)
3. தண்டத்தின் பத்மாஸனம்
4. அஸ்த்ர ராஜர்
5. ஆறு சக்ரங்கள்
6. மூன்று யஷ்டி பலகைகள்
7. இரண்டு உபதண்டங்கள்
8. வ்ருஷபம்
9. மூன்று பூர்ண கலசங்கள்
10. நீண்ட தண்டம் - ருத்ர பாகம் (சிவ தத்வம்)
11. சிறு மணிகள்

கொடிமரம்
(த்வஜஸ்தம்பம்)

Courtesy:
DHVAJA-STAMBHA
by Dr.S.S.Janaki

4.6. வளைவான மரம், பின்னமான மரம், துளை விழுந்த மரம், பூச்சி அரித்த மரம், தானே உலர்ந்து (அதாவது பட்டுப் போய்) விழுந்த மரம் ஆகியவற்றை உபயோகிக்கக் கூடாது (குமார தந்திரம்).

4.7. அந்தஸ்ஸாரம், பஹிஸ்ஸாரம் (உள்ளே நடுப்பாகத்தில் ரஸம் உள்ளது, மேல் பட்டையில் ரஸம் உள்ளது, பசுமையானது) உள்ள மரங்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். மரத்தைப் பூஜை செய்து மேல் பட்டையோடு வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். கடைசியாக பட்டையை உரித்துக் கொள்ள வேண்டும் (குமார தந்திரம்). ப்ரதிமைகள் செய்வதற்காகத் தேவையான இனத்தைச் சார்ந்த மரங்களுள், ஸாரம் உள்ள பசுமையான நேரான குற்றம்-குறைகள் அற்ற மரத்தைத் தேடிச் சென்று, அதனைப் பூஜித்து, வெட்டி எடுத்துக் கொண்டு வருவது ஒரு விழாவாகக் கொண்டாடப்படுவதை பூரி ஜகந்நாதர் ஆலய ஸம்ப்ரதாயத்தில் இன்றும் காணலாம்.

4.8. மரங்களில் மூன்று வகை: (1) ஆண் மரம். இது கீழே பருமனுகவும், மேலே போகப் போகச் சீராகப் பருமன் குறைந்தும் காணப்படும். இவ்வகை மரங்களே சிவாலய த்வஜஸ்தம்பங்களுக்கு ஏற்றவை. பின் வரும் மற்ற இரு வகைகளும் உபயோகிப்பதில்லை. (2) பெண் மரம்: அடிப்பகுதியிலிருந்து மேல் பகுதி வரை ஒரே சீரான பருமனுடன் காணப்படுவது. (3) அலி மரம்: மேலும் கீழும் பருமன் குறைவாகவும், நடுவில் பருமன் அதிகமாகவும் உள்ள மரம்.

4.9. சிறு விமானங்கள் உள்ள ஆலயங்களில், விமான உயரத்தைப்போல் 2 அல்லது 3 மடங்கு உயரம் உள்ள கொடிக்கம்பம் அமைக்கலாம் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், 33-ஆவது ச்லோகம்).

4.10. விமானத்துக்கு சமமான உயரத்திலோ, கோபுரத்துக்கு சமமான உயரத்திலோ த்வஜஸ்தம்பம் அமைக்கலாம் (குமார தந்திரம்). இங்கு கோபுரம் என்பது மஹா மண்டபத்தின் முகப்பில் உள்ள, அதாவது த்வஜஸ்தம்பத்துக்கும் கர்பக்ருஹ விமானத்துக்கும் இடைப்பட்ட, ரிஷி கோபுரத்தைக் குறிப்பதாகக் கொள்வர்.


4.11. த்வஜஸ்தம்பத்தின் உயரத்தை விமான ஸ்தூபியின் (கலசத்தின்) நுனி வரையுமோ, ஸ்தூபியின் அடிப்பகுதி வரையுமோ (அதாவது விமானத்தின் கழுத்து வரையுமோ), விமானத்தில் ரிஷபங்கள் அமைக்கப்பட்டுள்ள இடம் (ரிஷபஸ்தலம்) வரையுமோ அமைக்கலாம். மாற்றாக, (ரிஷி) கோபுரத்தின் மேல் மட்டம், மேலிருந்து அதன் முதல் தளத்தின் அடிப்பகுதி, இரண்டாவது தளத்தின் அடிப்பகுதி ... என்றவாறு மட்டமாக அமைக்கலாம் (குமார தந்திரம்).

4.12. த்வஜஸ்தம்பத்தை வெளி கோபுரத்துக்கும் பலிபீடத்துக்கும் இடையே நிறுவ வேண்டும் (மகுடாகமம், சிவோத்ஸவ விதி படலம்). இந்த விதியை ஒட்டி, கொடிமரம், பலிபீடம், வாகனம் என்ற வரிசையிலேயே, திருவான்மியூர் மருந்தீசர் ஆலயம் போன்ற பழம்பெரும் சிவாலயங்களில் ப்ரதிஷ்டை காணப்படுகின்றது.

4.13. பலி பீடத்துக்கும் வாகனத்துக்கும் (கஜம் அல்லது மயில்) இடையேயும், அல்லது வாகனத்துக்கு முன்பாகவும் கூட த்வஜஸ்தம்ப ப்ரதிஷ்டை செய்யலாம் (குமார தந்திரம்). இந்த விதி, முதலில் பலிபீடம், பிறகு கொடிக்ககம்பம், பிறகு வாகனம் என்ற வரிசையில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சில ஆலயங்களுக்கு ப்ரமாணமாகிறது. ஒரு ஆலயத்தில் ஏற்கெனவேயே த்வஜஸ்தம்பம் இருப்பின், அங்கு எந்த வரிசைக் கிரமமாக த்வஜஸ்தம்பம், பலிபீடம், ரிஷபம் காணப்படுகின்றதோ, அதை மாற்றுமல் அவ்வாறே வைத்துக் கொள்வதே சரி

என்பது பொதுவான கருத்து.

4.14. த்வஜஸ்தம்ப யஷ்டி (மேலே குறுக்குவாட்டில் அமையும் பகுதி), தண்டம் (த்வஜஸ்தம்பத்தின் நீண்ட நடுப்பகுதி) செய்யப்பட்டுள்ள மரத்தைத் தவிர வேறு



த்வஜஸ்தம்பத்தின் சில பகுதிகள்

மரங்களினுலும் செய்யப்படலாம் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம்).

4.15. மூன்று த்வஜயஷ்டிகள் அமைக்கப்படும். அவை மும்மூர்த்திகளைக் குறிக்கும் என்றும், முக்குணங்களைக் குறிக்கும் என்றும், ஸாலோக்ய- ஸாமிப்ய- ஸாரூப்ய நிலைகளைக் குறிக்கும் என்றும் ஆகமங்கள் பகர்கின்றன. மஹோத்ஸவத்தின்போது, யஷ்டி பலகங்களில் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகியவை நியாஸம் செய்யப்படுகின்றன.

4.16. யஷ்டிபலகைகள் தண்டத்தில் பொருத்தப்படும். அவற்றிற்கு உறுதி கூட்ட இரு உபதண்டங்களும் பொருத்தப்படும். மஹோத்ஸவத்தின்போது, உப தண்டங்களில் ஸூர்யனும் சந்த்ரனும் நியாஸம் செய்யப்படுகின்றனர்.

4.17. யஷ்டிபலகைகளின்மேல், உச்சியில் மூன்று பூர்ண கலசங்கள் பொருத்தப்படும். அவை கோபுர கலசங்களுக்கு இணையானவை.

4.18. மேல் யஷ்டிபலகையில் கருவறையை நோக்கியவாறு கலசங்களுக்கு முன்னுல் ஒரு வ்ருஷபம் அமைக்கப்படும். சில ஸம்ப்ரதாயங்களில், தண்டத்தின் மேல் கருவறையை நோக்கியவாறு வ்ருஷபத்தை அமைத்து, அதன் முன்னுல் கலசங்களை வைக்கக் காண்கிறேம். அண்ணுமலையார் ஆலயத்தில் உள்ளது போல் பெரிய த்வஜஸ்தம்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வ்ருஷபங்களையும் அமைத்திருக்கக் காணலாம். உச்சியில் கலசங்களை அமைப்பதற்கும், வ்ருஷபத்தைப் பொருத்துவதற்கும் ஆகமச் சான்றுகள் இல்லையென்றுலும் அவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

4.19. த்வஜஸ்தம்ப யஷ்டியில் மணிகள் கட்டியிருக்க வேண்டும் (மகுடாகமம்).

4.20. த்வஜஸ்தம்ப யஷ்டி தண்டத்தின் அளவில் ஒன்பதில் ஒரு பங்கு இருப்பது நல்லது (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம்).

4.21. த்வஜஸ்தம்பத்தின் (மரத்தின்) கீழ்ப்பகுதியை (பிரம்ம பாகம்) நான்கு பட்டையாக (square section) அமைப்பர். தண்டம் எனப்படும் கவசம் கொண்டு மூடப்படும் நடுப்பகுதி (ருத்ர பாகம்) உருட்டையாக (round section) அமைந்திருப்பது நாமெல்லோரும் அறிந்ததே. பூமிக்கு மேலே வரும் அடிப்பகுதி (விஷ்ணு பாகம்), அதாவது கவசத்துக்குக் கீழே வேதிகைக்குள் மறைந்திருக்கும் கொடி மரப் பகுதி, எட்டு பட்டையாக (octagonal section) அமைக்கப்படுவதுண்டு. கொடி மரம் அவ்வாறு எண்கோண வடிவாகச் சமைக்கப்படாவிட்டாலும், அதைச் சுற்றி இருக்கும் பீடம் அல்லது வேதிகை எண்கோண வடிவில் அமைக்கப்பட்டிருத்தல் அவசியம்.

4.22. த்வஜஸ்தம்பத்தின் அடிப்பகுதியில் வேதிகை அமைக்க வேண்டும் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 65 முதல்). வேதிகையின் உயரம் 18 அங்குலம் முதல் 21, 24, 27, 30, 33, 36 அங்குல அளவினதாக அமைக்கப்படலாம். மூன்று மேகலைகளோடு கூடியதாக வேதிகை இருக்க வேண்டும். ஒவ்வொரு மேகலையும் எட்டு அங்குல அளவுள்ளதாகவோ, அல்லது ஐந்து அல்லது ஆறு அங்குல அளவுள்ளதாகவோ அமைக்கலாம். மேகலை இல்லாத இடத்தில், பீடத்தின் அடியில் உபபீடம் அமைக்க வேண்டும். வேதிகைக்கு மேல் நான்கு அங்குல அளவில் தாமரை செய்ய வேண்டும். அது நான்கு, எட்டு அல்லது பத்து தள பத்மமாக அமைய வேண்டும். பீடத்தின் தளசுற்று வட்ட வடிவமாகவோ,

நாற்பட்டையாகவோ இருக்கலாம் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 75 வரை).

4.23. வேதிகையின் தளச்சுற்று வட்டமாக அமைக்கப்பட்டால், அல்லது பத்மம் போன்று வேறுவிதமாக அமைக்கப்பட்டால், அதற்கு மேல் உள்ள பகுதி நான்கு பக்கங்களுள்ளதாக அமைக்கப்படல் வேண்டும். அப்போதுதான் அங்கே பிரம்ம ந்யாஸம் செய்ய இயலும். அவ்வாறே, வேதிகையின் (பீடத்தின்) மேல் பகுதியில், பத்மத்துக்குக் கீழே, ஒரு எண்கோணப் பகுதி அமைக்கப்படல் வேண்டும். அங்கே மஹோத்ஸவக் காலங்களில் விஷ்ணு ந்யாஸம் செய்யப்படும்.


4.24. வேதிகையோடு ஸ்தம்பம் பொருந்தும் இடம் பத்மமாக அமைதல் வேண்டும். அதுவே காரண லிங்கமாக ப்ரகாசிக்கும் ஐயனின் பத்மாஸனம். அது எட்டு அல்லது பதினாறு தள பத்மமாக அமைப்பது மரபு.

4.25. பத்மத்துக்கும் விஷ்ணு பாகத்துக்கும் இடைப்பட்ட பகுதி, விஷ்ணு பாகத்துக்கும் பிரம்ம பாகத்துக்கும் இடைப்பட்ட பகுதி - ஆகிய இரண்டு பகுதிகளிலும் (குமுத வரி, ஜகதி, பட்டிகை, கண்டம், பத்மம் என்றவாறெல்லாம் அழைக்கப்பெறும்) ஆகம சிற்ப சாஸ்திரங்களுக்கு ஏற்ற வேலைப்பாடுகள் செய்யப்பட்டு, வேதிகை அழகாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4.26. வேதிகையில் அஷ்டதிக்பாலகர்களின் உருவங்களை வாகனங்களோடு அமைக்கலாம் (மகுடாகமம்).

4.27. ப்ரதான த்வஜஸ்தம்பத்தைத் தவிர, நான்கு திக்குகளிலுமோ, அல்லது எட்டு திக்குகளிலுமோ அதிகமாக நான்கு அல்லது எட்டு த்வஜஸ்தம்பங்கள் அமைக்கலாம். (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 63).

4.28. *(ஒரு விதி விலக்கு:)* கொடிக் கயிறு நுழைந்து செல்வதற்காக இரும்பு வளையங்கள் பொருத்தலாம் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம்). இந்த வளையங்கள் யஷ்டி பலகைகளுக்குப் பின்னால் தண்டத்தின் மேல் பகுதியில் பொருத்தப்படும்.



1. சதுரப் பகுதி (ப்ரம்மா)
   (24 ஆத்ம தத்வங்கள்)
2. எண்கோணப் பகுதி (விஷ்ணு)
   (7 வித்யா தத்வங்கள்)
3. வட்டமான பகுதி (ருத்ரன்)
   (5 சிவ தத்வங்கள்)
4. மேலே வெளியில் சதாசிவன்
   (தத்வங்களுக்கு அப்பாற்பட்ட நிலை)

த்வஜஸ்தம்பமும் மூல-லிங்கமும்

4.29. கொடிக் கயிறு நுழைந்து செல்வதற்காக மரத்திலான சக்கரங்கள் (கிணற்று ராட்டினம் அல்லது உருளை போல), இயலாவிட்டால் இரும்பினால் ஆன சக்கரங்கள் பொருத்தலாம் (ஸுப்ரபேத ஆகமம்).

4.30. த்வஜஸ்தம்பத்தை பூமி மட்டத்திலும் (புதைக்காமல்) நிறுத்தலாம் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம்). (இந்த விதியை அனுசரித்து சில ஆலயங்களில் ஒவ்வொரு முறை உத்ஸவம் தொடங்கும்போதும், மூங்கில் போன்ற மரங்களைக் கொண்டு த்வஜஸ்தம்பம் தயாரித்து, பூமி மட்டத்தில் கட்டி நிறுத்தி ப்ரதிஷ்டை செய்து வருகின்றனர்).

4.31. நாட்கள் செல்லச் செல்ல, கொடிமரத்தின் தண்டத்தில் லேசான விரிசல்கள் (air-cracks) ஏற்படுவதுண்டு. அந்த விரிசல்கள் பெரிதாகி மரம் பலவீனப்பட்டுவிடக்கூடாதே என்பதற்காக, சில இடங்களில் பூண்களை இறுக்கமாக நிறுத்தி மரத்துக்கு வலிவூட்டுவது பல ஆண்டுகளாக இருந்துவரும் நடைமுறை. அந்தப் பூண்களைப் பலர் இரும்பினால் செய்தே அணிவிக்கின்றனர். இரும்பைப் பற்ற வைத்து வளையம் (welded ring) செய்தாலும் அது வலுவாக இருப்பதே இதற்குக் காரணம். ஆனால் இரும்பை உபயோகப்படுத்துவது என்பது பலருக்கு ஏற்புடையதாக இல்லை. ஏன்?

4.32. ஜீர்ணோத்தாரண தசகம் உலோக லிங்கங்களின் பூஜா பலன் குறித்து விவரிக்கும்போது, இரும்பு கலந்த லிங்கத்தை பூஜிப்பது மரணத்தை அளிக்கும் என்று காமிகாகமத்தை மேற்கோள் காட்டுகின்றது. த்வஸ்தம்பம் என்பதும் ஒரு லிங்கமே. எனவே, கொடிமரத்தை ஸ்திரப் படுத்துவதற்காக (விரிசல்கள் வராமல் பலப்படுத்துவதற்காக) இரும்பு வளையங்களை உபயோகித்தல் தவறு என்பது ஸித்தாந்தம். கொடிக்கயிறு நுழைந்து செல்வதற்காக இரும்பு

வளையங்கள் அமைக்கலாம் என்று விசேஷமாக ஆகமங்களில் சொல்லியிருப்பதே, மற்ற காரணங்களுக்காக இரும்பாலான பகுதிகளை உபயோகிக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதாகக் கொள்ள வேண்டும். எனவே, கொடிக்கம்ப மரத்தை (தண்டத்தை, நடுப்பகுதியை) சுற்றி போட வேண்டிய பூண்களை பித்தளையினுல் செய்வதே சிறந்தது. எவ்வாறு?

4.33. பித்தளைப் பட்டியை (brass rod of circular or square or rectangular section) வளைத்துப் பற்ற வைத்து வளையம் செய்தால் அது பலமுள்ளதாக இருக்காது. எனவே, பித்தளையை உருக்கி ஊற்றி, ஒரே வார்ப்படமாக வளையத்தை (brass ring made as a single mould) தயார் செய்து கொள்ள வேண்டும். இதற்கென சிறப்பு ஏற்பாடுகள் செய்தல் அவசியமாவதால், இதற்குத் தேவைப்படும் கால அளவையும் முஹூர்த்தங்கள் குறிக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டும்.

4.34. கொடி மரம், பூமிக்கு மேல் அது இருக்க வேண்டிய உயரத்தில் ஐந்தில் ஒரு பங்கு முதல், ஒன்பதில் ஒரு பங்கு வரை, கீழே பூமியில் பதிக்கப்பட வேண்டும்.

4.35. த்வஜ தண்டத்தில் மூன்று அல்லது ஐந்து பூண்கள் பொருத்துவது தற்போது நடைமுறையில் உள்ளது. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை அனுசரித்து த்வஜஸ்தம்பம் அமைக்க முற்படும்போது, ஆறு வளையங்களை அமைப்பது சிறப்பானதாகிறது. பூண்கள் எந்த இடங்களில் வர வேண்டும் என்று தீர்மானித்து, அவற்றின் சரியான விட்ட அளவு (diameter) எடுத்து, பித்தளைப் பூண்களைச் செய்து கொள்ள வேண்டும். பின்னர் அவற்றை கொடிமரத்தின் நுனிப்பாகத்திலிருந்து ஒன்றென்றுக அடித்து இறக்கி, அவை இருக்க வேண்டிய இடத்தில் வலுவாகப் பிடித்துக் கொண்டு இருக்கச் செய்ய


வேண்டும் (The rings are brought down from the top of the flag-staff to the various stipulated places and allowed to sit there tightly).

4.36. த்வஜஸ்தம்பத்துக்கு அமைக்கப்படும் உலோகக் கவசத்தில் தகடுகளை இணைக்கவும், கவசத்துக்கு வலிவூட்டுவதற்குமாக வளையம் போன்ற மேடான அமைப்புகள் ஏற்படுத்தப்படும். த்வஜஸ்தம்ப (மர) தண்டத்தில் ஆறு பூண்களைப் பொருத்த இயலாவிட்டாலும் கூட, கவசத்தில் ஆறு இடங்களில் வளையம் போன்ற அமைப்பை உருவாக்குவது சிறந்தது. அந்த அமைப்பு சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில் கூறப்பட்டுள்ள ஆறு சக்ரங்களுக்கு உருவகமாக அமையும். அண்ணாமலையார் ஆலயத்தில் உள்ளது போன்ற பெரிய த்வஜஸ்தம்பங்களின் கவசங்களில் ஆறு வளையங்களுக்கும் அதிகமாக வளையங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இவற்றை விதிவிலக்காகக் கொள்ளலாம்.

4.37. அதைப் போன்றே, வேதிகை மற்றும் பத்மம் போன்ற பகுதிகள் கவசத்தால் மூடப்படுமானால், வேதிகையில் இருக்க வேண்டிய பிரம்ம பாகம் மற்றும் விஷ்ணு பாகம், வேதிகைக்கு மேலே வரும் பத்மம், அதன் மேல் வரும் அஸ்த்ரராஜர், ரிஷபாருடர், விநாயகர், ஸுப்ரம்மண்யர் போன்ற உருவ அமைப்புகள், பத்மத்தின் கீழே வரும் திக்பாலகர்கள் போன்ற உருவ அமைப்புகள் ஆகியவை உலோகக் கவசத் தகடுகளிலும் வடிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

4.38. கொடி மரத் தச்சு வேலை ஆன பிறகு மரத்துக்குப் பட்டி பார்த்து, அதை நேர்-சீர் செய்து, பூச்சி அரிக்காமல் இருப்பதற்கான நல்ல மருந்தெண்ணையை (good quality shell oil, which dries quickly) பூச வேண்டும்.

4.39. பிறகு மரத்துக்கான அடிப்பூச்சு (2 or 3 coatings of Wood Primer) பூச வேண்டும்.



மற்றொரு த்வஜஸ்தம்பம்

(முருகன் சந்நிதி)

(நன்றி: ஆகமாமிர்த வர்ஷிணி)

4.40. அதற்கு மேல் தங்க நிற வண்ணப்பூச்சு (2 or 3 coatings of good quality golden yellow colour paint) செய்து மரத்தை தயார் நிலையில் வைக்க வேண்டும்.

4.41. மரம் கீழே புதைந்திருக்கும் பகுதியையும், அதற்கு மேலும் சுமார் ஆறு அங்குல உயரத்துக்கு ஒரு சிறு பகுதியையும் ஈயத் தகடு கொண்டு மூடுவதுண்டு (as an extra precaution against corrosive soil). இந்த நிலையில் கொடிமரம் ப்ரதிஷ்டைக்குத் தயாராகிறது.

4.42. கொடி மரத்தைச் சுற்றி தாமிரத் தகடு அல்லது பித்தளைத் தகடால் கவசம் இடுவது மரபு. அதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தகட்டில் முன் சென்ற பக்கங்களில் குறிப்பிட்டுள்ளவாறு வளையங்கள், உருவங்கள், வடிவங்கள் உருவாக்கி, பின் அவற்றைப் பொருத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் இரும்புத் தகட்டுத் துண்டுகள் கூட உபயோகிக்கக் கூடாது.

4.43. கொடி மரத்தில் தகடுகள் வளையங்கள் போன்றவற்றைப் பொருத்தும்போது கூட (அடிக்கும்) ஆணிகள், ஸ்குரு ஆணிகள், போல்ட்-நட்டுகள் ஆகியவற்றுக்கு இரும்பு அல்லது ஸ்டீல் உபயோகிப்பதைத் தவிர்க்கலாம். பதிலாக, செப்பாலான ஆணிகள், பித்தளையாலான ஆணிகள், ஸ்குருக்கள், போல்ட்-நட்டுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

4.44. கொடி மரத்துக்கும், அதன் உலோகக் கவசத்துக்கும் இடைப்பட்ட பகுதியை *வரகு* என்ற தான்யத்தால் நிரப்புவது வழக்கம். வரகு பன்னெடுங்காலம் பூச்சிகளால் தாக்கப்படாமல் இருக்கும் வலிமை கொண்டது. தேவையான அளவு வரகு தான்யத்தையும் முன்கூட்டியே ஏற்பாடு செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

4.45. த்வஜஸ்தம்பத்தின் தண்டத்துக்கு நாயகன் சிவன். கொடி ஏற்றும்போது பயன்படுத்தப்படும் கயிறு சக்தி. (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 59).

4.46. த்வஜாரோஹணத்தின்போது, திரிசூலத்தில் (அஸ்த்ரராஜர் சின்னத்தில்) தேவதையை பூஜிக்க வேண்டும் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 99).

4.47. த்வஜாரோஹணத்தின்போது, த்வஜஸ்தம்பத்தின் குடம் போன்ற பகுதியில் ஸ்கந்தனேயும், அதன் முகப்பகுதியில் விநாயகரையும் பூஜிக்க வேண்டும் (உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 101).

4.48. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, சிவாலய த்வஜஸ்தம்பங்களில், வேதிகைக்கு மேலே, கீழ் வருமாறு ப்ரதிமைகள் அமைப்பது மரபு: (1) ஐயனின் கருவறையை நோக்கியவாறு - அஸ்த்ரராஜர் (2) திரிசூலத்தின் நேர் எதிர்புறத்தில் - ரிஷபாரூடர் (3) கருவறையிலிருந்து நோக்கும்போது த்வஜஸ்தம்பத்தின் வலது பக்கம் (அதாவது கிழக்கு நோக்கிய ஸந்நிதி உள்ள ஆலய த்வஜஸ்தம்பத்தில்,. தெற்கு நோக்கியவாறு) மூஷிக வாகனத்தில் விநாயகர் (4) விநாயகருக்கு நேர் எதிர்புறத்தில் வள்ளி-தேவஸேனு ஸமேத மயில்வாகன ஸுப்ரம்மண்யர்.

5. மூன்று முஹூர்த்தங்கள்

5.1. ஒரே நாளில் பழைய த்வஜஸ்தம்பத்தைப் பழுது பார்க்க இயலுமானல், அதை அந்தரித ப்ரதிஷ்டா விதியை அனுசரித்து பூஜைகள் செய்து புனிதமாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

5.2. பழைய த்வஜஸ்தம்பத்தை, அது இருக்கும் இடத்திலிருந்து அகற்றுமல், ஆனுல் பல நாட்களுக்குத் திருப்பணி செய்யவேண்டி இருக்குமானுல், முதலில் ஒரு முஹூர்த்தத்தில் பாலஸ்தாபனம் செய்துவிட்டு, பிறகு திருப்பணிகள் செய்து, அவை நிறைவேறிய பின், ஒரு நல்ல முஹூர்த்த்தில் கும்பாபிஷேகம் நிகழ்த்திட வேண்டும்.

5.3. பழைய த்வஜ்தம்பத்தை எடுத்துவிட்டு, அதைப் பழுது பார்த்து மீண்டும் நடுவதாயினும் சரி, அல்லது எடுத்ததை அப்புறப்படுத்தி விட்டு வேறு புதிய த்வஜஸ்தம்பத்தை ப்ரதிஷ்டை செய்வதாயினும் சரி, மூன்று முஹூர்த்தங்கள் பார்க்க வேண்டும். முதல் முஹூர்த்தத்தில் பாலஸ்தாபனம் செய்து விட்டுப், பிறகே கொடி மரத்தை அகற்ற வேண்டும்.

5.4. அகற்றப்பட்ட கொடி மரங்களே வேறு எந்த காரியத்துக்கும் பயன்படுத்துதல் ஆகாது. அதனே ஆற்றில் அடித்துச் செல்லுமாறு விட்டுவிடவேண்டும். அல்லது அக்நியில் இட்டுவிடவேண்டும். ஆலயத்தில் நிகழும் ஹோமங்கள் மற்றும் யாகங்களில் அக்நி புஷ்டிக்கு அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதும் ஒரு கருத்து. (ஹோமத் தீயில் இடப்படும் ஸமித்துக்கள், அவை மரம் சம்பந்தப்பட்டிருந்தாலும், ஆஹுதி திரவியங்களே. அவற்றைத் தவிர பசுஞ்சாண விரட்டி, ஸமித்துக்களுக்கு உபயோகப்படும் மரங்களின் கட்டைகள் இவற்றை அக்நி நன்கு எரிந்துகொண்டிருப்பதற்காக - அக்நி புஷ்டிக்காக - உபயோகப்படுத்துகிறோம்).

5.5. புதிய த்வஜஸ்தம்பம் தயாரான உடன் (அல்லது அகற்றப்பட்ட பழைய த்வஜஸ்தம்பம் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் நிறுத்தப்படுவதற்குத் தயார் ஆன உடன்) அதை ப்ரதிஷ்டை செய்ய (நிறுத்தி வைக்க) ஒரு நல்ல முஹூர்த்தம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

5.6. நிறுத்தி வைக்கப்பட்ட த்வஜஸ்தம்பத்திற்கு யஷ்டி பொருத்துவது, கவசம் அணிவிப்பது, கீழே வேதிகை அமைப்பது போன்ற பணிகளை முடித்துக் கொண்ட பின்னர், ஒரு நல்ல முஹூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.

6. பழைய த்வஜஸ்தம்ப பாலஸ்தாபநம்

6.1. பாலஸ்தாபனத்திற்கும் கும்பாபிஷேகத்திற்கும் கிரியைகளில் அதிக வேறுபாடுகள் இல்லை. ஆகமங்களில் குறைந்த பக்ஷமாக ஏகராத்ர அதிவாஸ க்ரியையும், கும்பாபிஷேகத்தன்று காலையில் அவப்ருதமும் பேசப்படுகின்றன. ஸுப்ரபேத ஆகமம் மாலை வேளைகளில் ப்ரதிஷ்டா கிரியைகளை ஆரம்பிப்பதும், காலை வேளைகளில் கும்பாபிஷேகம் செய்து கிரியைகளை அவப்ருதம் செய்வதும் உத்தமம் என்று குறிப்பாகச் சொல்லுகிறது. எனவே, குறைந்த பக்ஷமாக, இரண்டு கால யாகசாலை பூஜைகளுடன் ப்ரதிஷ்டா கிரியைகளைச் செய்விப்பது ஸர்வஸாதகர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. த்வஜஸ்தம்ப ப்ரதிஷ்டை தனியாக நடைபெறும்போது, பல்வேறு காரணங்களால், பாலஸ்தாபனம், கும்பாபிஷேகம் ஆகிய இரண்டையுமே, அதற்கு உரிய முஹூர்த்தத்தில், இரண்டு கால பூஜைகளோடு செய்வது ஏற்புடையதாகின்றது. மூலலிங்கம், அல்லது வேறு பெரிய ஸந்நிதிகள், கோபுரங்கள் போன்றவற்றிற்குத் திருப்பணி நடந்து கும்பாபிஷேகம் செய்தால் 4, 6, 8 என்பது போன்ற அதிகமான காலங்களில் விரிவாக யாகசாலை பூஜைகள் செய்வதே தற்போது நடைமுறையில் உள்ளது.

6.2. பாலஸ்தாபனம் செய்ய த்வஜஸ்தம்ப சித்திரம் வரையப்பட்ட ஒரு பலகை தயார் செய்து கொள்ள வேண்டும். த்வஜஸ்தம்ப திருப்பணியின்போது அருகிலிருக்கும் பலிபீடம், வாகனம் ஆகியவையும்

சேதப்பட வாய்ப்புகள் உள்ளதால், அவற்றையும் சேர்த்தே பாலஸ்தாபனம் செய்து பின்னர் புனர் ப்ரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வது சிறப்பானதாகத் தோன்றுகிறது.

6.3. சில முக்கிய பாலஸ்தாபன கிரியைகள்:

முதல் நாள் மாலை: 1. அனுக்ஞை 2. விக்நேச்வர பூஜை 3. புண்யாஹவாசனம் 4. ம்ருத் ஸங்க்ரஹணம் 5. வாஸ்து சாந்தி 6. அங்குரார்ப்பணம் 7. ஆசார்ய ரக்ஷாபந்தனம் 8. யாகசாலை மண்டபார்ச்சனை 9. ப்ரதான கும்ப கலாகர்ஷணம் 10. வேதிகார்ச்சனை 11. அக்நி கார்யம் (ஹோமம்) 12. நூதன பால பிம்பங்களுக்கு (சித்திரங்களுக்கு) அஷ்டாதச கிரியைகள் 13. நாடீ ஸந்தானம் 14. தத்வார்ச்சனை 15. ஸ்பர்ஶாஹுதி 16. முதல் கால பூர்ணாஹுதி 17. உபசாரங்கள்

இரண்டாம் நாள் காலை: 18. யாகசாலை பூஜைகள் 19. அக்நி கார்யம் 20. மஹாபூர்ணாஹுதி 21. யாத்ராதானம் 22. ஸம்யோஜநாவாஹநம் (அக்நியிலிருந்து தேவதைகளை ஸம்யோஜனம் செய்து கும்பத்தில் சேர்த்தல்) 23. பால பிம்பங்களுக்கு (சித்திரங்களுக்கு) ப்ரோக்ஷணம் 24. அர்ச்சனை 25. உபசாரங்கள் 26. மஹா தீபாராதனை.

7. புதிய த்வஜஸ்தம்பத்தை நிறுத்துதல்

7.1. த்வஜஸ்தம்பம் நிறுத்தப்பட வேண்டிய இடத்தில், அஸ்திவாரம் தோண்டி, நடுவில் சதுரமாக விட்டு வைத்துவிட்டு, சுற்றிலும் கான்க்ரீட்டினால் (R.C.C.) இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நடுவில்

கொடிமரம் இறங்கும் இடம், சுத்தமான ஆற்றுமணல் கொண்டு பின்னர் நிரப்பப்படும்.

7.2. ப்ரதிஷ்டைக்குத் தயாராக உள்ள த்வஜஸ்தம்பத்தை முதல் நாளே, அதை நிறுத்துவதற்குத் தக்கவாறு, உரிய இடத்தில் கொண்டு வந்து வைத்து, சுத்தம் செய்து, பிறகு அதை தான்யாதி வாஸத்தில் வைக்க வேண்டும்.

7.3. கீழே கூர்மம், வ்ருஷபம், பத்மம் ஆகிய ப்ரதிமைகளும், நவரத்னங்களும் இட்டு, அதன்மேல் த்வஜஸ்தம்பத்தை நிறுத்த வேண்டும் என்று ஆகமங்கள் பகர்கின்றன. ப்ரதிமைகள் பொன் அல்லது வெள்ளி அல்லது செப்பினுல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஸப்த தான்யங்களும் (எள், கடுகு, பயறு, உளுந்து, துவரை, கொள்ளு, நெல்) இடப்பட வேண்டும் என்றொரு குறிப்பும் காணப்படுகின்றது. இவற்றைத் தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

7.4. திருப்பாற்கடல் கடையப்பட்டபோது, மத்தாக இருந்த மந்தர மலை அழுந்தத் தொடங்கிய உடன், திருமால் கூர்ம (ஆமை) உரு எடுத்து மந்தர மலையைத் தாங்கி நின்றதாக புராண வரலாறு. காரண லிங்கமாம் த்வஜஸ்தம்பத்தையும் கூர்மம் தாங்குமாறு அமைப்பது பொருத்தமானதே. அதற்கு மேலே வைக்கப்படும் வ்ருஷபம் ஐயனின் வாகனம். அதற்கு மேலே வைக்கப்படும் பத்மம் ஐயனின் ஆசனம். நவரத்தினங்களும் ஸப்த தான்யங்களும் ஐயனின் இருக்கையைப் பெருமைப் படுத்துவன; புனிதப் படுத்துவன. பின்னர் சுத்தமான (சலிக்கப்பட்ட) ஆற்று மணலைச் சுற்றிலும் இட்டு நிரப்பும்போது, அந்த மணல் சரியாகப் பரந்து அமைந்து ('செட்டில்' ஆகி) கொடிமரத்தைப் பிடித்துக் கொள்ளும்.

7.5. கொடி மரத்தை நகர்த்தி எடுத்துச் சென்று,

நிமிர்த்தி, அதற்குரிய துவாரத்தில் இறக்கி வைப்பதென்பது மிகவும் கவனமாகச் செய்யப்படவேண்டிய செயல். குறிப்பிட்ட முஹூர்த்தத்துக்கு முதல் நாளே மரத்தை நகர்த்தி வந்து, நிமிர்த்தி, அது இறங்க வேண்டிய துவாரத்துக்கு அருகில் வைத்து, நான்கு புறமும் ஜாக்கிரதையாகக் கட்டி வைத்திருக்க வேண்டும். அதன் மேல் பகுதிக்குச் சென்று நுனியை அலங்காரம் செய்யவும், பின்னர் புண்யாஹவாசனத்தின்போது நுனிப்பகுதிக்கு நீர் விடவும் ஏணிகள், சாரங்கள், உயரமான நாற்காலிகள் போன்றவற்றைத் தயார் செய்து வைத்திருக்க வேண்டும். நிறையத் திருப்பணியாட்களும் தேவைப்படுவர். முஹூர்த்த சமயத்தில் அன்பர் கூட்டம் அலைமோத வாய்ப்பு உள்ளதால், ஜாக்கிரதையாக மரத்தை நகர்த்தி துவாரத்தில் குறிப்பிட்ட நேரத்தில் இறக்குவதை கவனமாகக் கையாள வேண்டும். பின்னர், மாலை வேளையில், அன்பர்கள் கூட்டம் அதிகம் இல்லாத நேரத்தில், துவாரத்தில் மணலை இட்டு நிரப்பி, ரசமட்டம், வட்டு-குண்டு போன்ற கருவிகளின் துணைகொண்டு கொடிமரத்தை கர்ப்பக்ருஹத்தின் நேற்கோட்டுப் பார்வையிலும், செங்குத்தாகவும் இருக்கச் செய்து, துவாரத்தில் நீர் நிரப்பி மணலை இறுகச் செய்ய வேண்டும். பின்னர், சிமென்ட் கலவையை இட்டு மேல் பகுதியை ஸ்திரப்படுத்தி பூசிவிட வேண்டும். பீடம் (வேதிகை) கட்டி முடிக்கும் வரை, கொடிக்கம்பத்தின் நடுப்பகுதி மற்றும் நுனிப் பகுதிகளை பக்கங்களிலிருந்து குச்சிகள் வைத்துக் கட்டி, கொடிமரம் ஆடாது இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

7.6. கொடிமரம் இறங்கும் இடத்தில், ஆர்வம் மிக்க அன்பர்கள் பலர் தற்கால நாணயங்களை (coins) இடுவதைக் காண்கிறோம். இச் செயல் முற்றிலும் தவறு; ஏனென்றால் தற்கால நாணயங்கள் இரும்பு கலந்து செய்யப்படுவன. முற்காலத்தில் புழக்கத்தில் இருந்து வந்த

சுத்தமான வெள்ளி நாணயங்கள் (pure silver coins) இடுவதில் தவறில்லை. அல்லது தங்கம், வெள்ளி, செப்பு போன்ற உலோகங்களால் 'அடிக்கப்பட்ட' (minted & manufactured by jewellers) *காசுகள்* (coins or dollars) போன்றவற்றை இடலாம். அது போலவே, ஹோமங்களில் பூர்ணாஹுதியின்போது தற்கால நாணயங்களை இடுவதைத் தவிர்க்க வேண்டும். வழிபாடுகளின்போது, மந்த்ரபுஷ்பம் சொன்ன பிறகு ஸ்வர்ண புஷ்பம் ஸமர்ப்பிப்பது ஸம்ப்ரதாயம். அதற்குக் கூட தற்கால இரும்பு கலந்த நாணயங்களைச் சாத்துவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. ஒரு தங்கக் காசோ, வெள்ளிக் காசோ அல்லது குறைந்த பக்ஷமாக ஒரு செப்புக் காசோ தயார் செய்து வைத்திருந்து, அதைச் சாத்தி எடுத்து வைத்துக் கொள்ளலாம் எனத் தோன்றுகின்றது.

7.7. கோபுர கலசங்கள், விமான ஸ்தூபி போன்றவற்றை நிறுவும்போது கீழே பீடமாக ஒரு சந்தனக் கல் வைப்பது போல, த்வஜஸ்தம்பத்துக்கு அடியிலும் ஒரு கல் வைப்பது மரபு. அது நல்ல உறுதியான கருங்கல்லாக இருத்தல் வேண்டும். அதை முன் கூட்டியே சமதளமாக சிமெண்ட்டை அடியில் இட்டு, இடையே காற்றுக் குமிழ்கள் இல்லாதவாறு உறுதி செய்து பதித்து வைத்திருத்தல் அவசியம்; இல்லையெனில், கனம் மிக்கக் கொடி மரம் 'டங்' என்று இறங்கி உட்காரும்போது, பீடம் விரிந்து விட வாய்ப்புண்டு.

7.8. ப்ரதிஷ்டா தினத்தன்று காலை அதற்குரிய கிரியைகளைச் செய்து, த்வஜஸ்தம்பதை அதற்குரிய இடத்தில் இறக்கி விட்டுப் பிறகு திருப்பணிகளைத் தொடரவேண்டும்.

7.9. த்வஜஸ்தம்பத்தை நிறுத்தும் நாளன்று செய்ய வேண்டிய சில முக்கிய கிரியைகள்:

1. அநுக்ஞை 2. எஜமான சங்கல்பம் 3. விக்நேச்வர பூஜை 4. ஆசார்ய வரணம் 5. பஞ்ச கவ்ய பூஜை 6. புண்யாஹவாசனம் (கும்பத்தில் வருண ஆவாஹனம், பூஜை, ஜபம்) 7. பிம்ப சுத்தி (அலங்காரம் செய்துள்ள கொடி மரத்தின் உச்சியிலிருந்து புனித நீரை விட்டு சுத்தி செய்ய வேண்டும்) 8. இந்த்ராதி மந்த்ரங்களுடன் ரத்ந ந்யாஸம் (பிம்பத்தின், அதாவது த்வஜஸ்தம்பத்தின், த்வாரங்களில் ரத்னத்தால் ஸ்பர்ஶிப்பது. பூர்வ காரண ஆகமம் எந்த த்வாரத்தில் எந்த ரத்னத்தால் ஸ்பர்ஶிக்க வேண்டும் என்று கூடச் சொல்லுகிறது. த்வாரத்தில் சந்தனம் பூசி அதில் ரத்னத்தைப் பதித்து வைக்கலாம் என்று வாமதேவ பத்ததி கூறுகிறது. ரத்ந ந்யாஸம் தண்டத்தின் அடிப் பகுதியில் செய்ய வேண்டும் என்கிறது உத்தர காமிக ஆகமம், மஹோத்ஸவ விதி படலம், ச்லோகம் 60. எனவே, பிம்ப சுத்திக்குப் பிறகு சிவாச்சாரியார் மேலே ஏறிச் சென்று மரத்தின் நுனியிலே கிரியைகள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை). 9. மூன்று கும்பங்கள் வைத்து சூர்யன், ஸோமன், அக்நி ஆகியோரை ஆவாஹனம் செய்தல் 10. அக்நி கார்யம் 11. நவ கலச ஸ்தாபனம் (பால், தயிர், நெய், தேன், மரப்பட்டைகள், மண், தளிர்கள், பழங்கள், ஸ்வர்ணமும் ரத்னங்களும் இடப்பட்டுள்ள கலசங்கள்) 12. ஸம்ஹிதா மந்த்ரங்களால் ஆவாஹனம் 13. வெள்ளி ஊசிக்கு ஸம்பாத ஹோமம் 14. நயனோன்மீலநம் 15. ஜலாதி வாஸம் 16. ஸயனாதி வாஸம் 17. புனர்பூஜை 18. த்வஜஸ்தம்ப ப்ரோக்ஷணம் (ஸ்தம்பத்தின் அடிப்பாகத்தில் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும். மேலே யஷ்டிக்குச் சென்று செய்ய வேண்டாம்.

இந்த ப்ரோக்ஷண நீர் ஸ்நபநம் செய்யப்பட்டு இறைச்சக்தி மிகையூட்டப்பட்ட கலச நீராக இருக்கலாம். தன்மீசர் ஆலயத்தில், ப்ரதிஷ்டா தினத்தன்று காலை மஹாந்யாஸ பூர்வக ஏகாதச ருத்ர ஜபம் செய்யப்பட்டு, அங்கே ஸ்நபநம் செய்து வைத்திருந்த கலச நீரைக்கொண்டு மூலலிங்கத்துக்கு அபிஷேகமும், புதிதாக நிலை பெற்ற த்வஜஸ்தம்பத்துக்கு ப்ரோக்ஷணமும் செய்யப் பட்டது). 19. மூலலிங்கத்துக்கு உபசாரங்களும், மஹா தீபாரதனையும்.

8. த்வஜஸ்தம்ப கும்பாபிஷேகம்

சில முக்கிய த்வஜஸ்தம்பக் கும்பாபிஷேகக் கிரியைகள்:

முதல் நாள் மாலை: 1. அனுக்ஞை 2. எஜமான சங்கல்பம் 3. விக்நேச்வர பூஜை 4. ஆசார்ய வரணம் 5. பஞ்ச கவ்ய பூஜை 6. புண்யாஹவாசனம் 7. ம்ருத் ஸங்க்ரஹணம் 8. வாஸ்து சாந்தி 9. அங்குரார்ப்பணம் 10. ஆசார்ய ரக்ஷாபந்தனம் 11. யாகசாலை மண்டபார்ச்சனை 12. ப்ரதான கும்ப கலாகர்ஷணம் 13. வேதிகார்ச்சனை 14. அக்நி கார்யம் (அதிவாச யாகம்) 15. நாடீ ஸந்தானம் 16. தத்வார்ச்சனை 17. ஸ்பர்சாஹுதி 18. முதல் கால பூர்ணாஹுதி 19. உபசாரங்கள்

இரண்டாம் நாள் காலை: 20. யாகசாலை பூஜைகள் 21. அக்நி கார்யம் 22. மஹாபூர்ணாஹுதி 23. யாத்ராதானம் 24. ஸம்யோஜநாவாஹநம் (அக்நியிலிருந்து தேவதைகளை ஸம்யோஜனம் செய்து கும்பத்தில் சேர்த்தல்) 25. கும்பாபிஷேகம்

26. ஆவரண பூஜை 27. உபசாரங்கள் 28. மஹா தீபாராதனே.

9. நிறைவுரை

"த்வஜாரோஹணச் சடங்குகளே நோக்கும்போது, அணுவான ஜீவாத்மாவின் மந்த்ர (வித்யா) தேஹமும், உலகம் யாவும் அடங்கிய சிவனின் வித்யா தேஹமும் பல விதத்தில் ஒரே மாதிரியானவை என்பது புலனுகிறது ... அமைப்பில் த்வஜஸ்தம்பம் தண்டத்தில் ஸதாசிவனேயும், அதன் உச்சிப் பகுதியில் பலகையின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வ்ருஷபத்தில் ஜீவனேயும் குறிக்கிறது. த்வஜஸ்தம்பம் எப்பொழுதுமே நெடிதுயர்ந்து நின்று, ஜீவனும் சிவநிலேக்கு ஒப்பான ஸாயுஜ்ய நிலேயை அடையும் என்று அறிவிப்பது போல் உள்ளது ... மஹோத்ஸவத்தைத் தொடங்கும் த்வஜாரோஹணமே சிவநிலேயை எவ்வாறு ஜீவன் அடைய முடியும் என்பதை விளக்குவதாகவும், சாம்பவீ தீக்ஷையாகவும் அமைகிறது ... த்வஜஸ்தம்பம் சைவ ஆகமங்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்ட மூன்று பொருள்களான பதி, பசு, பாசம் என்பனவற்றையும், மேலும், எவ்வாறு பசு பாசத்தை ஒழித்து இறையருளுடன் சிவனுக்கு சமமான நிலேயை அடைய முடியும் என்பதையும் உணர்த்துகிறது ... கோயில்கள் அங்கு வரும் எல்லோருடைய மன நிலேயையும் ஆன்மீக நிலேயையும் வலுவடையச் செய்வதாக உள்ளன ... கோயில்களின் கட்டமைப்பும், கருத்துக்களும், பாவனேகளும் த்வஜஸ்தம்பத்தால் குறியீடாக வெளிப்படுத்தப்படுகின்றன".

- *டாக்டர் ஸ.ஸ்ரீ.ஜானகி,* இயக்குநர், குப்புஸ்வாமி சாஸ்த்ரி ஆராய்ச்சி நிலேயம், சென்னே, 9-8-1988.

ஒரு சிறந்த ஆராய்ச்சியாளரின் மேற் கூறிய கருத்துக்களே பொருத்தமான நிறைவுரை. கொடிமரத்தின்

பெருமையை, புனிதத்தை, முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டு, அதைப் புனிதமாகப் பாதுகாப்பதற்கு அன்பர்கள் முன் வந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதே இச் சிறியேனின் வேண்டுகோள்.

- *ஸ்ரீதரன்*, 08-07-2002.

** ** **



Copies can be had from *Compiler & Publisher:*

R.Sridharan,
"SWARNAPURI", No. T-7, I Cross, 46th St.,
Nanganallur, Chennai-600061.
☎ 2321616, 2348445.
e-mail: sridarr@vsnl.com
Website: swarnapuri.org

சிவாலய

பவித்ரோத்ஸவம்

சிவாலய பவித்ரோத்ஸவம்

வினா 1: பவித்ரோத்ஸவம் என்றால் என்ன?

விடை 1: நியமப்படி பூஜிக்கப்பட்ட, நூலினாலான கயிறு போன்ற, பவித்ரத்தை இறை மூர்த்தங்களுக்கும் இறைத்தன்மையைத் தாங்கி நிற்கும் பொருட்களுக்கும் ஸமர்ப்பித்தலே (வார்ஷிக - அதாவது ஆண்டுக்கு ஒரு முறை செய்யப்படும்) பவித்ராரோஹணம் அல்லது பவித்ராரோபணம் அல்லது பவித்ர ஸமர்ப்பணம் எனப்படும். பவித்ர ஸமர்ப்பண கிரியை ஆண்டு தோறும் தொடர்ந்து செய்யப்பெறும்போது, அது பவித்ரோத்ஸவம் என்று அழைக்கப்பெறும்.

வினா 2: பவித்ரோத்ஸவம் செய்வது எதற்காக?

விடை 2: ஆலயங்களில் பவித்ர ஸமர்ப்பணம் செய்வதால் முன் சென்ற ஓராண்டில், திருக்கோயில் வளாகத்திலும், வழிபாடுகளிலும் இழைக்கப்பட்ட குற்றம் குறைகளினால் உண்டான அப்பழுக்குகள் நீங்கி, பரிசுத்தத் தன்மை உண்டாகும் என்பது ஆகமங்களின் கூற்று (ப.வி.3). ※1

வார்ஷிக பவித்ர ஸமர்ப்பண விதிகளில் விரிவாக விதிக்கப்பட்டுள்ளபடி, பவித்ராரோஹணம் நாள் தோறும் செய்ய முடியாது. எனவே பவித்ர ஸமர்ப்பணத்தின் போது பயன்படுத்தப்பெறும் சூத்ரத்துக்குப் (நூல் கயிற்றுக்குப்) பதிலாக, புஷ்பம்,

---

※1 குறிப்பு விளக்கம்: *(ப.வி.3)* : பவித்ரோத்ஸவ விதி, 3-ஆவது பக்கம்.

தர்ப்பை போன்றவற்றால் நாள் தோறும் பவித்ரம் செய்ய வேண்டும். அந்தக் குறையை பூர்த்தி செய்ய வருஷ பவித்ரமும் அவசியம் செய்ய வேண்டும். ஸந்த்யாவந்தனம் போன்ற நித்ய கர்மாக்களில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்ய (ஆவணி அவிட்டம், காயத்ரீ ஜபம் போன்ற) வார்ஷிக ப்ராயச்சித்த கர்மாக்கள் விதிக்கப்பட்டுள்ளதைப் போல, நித்ய பவித்ர லோபத்துக்கு வார்ஷிக பவித்ரம் ப்ராயச்சித்தமாக விதிக்கப்பட்டுள்ளது. (சி.ஸா.ச.பா.). *2

ஸுபூதத்வம் ஸுரேசாந பவித்ரம் பாப நாசநம். த்வயா பவித்ரிதம் ஸர்வ ஜகத்ஸ்தாவரஜங்கமம் என்கிறது காமிக ஆகமம் (உ.கா.18,99). *3 *இதன் பொருள்:* அமரர் தலைவனான சிவபெருமானுக்கு (நம் வழிபாடுகளில் உள்ள குறைகளால்) இழைக்கப்பட்ட பாவத்தை அகற்றி, (அதன் மூலம் அவன் அருள் பெருகச் செய்து) அனைத்து அசையும் பொருட்களையும் அசையாப் பொருட்களையும் சுத்தமாக்குவதே பவித்ர ஸமர்ப்பணம்.

பரமாணு ஸமந்தாலம் யாவத்ஸூத்ரேது கல்பிதம் தாவத் வர்ஷ ஸஹஸ்ராணி சிவலோகே மஹீயதே என்கிறது காரண ஆகமம் (பூ.கா.122,4) *4 . *இதன் பொருள்:* பவித்ராரோஹண கைங்கர்யத்தில் பங்கு

---

*2 குறிப்பு விளக்கம்: *(சி.ஸா.ச.பா) : சித்தாந்த ஸாராவளி - சர்யா பாத வ்யாக்யாநம்.*

*3 குறிப்பு விளக்கம்: *(உ.கா.18.99) : உத்தர காமிக ஆகமம், 18-ஆவது படலம், 99-ஆவது ச்லோகம்.*

*4 குறிப்பு விளக்கம்: *(பூ.கா.122.4) : பூர்வ காரண ஆகமம், 122-ஆவது படலம், 4-ஆவது ச்லோகம்.*

பற்றுவோர், பவித்ரத்தின் ஒவ்வொரு நூலிலும் உள்ள ஒவ்வொரு பரமாணுவுக்கும் ஓராயிரம் ஆண்டுகள் வீதம் சிவலோக வாழ்வுக்குத் தகுதி ஆகின்றனர்.

த்ருத்வா பவித்ரந்தேவாநாம் ப்ராணிநாம் தேஹ நிர்மலம் என்கிறது ஸூக்ஷ்மாகமம் (ப.வி.41). இதன் *பொருள்:* தேவதைகளுக்கு பவித்ரம் அணிவிப்பதன் மூலம், அனைத்து ப்ராணிகளுக்கும் உடல் நலம் பேணப்படுகின்றது.

வினு 3: வைணவ ஆலயங்களில் பவித்ரோத்ஸவம் செய்வதைக் கண்டுள்ளோம். அது சிவாலயங்களிலும் செய்யப்படுவதுண்டா? செய்ய வேண்டுமா?

விடை 3: காஞ்சிபுரம் ஏகாம்ரேச்வரர் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் பவித்ரோத்ஸவம் நிகழ்த்துவிக்கப் பெறுகிறது. உத்திரமேரூர், சைதாப்பேட்டை, புரசைவாக்கம் போன்ற சில இடங்களில் உள்ள சில கோயில்களிலும் பவித்ரோத்ஸவம் நிகழ்கின்றதாகத் தெரிகின்றது (as per information available to the *Compiling Editor* of this book. on 12-09-2001). பல சிவாலயங்களில் *பூநூல் சாத்துவது* என்ற பெயரிலே இது போன்ற கிரியைகள் நடந்துகொண்டிருப்பதாகவும் அறிகிறோம்.

பவித்ரோத்ஸவம் *செய்துதான் ஆகவேண்டும்* என்று சிவ ஆகமங்களில் குறிப்புகள் உள்ளதாகத் தெரியவில்லை. ஆனால், பவித்ராரோஹணம் செய்வதால் என்ன நன்மைகள், பவித்ராரோஹணம் எப்படிச் செய்ய வேண்டும் என்பது குறித்த விவரங்கள் சிவ ஆகம நூல்களில் காணக்கிடைக்கின்றன. மற்றும், வார்ஷிக பவித்ராரோபணம் என்பது நித்ய பவித்ர ஸமர்ப்பணம் செய்வதிலுள்ள குறைகளை நிவர்த்தி

செய்யும் ப்ராயச்சித்த கர்மா என்ற குறிப்பு காணப்படுகின்றது.

ஆகமங்களில் பற்பல கிரியைகள் குறித்த விவரங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தையுமே அனைத்துத் திருக்கோயில்களிலும் செய்து விட வேண்டும் என்றோ, செய்ய இயலும் என்றோ கொள்ளக் கூடாது. தேவைக்கு ஏற்ப, சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப, சூழ்ந்திருக்கும் சமூகங்களின் பழக்க வழக்கங்களுக்கு ஒத்த முறையில், வருகை தரும் சேவார்த்திகளின் எதிர்பார்ப்புகளுக்கு இயன்ற வரையில் சமாதானம் அளிக்கும் வகையில், கிரியைகளுள் சில-பலவற்றை எடுத்துத் தொகுத்துக்கொண்டு, பூரணமான ஒரு *பத்ததியை* உருவாக்கிக்கொண்டு, ஆலய வழிபாடுகள் நடந்து வருகின்றன. அந்த வகையிலே, சிவாலயங்களில் பவித்ர ஸமர்ப்பண கிரியை பரவலாகப் பல இடங்களில் நடைபெறுதிருப்பதால், அதை நடத்தக் கூடாது, அல்லது நடத்த வேண்டிய அவசியமில்லை என்பது பொருளல்ல.

கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சுரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்

என்ற சம்பந்தர் தேவாரத்திலிருந்தும்,

ஆடி புரட்டாதிக்குட் புகழ் பதிநான்கு
அட்டமிகளில் ஒன்றின் பூசை
தருந்தகுதி மிகுதி குறை தவறு நீங்க
தந்து நவந்தரு பந்தற்சமயத்தியாகம்
பரந்த விருதாங்குமுடன்
பவித்ரத்தைப் பயில்வித்து...

என்ற கோயிற்புராணப் பாடலிலிருந்தும், பவித்ரோத்ஸவம் என்ற பெருஞ்சாந்தி நிகழ்ச்சி

தொன்று தொட்டு நிகழ்விக்கப்பட்டு வந்திருந்த ஒன்று என்பது புலனாகும்.

வினா 4: சைவ ஆகமங்கள் பற்பல. அவற்றுள் சிலவே ப்ராபல்யமாக நடைமுறையில் உள்ளதாகத் தெரிகின்றது. பரவலாகத் தமிழகக் கோயில்களுள் கடைப்பிடிக்கப்பெறும் அத்தகைய சிற்சில ஆகமங்களில் கூட பவித்ரோத்ஸவம் பற்றிய குறிப்புகள் உள்ளனவா?

விடை 4: தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பெரும்பாலும் காரண ஆகமம், காமிக ஆகமம் ஆகியவற்றைத் தழுவிய பத்ததிகள் கடைப்பிடிக்கப் பெறுவதாகக் கூறுவர். திருவாரூர் ஆலயத்தில் மகுடாகமம் அனுசரிக்கப்படுகின்றதென்பர். இந்த மூன்று ஆகமங்களிலுமே பவித்ர ஸமர்ப்பணம் குறித்த விளக்கங்கள் காணக்கிடைக்கின்றன.

இம் மூன்று ஆகமங்களன்னியில், கீழ்க்காணும் ஆகமங்களிலும் பவித்ராரோஹணம் குறித்த செய்திகள் உள்ளதாகத் தெரிகின்றது: 1. யோகஜம், 2. அசிந்த்யம், 3. தீப்தம், 4. ஸூக்ஷ்மம், 5. ஸஹஸ்ரம், 6. அம்ஸுமான், 7. ஸுப்ரபேதம், 8. ஸ்வாயம்புவம், 9. வீரம், 10. ரௌரவம், 11. பிம்பம், 12. கிரணம்.

மற்றும், 13. ஸோமசம்பு, 14. ஸார்வஸாதாக்யம், 15. அநலம், 16. மோஹசூரோத்தரம், 17. ஷட்ஸஹஸ்ரம், 18. ரௌரவோத்தரம், 19. காலோத்தரம், 20. ஸ்ரீமர்மம், 21. ஜ்ஞாநரத்நாவளீ, 22. மாஹேந்த்ரம், 23. விபும்பாவத்யாம், 24. ஹேமசூரோத்தரம், 25. அந்யத்ரம், 26. விஞ்சேஷ ஸம்ஹிதா, 27. பாஞ்சராத்ரம், 28. ம்ருகேந்த்ரம், 29. பீம ஸம்ஹிதா, 30. ப்ரயோக ஸ்மரணே, 31. பௌஷ்கரே 32. குமார தந்த்ரம் - போன்ற வழி

நூல்களும் பவித்ர ஸமர்ப்பணம் குறித்துப் பேசுகின்றன. (ப.வி.5).

வினு 5: முருகப் பெருமானுக்கு என எழுந்துள்ள ஆலயங்களிலும் பவித்ரோத்ஸவம் செய்விக்கப்பட வேண்டுமென்ற விதி உள்ளதா?

விடை 5: குமார தந்த்ரத்தில் முப்பத்து ஒன்பதாவது படலமாக அமைந்துள்ளது மாஸ பூஜா விதி படலம். அதில் ச்ராவண மாஸ பூஜா விதியைக் கூறும் அனுவாகத்தைத் தொடர்ந்து, *பவித்ராரோபணம்* என்ற தலைப்பில், எண்பத்து ஐந்து ச்லோகங்களை உள்ளடக்கி இருக்கும் அனுவாகத்தில், முருகன் ஆலயத்தில் பவித்ர ஸமர்ப்பணம் செய்வது குறித்த விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன. பவித்ராரோபண கால நிர்ணயத்தில் முருகப் பெருமானுக்கு உகந்த திதி, வார, நக்ஷத்ரங்களில் காணும் மாறுதல்களைத் தவிர, பெரும்பாலும் இக்குறிப்புகள் சிவாலய பவித்ர ஸமர்ப்பண விதிகளை ஒட்டியே காணப்படுகின்றன. (கு.த.)

வினு 6: பவித்ரோத்ஸவம் ஒரு முறை தொடங்கிவிட்டால், ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செய்ய வேண்டுமா?

விடை 6: அப்படிச் செய்ய வேண்டும் என்ற நேரடிக் குறிப்பு ஆகமங்களில் சிறப்பாகக் காணப்படவில்லை. பவித்ராரோஹணம் செய்வதால் என்ன நற்பலன்கள் கிட்டும் என்ற முன்னேற்ற நோக்குடைய (positive approach) வாக்யங்கள் அவற்றில் உள்ளனவே அன்றி, செய்யாவிட்டால் தீமைகள் விளையும் என்றோ, அதிலும் முக்கியமாக, தொடங்கிவிட்டுப் பிறகு ஆண்டு தோறும் செய்யாவிட்டால் ஒவ்வா விளைவுகள் உண்டாகும் என்றோ பின்னடைவு தரும்

நோக்குடைய (negative approach) வாக்யங்கள் ஏதும் காணப்படவில்லை.

பவித்ராரோஹணம் அல்லது பவித்ராரோபணம் (பவித்ரத்தை மேலே அணிவிப்பது), பவித்ர ஸமர்ப்பணம் (பவித்ரத்தை இறைவர்க்கு அளிப்பது) என்ற பெயர்களைத்தான் ஆகமங்கள் இந்தப் புனிதம் சேர்க்கும் சிறப்பு நிகழ்ச்சிக்குச் சூட்டி மகிழ்கின்றன. அவ்வாறு செய்யப்படும் நிகழ்ச்சி, அதற்கு முன் ஓராண்டுக்குள் இழைக்கப்பட்ட குற்றங்குறைகளை நிறைவு செய்யும் என்றும் அவை திட்டவட்டமாக அறிவிக்கின்றன. இதனுல், ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக அத்தகைய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தால், இறை மூர்த்தங்களின் ஸாந்நித்யம் (அருள் வழங்கு தன்மை) குறைவு படாதிருக்கும் என்பது பெறப்படுகிறது.

ஆண்டு தோறும் ஆலயங்களில் செய்யப்பெறும் நிகழ்ச்சிகளுக்கு *வார்ஷிக* அல்லது *வருஷாந்தர உற்சவம்* என்ற பொதுப் பெயர் உள்ளது. எனவே, ஆண்டு தோறும் செய்யப்பெறும் பவித்ர ஸமர்ப்பண நிகழ்ச்சிக்கு *பவித்ரோத்ஸவம்* என்ற பெயர் நிலைத்துள்ளது.

உற்சவம் என்று ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுவிட்டால், (1) அது ஒவ்வொரு ஆண்டும் நிகழ்வதாக இருக்கவேண்டும், (2) அந்த நிகழ்ச்சிக்கான முஹூர்த்தம் அனைவரும் கணிக்கத்தக்க வகையிலே ஒரு குறிப்பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட திதி அல்லது நக்ஷத்திரத்தில் அமைவதாக இருத்தல் வேண்டும்.

எனவே, முதன் முதலாக பவித்ராரோஹண கிரியைகளை ஏற்பாடு செய்யும்போது, அதை *பவித்ரோத்ஸவம்* என்று பெயரிட்டு, ஸங்கல்பம்

செய்துகொண்டு நடத்திவிட்டால், அதனை உற்சவம் போல் ஒவ்வொரு ஆண்டும் செய்து வருவதே முறை. *அவ்வாறின்றி, ஓர் ஆலயத்தில் முதன் முதலாக நிகழ்ச்சியைத் தொடங்கும்போது, அது பவித்ர ஸமர்ப்பண அல்லது பவித்ராரோஹண நிகழ்ச்சியே என்று ஸங்கல்பித்துக் கொண்டால், அந்த நிகழ்ச்சியை வரும் ஆண்டுகளிலும் தொடர்வது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஒப்ப அவ்வப்போது தீர்மானம் செய்து கொள்ளலாம்* என்று கருதுவோரும் உண்டு.

வினு 7: பவித்ரோத்ஸவம் தொடங்கி ஓராண்டோ, சில-பல ஆண்டுகளோ நிகழ்ந்த பிறகு, தடைப்பட்டுவிட நேர்ந்தால் என்ன செய்வது?

விடை 7: இதற்கெனத் தனிக் குறிப்புகள் ஆகமங்களில் காணப்படவில்லை. ஆலயத்தில் நடைபெறும் ஸம்வத்ஸர (வருஷா வருஷம் நடைபெறும்) உற்சவம் ஒன்று தடைப்பட்டால், அதற்கென என்ன செய்ய வேண்டுமோ, அவ்வாறே தடைப்பட்ட பவித்ரோத்ஸவத்திற்கும் செய்ய வேண்டும் எனக் கொள்க.

வினு 8: கும்பாபிஷேகம் நடந்த ஆண்டிலோ, அல்லது கும்பாபிஷேகத்துக்குப் பிறகு சரியாக ஒரு ஸம்வத்ஸரம் ஆன பிறகோ, பவித்ரோத்ஸவம் செய்வதில் ஏதாவது விசேஷமோ அல்லது பவித்ரோத்ஸவம் செய்யவேண்டும் என்ற அவசியமோ உண்டா?

விடை 8: பவித்ராரோஹணம் என்பது கும்பாபிஷேகக் கிரியைகளில் பலவற்றையும் உள்ளடக்கிய விரிவானதொரு நிகழ்ச்சி. பவித்ராரோஹணத்தையும்

விட மிக விரிவான கிரியைகள், கும்பாபிஷேகத்துக்கு (மஹா ஸம்ப்ரோக்ஷணத்துக்கு) விதிக்கப்பட்டுள்ளன.

குறைந்தது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கும்பாபிஷேகம் (மஹா ஸம்ப்ரோக்ஷணம்) செய்ய வேண்டும் என்ற குறிப்பு அனைத்து ஆகமங்களிலும் காணப்படுகின்றன. இதனால், 12 ஆண்டுகளாகச், சிறிது சிறிதாக இறங்குமுகமாக உள்ள ஸாந்நித்யத்தை கும்பாபிஷேகம் சமன் செய்யும் என்பது புலனாகிறது.

மேற்கூறிய இரு கோட்பாடுகளையும் வைத்துக் கொண்டு பார்க்கும்போது, பவித்ரோத்ஸவம் நடைபெற்று வரும் திருக்கோயிலில், கும்பாபிஷேகம் நடைபெற உள்ள அல்லது நடைபெற்றுள்ள ஒரு ஆண்டில், பவித்ரோத்ஸவம் நடைபெற வேண்டுமா என்ற கேள்வி எழுவது சரியே!

பவித்ரோத்ஸவம் தொடங்கிச் செய்யப்பட்டு வரும் திருக்கோயிலில் எந்தக் காரணத்தினால் அதனை ஓராண்டு நடத்தாமல் விடலாம் என்றவாறு ஆகமக் குறிப்புகள் ஏதும் காணவில்லை; அப்படி இருக்க, ஆகம விதிகளின்படி தவறாது பவித்ரோத்ஸவம் நடந்து வரும் ஆலயங்களில், மஹா கும்பாபிஷேகத்தைக் (மஹா ஸம்ப்ரோக்ஷணத்தைக்) காரணமாக வைத்து பவித்ரோத்ஸவத்தை நடத்தாமல் விடுவது சரியாகப் படவில்லை.

வினா 9: பவித்ரோத்ஸவம் செய்யும் காலத்தை எவ்வாறு நிர்ணயிப்பது?

விடை 9: சயந ஏகாதசிக்குப் பிறகு (சாந்த்ரமானத்தை அனுசரித்து, ஸூர்யன் மிதுன ராசியில் பிரவேசமான பிறகு, சுக்ல பக்ஷ துவாதசிக்கு அப்புறம்), ஆடி ஆவணி புரட்டாசி ஆகிய மூன்று

மாதங்களில் எந்த மாதத்தில் தோஷம் இல்லாமல் இருக்கிறதோ அந்த மாதத்தில் பவித்ராரோஹணம் செய்ய வேண்டும். மூன்று மாதங்களுமே தோஷமுள்ளதானால், ஆவணியில் செய்ய வேண்டும் (ப.வி.3), (சி.ஸா.ச.பா.).

இம் மூன்று மாதங்களுள், ஆடியில் முஹூர்த்தம் கிடைத்துச் செய்வது சிறப்புடையது. ஆவணி இரண்டாம் பக்ஷம். ஏதோ காரணங்களால் இந்த மூன்று மாதங்களிலுமே பவித்ராரோஹணம் செய்ய இயலாவிடின், ஐப்பசி அல்லது கார்த்திகை மாதங்களில் செய்யலாம்.

ஆனால் எக்காரணம் கொண்டும், கார்த்திகை தீபத் திருநாளுக்குப் பிறகு பவித்ராரோஹணம் செய்யக் கூடாது (உ.கா.18.8).

திதியைப் பிரதானமாகக் கொண்டு முஹூர்த்தம் வைப்பதானால், பவித்ராரோஹண நிறைவு நாள் அஷ்டமி அல்லது சதுர்த்தசி திதியாக இருக்க வேண்டும். நக்ஷத்ரத்தை அனுசரித்துச் செய்வதானால், ரேவதி, கிருத்திகை, திருவாதிரை, ரோஹிணி ஆகிய நக்ஷத்ரங்களுள் ஒன்றில் உத்ஸவம் நிறைவடைய வேண்டும் (ஸு.7.7). *5

பவித்ராரோஹண கிரியையை ஒவ்வொரு ஆண்டும் உத்ஸவமாகச் செய்வதானால், துவக்க ஆண்டில் எந்த மாதத்தில் எந்த திதி அல்லது நக்ஷத்ரத்தில் செய்தோமோ அதே மாதத்தில் அதே திதி அல்லது நக்ஷத்ரத்தில் ஒவ்வொரு ஆண்டும் செய்ய வேண்டும்.

---

*5 குறிப்பு விளக்கம்: *(ஸு.7.7) : ஸுப்ரபேத ஆகமம் 7-ஆவது படலம், 7-ஆவது ச்லோகம்.*

வினு 10: பவித்ரோத்ஸவம் எத்தனை நாட்கள் செய்ய வேண்டும்?

விடை 10: பவித்ர ஸமர்ப்பண கிரியை நடத்தித் தரும் ஆசாரியன் ஏழு நாட்களுக்கு மேல் எத்தனை நாட்கள் விரதம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் சிறு சிறு வேறுபாடுகள் ஆகமங்களுக்கிடையே காணப்படுகின்றன. ஆனால், அனைத்து ஆகமங்களும், ஏழு அல்லது ஐந்து அல்லது மூன்று இரவுகள் அல்லது ஒரு இரவு இடைப்படும் வகையாக, பவித்ராரோஹண கிரியையைத் தொடங்கி, 14 அல்லது 10 அல்லது 6 அல்லது 2 கால யாகசாலை பூஜைகளின் நிறைவில், குறிப்பிட்ட திதியில் அல்லது குறிப்பிட்ட நக்ஷத்ரத்தில் நிறைவு செய்யவேண்டும் என்பதில் ஒன்றுகவே உள்ளன.

வினு 11: நித்ய பவித்ர ஸமர்ப்பணம் என்பது என்ன?

விடை 11: பாவத்தைச் செய்து பதிதன் ஆகாமல் தடுத்து நிறுத்துவதே பவித்ரம் என்கிறது *ஸகலாகம ஸங்க்ரஹத்தின்* 787-ஆவது ச்லோகம். அலங்காரம் ஆகி, தூப தீப நைவேத்யங்கள் நிறைவேறி, அலங்கார தீப ஆராதனையும் முடிந்த பிறகு, *அக்ஷதை, அறுகு, வில்வம்* இம்மூன்றையும் சேர்த்து மூல மந்த்ரம் கூறி, சிவபெருமானின் சிரஸ்ஸில் சாத்துவதே நித்ய பவித்ரம் சாத்துவது என்பதாகும்.

பவித்ர ஸமர்ப்பணம் என்பது நித்ய பூஜா கிரியையின் ஒரு அம்சமாக இருப்பதால், விசேஷமாக ஆண்டுக்கொரு முறை செய்யும் பவித்ராரோஹணமும் நித்ய கிரியையாகவே கொள்ளப்படுகின்றது (ப.வி.3).

தினந்தோறும் செய்வது நித்ய கர்மா. சங்கராந்தி போன்ற விசேஷ நாட்களில் விரிவாகச் செய்யும்

நித்ய கர்மா நித்யாங்க (ஆகந்துக நித்ய) கர்மா எனப்படுகிறது. பவித்ரம் நாள் தோறும் செய்வது தைவஸிகம்; வருஷம் தோறும் செய்வது வார்ஷிகம். தைவஸிகம் இல்லாவிட்டால், வார்ஷிகத்துக்கு முக்கியத்துவம் இல்லை. எனவே, வார்ஷிக பவித்ரோத்ஸவம் என்பது நித்யாங்க கர்மாவே. (சி.ஸா.ச.பா.).

வினு 12: பவித்ரம் எவ்வாறு தயார் செய்வது?

விடை 12: பவித்ரங்கள் சாதாரணமாக (வெண்மை நிறப்) பருத்தி நூலினுலும், (கறுப்பு நீங்கலாகப் பல் வண்ண) பட்டு நூலினுலும் செய்யப்படுவது தற்காலத்து வழக்கம். இவைகளன்னியில், முஞ்சைப்புல், தர்ப்பை, மரவுரி (மரப்பட்டையிலிருந்து உரித்த நார்), தாமரை நூல், கம்பளம் ஆகியவற்றுலும் பவித்ரம் செய்யலாம் என்ற குறிப்புகள் ஆகமத்தில் காணப்படுகின்றன. பருத்தி நூலாலான சரட்டினை ஆமந்த்ரண (கந்த) பவித்ரமாகவும், பட்டினுலான கயிற்றை ப்ரதான பவித்ரமாகவும் தற்காலத்தில் ப்ரயோகித்து வருகின்றனர்.

மூன்று இழை கொண்ட நூலை மும்மடங்காகச் சுற்றி ஒன்பது இழைகள் கொண்டதாக்கி, அஸ்திர மந்த்ரத்தால் சுத்தி செய்து பவித்ரம் தயார் செய்யும் முறை காமிக ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது (உ.கா.18.10.). இம்முறையில் பருத்தி நூலாலான பவித்ரம் செய்து, செஞ்சந்தனம், குங்குமப்பூ, கைரிகை, அகில், சந்தனம், நீலோத்பலக் கிழங்கு, பச்சைக் கற்பூரம், மஞ்சள், கருஞ்சந்தனம் ஆகியவை பூசப்பட்டு நறுமணமூட்டப்படுவதே கந்த பவித்ரம். வாஸனுதி திரவியங்கள் பூசுபவர் ஹ்ருதய மந்த்ரம்

ஜபித்தவாறு அச்செயலைச் செய்ய வேண்டும் (உ.கா.18.21).

ஒன்பது இழைகள் கொண்ட, 108 எண்ணிக்கை வரையான நூல்கள் எப்படி சேர்க்கப்பட்டு பவித்ரம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற குறிப்பும் ஆகமத்தில் காணப்படுகின்றது (உ.கா.18.12-15.). இவ்வாறு எண்ணிக்கையிலான நூல்களைச் சேர்த்து, கயிறு போல ஆக்கிக்கொண்டு, பின் அவற்றை ஒரு நீண்ட நூலைக் கொண்டு முடிச்சுகள் இட்டு (தற்காலத்தில் காதி வஸ்த்ராலயங்களில் கிடைக்கும் கதர் மாலையைப் போல) உறுதியாக்க வேண்டும்; அப்படித் தயாரித்த கயிறு, சங்கிலி போல் அணிவதற்கு ஏற்ப, ஜப மாலை போல அணிந்து கொள்ளும் வகைத்தாகிறது. நூலைக் கொண்டு பவித்ரத்தைக் கட்டும்போது எத்தனை முடிச்சுகள் இருக்க வேண்டும், அவை எத்தனை அங்குல இடைவெளியில் அமைய வேண்டும் என்ற குறிப்பும் ஆகமத்தில் காணப்படுகின்றது! (உ.கா.18.18-20). இம்முறையில் பட்டு நூலாலான பவித்ரம் தயார் செய்யப்பட்டு ப்ரதான பவித்ரமாக உபயோகப் படுத்தப் பட்டு வருகின்றது.

பவித்ராரோபணம் செய்யும் நிமித்தம், ஆன்ம பவித்ரம், வித்யா பவித்ரம், சிவ பவித்ரம் என்னும் த்ரிதத்வ (தத்வத்ரய) பவித்ரங்களுக்கும், *கங்காவதாரம்* (சிவபெருமானின் - மூலவரின் - சிரஸ்ஸில் அணிவிக்கப்பெறும் பவித்ரம்) என்னும் நான்காவது பவித்ரத்துக்கும் நூல் இத்தனை, முடிச்சுக்கள் இத்தனை என்னும் கணக்கு *சித்தாந்த ஸாராவளி*யில் இரண்டு ச்லோகங்களில் சொல்லப்பட்டுள்ளது.

"சிவலிங்க பூஜார்த்தமாக, ஒன்பது இழை கொண்டு உண்டான நூல்களில் 108-ஐச் சேர்த்து தத்வத்ரய பவித்ரம் செய்ய வேண்டும். (108 என்பது உத்தமம். 54 என்பது மத்யமம். 27 என்பது அதமம். 108 நூலுக்கு மேற்பட்ட பவித்ரம் ஆகாது. கங்காவதார பவித்ரம் எப்போதுமே 108 நூல்களால்தான் செய்யப்பட வேண்டும் என்றும் கூறுவர்).

இந்த தத்வத்ரய பவித்ரங்கள் லிங்கத்தின் சிரஸ்ஸில் சரியான அளவுள்ளதாக இருக்க வேண்டும். இவற்றுக்கு, ஆகமங்களில் கண்டுள்ளபடி, பத்து, ஒன்பது போன்ற *க்ரந்திகள்* (முடிச்சுகள்) போட வேண்டும். இவை ஒன்றன் கீழ் ஒன்றாக பாணத்தின் மீது சாத்தப்பெறும்.

நான்காவதான *கங்காவதாரம்* என்னும் பவித்ரமும் முன்போலவே 108 நூல்களால் செய்யப்பட வேண்டும். ஆனால், இந்த பவித்ரம் லிங்கத்தின் சிரஸ்ஸிலிருந்து பீடம் வரையும் அணிவிக்கப்பெறும். எனவே அவற்றின் நீளம், லிங்க மூர்த்தியின் அளவைப் பொருத்து அமையும்.

கங்காவதார பவித்ரத்தின் நீளத்துக்கு ஏற்றவாறு கட்ட உபயோகிக்கும் நூலின் இழைகளும் (நூல் கணக்கு), அவற்றுக்கு ஏற்றவாறு முடிச்சுகளும் (முடிச்சுக் கணக்கு) இருக்க வேண்டும். *நூல் கணக்கு:* ஒன்பது முழ உயரம் உள்ள நவ ஹஸ்த லிங்கத்துக்கு 108 இழைகளாலான நூலைக் கொண்டு முடிச்சுகள் போட வேண்டும். எட்டு முழ உயரம் உள்ள அஷ்ட ஹஸ்த லிங்கத்துக்கு 98 இழைகளாலான நூலைக் கொண்டு முடிச்சுகள் போட வேண்டும். ... ஒரு முழ உயரம் உள்ள ஏக ஹஸ்த லிங்கத்துக்கு 28 இழைகளாலான நூலைக் கொண்டு

முடிச்சுகள் போட வேண்டும். *முடிச்சுக் கணக்கு:* நவ ஹஸ்த லிங்கத்துக்கு 50 முடிச்சுக்கள். அஷ்ட ஹஸ்த லிங்கத்துக்கு 46 முடிச்சுக்கள். ... ஏக ஹஸ்த லிங்கத்துக்கு 18 முடிச்சுக்கள்." (சி.ஸா.ச.பா.).

மற்ற ஆகமங்களிலும் பவித்ரம் தயாரிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. அவ்வாறுன முறைகளிடையே சிறுச் சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. திருக்கோயிலில் கடைப் பிடிக்கப் பெறும் ஆகமங்கள் மற்றும் பத்ததிகளுக்கு ஒத்தவாறும், பவித்ராரோஹண கிரியையை நடத்தி வைக்கும் அபிஷேகம் செய்து கொண்டு தகுதி பெற்றுள்ள சிவாச்சாரியார் தியானித்து ஒழுகும் பத்ததிகளை அனுஸரித்தும், அம்முறைகளுள் ஒன்றினைப் பின்பற்றி பவித்ரம் தயார் செய்து கொள்ளல் வேண்டும்.

வைணவ ஆலயங்கள் பலவற்றிலும் பவித்ரோத்ஸவம் நிகழ்ந்து வருகின்றது. அவர்களை அணுகி விசாரித்தால் பவித்ரம் தயார் செய்து தருபவர்கள் பற்றிய விவரம் அறியலாம். பெரும்பாலும் பட்டு பவித்ரம் செய்து தருபவர்கள் காஞ்சீபுரம் போன்ற பட்டுக் கைத்தறித் தொழிலுக்குப் புகழ் பெற்ற இடங்களில் கிடைப்பர். பவித்ர ஸமர்ப்பண கிரியை செய்து வைக்க இசைந்துள்ள சிவாச்சார்யாரின் மேற்பார்வையில், அவர்களைக் கொண்டு பவித்ரம் தயார் செய்து கொள்ளல் வேண்டும்.

விஞ 13: பவித்ரங்களை சிவாசாரியார் எங்ஙனம் ஸமர்ப்பிக்க வேண்டும்?

விடை 13: "பவித்ரம் செய்த பின்பு, அதை ஸமர்ப்பிக்குமிடத்து (ஆலயத்தில்), நிவிர்த்தியாதி பஞ்ச கலா சுத்தி (பூத சுத்தி) உடையவனும்,

அந்தர்யாக (மாநஸீக பூஜா) த்யாநத்தோடும், ஸ்தாநாதி சுத்தியோடும் (அதாவது, ஸ்தாந சுத்தி, த்ரவ்ய சுத்தி, மந்த்ர சுத்தி, லிங்க சுத்தி ஆகியவை) கூடியவனும், சிவ மந்த்ரத்தை நாத-நாதாந்த சக்தி வரையிலும், ஸமநாந்தம் வரையிலும், ப்ரம்மாதி காரணேச்வர த்யாகக் கிரமத்தோடு கூட, த்வாதசாந்தம் வரையில் இருக்கும் "*உந்மநா*"வை அந்தமாகக் கொண்ட உச்சரிப்பாக உச்சரித்துக் கொண்டு, ஆன்ம தத்துவம் முதலான மூன்று தத்வ பவித்ரங்களையும் ஸர்வ தேவதா ஸ்வரூபமான நான்காவது கங்காவதார பவித்ரத்தையும், லிங்க மஸ்தகத்தில் (நெற்றியில்) ஸமர்ப்பிக்க வேண்டும். பின்னர் இந்த நான்கிலும் இருக்கும் சிவனை ஏக ரூபமாகச் செய்யும் வகையாக, *நம:* என்று முடியும் வகையில் மூல மந்த்ரத்தை உச்சரித்த வண்ணம் புஷ்பாஞ்சலி மூன்றையும் ஸமர்ப்பிக்க வேண்டும். இந்த பவித்ர ஸமர்ப்பணம், ஒரு ஆண்டிற்குள் செய்யப்பட்ட கிரியைகளைக் குறைவின்றி ஸம்பூர்த்தி செய்யும் பொருட்டாகும்" (சி.ஸா.ச.பா.).

வினு 14: கந்த பவித்ரம் என்முல் என்ன?

விடை 14: கந்த பவித்ரம் என்பது நூலினுல் தயாரிக்கப்பட்டு, அதில் வாஸனுதி திரவியங்கள் பூசப்பட்டு மணம் கமழத் திகழும் பவித்ரம் (நூல் மாலை). பவித்ராரோஹணத்தின் முதல் காலத்தில் (மாலை வேளையில்) சாத்தப்படும் கந்த பவித்ரம் அதிவாஸமாக இரவு முழுவதும் இருந்து, மறுநாள் காலை இரண்டாங்கால ஆரம்பத்தில் களையப்பெற்று, நிர்மால்யமாக, சண்டேச்வரரிடம் சேர்ப்பிக்கப்படும். கந்த பவித்ரம் சாத்தும் போது, இறைவனை வரவேற்று உபசரிக்கும் ஆமந்த்ரண மந்த்ரங்கள்

ஓதப்படுவதால், கந்த பவித்ரத்துக்கு *ஆமந்த்ரண பவித்ரம்* என்றும் பெயர்.

விஞ 15: கந்த பவித்ரத்துக்கும், மறுநாள் ஸமர்ப்பிக்கப் பெறும் ப்ரதான பவித்ரத்துக்கும் என்ன வித்தியாசம்?

விடை 15: கந்த பவித்ரம் நூலால் செய்யப்பட்டு, நறுமணங்கள் சேர்க்கப்பட்டு முதற்கால யாகசாலே பூஜைகளுக்குப் பின், பகவானே வரவேற்கும் முகத்தான் அணிவிக்கப்பட்டு, மறு நாள் களையப்பட்டு நிர்மால்யமாக விஸர்ஜநம் செய்யப்படும். ப்ரதான பவித்ரங்கள் (பொதுவாகப் பட்டு நூலினுல், அல்லது ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேறு பொருட்களால் செய்யப்பட்டு), இரண்டாங்கால யாகசாலே பூஜைக்குப் பிறகு ஸமர்ப்பிக்கப் பெறும். அவையே, பெரும்பாலும் அடுத்து வரும் ஒவ்வொரு கால பூஜையின் தொடக்கத்திலும் ஸமஸ்காரம் செய்யப்பட்டு மீண்டும் ஸமர்ப்பணம் செய்யப்படும். நிகழ்ச்சியின் நிறைவில், அவை சேவார்த்திகளுக்கு ப்ரசாதமாக வழங்கப்படலாம்.

விஞ 16: பவித்ரோத்ஸவத்தின் போது, ஒரு காலத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட பவித்ரத்தை எடுத்து மீண்டும் ஸமர்ப்பிக்கலாமா, அல்லது ஒவ்வொரு காலத்துக்கும் புதுப்புது பவித்ரங்கள் ஸமர்ப்பிக்க வேண்டுமா?

விடை 16: கந்த பவித்ரம் முதல் காலத்தில் மட்டுமே சாத்தப்படுவதால், இந்தக் கேள்விக்கே இடமில்லே. 7 அல்லது 5 அல்லது 3 நாட்கள் யாகசாலே பூஜையில், ப்ரதான பவித்ரங்கள் மட்டுமே இரண்டாம் காலத்தை அடுத்து வரும் பன்னிரண்டு, எட்டு, நான்கு காலங்களில், முந்திய காலத்தில் சாத்தியதைக் களைந்த பிறகு, மீண்டும் சாத்தப்பட

வேண்டிவை. அவற்றை மீண்டும் மீண்டும் பயன் படுத்தலாமா என்பதே கேள்வி. புதுப் பவித்ரத்தைக் கூட அக்நியில் ஸம்ஸ்காரம் செய்த பின்னரே, அது சாத்தப்படுவதற்குத் தகுதியாகிறது. எனவே, ஒரு காலத்தில் சாத்திப் பிறகு அடுத்த கால பூஜையின் ஆரம்பத்தில் களையப்படும் ப்ரதான பவித்ரங்கள், மீண்டும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு உபயோகப்படுத்தப்படுவதில் தவறு இல்லை என்பது கருத்து.

வினா 17: பவித்ரோத்ஸவத்திற்கு விதிக்கப்பட்டுள்ள யாகசாலைகள், குண்டங்கள், மண்டலங்கள் யாவை?

விடை 17: ஒரு யாகசாலை அமைத்து, அதில் வசதிக்கு ஏற்றுற்போல் ஒன்பது அல்லது ஐந்து குண்டங்கள் அல்லது ஒரு குண்டம் அமைக்க வேண்டும் (உ.கா.18.32). கும்பாபிஷேகத்திற்கு மண்டலங்கள் (கலசத்தை இருத்தி வழிபடும் மேடையில் வரையப்பட வேண்டிய கோலங்கள்) சொல்லப்படவில்லை. பவித்ர ஸமர்ப்பணம் கிரியைக்கும், தீக்ஷா கிரியைக்குமே மண்டலங்கள் சொல்லப்பட்டுள்ளன. விசேஷ லதாலிங்க பத்ம தீக்ஷா மண்டலம் (ஆ.வ.) *6 போன்ற, தீக்ஷைக்குப் பயன் பெறும் மண்டலங்களே பெரும்பாலும் பவித்ராரோஹணை யாககுண்டங்களுக்கும் மேற்கு திக்கில் வரையப்பட்டு, கலச ப்ரதிஷ்டை செய்யப்படுகின்றது.

---

*6 குறிப்பு விளக்கம்: *(ஆ.வ) : ஆகமாமிர்த வர்ஷிணீ.*

வினு 18: பவித்ரோத்ஸவத்தின்போது செய்யப்படும் கிரியைகள் யாவை?

விடை 18: சென்னை, நங்கைநல்லூர் (தெற்கு), ஸர்வமங்களா நகர், ஈச்வரன் காலனியில் எழுந்தருளியுள்ள, ஆயிரம் ஆண்டுகட்கும் மேல் தொன்மை வாய்ந்த, ஸ்ரீ ஸர்வமங்களாம்பிகை உடனுறை ஸ்ரீ தர்மலிங்கேச்வரர் என்ற தன்மீசத்தேவர் ஆலயத்தில், மூன்று நாள் யாகசாலை பூஜைகள் செய்து, விஷு வருஷம், ஆவணி மாதம், ஆருத்ரா நக்ஷத்ரம், தசமி திதி, புதன்கிழமை (12.09.2001), காலை 12 மணிக்கு முன்னதாக நிகழ்ச்சிகள் நிறைவடையும் வகையில், 10.30 - 12.00 என்று பவித்ராரோஹண முஹூர்த்தம் கணிக்கப்பட்டு நிகழ்வுற்ற வைபவத்தை முன்மாதிரியாகக் கொள்வோம் ...

நிகழ்ச்சிக்கான பூர்வாங்கம், அதற்கு முந்தைய சனிக்கிழமை (08.09.2001) மாலை தொடங்கியது.

மறுநாள் (09.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலை, யாகசாலை மற்றும் மண்டப அலங்காரங்கள் செய்விக்கப்பட்டன. அன்று மாலை யாகசாலையில் கலசங்களை நிறுவி பூஜித்து, முதற்கால யாகசாலை பூஜைகள் செய்து, கந்த பவித்ரம் ஸமர்ப்பிக்கப்பட்டது.

மறுநாள் (10.09.2001) திங்கள் கிழமை காலை கந்த பவித்ரத்தைக் களைந்து, இரண்டாங்கால யாகசாலை பூஜைகள் செய்து, ப்ரதான பவித்ரங்கள் ஸமர்ப்பித்து, பூர்ணாஹூதி செய்யப்பட்டது. அன்று மாலை, முன் காலத்தில் ஸமர்ப்பித்த பவித்ரங்களை எடுத்து வந்து ஸம்ஸ்காரங்கள் செய்து பவித்ரமாக்கி (புனிதமாக்கி), மூன்றுங்கால யாகசாலை பூஜைகள்

செய்து, மீண்டும் அந்த பவித்ரங்களை ஸமர்ப்பித்து, பூர்ணாஹுதி செய்யப்பட்டது.

அவ்வாறே (11.09.2001) செவ்வாய்க்கிழமை காலை, முதல் நாள் மாலை ஸமர்ப்பித்த பவித்ரங்களை எடுத்து வந்து ஸம்ஸ்காரங்கள் செய்து, நான்காம் கால யாகசாலை பூஜைகள் செய்து, மீண்டும் அந்த பவித்ரங்களை ஸமர்ப்பிந்து, பூர்ணாஹுதி செய்யப்பட்டது. அன்று மாலை, காலையில் ஸமர்ப்பித்த பவித்ரங்களை எடுத்து வந்து ஸம்ஸ்காரங்கள் செய்து, ஐந்தாம் கால யாகசாலை பூஜைகள் செய்து, மீண்டும் அந்த பவித்ரங்களை ஸமர்ப்பித்து, பூர்ணாஹுதி செய்யப்பட்டது.

அன்று இரவு அகண்ட நாம பஜனையுடன், *(கீதம், ந்ருத்யம், நாடகம் போன்றவையும் ஏற்பாடு செய்யலாம்)* இரவு முழுவதும் யாகசாலை மண்டபத்தில் கண் விழித்து, *ஜாக்ரண்* நிகழ்வுற்றது.

மறுநாள் (12.09.2001 புதன் கிழமையன்று காலை, முதல் நாள் மாலை ஸமர்ப்பித்த பவித்ரங்களை எடுத்து வந்து ஸம்ஸ்காரங்கள் செய்து, ஆறும் கால யாகசாலை பூஜைகள் செய்து, மீண்டும் அந்த பவித்ரங்களை ஸமர்ப்பித்து, *மஹாபூர்ணாஹுதி* செய்யப்பட்டது. தொடர்ந்து மஹாபிஷேகம். பிறகு யாகசாலைக் கலச நீரைக்கொண்டு கலசாபிஷேகம். *இந்தக் கலசாபிஷேகம், ஏறத்தாழ கும்பாபிஷேகம் போன்றது. முஹூர்த்தம் நிர்ணயிப்பது இந்த கலசாபிஷேகம் நடைபெறும் காலத்தைக் குறிப்பதற்குத்தான்.*

அபிஷேகத்துக்குப் பிறகு, நிறைய அந்நத்துடன் திருப்பாவாடை சாத்தி, இறைவருக்கு நைவேத்யம். மஹா தீபாராதனை. பின்னர், உத்தராங்கக் கிரியைகளுடன் யாகசாலை பூஜைகள் பூர்த்தி.

மாலை, ஸ்வாமியும் (ஸோமாஸ்கந்தர்) அம்பாளும் திருவீதியுலா சென்று வருவதுடன் நிகழ்ச்சிகள் பூர்ணம். பின்னர், பவித்ரங்கள் சேவார்த்திகளுக்கு ப்ரசாதமாக வழங்கப்பட்டன.

மேற்கூறிய பூஜைகளுக்கான விரிவான பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

<u>08.09.2001 மாலை:</u>

1. அனுஞ்ஜை
2. விக்நேச்வர பூஜை
3. ம்ருத் ஸங்க்ரஹணம்
4. அங்குரார்ப்பணம்
5. வாஸ்து சாந்தி

<u>09.09.2001 மாலை:</u>

1. விக்நேச்வர பூஜை
2. மஹா சங்கல்பம்
3. புண்யாஹவாசநம்
4. யாகசாலை பூஜை
5. அக்நி கார்யம்
6. பவித்ர பூஜை
   -(தந்து நவகேஷு பூஜையும், க்ரந்தி பூஜையும்)
7. ரக்ஷா பந்தநம்
8. கந்த பவித்ர ஸமர்ப்பணம்
9. விசேஷ த்ரவ்ய ஹோமம்
10. அதிவாஸ பஞ்சாவரண பூஜை
11. பூர்ணாஹுதி

<u>10.09.2001 காலை இரண்டாங்கால பூஜை முதல், 12.09.2001 காலை ஆறங்கால பூஜை வரை:</u>

1. விக்நேச்வர பூஜை
2. ஸங்கல்பம்

3. ஸூர்ய பூஜை
4. நித்ய த்வாரபால, இந்த்ர பூஜை
5. யாக மண்டல பூஜை
6. கலச (கும்ப) பூஜை
7. அக்நி கார்யம்
8. பவித்ர ஸம்ஸ்காரம்
9. பவித்ர பூஜை
   -(தந்து நவகேஷு பூஜையும், க்ரந்தி பூஜையும்)
10. பவித்ர ஸமர்ப்பணம்
11. பூர்ணாஹுதி

12.09.2001 காலை ஆறுங்கால பூஜைக்குப் பிறகு:

மஹா பூர்ணாஹுதி
மஹாபிஷேகம்.
கலசாபிஷேகம் (*கும்பாபிஷேகம்*)
மஹா நைவேத்யம்
மஹா தீபாராதனை.

வினா 19: சிவாலயத்தில் எந்தெந்த மூர்த்திகளுக்கு, எத்தனை பவித்ரம் ஸமர்ப்பிக்க வேண்டும்?

விடை 19: மூலலிங்கத்திற்கு நான்கு (தத்வத்ரயம்-3, கங்காவதாரகம்-1), வ்ருஷபத்திற்கு கொம்பு முதுகு தோள் குளம்பிலுமாக ஒன்று, அனைத்து ஆவரண தேவதைகளுக்கும் ஒன்றொன்று, சண்டிகேச்வரருக்கும் பைரவருக்கும் ஒன்றொன்று, க்ஷேத்ரபாலர், இந்த்ரன் முதலாய திக்பாலகருக்கு ஒன்றொன்று, யாகசாலை, வ்ருஷபஸ்தம்பம், விமாநம், ஆலயம் இவைகளைச் சேர்ந்த எல்லா காரண தேவதைகளுக்கும் மூவிழை நூல் பவித்ரத்தால் ஒரு சுற்று (உ.கா.18.25-28).

வினா 20: பவித்ரோத்ஸவத்தின்போது, கும்பங்களில் மூர்த்திகள் ஆவாஹனம் செய்து மூன்று, அதற்கு

மேலும் நாட்கள், வழிபடப்படுகிறர்கள். அந்தக் காலங்களில், திருக்கோயில் கர்ப்பக்ரஹங்களில் ப்ரதிஷ்டை ஆகி உள்ள தேவதைகளுக்கு வழிபாடுகள் உண்டா?

விடை 20: கும்பாபிஷேகத்தின் போது, கருவறை மூர்த்திகள் கலாகர்ஷணம் செய்யப்பட்டு, கும்பத்து நீரினுள் மாற்றப்படுகின்றனர். எனவேதான் அந்தக் கால இடைவெளியின்போது, கும்பங்களுக்கு மட்டுமே வழிபாடுகள் நிகழ்கின்றன; கருவறை மூர்த்திகளுக்குக் கிடையாது. ஆனுல், பவித்ராரோஹணத்திற்காக, கலாகர்ஷணம் செய்வதில்லே. எங்கும் வ்யாபித்திருக்கும் இறைச் சக்தியை கும்பங்களில் வைத்துள்ள புனித நீரில் ஆவாஹநம் செய்து பூஜித்து, சக்தி கூட்டி, நிறைவாக அந் நீரைக் கொண்டு கருவறை மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்து, கும்பத்தில் உள்ள சக்தி மிக்க மூர்த்தியின் அம்சத்தையும் கருவறை மூர்த்தியோடு சேர்ப்பிப்பதே பவித்ராரோஹணத்தின் ஒரு நோக்கம். எனவே, கருவறை மூர்ந்திகளுக்கு வழக்கம் போல் ஆராதனைகள் நடந்து வர வேண்டும்.

வினு 21: பவித்ரோத்ஸவத்தில் வேத பாராயணம், திருமுறை பாராயணம் ஏற்பாடு செய்ய வேண்டுமா?

விடை 21: அவ்வாறு செய்யவேண்டும் என்ற தனிக் குறிப்பு ஆகமங்களில் காணப்படவில்லே. ஆனுல் எந்த உற்சவத்திலும், ஆர்ய வேதமும், தமிழ் வேதமும் ஓதுவதென்பது ஸம்ப்ரதாயம். அந்த வகையிலே, வாய்ப்புகளை ஒட்டி, வேத பாராயணமும், திருமுறை பாராயணமும் செய்விப்பது சிறப்புடைத்து.

வினு 22: பவித்ரோத்ஸத்தின்போது இடைப்பட்ட

இரவுகளில் விசேஷ பூஜைகள் ஏதாவது உண்டா?

விடை 22: பவித்ரோத்ஸவ நிறைவு நாளுக்கும் அதற்கு முந்தைய நாளுக்கும் இடைப்பட்ட இரவிலே கண் விழித்திருந்து கலை நிகழ்ச்சிகள் நடத்துவிக்க வேண்டும், இறைவனின் நாம பஜநம் செய்யப்பட வேண்டும் என்பதாக ஆகமக் குறிப்புகள் காணப்படுகின்றன. அதற்கு முந்தைய இரவுகளுக்காக அவ்வகைக் குறிப்புகள் காணப்படவில்லை. ஆனால், இரவு நேரங்களில் யாகசாலைகளைச் செவ்வனே பாதுகாத்து வருவது அத்தியாவசியம்.

வினா 23: பவித்ரோத்ஸவம் நிறைவுறும் நாளன்று விசேஷ நைவேத்யங்கள் உண்டா?

விடை 23: நிறைய அந்நம் படைக்க வேண்டும் என்று ஆகமங்கள் பகர்கின்றன. பெரிய (தலை)வாழை இலைகளில் நிறைய அந்நம் படைத்து, ஸந்நிதி முன் இட்டு (திருப்பாவாடை) நிவேதநம் செய்வது மரபு (ஸ.7.36).

வினா 24: பவித்ரோத்ஸவத்தின் நிறைவாக நிகழும் கிரியை என்ன?

விடை 24: பவித்ராரோஹணத்தின் நிறைவாக, மஹாபிஷேகமும், அதனைத் தொடர்ந்து, யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பெற்ற கலசங்களிலுள்ள நீரால் அபிஷேகமும் (கலசாபிஷேகம் அல்லது கும்பாபிஷேகம்) நிகழ்வுறும்.

வினா 25: பவித்ரோத்ஸவ நிறைவு நாளன்று திருக்கல்யாணம், திருவீதியுலா போன்றவை உண்டா?

விடை 25: ஆகமங்களில் இது குறித்த தனிக்குறிப்புகள் இல்லை. திருக்கல்யாண உற்சவமும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே செய்விப்பது மரபு. ஆனால் உத்ஸவங்களில் ஸ்வாமி புறப்பாடு ஒரு அங்கமாதலால், பவித்ரோத்ஸவம் என்று ஸங்கல்பம் செய்துகொண்ட நிகழ்ச்சிகளின் அங்கமாக, திருவீதியுலா ஏற்பாடு செய்வது மிக மிகப் பொருத்தமுடைத்து. பஞ்ச மூர்த்திகளின் உலா செய்விப்பதில்லை. ஸோமாஸ்கந்தரும் அம்பாளும் சேர்ந்து உலா செல்வதே வழக்கம்.

வினா 26: பவித்ரத்தைப் பெற்றுக்கொண்ட சேவார்த்திகள், அதனை எவ்வாறு பயன்படுத்தலாம்?

விடை 26: இது குறித்த குறிப்புகள் ஆகமங்களில் காணப்படுவதாகத் தெரியவில்லை. பொதுவாகக் கடைப்பிடிக்கப்படும் ஸம்ப்ரதாயத்தின்படி, பவித்ரத்தைக் கரங்களில் பெற்றுக் கொண்டவர்கள் அதனைப் புனிதம் குன்றுமல் இல்லங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கே பூஜை அறையில் தாம் வணங்கும் இஷ்ட தெய்வங்களின் படங்களுக்கோ ப்ரதிமைகளுக்கோ சாத்தி வழிபட்டு வரலாம். அல்லது, பவித்ரத்தினை பூஜை அறையில் ஓரிடத்தில் மாட்டி வைத்திருந்து, ஜபமோ பூஜையோ செய்யும் காலங்களில் மட்டும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். பவித்ரத்தைச் சிவாச்சார்யார் கரங்களால் கழுத்தில் அணிவித்துக் கொண்டவர்கள், அதனை ஜபமோ பூஜையோ செய்யும் காலங்களில் அணிந்து கொள்வதை மட்டுமே செய்யலாம்.

வினா 27: இந்த நூலின் இணைப்பாக ப்ரயோக விதிகளும், மந்த்ரங்களும் இணைக்க இயலுமா?

விடை 27: மன்னிக்கவும். பாராயண, ப்ரார்த்தனு மந்த்ரங்களும் ச்லோகங்களும் குரு மூலம் கற்றறிவதே சிறப்புடைத்து என்றாலும், அவற்றை முறை சாராக் கல்வி முறையிலே, மற்றவர் மொழியும்போது தாமும் வழிமொழிந்து கற்பது தற்போழ்து நடைமுறையில் காணப்படுகின்றது. அம்முறையில் ஆன்மீகம் காக்க முற்படுவோர்க்கு உதவியாக அவர்க்கான பாராயண மற்றும் ப்ரார்த்தனு மந்த்ரங்களும் ச்லோகங்களும் அச்சேறுகின்றன. அவற்றைப் பயன் படுத்துவோர், தவறாக அவற்றை உச்சரித்தாலோ அல்லது ப்ரயோகம் செய்தாலோ, அவருக்கோ அல்லது அவரைச் சார்ந்த ஒரு சிலருக்கு மட்டுமோ ஒவ்வா விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால், ஆலயங்களில் ப்ரதிஷ்டை, பவித்ரோத்ஸவம் போன்ற நிகழ்ச்சிகளில் தவறுகள் ஏற்பட்டால், பாதிக்கப்படுவது இந்தச் சமூகம் முழுதுமேயாம். எனவே, ப்ரதிஷ்டா விதிகள், பவித்ராரோஹண விதிகள் போன்றவையும், அவற்றுக்கான மந்த்ரங்களும், கண்டிப்பாகக் குரு மூலம் தான் கற்றறியப்பட வேண்டும். குருமார்கள் தாம் தரும் வித்யா தானத்தின் ஒரு அங்கமாகச் சில பகுதிகளை எழுத்து மூலம் அறிவித்தால், அஃது அவர் தந்த செல்வம் எனக் கொண்டு, அவரது சிஷ்யர்கள் நியமங்களைக் காத்து ஒழுகி, தவறான முறையில் அவ்வெழுத்துக்களைப் பரப்பாமலும் ப்ரயோகிக்காமலும் நெறி முறைகள் காத்து, குருவின் பெயரும் புகழும் நிலைத்து நின்றிடவும், அவர் தந்த ஞானத்தால் பொதுமக்களுக்கு நன்மைகள் ஏற்படவும் பாடுபடவேண்டும். எனவே, ப்ரதிஷ்டா விதிகள்,

பவித்ராரோஹண விதிகள், மந்த்ரங்கள் போன்றவற்றை இது போன்ற நூல்களில் சேர்க்கலாமா என்பது கேள்விக்குறியே!

** ** **



➤ ஸ்ரீ சங்ரநாராயணர்

சிறப்புச் சொல் அகராதி

இந்தப் புத்தகத்தினுள் ஒரு பொருளைக் குறித்து விரைவாகக் காண்பதற்கு உதவும் முகத்தான், சில சொற்களும், அவை காணப்படக்கூடிய சில பிரிவுகளின் எண்களும் (Paragraph numbers) கீழே தரப்பட்டுள்ளன.

இ

ஈ

உ

ந

ம

ய

ஹ

ஸ்ரீ

